திருக்குறள் கதைகள்
இன்பத்துப்பால் -1251-1330

### *அணிந்துரை*

உலகளாவிய ரீதியில் காலம் காலமாகத் தமிழா் பண்பாட்டு வளா்ச்சிக்கு வழிகாட்டி வரும் இலக்கியங்களில் திருக்குறள் முதன்மை நிலையிலுள்ளது. இன்றைய நவீன நாகரீக வளா்ச்சியின் உச்சநிலை மாற்றங்களுக்கு ஏற்ப மனித இரசனை அனுபவங்களுக்கு ஏற்பச் சுவையான கதைகள் வழியாகத் திருக்குறளை உயிா்ப்பித்திருக்கின்றாா் இந்நூலாசிரியா் திரு.கே.வி.குணசேகரம் அவா்கள்.

இங்கே நாகரீகம் என்பதை கடற்பயணத்திற்கு ஒப்பாகவும், பண்பாட்டை துறைமுகத்திற்கு நிகராகவும் இயம்பலாம். எவ்வளவோ நாகரிக அலைகள் புரண்டபின்னரும் தமிழா் தம் வாழ்வியற் பெருமையைக் குறிகாட்டி, தமிழா் பண்பாட்டுத் துறைமுகக் கலங்கரை விளக்காக நின்றுரைப்பது திருக்குறள் என்ற பொக்கிச நூல். இதன் அறத்துப்பாலில் உள்ள குறள்களுக்கு அற்புதமான கதைகளை எழுதிய நூலாசிரியா். தற்பொழுது இன்பத்துப்பாலில் உள்ள பாக்களுக்கு(250) அகத்தினை நோக்கில் ஜனரஞ்சகமாகவும், ஆழமாகவும் கதைகளை ஆக்கியுள்ளாா். அவருடைய பழுத்த எழுத்தாற்றல் அனுபவங்கள் வெகுகச்சிதமாகக் கதைகளினூடாகப் பிரதிபலிக்கின்றன.

உலகம் உய்திட, மக்கள் வாழ்வாங்கு வாழ, இல்லறம் இன்றியமையாததாகும். சந்ததிகள் பெருகவும், மனிதகுலம் தளைக்கவும், இல்வாழ்க்கை இனித்திடவும், குடும்பங்கள் சிதைவுறாமல் நல்வாழ்வு வாழவும் பல்வேறு வழிகாட்டல்களை ஆா்வத்துடன் படிக்கும் நோக்கில் ஒவ்வொரு குறளுக்கும் ஏற்பக் கதைகள் தொகுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ள விதம், இலக்கியத் திறனாய்வுகளுக்கு அப்பால் இந்நூலாசிரியரின் தனித்தன்மைகளின் பிரகாசிப்புக்கள் இக்கதைகளில் தெரிகிறது.

‘‘மயங்கும் நெஞ்சம்’’ என்ற மகுடத்தில் ஆரம்பித்து உயிா்க்குடிக்கும் கண்கள், ஐம்புல இன்பம், மழை, உருகும்மனம், இணைந்த இன்பம், என்ற வகையில் பல பரிமானத் தலைப்புக்களின் கீழ் அன்பும் கவா்ச்சியும், அனுசரனையும், விட்டுக்கொடுத்தலும், புரிந்து கொள்ளலும், ஆண் பெண் ஊடலுக்கு அவசியமானவை, இவ்வூடல் அறமே இல்லறத்தை நல்லறமாக்கும் என்ற தொனியில் ஒவ்வொரு குறளுக்கும் கதைகள் எழுதப்பட்டுள்ளன. தமிழா்களுடைய அகத்திலே காதல் என்பது பிறவிதோறும் தொடா்வதாகவும், உள்ளம் இயைந்த உடலுறவும், உடன் இயைந்த உள்ள உறவும் வாழ்வின் பயனாக உள்ளமையையும் கதைகள் திருக்குறளை ஆதாரமாக வைத்து எடுத்துரைக்கின்றன.

உள்ளத்திசைவுடைய காதலும், உடற்புணா்ப்புடைய காமமும் முகிழ்த்த பின்னரான இல்லற வாழ்வின் எதிா்பாா்க்கைகள் காமத்துப் பாலில் கருத்துரைகளாகின்றன. தலைவனும் தலைவியும் முதன் முதலில் கண்டு காதல் கொள்வதும், அதன் தொடா்ச்சியாக உள்ளத்தாலும் உடலாலும் இணைந்து இன்பம் துய்க்கும் நெறிமுறைகளைப் பாலியல் கல்வி சாா்ந்த உளவியல் அடிப்படையில் கதைகளாக்கியுள்ள நூலாசிரியா் திரு.கே.வி.குணசேகரம் அவா்களின் துணிவான அறிவியல் முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும். இம்முயற்சியை முதன் முதலாக மேற்கொண்ட சமூகவியலாளராகவும் இந்நூலாசிரியா் திகழ்கின்றாா்.

திருக்குறளில் இன்பத்துப்பாலில் உலகக் காதல் இலக்கியங்களுக்கு ஒப்பாக ஊடியும், உரையாடியும், பழகியும், பாா்த்தும், உள்ளத்தால் அனுபவிக்கும் இன்பங்களை, ஒருவகையாகவும்; உதாரணமாக

‘‘உவந்து உறைவா் உள்ளத்துள் என்றும்; இகத்து உறைவா்
எதிலா் என்னும் இவ்வூா்’’

என்ற திருக்குறளுக்கு ‘‘உள்ளத்தில் வாழ்பவா்’’ என்ற தலைப்பில் எழுதிய கதை வடிவம் குறளுக்கே மெருகேற்றுகின்றது.

மற்று மொரு வகையாக, தலைவன் தலைவியின் அழகையும் தலைவி தலைவனின் அழகையும் கண்டு மயங்குதல்; குறிப்பறிந்து இருவரும் கூடி ஐம்புல இன்பம் துய்த்தல், கூடி மகிழ்ந்த தலைவனும் தலைவியும் அவரவா் அழகைப் பாராட்டுதல். இருவரும் நாணத்தை விட்டு வருந்துதல், முன்பு நிகழ்ந்த ஊடலின் இனிய அனுபவத்தைப் பரிமாறல் உதாரணமான.

‘‘உணவினும் உண்டது அறல் இனிது; காமம்
புணா்தலின் ஊடல் இனிது’’

என்ற குறளுக்கு ‘‘மிகுதியான இன்பம்’’ என்ற கதை வடிவம் நூலாசிரியரின் எழுத்தாற்றலைப் பறை சாற்றுகின்றது.

இந்நூல், ஒருநாவல் வடிவின் குறள்கதைகளின் தொகுப்பாக, திருக்குறளை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டுள்ள விதம் மேலும் இலக்கியரசனையை ஏற்படுத்துகின்றது. சமூக இயக்கத்தில் மனிதத்துவ அக வாழ்வியலை ஒரு பருவத்தோடு நிறுத்தாமல் அப்பருவ மகிழ்வின் காதல், கூடல், பாலுணர்ச்சி, அன்பின் உயிர்ப்பாய், நேசமாய், பாசமாய், பரிவாய், அருளாய், பரவி விரியும் பண்பாட்டியலை அழகிய நூலாக எழுதி எமக்கெல்லாம் நல்வழிகாட்டும் இந்த நூலாசிரியர் பணியும், அர்ப்பணிப்பும், ஈடுபாடும் உயர்ந்து நோக்கப்பாலது. அர்த்தமுடைய அவரது வாழ்வியல் எழுத்துப்பணிக்கு இந் நூல் ஓர் எடுத்துக்காட்டு.

இன்றைய நவீன சமுதாய மாற்றங்களினூடகப் புதிய ஜனரஞ்சக இலக்கியச் சூழல்; அக நிலை சார்ந்த தூய இரசனையாகவோ, அன்றேல் பதவுரை, பொழிப்புரை, கதைக்குறிப்பு, விளக்கம் முதலியவை சார்ந்த போதனையாகவோ மட்டும் இல்லாமல் வாழ்வியலோடு அமைந்த செயன்முறையாகவும் நோக்கப்படுகின்றன. இந்நோக்கிற்கு இயைபான ஒரு புத்தகமாகவும் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் எனக்கு அணிந்துரை எழுதித் தருமாறு வினவி, ஒரு நவீன இலக்கியத்திரனாய்வு நோக்கில் அதை ஆக்க வேண்டும் என விரும்பினார்.

அவ்வகையில் புது இலக்கியத்திரனாய்வானது இலக்கியப்படைப்பை முற்றிலும் தன்னிறைவான ஒரு மொழிசார் கட்டமைப்பாகக் கொண்டு; படைப்பாளியின் நோக்கம் மற்றும் வாழ்வியல் அனுபவங்கள் வாசகனிடத்தில் நிகழக்கூடிய உணர்வு நிலைத்தாக்கங்கள் ஆகிய சார்பு நிலைகளினூடான இலக்கியப்படைப்பு தரிசனங்களை மறுத்து; அடிப்படையாக வாசகன் தன்னளவில் தன்னியக்க முள்ளவகையில் இரசனையுடன் பயன்படுத்தும் ஆற்றலுக்கான வழிகளைக் கண்டறிதல் என்ற வகையில் விரித்து சொல்கின்றது.

இவ்விரிவானது இன்றைய இலக்கியத்திரனாய்வில் பின் நவீனத்துவ வெகுசனகலாச்சார பரிமானங்களினூடாக நோக்கப்படுகின்றன. பின் நவீனத்துவம்(Post Modernism) கல்வி, கலை, இலக்கியம்,பண்பாடு என்ற சகல துறைகளிலும் சுதந்திரத்தின் எல்லைகளை சுயமாக விரிக்க வேண்டும். முழு உலகு தழுவிய கொள்கைகள் மரணித்துவிட்டன. பல்வேறு பகுதியாக (Frasmantation) செயற்படும் இயக்கங்கள் தம் உள்ளியல்பு துலங்கற் இயங்குவதற்கு வழி விடப்பட வேண்டும். இலக்கிய ஆக்கத்தின் ஒவ்வொரு உயிரையும், ஒவ்வொன்றின் ஆக்கங்களையும், ஒவ்வொரு பாத்திரத்தையும் அவற்றின் இயல்பு நிலையிலிருந்தே வளர்க்க வேண்டும் என்கிறது.

அவை தம் இயல்பினூடாக முகிழ்க்க வேண்டும். மேலும் வித்தியாசங்கள் என்ற கருத்தியல் இங்கு முக்கியப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான பின் நவீனத்துவ சிந்தனைகளின் பல பிரதிபலிப்புக்களை நவீன கதை இலக்கிய வடிவில் நுட்பமான பாத்திரப்படைப்புக்கள் மூலம் வெகுசன ஜனரஞ்சக இலக்கிய ஆக்கமாக நூலாசிரியர் இந்நூலை எழுதியிருக்கின்றார்.

ஒரு வாசகன் என்ற நிலையிலிருந்து இந்நூலை நோக்குகின்ற போது; வாழ்வியலின் மகிழ்ச்சியான மாற்றத்தை உள் வாங்குதல் (Absorbing Change), ஒரே வகையான வாழ்வை தொடர்ந்து அனுபவிக்கும் வேளை ஏற்படும் சோர்வும், சலிப்பும் மாறுதலை நோக்கிய சிந்தனையை மனிதனிடம் ஏற்படுத்துகின்றது. எனவே வாழ்க்கையின் எல்லாப்பகுதிகளிலும் இந்த மாற்றத்தை ஒவ்வொரு மனிதனும் எதிர்பார்க்கின்றான். இவ் எதிர்பார்ப்புக்களுக்கு; நாளைக்கும் இன்றைக்கும் சேர்த்து நேற்றே சிந்தித்த திருக்குறளின் இன்பத்துப்பாலின் குறள்களுக்கு மாற்றத்துடன் கூடிய புத்தாக்கச் சிந்தனைகள் கதையோட்டங்களினூடாக ஆசிரியரால் பின்னப்பட்ட விதம் புதிய அனுபவத்தை ஏற்படுத்துகின்றது.

தமிழை உலகிற்கும், உலகைத் தமிழுக்கும் அர்ப்பணித்த மதம் கடந்த மானுட தர்மத்தை இயம்பி நிற்கின்ற திருக்குறளுக்கு கதை வடிவத்தை இயம்பி நிற்கும் நூலாசிரியர் பின் நவீனத்துவ உலகம் தழுவிய இலக்கிய விமர்சனப் பார்வையில் பண்பாட்டுத் தாக்கங்களையும் இவ் ஆக்கம் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். மேற்கு நாகரிக மனிதன் ஒழுக்கப்பரிமானத்தை ( Moral Evolution) வலியுறுத்தி ஈற்றில் மனிதனை ஒரு நிர்வாணப் பொருளாக ஆக்கியுள்ள நிலையில்; ‘‘எதனையும் தாண்டிச் செல்வதே சுவாராஷ்யமானதும், புதுமையானதும் என்ற வகையில் நிரந்தர ஒழுக்க கோவைகள் என எதுவுமே கிடையாது என்பதான கருத்துத்தையும் இக்கதை வடிவத்தின் பல சம்பவங்கள் நிராகரிக்கின்றன. இயற்கையுடன் இணைந்த காதல் வாழ்வியலின் மானுடதர்மம் இங்கே வலியுறுத்தப்படுகின்றது.

இவ்வகையில் பின்நவீனத்துவ கருத்தியல் தொடர்பான மற்றொருவகை விமர்சனப் பாங்கிற்கான ஆதாரங்களையும் நூலாசிரியர் கதைச் சம்பவங்களினூடாக எளிமையான வாசகனைக் கவரும் சொல்லாடல்கள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார். உயர் இரசணைத்தன்மையும் சிறந்த மனப்பாங்கு உள்ளவர்களே புத்தாக்கத்திறன் உடையவர்களாக மிளிர்வார்கள். தம்மிடமுள்ள எண்ணக்கருக்களைக் கொண்டு, தனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட வாழ்க்கை அனுபவங்களை தான் அடைந்த இரசனை அனுபவங்களை வாசகர்களின் உள்ளத்தில் தோற்றுவிக்க இந்நூலாசிரியர் பலவித

ஊடகங்களையும், நுட்பங்களையும் பயன்படுத்தி எடுத்த பிரயத்தனங்கள் இக்கதையாக்கக் களங்களில் பிரதிபலிக்கின்றன.

அனுபவம், இரசிப்பு, அவதானிப்பு, வாய்ப்புப்பார்த்தலும் பிரயோகமும் புத்தாற்க்கத்திறனின் அடிப்படைகளாகும். இது சமுதாயம் நோக்கிய அதன் மெய்மை குன்றாத வகையில் உண்மை, அழகு, நன்மை, அறம், உணர்ச்சி ஆகிய கூறுகளுடன் சமுதாயத்தை அதன் முழு நிலையில் தரிசிக்க வைப்பதாகவும் இலக்கியங்கள் அமைய வேண்டும். இப்பார்வையிலிருந்து இக்கதையாக்கத்தை நோக்குகின்ற போது பல விதமான ஆர்வங்கள் எழுகின்றன. ஒரு படைப்பை அதன் பயன்பாடு கருதி திறனாய்வு செய்யப்படுதலை பயன்வழிக் கொள்கையாகின்றது. இதில் அழகியற் கூறுகளை விட படைப்பினால் வாசகன், கலைஞன் எய்தும் பயன் உளத்திருப்தி முதனிலைப்படுகின்றது.

இந்நிலையிலிருந்து நோக்குகின்ற போது சமுதாயத்தை அதன் இயல்பு நிலையிலிருந்து நோக்கி ஆண், பெண் உறவு நிலைப் பிரதிபலிப்புக்கள், நடைமுறை வாழ்வியல் உண்மைகள், அறிவுசார் கற்பனைகளின் தளத்தில் இன்பியலை மையமாக வைத்து நூலாசிரியர் தொகுத்துள்ள கதைவடிவங்கள் சமூக அசைவியல் உணர்வோட்டங்களுக்கான தெளிவுகளை இயம்பி நிற்கின்றன. கதை நடைபெறுகின்ற களம், சூழல், பண்பாட்டு செயலாற்றுகைகள் வாசகனின் இரசனையையும் இரச்சித்தல் உணர்வையும் அதிகரிக்கச் செய்கின்றது.

இங்கு இரசித்தல் என்பது ஒரு மானசீகமான செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது. அதனைச் சொற்களால் விளங்குவதென்பது கடினமாகவுள்ளது. கதையை வாசிக்கும் போது ஏற்படும் அனுபவமாக அது பரிணமிக்கும் மனிதன் யாதேனும் ஒரு நிகழ்வுப் புலன்களை வருடுவதால், ஒருவருக்குள் மானசீகமாக ஏற்படும் திருப்தி இரசித்தல் என்ற வகையில் திருக்குறளில் காமத்துப்பால் குறள்களின் பிழிவை தனது கதையாக்கத்தினூடாக எடுத்தியம்பியிருக்கும் நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் ஆக்கத்திறன், பன்முகப்பாங்கான எழுத்தாற்றல் போற்றுதலுக்குரியது. மேலும் பல புத்தாக்கங்களைத் தமிழுக்குத் தரும் ஆற்றல்களையும், ஆளுமைகளையும் உடைய அவர் பணி தொடர இறையருள் துணைநிற்பதாக.


பாலசுப்பிரமணியம் தனபாலன்
BA(Cey), DipinEd, M.phil in Education,
உபபீடாதிபதி(கல்வியும் தரமேம்பாடும்),
தேசிய கல்வியல் கல்லூரி,
கோப்பாய்,
யாழ்ப்பாணம்.

## *அணிந்துரை*

தமிழின் சுவையிலும் தமிழா் நலத்திலும் தளராத பற்றுக் கொண்ட பாரதிதாசன்

"துன்பநோ்கையில் யாழெடுத்து நீ இன்பம் சோ்க்கமாட்டாயா?"

என்றுதான் பாடினான். பழந்தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் வாழ்வியல் மரபுகள் சீரழிந்து செல்லும் இக்காலத்தில், இச்சீரழிவை நிவா்த்தி செய்யும் நோக்குடன் ஒரு தலைவனும் தலைவியும் எவ்வாறு இன்பம் சோ்க்க வேண்டும் என்று இன்பத்துப்பால் அதிகாரத்தில் வள்ளுவன் அன்று கூறினானோ? அதை தனது கதை மூலம் இன்று மீட்டெடுத்திருக்கின்றாா் இந்நூலாசிரியா் கே.வீ.குணசேகரம்.

தமிழரது வாழ்க்கை முறைமைகள் மீட்டெடுக்கும் நோக்கில் வாசகா் அனைவா்க்கும் துன்பம் சோ்ந்துள்ள இந்நாட்களில் இன்பம் சோ்ந்திருக்கிறாா் நூலாசிரியா்.

இவா் எழுதிய பல கதைகளில், நாவல்களில் சமூக சீரழிவைச் சாடி அவற்றை செப்பனிடும் நோக்கிலேயே அவரது அக்கதாபாத்திரங்களின் அசைவுகள் தென்பட்டன. ஆனால் இந்நூலில் இவரது பாத்திரங்களின் அசைவுகள் தென்பட்டன. ஆனால் இந்நூலில் இவரது கதை எழுதும் பாணி இன்பத்துப்பாலில் ஒவ்வொரு குறளிலிலுமுள்ள தேனை வாசகா்கள் ஒரு துளியும் சிந்தாமல் நுகரும்படி செய்ததன் மூலம் தலைவனும் தலைவியும் எவ்வரையறைக்குள் இன்பம் சோ்க்கலாம் என்பதையும் இக்கதை மூலம் கூறியிருக்கின்றாா்.

இன்பத்துப்பால் வாழ்வியலுக்கு எத்துணை முக்கியமானது என்று வள்ளுவன் எதை நினைத்து இயற்றினானோ, அதை அப்படியே இங்கு வரைந்துள்ளமை இவா் வள்ளுவனின் மனோநிலையை முற்றாக உணா்ந்ததன் இலட்சினை ஆகும்.

தலைவனும் தலைவியும் சேரும் போது அவ்விருவா் மட்டுமே இன்பம் நுகா்கின்றனா். ஆனால் இந்நூலாசிரியா் தனது பேனா முனையால் ஒரே நேரத்தில் பல்லாயிரக் கணக்கான வாசகா்களை இன்பம் நுகரவைத்துள்ளாா். ஒரு கதாசிரியரிா் தான் கதை புனையும் நோக்கில் சுதந்திரமாகக் கதா பாத்திரங்களை நகா்த்திச் செல்லலாம். ஆனால் இந்நூலாசிரியரின் இந்நூல் தொடா்பான பங்குபணி கம்பி ஒன்றில் ஏறி நின்று சமநிலையில் நடக்கும் ஒருவரின் சபதம் போன்றது. குறள் சொல்லும் வரையறைக்குள் மட்டுமே கதாபாத்திரங்களை நகா்த்திச் செல்வது என்பது அவ்வகையான சிக்கல் நிறைந்ததே.

வள்ளுவரது கருத்துக்களைச் சிதைவுறாமல் அகத்திணை மரபுகள் தனிமணம் கமழும் விதமாக அக்காலத்து நிகழ்வுகளை இக்காலத்தோடு பொருத்தித் திறம்பட கதையூடாக எடுத்தியம்பும் திறனை இங்கு காண்கிறேன்.

கவிஞன் சுதந்திரம் உள்ளவன் சுதந்திரமாகச் செயற்படுவானாகில், தான் கண்டதைத் தன் கருத்தில் அமைத்துப் பாடுவது அவனுக்கு எளிது. ஆனால் இங்கு குணசேகரம் அவா்கள் வள்ளுவரது கருத்துச் சிதைவுபடாமல் காலத்தின் தேவைக்கேற்ப மிகமிக நுணுக்கமாகவே செயற்பட வேண்டிய நிலையில் தான் இதனைச் செய்திருக்க வேண்டும் என்று நம்புகிறேன்.
காட்சி, ஐயம், தெளிவு, தேறல், பகற்குறி, இராக்குறி என்ற அகத்திணைப் பண்புகளையும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. அவற்றை அடிப்படையாகக் கொண்டு கதையை அழகு தமிழில் நகா்த்தி இருக்கிறாா். வள்ளுவன் இருந்தால் எப்படி இதற்குப் பாத்திர வடிவமைப்புக் கொடுப்பாரோ அதோ போன்று உயிா் துடிப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

தகையணங்கு உறுத்துவதற்கு வள்ளுவா் எப்படிக் கற்பனை கண்டாரோ அதனை அப்படியே கருத்துக் களிப்பாக அமையாமல் ஐம்புலனுா்க்கும் விருந்தான சொல்லோவியமாகத் தந்திருக்கிறாா். ஒவ்வொரு குறளமுதத்துக்கும் ஏற்ற பாத்திர வடிவமைப்பைச் சிருஷ்டித்து தந்துள்ளாா். சில இடங்களில் நாமே நேரில் சென்று அக்காட்சியை நம் இரு கண்களாலும் நுகா்ந்தது போன்ற பெருமையை அடைகிறோம்.

இப்படியான இலக்கிய கா்த்தாவான கே.வி.குணசேகரம் அவா்களை நான் சிறுவயதில் இருந்தே அறிவேன். அவா் இலக்கிய ஆா்வம் கொண்டவா். பல பத்திரிகைகளிலும் அவரது கதைகள் வெளி வந்து பாராட்டைப் பெற்றன. நான் அவரது படைப்புக்களைப் படிப்பதில் தனிஈடுபாடு உள்ளவன்.

காலத்தின் தேவை கருதிச் சமுதாயத்தைச் சென்றடையக் கூடிய விதத்தில் தனது இலக்கியத்தை தகா்த்திச் செல்பவனே சிறந்த இலக்கிய கா்த்தா ஆகிறான். அவனது படைப்பாற்றல்கள் சகல மக்களையும் சென்றடைந்தால் தான் கதாசிரியன் வெற்றி பெற்றவனாகக் கருதப்படுகிறான். இந்த வகையில் எனது நண்பன் கே.வி.குணசேகரம் ஒரு சிறந்த எழுத்தாளன் என்ற பெருமையை விட சிறந்த இலக்கிய கா்த்தா என்று கூறிக் கொள்வதையே நான் விரும்புகிறேன்.

காலத்தால் அழியாமல் என்றும் நிலைத்திருக்கும் திருக்குறளுக்குப் பலா் பல காலப்பகுதிகளில் பல மொழிகளிலும் மொழி பெயா்த்துள்ளனா். வேறு பலா் அதற்கு தம்மால் இயன்ற அளவு உரைகளையும் ஆக்கினா். ஆனால் எனது நண்பன் தான் படித்துச் சுவைத்த பொய்யா மொழியை சகல மக்களும் நயந்து இன்புற வேண்டும் என்பதற்கு அமைவாக கதைக்களஞ்சியமாகத் தந்துள்ளாா். வள்ளுவனது வாக்கில் அட்சரம் பிழையாமல் அவா் தம் கருத்தை கதைக் களஞ்சியமாகத் தந்த எனது நண்பனைத் தமிழ் நல்லுலகம் என்றும் மறவாது. முதலில் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டுக்கும் தக்க வகையில் கதை ஆக்கினாா். அதனை யாவரும் படித்து இன்புற்றனா். பலரது பாராட்டுக்களையும் பெற்ற குணசேகரத்தைக் காமத்துப்பாலைக் கதையாக எழுத வேண்டும் என நான் உட்பட பல நண்பா்கள் வேண்டியதற்கு அமைய இதனை அவா் ஆக்கினாா்.

காமத்துப்பாலில் அகத்திணை மரபுகள் செப்பப்படுகின்றன. அகத்திணை மரபானது தலைவனும், தலைவியும் தம்முள் கூடிய கூட்டத்தினை பிறருக்கு உரைக்க முடியாமல் தம்முள் தாமே மயங்கி இன்புறுவது ஆகும். இதனை வாசகா்கள் படித்து இன்புறும் வகையில் உணா்வுகளை வெளிக்காட்டியுள்ளாா் குணசேகரம் அவா்கள். இது அவரது படைப்பாற்றலையே பறைசாற்றுகிறது. ஓா் இலக்கியம் எக்காலத்தில் எழுந்ததோ அக்காலத்தின் தன்மைகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகவே அது அமையும்.

இவரது படைப்புக்கள் அக்காலத்தை இக்காலத்துக்கு செந்தமிழில் தருவனவாகவே அமைகின்றன என்பதில் ஐயம் இல்லை. இவரது பணி மேன் மேலும் தொடர வேண்டும் என்று இறைவனைப் பிராா்த்திக்கின்றேன்.

**எஸ். மகேஸ்வரதாசன்,**
**முதல்வா்,**
**அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்,**
**ஸ்ரீலங்கா.**

## என் உரை

இன்பத்துப் பால் 81 ஆம் குறள்பாவில் இருந்து 250 ஆம் குறள்பாவரையான கதைகள் தற்பொழுது மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தினரால் வெளியிடப்படுகின்றது. இதற்கு முன்பு 460 குறள் பாக்களுக்கான கதைகள் வெளி வந்து விட்டன. முன்னைய நூல்களுக்குத் தந்த வரவேற்பை வாசகர்கள் இதற்கும் தரவேண்டும்.

தற்பொழுது பொருட்பால் குறள்பாக்களுக்குக் கதை எழுதி வருகிறேன். முதலாவது குறளில் இருந்து 1330 வரையான குறள் பாக்களுக்கும் தொடர் கதையாகவே இக்கதைகளை எழுதி வருகிறேன். குறள் பல வடிவங்களை இது வரை பெற்றுள்ளது. இது புதிய வடிவம். ஒரு மனிதன் அற நெறியில் நின்று பொருள் சேர்த்து இன்பமாக வாழ வேண்டும் என்ற வள்ளுவனின் கருத்தை ஆதாரமாக வைத்து எமது மக்களின் பல்வேறுபட்ட குணாதிசயங்களைக் கதைகளாக எழுதியுள்ளேன். வேத உபநிடத சாரத்தை விளக்கப் புராணக் கதைகள் எழுதப்பட்டதைப் போல, திருக்குறளின் அறக் கருத்துக்களை மக்களின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைத்து அவர்களுக்கு விளங்கும்படி கதைகளாக எழுதியுள்ளேன். அறத்துப் பாலில், பொருட்பாலில் கூறப்பட்ட அற ஒழுக்க சிந்தனைகளுக் கேற்ப இன்பத்துப் பாலில் நாயகனும் நாயகியும் வாழ்கின்றனர்.

காதல் அசிங்கமானது, அருவருக்கத்தக்கது என்ற நிலையை நீக்கி அத்தியாவசியமானது, புனிதமானது என்ற நிலையை மக்களுக்குத் தெரியப்படுத்துவதே எனது நோக்கம். காதல் இல்லாவிட்டால் உலகம் இல்லை என்ற கருத்துடையது திருக்குறள். காதலால் தான் உலகம் சமநிலைப்படுகிறது, நிலைத்திருக்கிறது என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகவே வள்ளுவர் இன்பத்துப் பாலை திருக்குறளுக்குள் சேர்த்திருக்கிறார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷாத்தங்களை இந்து மதம் வற்புறுத்துகிறது. ஆனால் வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பால்களுக்குள் வீட்டின்பத்தை அடக்கியுள்ளார். வீடு, பூமியிலே உள்ளது. ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வதன் மூலம் ஒவ்வொருவரும் தத்தமது வீட்டிலேயே மோட்ச இன்பத்தை அடையலாம் என்கிறார் வள்ளுவர். இன்று உலகம் வீட்டுக்குள்ளேயே இருக்கிறது. ஒரு மனிதன் தனது சகல தேவைகளையும் தனது வீட்டிலிருந்தே நிறைவேற்றும் காலம் இது. 2000 வருடங்களுக்கு முன் வள்ளுவர் இதையே நுட்பமாகத் தனது 1330 பாக்கள் மூலம் கூறியுள்ளார்.

இந்நூல் பல அறிவியல், உளவியல் நூல்களைப் படித்து எழுதப்பட்டது. கதை விளக்கம், குறள், உரை யாவும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளது. மிகவும் அழகான முறையில் மணிமேகலைப் பிரசுரத்தினர் எனது குறள் கதைகளை வெளியிட்டு வருகிறார்கள். இதை நான் தாயகத்தில் வெளியிடுவது எனது அன்புக்குரிய தமிழக அறிஞர்கள் இதைப் பற்றிய கருத்தைக் கூற வேண்டும் என்பதற்காகவே.

மிகவும் அழகாகவும், அருமையாகவும் கணனியில் புதிய முறையில் பதித்துத் தந்த செல்வி க.சுகந்தினிக்கும், மணிமேகலைப் பிரசுர முகாமைப் பணிப்பாளர் திரு.ரவிதமிழ்வாணனுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். மீண்டும் பொருட்பால் கதைகளோடு சந்திப்பேன்.

வணக்கம்

கே.வி.குணசேகரம்,
அதிபர்,
கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்,
ஸ்ரீலங்கா.

## கோடரி

அன்று காலை எட்டுமணிக்கு வீடு கழுவுவதற்காக இரண்டு பேர் வந்தனர். அவர்கள் வந்த சிறிது நேரத்தில் கமலேஸ்வரி தான் உடுத்தியிருந்த சேலையைக் கழற்றினாள். அதைக்கண்ட அர்ச்சகா சொன்னாள், ‘‘அம்மா நீங்கள் மாதுமையுடன் போயிட்டு வாருங்கோ. நான் துவிச்சக்கர வண்டியில் வந்து விடுகிறேன்.’’

கமலேஸ்வரிக்கு அது சரியெனப்பட்டது; ‘‘அர்ச்சகா துவிச்சக்கர வண்டியில் வருவாள். நான் சொல்லாமல் நின்றால் பின்போக மோட்டார் வண்டி வேண்டும். அது வீண் செலவு’’ என்று நினைத்துப் புறப்பட்டாள்.

அவர்கள் சென்ற பின்பு மேலும் மூன்று தொழிலாளர்கள் வந்தனர்; ‘‘அம்மா எமக்கு அவசரமாக இன்னோர் இடத்தில் தொழில் இருக்கிறது. நாளை சதுர்த்தி என்பதால் இன்று வீட்டைக் கழுவாவிட்டால் பின் அம்மாவின் முகத்தில் விழிக்க முடியாது. ஐந்துபேருமாகச் சேர்நது கழுவுகிறோம்’’ என்றாள் வழக்கமாக அங்கு வேலை செய்யும் பெண் அர்ச்சகாவுக்கு மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை; ‘‘சரி என்றாள்; ‘‘அம்மாவுக்கு சொல்லாதைங்கோ. எப்படி நாம் வேலை செய்தாலும் இரண்டு மணிவரை கழுவாவிட்டால் அவாவுக்குத் திருப்திப்படாது’’ என்றாள்.

வழமையாக வேலை செய்யும் பெண் அர்ச்சகாவின் மகிழ்ச்சி மேலும் அதிகரித்தது பத்துமணிக்கு அவர்கள் சென்று விட்டனர். அர்ச்சகா நகுலனைப் பன்னிரண்டுமணிக்கு வரச் சொல்லியிருந்தாள். பத்துமணிக்கு அவர்கள் சென்றதால் அவளது மனம் தவித்து மெதுவாக ஒழுங்கைக்குச் சென்றாள். நகுலன் ஒழுங்கையில் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் துணிவுடன் இருந்த அவளது மனம் மெல்ல நடுங்க ஆரம்பித்தது. உடல் வியர்க்க வீதியைப் பார்த்தாள். நகுலன் அவளை நெருங்கி வந்து கொண்டிருந்தான்; ‘‘வீடு கழுவ வந்தவர்கள் சென்று விட்டனர். நீங்கள் நேரே சென்று விட்டு பின் திரும்பி வாருங்கள்’’ என்று கூறிவிட்டுத் திறந்திருந்த படலையை சாத்திவிட்டு உள்ளே வந்தாள் அர்ச்சகா.

சிறிது நேரத்தில் நகுலன் வந்தான்; ‘‘உள்ளே வாருங்கள் துவிச்சக்கர வண்டியையும் செருப்பையும் உள்ளே கொண்டு வாருங்கள்’’ என்றாள் அர்ச்சகா.

அர்ச்சகா சொன்னபடி துவிச்சக்கர வண்டியை உள்ளே தூக்கிச் சென்ற நகுலன் அதை முன்னால் இருந்த அறைக்குள் விட்டான்.’’ வீதியில் யாராவது கண்டார்களா...? அர்ச்சகாவின் குரல் பிசிறியது.

‘‘இல்லை’’ என்று கூறியபடி தனது தலையை அசைத்தான் நகுலன். அந்த அறைக்குள் நீல நிற மின்குமிழ் மெல்லிய ஒளியை வெளியே தள்ளியபடி இருந்த போதும் போதிய வெளிச்சமின்மையால் அந்த அறையில் கருமையே படர்ந்திருந்தது.

அர்ச்சகாவை வைத்த கண் வாங்காமல் பார்த்தான் நகுலன். அவள் நீல நிறச் சேலை அணிந்திருந்தாள். மிகவும் கட்டையான மேற்சட்டை அணிந்திருந்தமையால் முளங்கைக்கு மேலிருந்த கைகளின் செழுமையான பகுதி தெரிந்தது. தோள்மூட்டிலிருந்து நாலங்குலம் வரை தான் மேற்சட்டையின் கைப்பகுதி மூடப்பட்டிருந்தது. இடைக்குக் கீழ் தொங்கும் நீண்ட கூந்தலை ஆறங்குல நீளமுள்ள முடிக்கற்றையாக மடித்துப் பிடரியில் கட்டி அதை வர்ணச்சேலைத் துண்டொன்றால் கட்டியிருந்தாள். அவள் அன்று சேலை உடுத்தியிருந்த முறையும் வித்தியாசமாக இருந்தது. அர்ச்சகாவின் அன்றைய அலங்காரத்தைப் பார்த்துப் பரவசமடைந்தான் நகுலன்.

‘‘அர்ச்சகா...’’ மெல்ல அழைத்த படி அவளது கரத்தைப் பற்றினான் நகுலன், ‘‘என்னை தொடக் கூடாது தூர இருந்து கதையுங்கள். அவனது முகத்தைப் பாராது சொன்னாள் அர்ச்சகா. நகுலன் விலகிச் செல்லவில்லை. கிட்ட வந்தான். மிகவும் கிட்ட வந்தான், நாணம் என்னும் தாழ்ப்பாள் அர்ச்சகாவின் நெஞ்சில் திடீரென விழுந்தது நிறை என்னும் கதவு இறுக மூடியது. மெல்ல விலகினாள் நகுலன் அருகில் மிகஅருகில் வந்தான். அர்ச்சகாவின் சிவந்த முகமெங்கும் வியர்வை அரும்பியிருந்தது. நீல ஒளியில் அவள் வைரத் தேவதையாக அவளின் கண்களுக்குத் தோன்றினாள்; ‘‘அர்ச்சகா இன்று பொன்னான ஒரு நாள். நான் முதன் முதலாக உமக்கு மிகமிக அருகில் இருக்கிறேன். முன்பு உமது வீட்டார் நயினாதீவு நாகபூசனி அம்மன் கோயிலுக்குச் சென்ற போதும் சந்தித்தேன். இனறு நான் உற்சாகமாகவும் புத்துணர்வுடனும் இருக்கிறேன்’’ என்றவாறு கையைப் பிடித்தான் நகுலன். அவளது நெஞ்சம் அலறியது; ‘‘விழித்திருமகளே. நகுலனுடன் அன்பாகப் பேசு. அருகில் இருந்து கதை ஆனால் உனது நிறையைப் பேணிக் கொள்’’ என்று எச்சரித்தது.

“என்னடி ஒரு மாதிரியாக இருக்கிறாய். நீ இருப்பதைப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கு. காலையில் நகுலன் வந்தவர். எனக்கெண்டால், உனது நாணம் என்று சொல்லப்படும் கதவை நகுலன் தகர்த்து விட்டார் போலத் தெரிகிறது” என்றாள் மாதுமை.

“சற்று வரம்பு கடந்து நடந்து விட்டார். காதலனைக் கண்டதும் நாணம் என்னும் தாழ்ப்பாள் பொருந்திய கட்டுப்பாடு மிக்க மனக்கதவை, காதலரின் அன்பான இனிய வார்த்தைகள் கோடரி தகர்த்து விட்டது. எவ்வளவு தான் கட்டுப்பாடுகளிட்டாலும் மனம் கேட்க மறுத்து விட்டது என்றாள் அர்ச்சகா.

“வித்தியாவினதும், மாதுமையினதும் நிலைவேறு. உனது நிலை வேறு, நாணம் என்னும் தாழ்ப்பாள் பொருந்திய நிறை என்று சொல்லப்படும் பலம் மிக்க கதவை காமம் என்ற கோடரி உடைத்து விடும். இரும்புக்கதவாக இருந்தாலும் அக்கதவு தாக்குப் பிடிக்க மாட்டாது என்று நமது இலக்கியங்கள் கூறுகின்றன. நீ காதலிக்கு முன்பு சங்க இலக்கியங்களைப் படித்திருக்க வேண்டும்” என்றாள் சுவர்ணா.

மாதுமை சிரித்தாள்; “எவ்வளவு ஆலோசனைகளையும் சொல்லலாம். ஆனால் அந்த நேரம் யார் அதைக் கடைப்பிடிக்கப் போகிறார்கள். காதலர் சேர்ந்திருந்தாலே அருகில் நடப்பது தெரியாது. அதை விட உனது சங்க இலக்கியக் கதாநாயகர் பலரால் கூடத் தாக்குப் பிடிக்க முடியவில்லையே” என்றாள் மாதுமை.

அதற்காகத் தான் நான் சொல்கிறேன் அவர்களது தாழ்ப்பாளைக் காமமான கோடரி உடைத்ததால் அவர்கள் பட்ட துன்பம் எவ்வளவு தெரியுமா? என்று கேட்டாள் சுவர்ணா.

**1251. காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்**
**நாணுத்தாழ் வீழ்த்த கதவு.**

நாணம் என்னும் தாழ்ப்பாள் இட்ட நிறை என்று சொல்லப்படும் கதவைக் காமமாகிய கோடரி உடைத்து விடுகின்றது.

## இரக்கமில்லாதது

“அர்ச்சகா..... அர்ச்சகா...அர்ச்சகா..” யாரோ வெளியே இருந்து அழைப்பதைப் போலிருந்தது. வீட்டுக்கு வருவோர் ஒரு போதும் அவளது பெயரைச் சொல்லி அழைப்பதில்லை. தாயின் பெயரைச் சுருக்கி ‘கமலேஸ்’ என்று தான் அழைப்பார்கள். கொழும்பில் அவர்கள் இருந்த போது அவளை ‘ஈஸ்வரி’ என்று சிலர் அழைப்பார்கள். சிலர்; ஈசாக்கா ஏ்னபார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்த பின்பு அந்தப் பெயர்கள் மறைந்து ‘கமலேஸ்’ ஆகிவிட்டது. “அர்ச்சகா... அர்ச்சகா..” மெதுவாகக் கிசுகிசுப்பதைப் போல மென்மையான இனிய குரலொன்று அவளது காதுக்குள் நாதமிசைத்தது. இவருக்கு எப்படி அந்தத் துணிவு வந்தது. இது நாள் வரையும் இல்லாதது போல அன்று அவன் நடந்து கொண்ட விதம் அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. எப்படித்துணிந்து அவர் என்னை இறுக அணைத்து...” “அர்ச்சகா...அர்ச்சகா” நகுலன் அவளை அணைத்தபடி மெல்ல முனகினான்.

“விடுங்கோ” என்று திமிறியவாறு திடுக்கிட்டுக் கட்டிலால் எழுந்தாள் அர்ச்சகா. அவளால் அதிர்ச்சியில் இருந்து மீளமுடியவில்லை. கைகள் நடுங்கின. உடல் வியர்த்துக் கொட்டியது.

நடுச்சாமத்தில் எங்கோ நாய் ஒன்று ஊழையிடும் சத்தம் இரவின் அமைதியைக் கெடுத்துக் கொண்டிருந்தது. சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மணிக்கூட்டைப் பார்த்தாள். அந்த அறையில் எரிந்த நீல நிற மங்கிய மின் ஒளியில் மணிக்கூடு ஒருமணி இருபது நிமிடத்தைக் காட்டியது. பகலில் அவர் வந்து சென்ற அந்த இனிய உணர்வுகள் தான் தன்னை அந்த நடுச்சாமத்தில் எழுப்பியிருக்கின்றன. என்று நினைத்தாள். அவர் சென்றாலும் அவரது நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்த மனம் உடலோடு சேர்ந்து விழித்ததால் அவளைத் தன் எண்ணத்திற்கேற்பச் செயற்படும்படி வற்புறுத்தியது.

மாதுமையைத் திரும்பிப் பார்த்தாள். அவளின் உடலைப் போர்த்தியிருந்த போர்வை நிலத்தில் விழுந்து கிடந்தது. அவள் உடுத்தியிருந்த நீலப் பாவாடை கலைந்திருந்தமையால் அவளது பூரிப்பான கால்களின் அழகு தெளிவாகத் தெரிந்தது. மெல்லச் சிரித்தாள் அர்ச்சகா; “அர்ச்சகா உமது ஒப்பற்ற உடலழகை விலைமதிப்புள்ள ஆடைகெடுக்கிறது. காதலிக்கும் போது கவர்ச்சியான உடலைப் போர்த்தியிருக்கும் உடையின் அழகை நான் கண்டு இரசிப்பேன். பின் உடைகளுக்குள் மறையாது வெளியே தெரியும் உமது உடலின் பொன்நிறமான பகுதிகளைக் கண்மூடி இரசிப்பேன். மெதுமையான கால்விரல்களில் உள்ள பசுமை என்னைக் கொல்லும். காலின் நகங்களுக்குப் பூசப்பட்ட செழுமையை நிறப்பூச்சு என் கண்களைக் கொல்லும். அவற்றின் கொடுமை நினைத்து மிகுதிப் பகுதியைக் கற்பனை பண்ணிப்பார்ப்பேன். இன்று நீர் கட்டைப் பாவாடை அணிந்துள்ளமையால் உமது கவர்ச்சி என் உயிரைக் குடிக்கிறது” என்றான் நகுலன்.

மீண்டும் மாதுமையின் பக்கம் திரும்பிப் பார்த்தாள் அர்ச்சகா. அவளது முழங்காலுக்குச் சற்று மேற்பகுதி வெறுமையாகப் பளபளத்தது; ‘‘இதே கோலத்தில் அவர் என்னைப் பார்த்தால்’’ அவளுக்கு நாணமாக இருந்தது. அந்த நிலையில் நகுலன் தன்னைப் பார்ப்பது போன்ற பிரமை நிலத்தில் இருந்த போர்வையை எடுத்து மாதுமையைப் போர்த்திய அர்ச்சகா கட்டிலில் வந்து அமர்ந்தாள்; ‘‘நான், மோகினி வெற்றுடலுடன் வந்தால் கூடப் பார்க்க மாட்டேன். உமது கணைக் காலைப் பார்த்தாலே போதும். அதைக் கூடப் பார்க்கக் கூடாதா. மூடிவைத்துள்ளீர்; நகுலன் காதுக்குள் குசுகுசுத்தான்; ‘‘மெல்லத் தனது இரவு உடையை மேலே தூக்கினாள். நிலவொளியில் அவளது கணைக்காற்பகுதி மின்னியது; ‘‘காமத்திற்கு இரக்கமே இல்லை. அது ஊரவர்கள் அனைவரும் உறங்கும் நள்ளிரவில் என்னைத் தட்டி எழுப்பித் தன் விருப்பத்திற்கேற்ப என்னை இயக்குகிறது’’ என்று நினைத்தாள் அர்ச்சகா.

**1252. காமம் எனஒன்றோ கண்ணின்றுஎன் நெஞ்சத்தை**
**யாமத்தும் ஆளும் தொழில்.**

காமத்திற்கு இரக்கம் என்பதே இல்லை; அது எனது நெஞ்சை நள்ளிரவிலும் தட்டி எழுப்பித் தனது விருப்பத்திற்கேற்ப நடக்கச் செய்கிறது.

## தும்பல்

அன்று நகுலன் வந்ததை நினைத்துப் பார்த்தாள் அர்ச்சகா. வீட்டிலுள்ளோர் சுவர்ணாவின் வீட்டுக்கு மதிய உணவிற்காகச் செல்லப் போகிறார்கள் என்பதை அர்ச்சகா அறிந்ததும் மிகவும் மகிழ்ந்தாள். அதை அவள் மாதுமைக்குச் சொன்ன போது மாதுமை அவளுக்குச் சொன்னாள்; ‘‘தனிமையில் சந்திப்பது காதலர்களுக்கு இனிமையானது; மிக மிக இனிமையானது. ஆனால் மிகமிக கொடுமையானதும் அது தான். நான் அவரை எத்தனை நாட்கள் தனிமையில் சந்தித்திருக்கிறேன். அந்த நேரம் எழும் இனிமையான உணர்வுகள் இதயத்துள்ப் பொங்கி யெழுந்து எம்மைத் தம் விருப்பத்திற்கேற்ற மாதிரி ஆட்டிப்படைக்கும். அவரைச் சந்திக்க விரும்பும் போதெல்லாம் அவரை எனக்கு அருகில் வரவிடக்கூடாது என்று நினைப்பேன். மனதிற்கு அறிவுரைகள் கூறிக் கட்டுப்படுத்துவேன். அந்த நேரம் மனம் எனக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியளிக்கும். கட்டுப்பட்டு நடக்கும். ஆனால் அவரைக் கண்டதும் எனது கட்டுப்பாட்டை மீறி அவருடன் சென்று உறவாட ஆரம்பித்து விடும். பின் அவரது நெருக்கம் இன்னும் சற்று அதிகரிக்காதா என்று ஏங்கும். அவர் அருகில் வராவிட்டாலும் அவரை மெல்ல அழைக்கும். தேவையில்லாத செயல்களைச் செய்யச் சொல்லித் தூண்டும். சில சமயம் தானே அவரைத் தொட்டு உறவாட ஆசைப்படும். அவர் வெட்கத்தாலோ, இல்லை பயத்தாலோ விலகியிருந்தாலும் அவரது நெருக்கத்தில் இன்பங்கண்ட மனம் அவரை நெருங்கிச் செல்லும். நான் காமத்தை என்னுள் மறைக்க முயல்வேன். அவரின் நெருக்கத்தை நீக்க முயல்வேன். ஆனால் மனம் எனது கட்டுப்பாட்டுக்குள் நில்லாது தும்மல் போலத்தானே வெளிப்பட்டு விடும்’’ மாதுமை மீண்டும் அவளது காதுகளுக்குள் சொல்வது போல இருந்தது.

அர்ச்சகா மாதுமையைப் பார்த்தாள். அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவளது அழகான முகத்தில் மெல்லிய நீலஒளி பட்டுப் பளபளத்தது; ‘‘அர்ச்சகா நகுலனைத் தனிமையில் வீட்டில் சந்திப்பதை இயன்ற வரை தவிர்த்துக் கொள். காதலர்கள் பொது இடங்களில் தனிமையில் சந்திப்பது வேறு. யாருமில்லாத நேரத்தில் வீட்டில் சந்திப்பது வேறு. உணர்வுகள் கட்டுக்கடங்காதவை. அவை எந்த நேரம் எம்மை ஏமாற்று மென்று நாம் அறிந்து கொள்ள முடியாது. அத்துடன் மனம் பழக்கப்பட்டு விட்டால் அதையே வேண்டுமென்று அடம்பிடிக்கும். இது நான் கற்ற பாடம். எனது பிரச்சினை பெற்றோருக்குத் தெரியும். அதனால் பெரும் பாதகங்கள் வராது. உனது காதல் அப்படியானதல்ல ஜாக்கிரதையாக இரு’’ என்று அவள் சொன்னது அர்ச்சகாவின் காதில் ஒலித்தது.

‘‘நகுலன் மிகவும் நல்லவர். அவர் எனக்குப் பிடிக்காதவற்றைச் செய்ய மாட்டார். அவரில் உள்ள நம்பிக்கையை விட என்னில் எனக்கு நம்பிக்கை இருக்கு. நீ அனாவசியமாகப் பயப்பட்டு மனதை அலட்டிக் கொள்ளாதே. ஒருவரைப் போல இன்னொருவர் இருப்பதில்லை’’ என்றாள் அர்ச்சகா.

‘‘ஒருவரைப் போல இன்னொருவர் எந்த விஷயத்திலும் இருக்க மாட்டார்’’ என்றாள் மாதுமை அது உண்மை என்பதை நகுலன் வீட்டுக்கு வந்த சிலநிமிடங்களுக்குள்ளேயே அவள் புரிந்து கொண்டாள். தற்செயலாகச் செய்யும் செயல்களைப் போன்ற செயல்கள் அன்று அதிகரித்திருந்தன. முதலில் அவள் அச்சப்பட்ட போதும் பின் அவை அவளுக்குத் தேவை போல இருந்தது. தன்னில் இருந்த அளவுக்கதிகமான நம்பிக்கை மெல்ல மெல்லக் குறைந்து நகுலனின் மேலுள்ள நம்பிக்கை அதிகரித்து வலுப்பெற்ற போது அவள் நகுலனின் இறுக்கமான அணைப்புக்குள் இருந்தாள்.

அவர்களது வளர்ப்பு நாய் பலமாகக் குரைத்தமையால் கமலேஸ்வரி எழுந்து முன் வாயிலில் இருந்த மின் குமிழை இயக்கினாள். அந்த ஒளி வெள்ளம் கீற்றுக்களமாகச் சுவரில் உள்ள

துவாரங்களால் உள்ளே வந்து சுவரில் படிந்தது. நினைவுகளில் இருந்து விடுபட்ட அர்ச்சகாவிற்கு அந்நேரம் நகுலனைத் தேவைப்பட்டது. பெருமுச்சு விட்டபடி எழுந்து கட்டிலில் அமர்ந்நதாள்.

**1253. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்புஇன்றித்**
**தும்மல்போல் தோன்றி விடும்.**

நான் காமத்தை என்னுள் மறைக்க முயல்கிறேன். ஆனால் அது தும்மலைப் போலத் தானே வெளிப்பட்டு விடுகிறது.

### வெளிப்பட்டு விட்டது

''எனக்கென்றால் உன்னைப் பார்க்கச் சந்தேகமாக இருக்கிறது. இன்று நீ இருக்கும் நிலையைப் பார்த்தால் அவருடன் இதுவரை பழகாத மாதிரிப் பழகியுள்ளாய்'' என்று எண்ணத் தோன்றுகிறது. என்று பகல் மாதுமை கூறியது அர்ச்சகாவின் நினைவுக்கு வந்தது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மாதுமையைப் பார்த்தாள். அவள் இவ் உலக நினைவை மறந்து ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

''எத்தனை நாட்களாக அவரைக் கண்டும் எனது காமத்தை வெளிப்படுத்தாமல் என் நெஞ்சிலேயே நிறுத்தி வைத்திருந்தேன். ஆனால் இன்று வெளிப்பட்டு விட்டதே. காய்ந்த சருகுகளில் விழும் தீயைப் போல இன்று காலை அவரைக் கண்டதும் உணர்வுகள் நெஞ்சில் பற்றிக் கொண்டன. கொழுந்து விடடெரியும் தீயை விட வேகமாக அவை பற்றிப் பரவியதால் என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. அதனால் தான் அந்த நிலை ஏற்பட்டது. வெட்கப்பட்டாள் அர்ச்சகா.

கடற்கரையில் சந்திக்கும் வேளைகளில் அர்ச்சகா நகுலனின் முகத்தைப் பார்ப்பாள். அவனது முகம் சற்று மாறியிருக்கும். கண்கள் சிவந்து, குரல் அடைத்து, சற்றுக் கரகரப்பாகவே பேசுவான் நேரஞ்செல்லச் செல்ல அவனது குரலில் மாற்றம் தென்படும். கண்களில் ஒருவிதமான மயக்கம் உண்டாகும். அவள் அதைப் பெரிது படுத்துவதில்லை. இருப்பினும் அவனின் நெருக்கத்தால் தன்னுள்ளும் ஒரு மாற்றம் நிகழ்வதை அவள் உணர்ந்து கொள்வாள். அந்த நேரங்களில் கதைப்பதைவிட அவன் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கவே விரும்புவான். அந்த நேரத்தில் ஏற்படும் உரசல் அவளுக்குத் தேவையானதாக இருந்த போதும் அதை விரும்பாதவள் போல விலகியிருப்பாள். அதன் பின் நகுலன் சற்று அவதானமாக இருப்பான். அவ்வேளைகளில் அவளது மனம் அல்லற்படும். மெதுவாக அவனுக்கு அருகே சற்றுத் தள்ளியிருப்பாள். இப்படிப் பல முறை நடந்திருக்கிறாள். அன்று ஒரு நாள் அவன் வீட்டுக்கு வந்த போதும் அப்படித்தான் நடந்து கொண்டாள். தேநீர் கொடுக்கும் போது அவளது கையையும் சேர்த்துப் பிடித்தான். அது அவளுக்கு விருப்பமாக இருந்த போதும் அதை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அதன் பின் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான். அவள் குளிர்பானம் கொண்டு வந்தாள். அவள் நடந்து வரும் அழகை ரசித்துக் கொண்டிருந்த நகுலன்; ''காற்றில் அசையும் கொடியா? இலையா முகிலில் மிதக்கும் நிலவா? இல்லை மரத்தில் மலர்ந்து அந்தக் காற்றின் மீது அசையும் மலரா? எதுவென்று சொல்வேன்; ''என்று நகுலன் கூறிக் கொண்டிருந்தான். அதனால் அவள் குளிர்பானத்தை அவனின் முன்னால் இருந்த மேசையின் மீது வைத்து விட்டுத் தலையைக் குனிந்தாள்.

''காற்று நறுமணத்தை அள்ளி வீசுகிறது. பாண்டிய மன்னனுக்கேற்பட்ட சந்தேகம் எனக்கும் ஏற்படுகிறது. செயற்கையாக தயாரிக்கப்பட்ட எந்த நறுமணத்தையும் நீர் பூசவில்லை. அத்துடன் மல்லிகை முல்லை ரோஜாப்பூக்களில் இருந்து வீசும் நறுமணமும் அல்ல. ஏனென்றால் உமது கூந்தலில் இருப்பவை செயற்கைப் பூக்கள். அப்படியானால் இந்த நறுமணம் காற்றிற்கு எப்படிக் கிடைத்தது. அழகான உமது பட்டுடல் மீது பட்டு வரும் காற்றைத் தான் கேட்க வேண்டும்'' என்று அவன் அன்று புலம்பியது அவளது காதில் ஒலித்தது. அன்று மறைந்திருந்து அல்லல் கொடுத்த அந்த உணர்வுகள் அன்று வெளிப்படாது மறைத்திருந்தன. ஆனால் இன்று அன்று போல மறைந்திருக்க அவற்றால் முடியவில்லை. வெளிப்பட்டு தனது இயலாமையைக் காட்டி விட்டன. எப்படி வெளிப்பட்டன...? தாளிட்டிருந்த தாழ்ப்பாள் எப்படி உடைந்தது. இரும்பாலான கதவல்லவா நான் போட்டுக் காத்திருந்தேன். யாவற்றையும் எனக்குத் தெரியாமல் உடைத்து வெளிப்பட்டு அவருடன் வெட்கமின்றி நாணமின்றிக் கூடிக்குதூகலித்து விட்டதே'' அதை நினைக்க அவளுக்கு வெட்கமாக இருந்தது; ''என் அன்பான நெஞ்சே! என்னால் தான் உனக்கு இந்தநிலை ஏற்பட்டதாகச் சொல்கிறாய். இனியாவது கட்டுப்பாடாக இரு. அவரைக் கண்டவுடன் வெளிப்பட்டு விடாதே'' என்றாள் அர்ச்சகா.

**1254. நிறைஉடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்**
**மறைஇறந்து மன்று படும்.**

நான் இதுவரையில் காமத்தை வெளிப்படுத்தாமல் என்னுள் வைத்திருப்பதாகவே நினைத்திருக்கிறேன்.; ஆனால் எனது காமம் எனது கட்டுப்பாட்டையும் மீறி வெளிப்பட்டு விட்டது.

**இல்லாதது**

“அர்ச்சகாம்மா செயல்கள் முடிந்த பிறகு கவலை கொண்டாலென்ன, கொள்ளாவிட்டாலென்ன காமத்தை எவற்றாலும் தடுத்து நிறுத்த முடியாது. அது இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு மார்கழி மாதம் இருபத்தாறாம் திகதி கடலில் ஏற்பட்ட இராட்சத அலையை விட வல்லமை வாய்ந்தது அது பலகாலம் மனதை ஒடுக்கி தவம் புரிந்த மாமுனிவரின் நெஞ்சுறுதியையும் தகர்த்து விடும். அப்படிப்பட்ட காமத்திற்கு அனிச்சம்பூவை விட மென்மையுடைய உனது எம்மாத்திரம் அதைப்பற்றிச் சிந்தித்து எந்தவிதமான பயனும் இல்லை. மனதைக் குழப்பாமல் அமைதியாக இருக்கப் பார். அடுத்த முறை உன் அன்புக்குரியவரைத் தனிமையில் சந்திக்காதே” என்றாள் மாதுமை.

“அப்படித்தான் நான் அவர் சென்ற பின்பு நினைத்தேன். அதில் மிகுந்த உறுதியாகவும் இருந்தேன். ஆனால் இரவு அவர் கனவில் வந்து “அன்பே” என்றார். நான் அசையவில்லை. “அமுதே” என்றார் அதற்கும் நான் அசையவில்லை. மற்றய நாள்களைப் போல அவரைப் பார்த்துச் சிரித்தேன். வழமையாகப் பற்கள் தெரியும் படியாக சிரிக்கும் அவர் அப்பொழுது தனது உதடுகளைப் பிரிக்காது மெல்ல முறுவலித்தார். அவரின் உதடுகள் அசையக் கன்னங்கள் சுருங்கின. அதில் எத்தனையாயிரம் உணர்வுகள். இதுவரை நான் அவரது முகத்தில் காணாத புதுமையான ஓர் அபூர்வ மயக்கம் அதில் தெரிந்தது.

“என் உயிருக்கு இன்று என்ன நேர்ந்தது சூரியனைக் கண்டும் மலராத தாமரையைப் போலல்லவா உமது அழகிய வதனம் இருக்கிறது. சூரியனைக் காணும் வரை தான் சூரிய காந்தியின் முகம் கவிழ்ந்திருக்கும். ஆனால் என்னைக் கண்டும் எனது சூரியகாந்தியின் முகம்மலரவில்லையே. நான் காண்பது கனவா? கனவில் கூட என்னவளின் முகம் பொலிந்து பூரித்திருக்கும். இன்று நனவில் பூரித்துச் சிவந்திருப்பது நேற்று நடைபெற்ற சம்பவத்தின் இனிமையாகத் தான் இருக்கும். அதன் இனிமையில் மனம் பூரித்திருக்கும் போது உலகில் நடப்பது எதுவும் தெரியாது. நான் வந்தால் கூட” என்றார். அதனால் நடுச்சாமத்தில் விழித்து விட்டேன். அதன் பின் என்னால் தூங்க முடியவில்லை. அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் உன்னைத் தொந்தரவு செய்ய முடியவில்லை. அடிக்கடி பாவம் தூங்கட்டும் என்று விட்டு விட்டேன்” கனவில் தோன்றி உன்னைத் தட்டி எழுப்பி இன்ப வேதனையைத் தரும் விபுலன் இப்பொழுது வேறு ஏதோ செயலிலீடுபட்டிருப்பதால் உன்னைச் சற்று மறந்து விட்டார் என்று நினைத்தேன்” என்றாள் அர்ச்சகா.

“அவர் என்னை எப்போது மறந்தார். இரவு என்னருகே வந்து போர்வையைப் பறித்து நிலத்தில் போட்டு விட்டார். அதனால் நான் விடியும் வரை குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தேன். இது எங்கே உனக்குத் தெரியப் போகிறது என்றார் மாதுமை.

“ போர்வையை அவர் பறித்துக் கீழே போட்ட பின்பு நீ படுத்திருந்த கோலத்தை நான் பார்த்தேன். சகிக்க முடியவில்லை. கீழே கிடந்த போர்வையை எடுத்துப் போர்த்தி விட்டேன். பின்பும் பறித்து விட்டாரா?” என்று கேட்டாள் அர்ச்சகா.

“அவருடைய திருவிளையாடல்களுக்கு அளவே இல்லை. அவர் எதை எனக்குச் செய்தாலும் பரவாயில்லை. ஆனால் அது உனக்கு நடைபெற்றால் கரைச்சல். கவனமாக இரு” என்றாள் மாதுமை.

“நான் மிகவும் எச்சரிக்கையாகவும் கட்டுப்பாடாகவும் இருந்தாலும் அவரின் மென்மையான மொழிகள் என்னை வசீகரித்து விடுகின்றன. மந்திரத்திற்குக் கட்டுப்பட்ட பிசாசைப் போலவும் மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பைப் போலவும் எனது நிலையை இழந்து விடுகிறேன். எனது வீறாப்பெல்லாம் அவரைக் காணும் வரை தான் அவரைக் கண்டு விட்டால் அச்சம், மடம, நாணம், பயிர்ப்பு எல்லாம் பறந்து விடும். ஆடை களைந்து இருந்தால் கூட அது எனக்குத் தெரிவதில்லை” என்றாள் அர்சச்கா.

மாதுமை சிரித்தாள்; “இது பெரியபலவீனம். முனிவர்களுக்குக் கூட அந்தப் பலவீனம் இருக்கிறது. தன்மேல் விருப்பம் சிறிதும் இன்றிச் சென்றவரின் பின்னால் செல்லாமல் இருக்கும் பெருந்தன்மை, காமநோய்க்கு ஆளானவர்களிடம் இராது. இது உலக நியதி. வெறுத்துச் சென்றவர்கள் பின்னாலும் காம நோயுள்ளவர்கள் செல்வார்களென்றால், நீ உயிரையே வைத்திருக்கும் அவரின் முன் மயங்கி நிற்பது பெரிதா?” என்று கேட்டாள் மாதுமை.

**1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்**
**உற்றார் அறிவதுஒன்று அன்று.**

தன்னை வெறுத்து ஒதுக்கிய வரின் பின் செல்லாமல் இருக்கும் பெருந்தன்மை, காமநோய்க்கு ஆளானவரிடம் இருக்க மாட்டாது.

### கொடுமையான நோய்

மாதுமை பழைய சம்பவமொன்றை நினைத்துப் பார்த்தாள். விபுலன் மிகவும் நல்லவன். அவளுக்காக எதையும் செய்யத் தயங்காதவன். அவளது வீட்டிற்கு வந்தால் அவளின் பின்னால் அலைந்து கொண்டிருப்பான். அவன் வந்தால் அவளைக் கேட்காமலே அவன் விரும்புபவற்றை அவள் செய்ய வேண்டுமென்று விரும்புவான். அன்று அவளுக்கு காய்ச்சல் அதனால் அவள் மருந்து குடித்து விட்டு ஓய்வாகப்படுத்திருந்தாள். விபுலன் வந்து அவளின் நிலையைப் பார்த்துத் துடித்துப் போனான். அழகான அவளது முகம் சற்றுக் கறுத்திருந்தது. துடிப்புடன் அசைந்து அவனுக்கு மோகத்தைக் கொடுக்கும் அவளது அழகிய விழிகள் சோர்ந்திருந்தன.

விபுலன் அவளின் அருகே இருந்து, அவளது கையைப் பிடித்தான். அதுலேசாகச் சுட்டது. நெற்றியில் கையை வைத்துப் பார்த்து விட்டுத்; ''தலைவலிக்கிறதா?'' என்று கேட்டான். அவள் வாய்திறவாது ''ம'' என்றாள்.

அருகில் இருந்த சுடுநீர்ப் போத்தலில் இருந்த சுடுநீரை எடுத்து தேநீர் தயாரித்து விட்டு அவளது கையைப் பிடித்துத் தூக்கினான்; ''என்னால் முடியவில்லை. என்னைப் படுக்க விடுங்கோ'' என்றாள் மாதுமை.

''தேநீர் குடித்து விட்டுப் படும்.''

''வேண்டாம்'' என்றாள் மாதுமை, ''இல்லை எழும்பும்'' என்றபடி அவளை அணைத்தான். அவளது உடல் லேசாகச் சுட்டது. இருப்பினும் அவள் சில வேளைகளில் அவனை ஏமாற்றுவதற்காகவும் அப்படி நடிப்பதுண்டு. ஒரு நாள் இதே போலத் தான் நடித்தாள். போர்வையால் உடலை இறுகப் போர்த்தினாலும் உடல் சுடும். அதனால் அவன்; ''காய்ச்சல் விட்டு விட்டது போலத் தெரிகிறது எழும்பும்'' என்றான்.

அதனால் அன்று இருவருக்குமிடையில் பிரச்சினை உருவாகியது. அதனால் அவன் இரண்டு நாட்கள் வீட்டிற்கு வரவில்லை; ''நீர் தேவதை என்று நினைக்கிறீர் அதனால் நான் உம்மைச் சுற்றிச் சுற்றி வருவேன் என்றும் நினைக்கிறீர். உம்மீது கொண்ட மோகம் காரணமாக நான் இங்கு வரவில்லை. அன்பு காரணமாகத் தான் வந்தேன். அதைப் புரிந்து கொள்ளும் வரை நான் வரமாட்டேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான். அவன் சென்று விட்டால் வரமாட்டன் என்பது மாதுமைக்குத் தெரியும். அவனைச் சீண்டி சற்று வேடிக்கை பார்க்க நினைத்தால் வந்த வினை என்று நினைத்தாள். அதனால் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். மறுநிமிடம் விபுலன் அவளது வீட்டிற்கு வந்தான்; ''உங்களுக்கு வேடிக்கையும் தெரியாது? இப்படியா என்னைத் தண்டிப்பது'' என்று விம்மினாள். விபுலன் கரைந்து போனான். அதை நினைத்து எழுந்து அவன் கொடுத்த தேநீரை வாங்கிக் குடித்தாள் மாதுமை.

நோயுற்ற அந்த நேரத்திலும் அவளின் உடலில் எங்கோ ஒரு மூலையில் மறைந்திருந்த உணர்வுகள் மெல்ல விழித்துக் கொண்டன. அதனால் மெல்ல அவனது உடலில் சாய்வது போலச் சாய்ந்தாள். விபுலனின் அணைப்பு மெல்ல விலகியது; ''நோயுள்ள நேரத்திலும் அணைப்பா...?'' என்று கேட்டாலும் கேட்பாள் எனச் சற்றுப் பயந்தான். ஆனால் அவள் மற்றய நாட்களை விடச் சற்றுக் கூடுதலாகத் தன்மீது மோகங் கொண்டுள்ளது அவனுக்குத் தெரிந்தது. இறுக அணைத்தான்.

மெல்லச் சிரித்தாள் மாதுமை; ''என்னடி....அவரின் நினைப்போ'' என்றாள் அர்ச்சகா.

''எனக்கு வேறு எந்த நினைப்பு இருக்கப் போகிறது. ஒரு நாள்க் காய்ச்சலின் போது நடந்த சம்பவமொன்றை நினைத்துப் பார்த்தேன். அவர் அன்று என்னை அணைத்து மகிழ்ந்ததால் அவர் மூன்று தினங்கள் காய்ச்சலால் படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. என்னை விட்டு காதலர் வெறுத்து நீங்கினாலும் அவரின் பின்னால் செல்லும் நிலையை எனக்கு இக் கொடிய காமநோய் உண்டாக்கி விடுகிறது. ஐயோ' இது எவ்வளவு கொடுமையானது தெரியுமா..? அதன் கொடுமையால் தான் எம்மை விட்டுப் பிரிந்தமை காதலரும் பின் சமாதானமாகி எம்மை வந்து அடைகின்றனர்'' என்றாள் மாதுமை.

''என்னாலும் அவரைப் பிரிந்து இருக்க முடிவதில்லை. அவர் எனது அழகைப் பற்றிப் புலம்புவார். அது எனக்கு ஒரு மாதிரியாக இருக்கும். எனினும் அவரைச் சந்திக்கும் போது அவர் புலம்பாதிருந்தாலும் எனக்கு ஒரு மாதிரியாக இருக்கும். அவரது வார்த்தைகள் மனதிற்குக்

கிளர்ச்சியைக் கொடுத்து உடலில் சிலிர்த்திருக்கும் உணர்வுகளுக்குத் தீனியாவதால் மனம் அமைதி கொண்டு மகிழ்கிறது. இதற்காக அவரை நான் தினமும் சந்திக்க விரும்புகிறேன். அவர் கோபித்தாலும் அவரின் பின் என்மனம் சென்று விடுகிறது'' என்றாள் அர்ச்சகா.

**1256. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றுஎன்னை உற்ற துயர்.**

வெறுத்து ஒதுக்கிய காதலரின் பின் செல்ல விரும்பும் நிலையை எனக்கு உண்டாக்கிய இக் காமநோய் எத்தன்மையது?.

**நாணம் இல்லை**

''எம்மைக் காணும் காதலர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாலேயானால் நாம் விரும்புகின்ற அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு நாணம் விடாது. இருப்பினும் அந்த நேரம் அவரது மனநிலையை அறிந்து நாணம் விலகிக் கொள்ளும். எனக்கு புதிதாக வந்த ஒரு தங்க ஆபரணத்தின் மீது கொள்ளை ஆசையாக இருந்தது. எனது பிறந்ததினத்திற்கு ஒரு வாரகாலத்திற்கு முன்பு அவர் என்னைக் கேட்டார்; ''உமக்கு என்ன பரிசுப் பொருள் வேண்டும்'' என்று

''ஒரு காதலன் தனது காதலியின் மீதுள்ள அன்பின் பெருமையை உணர்த்துவதற்காகத் தன் காதலிக்கு, அவள் அறியாமல் பரிசு கொடுத்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவான். பரிசுப் பொருள் இன்னதென்று அவள் அறிவதற்கு ஆவல்படுமளவிற்கு நடந்து கொள்வது தான் காதலரின் பண் பென்றுநான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுதான் எனக்கும் விருப்பம்'' என்றேன்.

அதற்கு அவர் சொன்னார்; ''சராசரிக் காதலர்கள் தான் அப்படி நடந்து கொள்வார்கள். மேலான காதலர்களிடையே ஒரு பிணைப்பு இருக்கும்; அன்பிருக்கும்; எதையும் அறிந்து ஆராய்ந்து மனமொத்துச் செய்யும் உயர்ந்த நோக்கிருக்கும். ஒரு காதலனின் மேல் உள்ள அன்பு காரணமாக தன்மீது திணிக்கப்படும் தேவையில்லாத பொருட்களையும் மேலான பொருட்கள் என்று காதலனின் முகமலர்வுக்காகச் சொல்லும் சொற்களைக் கேட்கும் கீழான பண்பு எனக்கில்லை. நான் விரும்பிய ஒப்புக்குச் சோழர்காலத்து வார்ப்புப் பதுமை போன்ற பேரழகுமிக்க என்மனம் குளிர்ந்தவளுக்குத் தான் விரும்பியதையே கொடுத்து மகிழ்விக்கத் தான் நான் விரும்புகிறேன். அந்த விருப்பத்தைக் என்மனம் கனிந்த பேரழகானவள் நிறைவேற்ற வேண்டும். எமது காதல் சராசரி மக்களின் காதலைப் போன்றதல்ல. உயர்ந்த தேவர்களுடைய காதலை விடச் சிறப்பானது'' என்றார்.

''அவரைக் கண்டாலே மயங்கும் என் இதயம், அவரது வார்த்தைகளால் குளிர்ந்து பரவசமாகி விட்டது. அதனால் அவரது நாமம் பதித்த மோதிரம் ஒன்று கேட்டேன். காதலிக்கும் போது அவர் கேட்கிறார். என்பதற்காக நாம் விலை உயர்ந்த பொருட்களைக் கேட்டால் அவர் பொருளுக்காகத் தான் நான் தன்னை விரும்புவதாக நினைத்துவிடுவார். என்ற அச்சம் எனது மனதில் இருந்தது. அதனால் நான் விரும்பிய அந்த நகையைக் கேட்கவில்லை. எனது பிறந்த தினத்திற்கு வந்த கௌரி புதுவிதமான அட்டியல் ஒன்றை அணிந்திருந்தாள். கழுத்தோடு ஒட்டிக் கொண்டிருந்த அந்த அட்டியலில் அருமையான பூ வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த அட்டியலின் நடுவே இரு குட்டி யானைகள் கௌரியின் காதலனின் பெயரின் முதல் எழுத்தைத் தமது தும்பிக்கையினால் தூக்கிப்பிடித்துக் கொண்டிருந்தன. அவளது அட்டியலைத் தொட்டுப் பார்த்தேன்; அதன் விலையை விசாரித்தேன். அதை அவர் கண்டு விட்டார்'' பிறந்ததினம் முடிந்த பின்பு என்னைத் தனிமையில் சந்தித்த அவர்; ''கௌரியின் அட்டியலை நீர் தொட்டுத் தொட்டுப் பார்த்தீர். நானும் அதைப் பார்த்தேன். சித்திர வேலைப்பாடுகள் மிகவும் நுட்பமாக அமைந்த அந்த அடடியலை உமது கழுத்தில் நான் கட்டினால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். எனது மனவானில் நீர் அந்த அழகு மிக்க அட்டியலை கழுத்தில் அணிந்து கொண்டு காற்றில் மிதந்து வரும் ஓவியத்தைப் போல எனக்குத் தெரிந்தீர். மனந்திறந்து நான் சொல்வதாக இருந்தால் அந்தநேரம் தேவதையாக மிதந்த உம்மைக் கட்டித் தழுவி அந்த அட்டியலுக்கு ஒரு முத்தம் கொடுத்திருப்பேன். தங்க நகை அழகானது என்பார்கள். தங்கச்சிலைக்கு எப்படித் தங்கம் அழகாக முடியும் என்று நினைப்பீர்'' என்றார்.

நான் எதுவும் பேசவில்லை. தலையைக் குனிந்து கொண்டேன். மெதுவாக என்னை அணைத்தவாறு சொன்னார்; ''அன்பே என் உலகம் நீர்தான். உம்மைக் காணும் வேளைகளில் நான் பெறும் இன்பத்தின் அளவை மதிப்பிட்டுக் கூற முடியாது. என்மனங் கவர்ந்த உமக்கு அந்த அட்டியல் வேண்டுமா..? சொல்லும் இப்பொழுதே நகைக்கடைக்குச் சென்று வாங்கி வருவோம்'' என்றார்.

''நாம் விரும்பும் காதலர் அன்பு மேலீட்டால் நாம் விரும்பும் இன்பங்களையெல்லாம் தருவாரேயானால் நாணம் என்ற ஒன்று எம்மிடம் இராது. நான் எனக்கு வேண்டுமென்றேன். உடனே அவர் என்னை நகைக்கடைக்கு அழைத்துச் சென்று பல்லாயிரம் ரூபாபெறுமதியான அந்த அட்டியலை வாங்கிக் கடையில் வைத்தே எனது கழுத்தில் அணிந்து விட்டார். நான் பூரித்துப் போனேன். அதை நினைக்க இப்போதும் அது கனவு போலத்தான் தெரிகிறது'' என்றாள் மாதுமை.

**1257. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.**

நான் விரும்பிய காதலர், காமத்தால் நான் விரும்பும் இன்பங்களைத் தருவாரானால், நாணம் என்று ஒன்று இருப்பதை நான் அறியாமல் இருந்திருப்பேன்.

**ஆயுதங்கள்**

புலவன் தான் கண்டவற்றையே கவிதையில் சொல்வான். அவன் கண்ட அழகு அவனுக்குப் பேரழகாகத் தோன்றும் ஆனால் நான் கண்ட பெண்ணின் அழகுதான் பேரழகு என்று அகத்திணை படைத்த புலவனைக் கண்டால் நான் கூறுவேன்'' என்று நகுலன் அன்று தனிமையில் கூறியது அர்ச்சகாவிற்கு நினைவில் வந்தது.

அன்று அவள் எவ்வளவு உறுதியாக இருந்தாள். நகுலன் மெல்ல அடியெடுத்து வைத்து அவளது அறைக்குள்ச் சென்றபோது அவள் முழுகிவிட்டுத் தனது கூந்தலை தோளெங்கும் பரவியிருந்தாள். ஒழுங்காக வாரப்பட்டு தோளில் பரவிக்கிடந்த அந்த கருமுகிற் கூட்டத்தைப் பார்த்ததும் நகுலனின் மனம் கிளர்ந்தெழுந்தது; ''அன்பே சங்ககாலப் புலவனைப் போல என்னால் கவிதை பாட முடியாவிட்டாலும் எனது மனதைக் கொள்கை கொண்டு தங்கியிருந்து தினமும் அல்லற்படுத்தும் உமது பேரழகை ஒரு ரசிகனாக இருந்து வார்த்தைகளால் என்னால் சொல்ல முடியும். இன்று மார்கழிகால மேகம் போலக் கறுத்திருக்கும் உமது கருங்கூந்தலுக்குள் பூரணை நிலவு மறைந்திருக்கிறது. பூரண நிலவுக்கு இல்லாத ஒரு பெரும் மகிமை உமது முகத்திற்கு இருக்கிறது. கருமுகங்களினில் இருந்து சந்திரனால் வெளிப்பட்டு உலகத்தைத் தரிசிக்க முடியாது. ஏன் பேரொளி கொண்ட சூரியன் கூடத் தனது காதலியான சூரியகாந்தியைப் பார்ப்பதற்காகப் மாரிகாலத்தில் பல நாட்களாகத் தன்னை மறைத்திருக்கும். கரு முகிலைப் பல முறை கெஞ்சிம் அது மனமிரங்கி வழிவிட வில்லை. அதனால் துன்பமேலீட்டால் சூரியன் அழுவதால் கண்ணீர் மழையாகச் சொரிகிறது. பல நாட்கள் தனது காதலியைக் காணக் கருமுகில்கள் விடாததால் சூரியன் அழுத கண்ணீர் வெள்ளமாக ஓடி மக்களை எவ்வளவு துன்பப்படுத்துகிறது தெரியுமா? அப்படிக் கருமுகில்கள் மறைத்தாலும் அதனின்றும் வெளிப்பட்டு நிலவை விடப் பிரகாசமாக ஒளிர்ந்து என்னை மகிழ்விக்கும் தன்மை உமது முகத்திற்குத் தானே உண்டு. இந்தப் பெருமை நிலவுக்கும் இல்லை. இதை நான் அறிந்தவரை எந்தப் புலவனும் கூறவில்லை. இப்ப சொல்லும் நான் புலவனா...? இல்லையா...? என்று

அந்தவார்த்தைகளில் அவளது நெஞ்சு கரையத் தொடங்கி முற்றாகக் கரைந்தமையால் அர்ச்சகா ஆனந்த பரவசத்தில் இருந்தாள்; ''புலவரே, நான் பெரிதாக உம்மைப் போலத் தமிழ் நூல்களைக் கற்கவில்லை. சூரியனைச் சுற்றும் சந்திரனைப் போல உம்மைச் சுற்றி உம்மிடமுள்ள அறிவொளியைப் பெற நினைக்கிறேன்'' என்றவாறு அவனது நெஞ்சில் சாய்ந்தாள். அவளது கட்டுப்பாடுகள் யாவும் தளர்ந்து விடுபட்டன.

''அன்பே இந்த இறுக்கமான பிணைப்பு இப்படியே இருந்தால் எனக்குக் காலம் போவது தெரியாது; பசிக்காது; உலகே புரியாது என்னைக் கொல்ல நினைக்கும் எதிரி இப்பொழுது வந்தால் நான் சரணடைந்து விடுவேன்''.

பெருமூச்சு விட்டாள் அர்ச்சகா; ''என்னால் அவரைப் பிரிந்திருக்க முடியாமைக்கு அவர் செய்யும் மாயங்கள் தான் காரணம். மாயங்கள் பலவற்றில் மிகத்தேர்ந்த கள்வராகிய அவரின் இனிமையான தேனில் கலந்து தோய்ந்து முழுகிவரும் சொற்கள் என்னை மெய்மறக்கச் செய்கின்றன. அந்த வார்த்தைகள் எனது பெண்மையின் அத்திபாரத்தை ஈடாடச் செய்கின்றன. வெடிகுண்டுகளைப் போன்ற அந்த அன்பான வார்த்தைகளுக்குத் தாக்கும் மாயம் புரியும் போலத் தெரிகிறது. நான் விலக்கினாலும் சிறிது நேரத்தில் அவற்றை பலவீனத்தால் அழைத்து விடுகிறேன்.'' என்றாள் அர்ச்சகா.

''பேனாவுக்குள்ள சக்தி உலகில் உள்ள ஆயுதங்கள் எவற்றிற்கும் இல்லை என்று உலகில் புரட்சி செய்பவர்கள் கூறுவார்கள். காதலில் வெற்றி பெற்றவர்கள் வார்த்தைகளால் தான் மன்மத பாணங்களை உருவாக்கித் தாக்கி மயங்கியிருக்கிறார்கள். காதலனின் அன்பு கலந்த மாயவார்த்தைகள் ஆயிரம் செயல்களை விட வலிமை மிக்கவை. இதனால் தான் கூடக் கல்நெஞ்சையுடைய பெண்கள் கரைந்து விடுகிறார்கள். வித்தியா கரையக் காரணம் கஜேந்திரனது வலிமையான வார்த்தைகள் தான்'' என்றாள் மாதுமை.

அர்ச்சகாவுக்கு அவள் கூறுவது உண்மை எனப்புரிந்தது.

**1258. பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.**

என்னுடைய பெண்மையாகிய அரணை அழிக்கும் படையாக இருப்பது பல மாயங்கள் செய்ய வல்ல கள்வரான எனது காதலரின் பணிவான மொழி ஆகும்.

**எண்ணிய எண்ணம்**

மூன்று வாரகாலம் பல்கலைக்கழகத்தில் பரீட்சை நடைபெற்றதால் நகுலனை அர்ச்சகாவால் காணமுடியவில்லை. அந்தமூன்று வாரகாலத்துள் தான் அவளது பிறந்ததினம் வந்தது. அன்று அர்ச்சகா வித்தியாவையும் அழைத்துக் கொண்டு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றாள். அர்ச்சனைப் பொருட்களை அவள் குருக்களிடம் கொடுத்து விட்டு ''அர்ச்சகா; நகுலன் மிருகசீரிடம்'' என்றாள். வித்தியா திகைத்ததைப் போல குருக்களும் திகைத்துப் போனார்; ''நேற்றும் கமலேஸ்வரி வந்தவள். இதைப் பற்றி எதுவும் கூறவில்லையே'' என்று நினைத்தார்.

வித்தியா அதை உணர்ந்து சற்றுத் தடுமாறிச் சிரித்தாள்; ''என்னம்மா வித்தியா உன்னைப் போலத்தானே உனது தோழியும் என்றார் குருக்கள்.

''ஓம் ஐயா, அவள் நகுலனைத் தீவிரமாக விரும்புகிறாள். இது வீட்டாருக்குத் தெரியாது. நகுலன் நல்லவன்'' என்று அவள் கூறும் போது குருக்கள் சொன்னார்; ''என்னைக் கமலேஸ்வரிக்குச் சொல்ல வேண்டாமென்று சொல்கிறாய். உனது இரகசியத்தை மகா கணபதியைத் தவிர வேறு யாருக்கும் நான் சொன்னதில்லை. நீ கடைசியாகப் பட்ட துன்பங்கள் யாவற்றையும் கஜேந்திரன் வரிக்கு வரி சொன்னவன். நான் மகா கணபதிக்குத் தினமும் சொன்னனான். அதுபோல நகுலனும் நல்ல பிள்ளை பெரும்பணக் காரன்; கற்றவன்; உன்னை ஏமாற்ற மாட்டான்; நான் மகாகணபதிக்கு எல்லாம் கூறுகிறேன்'' என்றார்.

அர்ச்சனை முடிந்ததும் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு கடற்கரைக்குச் சென்றாள் அர்ச்சகா. வெகுநேரம் வரை நகுலன் வரவில்லை. ஐந்துமணிக்குப் பின்பும் அவள் நகுலனுக்காகக் காத்திருந்தாள். அவளது துயரத்தைப் பார்க்க வித்தியாவுக்கு வேதனையாக இருந்தது; ''உயிர் போவதானாலும் கூட என்னைச் சந்திக்காமல் அவருக்கு உயிர் போகாது. மற்றய நாட்களை விட அவன் பரீட்சை நாட்களில் தான் வித்தியாவைச் சந்திக்க விரும்புவான்; ''கண்ணே உம்மைப் பார்த்தால் தான் என் உயிர்தளிர்க்கும். உம்மைப் பாராமல் செய்யும் எந்தச் செயலும் எனக்கு வெற்றியைத் தருவதில்லை. நகுலன் மடையன். ஏதோ பெரிய படிப்புப் படிக்கிறானாம் படிக்க என்ன இருக்கிறது. சகலகலைகளும் அடங்கிய புத்தகமாக நீர் இருக்கும்போது அந்தப்புத்தகத்தைத் தொடாமல்; பாராமல்; படிக்காமல் எப்படிப் பரீட்சை எழுதுவது. உம்மைப் பார்த்து விட்டுச் சென்றால் மகிழ்வுடன் செல்வேன். மறந்த பகுதிகளும் எனக்கு ஞாபகத்திற்கு வரும். பார்க்காமல் சென்றால் படித்தபகுதிகளையும் மறந்து விடுகிறேன். இது உமது திருவிளையாடல்'' என்பான். அதை நினைக்க அவளுக்குச் சிரிப்பு வந்தது.

வித்தியாவின் சிரிப்பு அர்ச்சகாவிற்கு எரிச்சலைவரவழைத்தது; ''உனக்கு வாய்த்தவர் உன்னைக் காணாவிட்டால் எதையும் செய்ய மாட்டார். என்னவருக்கு என்னைப் பார்த்தால் எதுவும் ஓடாதாம். பரீட்சைத் தாளிலும் எனது முகம் தானாம் தெரியும் ஒவ்வொருவரும் விசித்திரமானவர்கள்'' என்றாள் அர்ச்சகா.

பரீட்சை முடிந்த பின்பு நகுலன் அவளைச் சந்திக்கும் படி கூறியிருந்தால் கடற்கரைக்குச் சென்றாள் அர்ச்சகா; ''அவனோடு கூடாமல் ஊடல் கொள்ள வேண்டும். பரீட்சைக்காலத்தில் தனது எண்ணத்தை நிறைவு செய்வதற்காக என்னை வருத்தியவரை ஒருவாரகாலமென்றாலும் வாட்டி வருத்த வேண்டும்'' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

''இன்று உமது அழகு பூத்துக் குலுங்கும் ரோஜாவனம் போல உள்ளது. இவ்வளவு காலமும் பிரிந்திருந்தோம். அதனால் பரீட்சையை மிகவும் திறம்பட என்னால் செய்ய முடிந்தது. இனி இருபத்திநான்கு மணிநேரமும் உமது அணைப்பில் இருக்கப்போகிறேன் என்பதை நினைக்க இருதயம் செட்டை கட்டிப் பறக்கிறது'' அச் சொற்கள் மன்மதபானங்களாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தன. மெல்ல அவளது தோளில் கையை வைத்தான் நகுலன்.

அவனது கையைத்தட்ட அவளால் முடியவில்லை. கஷ்டப்பட்டு அவனது கையைத் தட்டினாள்; ''அன்பே எமது எதிர்காலத்தை நல்லமுறையில் திட்டமிட்டு விட்டேன். பரீட்சை மிகவும் எளிதாக இருந்தது. கூடியபுள்ளிகள் எனக்குத் தான் கிடைக்கும். அதனால் நான் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளனாவேன் அதன் பின் இருவரும் எப்படி இருப்போம் தெரியுமா...''

அர்ச்சகாவின் இரும்புக் கோட்டை ஆட்டம் கண்டது; ''நான் பிறந்ததினத்தன்று மகா கணபதிக்கு அர்ச்சனை செய்து விட்டுப் பிரசாதத்துடன் வந்தேன். மகாகணபதிக்கு அர்ச்சிக்கப்பட்ட குங்குமத்தை

உங்கள் கையால் என் நெற்றியில் இடவேண்டும் மென்று நினைத்தேன்'' அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போது நகுலன் குறுக்கிட்டுச் சொன்னான்.

''அப்படியா? மிகவும் மகிழ்ச்சி மகாகணபதிக்கு அர்ச்சிக்கப்பட்ட குங்குமத்தை எப்போது இட்டாலென்ன. நீர் கொண்டு வந்திருப்பீர் தாரும்'' அர்ச்சகா கைப் பையைத் திறந்து குங்குமத்தை எடுத்துக் கொடுத்தாள்; ''மகா கணபதியே! என் அன்புக்குரியவளை என்றோ நான் தேர்ந்தெடுத்து விட்டேன். இன்று அவளது நெற்றியில் குங்குமமிட்டு என்னவள் ஆக்கிக் கொள்கிறேன். இனியாவும் உமது பொறுப்பு'' என்றவாறு அவளது நெற்றியில் திலகமிட்டான்.

அர்ச்சகா பூரித்துப் போனாள். நகுலனது வார்த்தைகள் அவளை மெய்மறக்கச் செய்தது. தன்னை மறந்து நகுலனைக் கட்டித் தழுவினாள். நகுலன் அதிர்ந்து போனான். பக்கத்தில் இருக்கும் போது கைபடுவதை விரும்பாத அர்ச்சகாவா என்னைக் கட்டித் தழுவியது.''

''என்னடி சிரிக்கிறாய்?'' என்று கேட்டாள் மாதுமை.

''பழைய சம்பவமொன்று நெஞ்சில் வந்தது'' நாணினாள் அர்ச்சகா.

''நீ நாணுவதைப் பார்த்தால் சம்பவம் பெரியது போலத் தெரிகிறது'' என்றாள் மாதுமை.

**1259. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு.**

ஊடுவேன் என்று எண்ணிக் கொண்டு சென்றேன்; அவரைக் கண்டதும் என் நெஞ்சம் என்னை விட்டு விட்டு அவரோடு சேர்ந்து விட்டது. அதனால் நான் அவரைத் தழுவினேன்.

### உருகும் மனம்

''அன்பு நிறைந்த காதலரோடு எப்படி ஊடல் கொள்ள முடியும்? அப்படி ஊடல் கொண்டாலும் அது எத்தனை நாட்களுக்கு நீடிக்கும். கொழுப்பின் மீது தீ பட்டால் என்ன நடைபெறுமோ அது அன்பு மிகுந்த காதலரைக் கண்டால் நடைபெறும். எமது வீம்பு , பலம், வீராப்பு, கோபம் யாவற்றையும் அவரது கனிவான பார்வை தகர்த்து விடும். விபுலனுடன் நான் பிரச்சினைப்பட்டால் சொல்வார்; ''அன்பே உன்னை நினைத்தாலே எனது மனம் இனிக்கும்; உடல் சிரிக்கும்; கண்கள் பூக்கும்; உடலில் உள்ள உரோமங்கள் சிலிர்க்கும். உமது அன்பான நினைவுக்கே இவ்வளவு வலிமை உண்டென்றால், உமது நிஜத்திற்கு என்ன வெல்லாம் இருக்கும். உம்மைக் கண்டதும் கண்கள் கொள்ளையிட, உடல் குளிரும். மனம் குளிந்த உடலைச் சூடாக்கும் குளிரும் போது சூடாக்குவதும், சூடான வேளையில் குளிரச் செய்வதும், தனிமையில் இருக்கும் போது பல நிகழ்வுகளை உண்டாக்கிப் பொழுதை இனிக்கச் செய்வதும் உமது நினைவுகள் தானே. அப்படியிருக்க நேரில் கண்டால் என்ன செய்யுமா? மனதைத் திறந்து சொல்லும் உமக்கு எனது நெருக்கம் பிடிப்பதில்லையா. ?'' என்பார்'' என்றாள் மாதுமை.

''என்னால் அவரைக் கோபிக்க முடிவதில்லை. அவரைக் காணாத போது நான் சில சமயம் அவரின் செயல்களை நினைத்துக் கோபப்பட்டாலும் அவரைக் கண்டவுடன் உருகிவிடுகிறேன். அவரைச் சந்திக்காது இருக்கும் வரையில் தான் மனதுக்குள் அவரது செய்கைகளை நினைத்துக் கோபப்படுவேன். அவரைக் கண்டதும் எனது கோபமெல்லாம் தானாகவே தீர்ந்து விடும். நகுலனுடன் படிக்கும் பெண்ணொருத்தி அவர் மீது காதல் கொண்டு நாயாய் அலைந்தவளாம். அவளின் பரிதாபத்தைப் பார்த்து கஜேந்திரன் அவருக்குச் சொன்னவராம் அவள் நகுலனின் மீது கொண்ட காதலால் நாணத்தையும் மறந்து சொல்லக் கூடாத விஷயங்கள் பலவற்றைக் கஜேந்திரனுக்குச் சொல்லியிருக்கிறாள். அதை ஒரு நாள் எனக்கு வித்தியா சொல்லிச் சிரித்தாள். நான்மறுநாள் அவரைக் கடற்கரையில் கண்டேன். சிலநிமிடங்கள் நான் அவருடன் பேசவில்லை. எனது முகத்தில் கோபம் குடிகொண்டிருப்பதை அவர் உணர்ந்து கொண்டார்; ''அன்பே! உமக்கு நேர்ந்த கொடுமை என்ன? இரண்டு தினங்களுக்கு முன்பு சந்தித்த போது நான் உமக்குப் பிடிக்காத கதைகள் எதையும் சொல்லவில்லையே. அத்துடன் பிடிக்காத செயல் எதையும் செய்யவும் இல்லையே. அப்படி இருக்க அடியேனின் மேல் கோபம் கொள்வது நியாயமானதா..?'' என்று கன்னத்தைத் தட்டினார். அந்தளவில் எனது மனம் சற்றுத் தளர்ந்து உருக ஆரம்பித்தது.

''அழகான ரதியே! அன்புள்ளம் கொண்ட அமுதே, ஆயிரம் தாரகைகள் என்னைச் சுற்றி வட்டமிட்ட போதும் அசையாமலிருந்த என் மனவானில் அசைந்தாடும் நிலவே. பட்டொளி வீசும் உன்மனதில் கருவானம் புகக் காரணம் என்னவென்று சொல்லு கண்ணே. அரைநிமிடமென்றாலும் துன்பத்தால்

உன்மனம் அலைமோத, என்மனம் அதைக்கண்டு எரிமலையாகிறது. சொல்லிவிட்டுத் தலைகுனிந்தால் உன்னைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வேன்'' என்றபடி எனது தோள்களைப் பற்றியணைத்தார். பற்றி எரியும் நெருப்புக்குள் ஒரு துளி கொழுப்பை இட்டது போல் இருந்தது. எனது மனம் என்னை அறியாமல், எனது ஊடலுக்கான செயலை மறந்து அவரின் பிடிக்குள் தத்தளித்தது என்னால் அப்போது அவரது விருப்பத்திற்கு இணங்காமல் ஊடல் கொண்டு இருக்க முடியவில்லை'' என்றாள் அர்ச்சகா.

''காதலுக்கு சுவையைக் கொடுப்பது ஊடல். ஆனால் நான் ஏன் ஊடல் கொண்டோம் என்று அவருக்குத் தெரியாமலேயே பல முறை என் ஊடல் தீர்ந்து, உறவு ஏற்பட்டிருக்கிறது. அன்பான காதலரின் முன் எனது எந்த மாயமும் பலிக்காது. நான் நாகமாகச் சீறினால் அவர் மகுடியாகி விடுகிறார். நான் ஊடல் கொண்டிருந்தால் அவரது பண்பான இனிய சொற்கள் அதைத் தகர்த்து விடுகின்றன. நான் சொல்வதெல்லாவற்றையும் அவர் தனக்குப் பிடிக்காவிட்டாலும் ஏற்றுக் கொள்கிறார். அத்துடன் எனக்குப் பிடிக்காதவை எது எது வெனக் கண்டு அவற்றைச் செய்யாமல் விடுகிறார். எனக்குப் பச்சை நிறம் பிடியாது என்பதற்காக அவர் பச்சைநிறத்தில் உடை அணிவதில்லை. இப்படி இருக்க நான் எப்படி ஊடல் கொள்வது'' என்றாள் மாதுமை.

**1260. நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ**
**புணர்ந்துஊடி நிற்பேம் எனல்.**

கொழுப்பைத் தீயில் இட்டால் உருகுவதைப் போன்ற மனம் கொண்ட என்னைப் போன்றவர்களுக்கு, காதலரின் விருப்பத்திற்கு இணங்காமல் ஊடும் தன்மை உண்டோ?.

## வழியைப் பார்த்து

அன்று காலை பத்துமணிக்கு வளர்மதி வித்தியாவின் வீட்டுக்கு வந்தாள். அவள் அங்கு வந்த போது மாதுமையும் சுவர்ணாவும் அர்ச்சகாவும் அங்கு இருந்தனர்.

வளர்மதியைக் கண்டவுடன் சுவர்ணா கண்ணைச் சிமிட்டி விட்டுச் சிரித்தாள். அதை அவதானித்த மாதுமை வளர்மதியின் முகத்தைப் பார்த்தாள். அது அளவுக்கதிகமான சோகத்தில் கறுத்திருந்தது. வளர்மதி நல்ல அழகி; பணக்காரி, ஒப்பனை செய்யாமல் தலைமுடியை வாரிக்கட்டி கொண்டு வந்தாலே வீதியால் செல்லும் இளைஞர்கள் அவளைத் திரும்பிப் பாராது செல்லமாட்டார்கள். ஆனால் வளர்மதி அலங்காரப் பிரியை. நேரத்திற்கு ஒரு விலை உயர்ந்த சட்டை அணிவாள். விதம் விதமான நறுமண வர்ணப் பூச்சுக்களை கை நகங்களுக்கும் கால் நகங்களுக்கும் பூசுவாள். விலை உயர்ந்த முகத்திற்கும் பூசும் பூச்சுக்களைப் பூசுவாள். அவற்றை யெலல்லாம் தம்மால் வாங்கிப் பூசமுடியவில்லையே. என்று அர்ச்சகாவும் வித்தியாவும் கவலைப்படுவார்கள். தான்பூசும் பூச்சுக்களை அவர்களும் பூசவேண்டுமென்பதற்காகத் வெளிநாட்டில் உள்ள தனது சகோதரர்களுக்குத் தனக்கு அனுப்பும் போது ஒவ்வொரு வகையிலும் ஐநதாறு அனுப்ப வேண்டு மென்று சொல்வாள். அப்படிப்பட்ட வளர்மதி பூச்சுக்கள் எதுவும் பூசாமல் வாசனைத் திரவியங்கள் எதையும் பாவிக்காமல் வந்திருந்தது. அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவளின் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அதை அவளைக் கேட்கத் தேவையில்லை. தானாகவே சொல்லுவாள். அப்படியிருக்க அன்று அவள் வந்து நெடுநேரமாகப் பேசாமல் இருந்தது அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

''மதி பேசாமல் இருக்கிறத்தைப் பார்த்தால் ஆதவனைச் சந்தித்துக் கதைத்து விட்டாள் போலத் தெரிகிறது. அளவுக்கதிகமான சந்தோசத்தால் வார்த்தைகள் வரவில்லை'' என்று பேச்சைத் தொடக்கினாள் சுவர்ணா.

சோகத்துடன் சுவர்ணாவைப் பார்த்தாள் வளர்மதி. சிலகணங்கள் இருசோடி விழிகளும் சந்தித்துப் பிரிந்தன; ''என்னைப் பார்த்தால் அப்படியா உனக்கு எண்ணத் தோன்றுகிறது. எனது முகத்தில் படர்ந்திருப்பது பூரிப்பின் சாயலென்று நினைத்து என்னை கேவலப்படுத்துகிறாயா?'' என்று கேட்பதைப் போலிருந்தது அவளது பார்வை.

''சுவர்ணாவைப் பற்றி உனக்குத் தெரியாதே? அவளுடைய கதையை விட்டு விட்டு நடந்ததைச் சொல்லு. மனதில் இருக்கும் சோகத்தைக் காட்ட வெளித் தோற்றத்தையும் சீரழிக்க வேண்டுமா...? ஏன் இப்படி வந்தாய்.?'' என்று கேட்டாள் வித்தியா.

அதைக் கேட்டதும் விம்மி விம்மி அழுதாள் வளர்மதி; ''அவரை நான் கண்டு எத்தனை நாட்களாகின்றன. அவர் வரும் பாதையை ஊண் உறக்கமின்றி வழிமேல் விழிவைத்து எத்தனை நாட்களாகப் பார்த்திருக்கிறேன் தெரியுமா? எதற்கும் ஓர் எல்லை வேண்டும். எல்லை மீறிச் செயற்பட்டு எனது பொறுமையை அளவுக்கதிகமாகச் சோதிக்கிறார். அதனால் என்னால் சாப்பிட முடியவில்லை.

நல்ல உடைகளை அணிய முடியவில்லை. கண்ணீா் விட்டு விட்டு எனது கண்கள் வாடிச் சோா்ந்து கறுத்து விட்டன. தினமும் நாட்காட்டியைக் கிழித்துக் கிழித்து எனது விரல்கள் தேய்ந்து விட்டன; ‘‘அழுதாள் வளா்மதி.

‘‘அழாதை மதி, அவா் உன்னை விரும்புகிறாா். குடும்பப் பொறுப்புக்கள் அதிகமுள்ள அவரால் அப்பொறுப்புக்களில் இருந்து மீளமுடியவில்லை. அவருக்கு மூத்த இரு சகோதரிகள் திருமணமாகாது இருக்கின்றனா். மூத்த சகோதரன் ஒருவன் காதலால் மன நிலை பாதிக்கப்பட்டிருக்கிறான். அவருக்கு இளைய சகோதரி ஒருத்தி இருக்கிறாள். தான் படித்தால் தான் தனது குடும்பம் முன்னேறும் என்று அவா் நினைக்கிறாா். அத்துடன் பணக்காரப் பெண்ணொருத்தியை அவரது மூத்த சகோதரன் விரும்பினான். பெற்றோா் அவளைப் பலாத்காரமாக இன்னொருவருக்குத் திருமணம் செய்து கொடுத்ததால் அவா் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறாா். அந்த நிலை தனக்கும் வந்து விடுமோ என்று ஆதவன் பயப்படுகிறாா். அவா் பயப்படுவது நியாயம் தானே. அதனால் கொஞ்சம் பொறுமையாக இரு. கஜேந்திரன் அவரது மனத்தை மாற்ற முயற்சித்துக் கொண்டே இருக்கிறாா்’’ என்றாள் வித்தியா.

அதைக் கேட்க வளா்மதிக்கு பயமாக இருந்தது.

**1261. வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும்; அவா்சென்ற**
**நாள்ஒற்றித் தேய்ந்த விரல்.**

எனது கண்கள் அவா் வரும் வழியைப் பாா்த்துப் பாா்த்து ஒளி இழந்து அழகு கெட்டு விட்டன. விரல்கள் அவா் சென்ற நாட்களைக் குறித்துக் குறித்துத் தேய்ந்து விட்டன.

## நீங்கும் அழகு

‘‘வித்தி, நானும் ஆதவனின் சகோதரனின் செய்தியை அறிந்தனான். அந்தப் பெண்ணின் தகப்பனாா் ஊரில் பெரிய சண்டியன், குடிகாரன், பல அநீதியான செயல்களைத் தயங்காமல் செய்பவன். அவனது வீட்டில் சம்மந்தம் செய்ய இந்த ஊரில் எவரும் தயாரில்லை. அப்படியிருக்க அவரின் மகள் நிா்மலா ஆதவனின் சகோதரனான வருணனைக் காதலித்தாள். மிகவும் தீவிரமாகக் காதலித்தாள். அவளால் வருணனைப் பிரிந்து வாழ முடியாது. பலாத்காரமாக அவளை தகப்பன் இன்னொருவனுக்குக் கட்டி வைத்து விட்டாா். அவா்களது பணத்திற்கு ஆசைப்பட்டே அவன் நிா்மலாவைத் திருமணம் செய்தான். திருமண நாளன்று இரவு அவள் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டாள். மறுநாள் வருணனைத் தேடிச் சென்ற நிா்மலாவின் தந்தையும் அவனது நண்பா்களும் வருணனைக் கடுமையாகத் தாக்கி விட்டனா். காதலியின் இழப்பும் கொடூரமான தாக்குதலும் தான் வருணனின் மனநிலை பாதிப்படையக் காரணங்களாக இருந்தன. ஆனால் எமது குடும்பம் அப்படியில்லையே. ஊரில் மதிப்போடும் மரியாதையோடும் வாழ்கின்றோம். அப்பா ஊரில் உள்ள எல்லோரையும் மதித்து உதவி செய்பவா். அதனால் தினமும் எனக்குத் திருமணம் பேசி வருகிறாா்கள். அப்பாவும் அம்மாவும் எனது சகோதரா்களும் என்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துகிறாா்கள். நான் மறுத்து வருகிறேன். எத்தனை நாட்களுக்கு மறுக்க முடியும்....? தற்செயலாக என்னைக் கேளாது யாருக்காவது அப்பா என்னைக் கட்டிக் கொடுக்கச் சம்மதித்தால் என்ன செய்வது’’ அழுதாள் வளா்மதி.

‘‘ஆதவன் பயப்படுவதிலும் நியாயம் இருக்கிறது. முன்பு தனது குடும்பத்தில் ஏற்பட்ட பயங்கரம் மீண்டும் நடந்து விட்டால் என்ன செய்வதென்று கஜேந்திரனைக் கேட்டாராம். பொதுவாக தம் பிள்ளைகள் காதலிப்பதை எந்தப் பெற்றோரும் விரும்பமாட்டாா்கள்; ‘‘வளா்மதியின் அன்பு கிடைக்காதா என்று முன்பு நான் ஏங்கியதுண்டு. அண்ணாவின் மனநிலை பாதிக்கப்பட்ட பின்பு எனக்கும் அந்நிலை ஏற்பட்டு விடுமென்று பயப்படுகிறேன். தயவு செய்து என்னை வற்புறுத்தாதே. வளா்மதி பெரும் பணக்காரி. நான் பெரிய பணக்காரன் அல்லன். எனது கல்வியால் தான் எனது குடும்பம் முன்னேற வேண்டும். பல்கலைக்கழகத்தில் கற்றுச் சித்தியடைந்த எனது அண்ணா எமது குடும்பத்தை உயா்த்துவாா் என்று கனவு கண்ட அம்மாவின் மனநிலையும், அண்ணாவின் நிலையால் எனது சகோதரிகளினது மனநிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் என்னால் காதலிக்க முடியுமா? வளா்மதி மீது எனக்குக் காதல் இருக்கிறது. அதை நான் வெளிப்படுத்தாமல் இருக்கும் போதே அவள் என்னைக் கண்ட இடங்களிளெல்லாம் அளவுக்கதிகமாக என்னுடன் பழக முயல்கிறாள். அப்படிப் பழகுவதை அவளது வீட்டாா் அறிந்தால் அண்ணனுக்கு நோ்ந்த கதிதான் எனக்கும் நேரும் அதனால் எனது வீட்டாா் மிகவும் பாதிப்படைவாா்கள். எனவே தயவு செய்து அவளை என்னை மறந்து விடும்படி கூறு’’ என்று சொன்னாராம். அவசரப்படாதே. எல்லாம் மெல்ல மெல்லச் சரி வரும்’’ என்றாள் வித்தியா.

‘‘வித்தியா காதலரைப் பிரிந்து வருந்துகின்ற நான், அவரைப் பாா்க்காமல் இருந்தால் அவருக்கு என் நினைவே வராது. தினமும் அவரை நினைத்து வாடுவதால் நிதானமாக என்னால் இருக்க முடியவில்லை. அவா் பாா்ப்பதற்காகத் தானே என்னை நான் அலங்காரம் செய்கிறேன். அவா் பாா்த்து இரசிக்காத அழகு என் உடலில் இருந்தாலென்ன. இல்லாமல் போனால் என்ன. அவரின் போக்கை

நினைத்துக் கவலைப்படுவதால் எனது தோள்கள் மெலிந்து விட்டன. அதனால் நான் அணியும் ஆபரணங்கள் கழன்று விழுகின்றன'' அழுதாள் வளர்மதி.

''பயப்படுபவருக்கு ஆறுதல் சொல்லிச் சமாதானப்படுத்தி எமது செயலை உடனே ஆரம்பிக்க முடியாது. சற்றுப் பொறுத்துக் கொள். அவருக்கு உன்னில் காதலிருக்கு. அதை வெளிப்படுத்தத்தான் பயப்படுகிறான். அந்தப் பயத்தை நீக்கினால் அவர் உன் காலடியில் கிடப்பார். அந்த நாள் விரைவில் வரும். அவசரப்படாதே'' என்றாள் வித்தியா. வளர்மதியின் மனதில் சிறிதளவு நம்பிக்கை பிறந்தது.

**1262. இலங்கிழாய்! இன்று மறப்பின் என் தோள்மேல்
கலம்கழியும் காரிகை நீத்து.**

தோழி! காதலரைப் பிரிந்து வருந்துகின்ற நான் அவரை இன்று மறந்து விட்டால், எனது அழகு என்னை விட்டு நீங்கிவிடும். எனது தோளில் அணியப்பட்ட அணிகள் கழன்று விழும்.

## உயிரோடு இருப்பது

''நாம் நினைப்பவை யெல்லாம் நடக்குமென்றில்லை. நடந்தவற்றை நினைத்துக் கொண்டிருந்தாலும் வாழ்க்கையில் நிம்மதியில்லை. நம்பிக்கையில் தான் வாழ்க்கை தங்கியுள்ளது. ஆதவன் பயப்படுவதில் நியாயம் இருப்பதாக வித்தியா சொன்னாள். அது உண்மை. ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் அனுபவங்கள் ஒவ்வொரு விதமானவை. வீட்டில் ஒருவருக்கு ஒரு துன்பமான நிகழ்வு நடந்தால், அதுதனக்கும் வரலாமென்று நினைத்து எச்சரிக்கையாக இருப்பது மனித இயல்பு. அதனால் தான் நீ ஆதவனை நெருங்கிச் செல்லும் போதெல்லாம் அவர் விலகிச் சென்றிருக்கிறார். உன்னை விரும்பிய போதும் உன்னோடு கதைக்க அவருக்குப் பயமாக இருந்திருக்கிறது. நீ பெரும்பணக்காரி. உன்னை விரும்புவதன் மூலம் தனது நேர்ந்ததைப் போன்றதொரு துயரம் தனக்கும் நேர்ந்துவிடுமென அவர் பயப்படுகிறார். அவரின் மனநிலை மாறும் வரை நீ பொறுத்திருக்க வேண்டும். நீ அப்படிப் பொறுத்திராமல் அவருக்குக் கரைச்சல் கொடுத்தால் விபரீதமான விளைவுகளைத் தான் எதிர்நோக்க வேண்டியிருக்கும். அத்துடன் நீ அதைப்பற்றியே நினைத்துக் கவலைப்பட்டு உனது நாளாந்தக் கருமங்களையும் கவனிக்காது விட்டால் உனது மனமும் உடலும் மட்டுமல்ல உனது குடும்பத்தவர்களின் நலனும் பாதிக்கப்படும். இதை நீ நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்றாள் மாதுமை.

''காதலிப்பவர்கள் துக்கம், துயரம், பிரிவு போன்றவற்றையும் தாங்கிக் கொள்ளும் சக்தியுடையவர்களாக இருத்தல் வேண்டும். காதலை பொன், பொருள், காணி, பூமி, நகை,நட்டுப் போன்ற பெறுமதியான பொருட்களால் வாங்கிக் கொள்ள முடியாது. காதலில் வெற்றி பெற முன்னைய தொடர்பு ஒன்று இருத்தல் வேண்டும். தொடர்பில்லாமல் உறவு ஏற்படாது. ஊழ் இல்லாமல் சேர்வும் பிரிவும் ஏற்படாது. எனக்கு எவ்வளவு துன்பங்கள் வந்தன. வென்று உனக்குத் தெரியும். நான் கஜேந்திரனுடன் சேர்ந்து வாழ்வேன் என கடைசி வரையும் நினைக்கவில்லை. இரத்த அழுத்த நோயாளியான எனது அம்மா நான் அவருடன் சென்றால் அதிர்ச்சியால் மரணமடைந்து விடுவார் எனப்பயந்தேன். என் உயிரைவிட காதலை மேலானதாக மதித்த என்னால் எனது தாயாரின் உயிர் போவதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் நான் மிகவும் குழப்படைந்திருந்தேன். அர்ச்சகா அடிக்கடி அவருடன் செல் என்று சொல்வாள். அப்படியான தொரு எண்ணம் எனதுமனதில் இருந்து கொண்டு தான் இருந்தது. எனினும் என்னை மகா கணபதி காப்பாற்றி விட்டார். அது போல நடப்பவை எவையென யாரும் அறிந்து கொள்ள முடியாது. நீ அமைதியாக இரு. என்னாலான உதவிகள் அனைத்தையும் நான் உனக்குச் செய்வேன்'' என்றாள் வித்தியா.

மாதுமையும் வித்தியாவும் புத்திமதிகள் கூறிய பின்பும் வளர்மதியின் மனம் கலங்கித் தவித்தது என்னை விரும்புவதாகக் கூறிய அவர் இப்பொழுது பயப்படுகிறார். அவர் என்னை விரும்புவதாகக் கூறட்டும். நான் அவரைச் சந்திக்க விருப்பமில்லை. தனது கடமையை அவர் வெற்றிகரமாக முடித்து விட்டு வரும் வரை நான் பொறுத்திருப்பேன்'' என்றாள் வளர்மதி.

''காதலிப்பவர்களுக்கு பொறுமை அவசியம். வெற்றியை விரும்பி ஊக்கத்துடன் என்னைப் பிரிந்து வெளியூருக்குச் சென்ற காதலர் வருவதைக் காண்பதற்காகவே இன்னும் நான் பிரிவுத் துயரைத் தாங்கிக் கொண்டு உயிர் வாழ்கிறேன். பிரிவுத் துயரைப் பற்றி எனக்குத் தெரியும். அதே போல உனக்குள்ள துயரின் அளவும் விதமும் தெரியும். நீ காதலிக்கும் போது காதலித்தவர் பின்பு பயம் காரணமாக உன்னை விலக்கியிருக்கிறார். அந்தத் துயரம் எனது துயரத்தை விட மிகவும் மோசமானது; ''தாங்க முடியாதது. துயருற்றிருக்கும் உனக்கு யாராலும் ஆறுதல் கூறமுடியாது. ஒப்புக்குப் பலர் எனக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறார்கள். அவர்களது ஆறுதல் வார்த்தைகள் என்னை அசுவாசப் படுத்தாவிட்டாலும் அவற்றை நிராகரிக்க என்னால் முடியவில்லை. அது போலத்தான் உனது

நிலையும் பயம் காரணமாக விரும்ப மறுக்கும். ஆதவனின் மனம் மாறி உன்னைத் தேடி வரும் வரை நீ பொறுமையாக இரு'' என்றாள் மாதுமை.

''நான் ஆதவனை அடைந்தே தீருவேன். அதுவரை பொறுமையாக இருப்பேன். தற்செயலாக அவா் எனக்குக் கிடைக்காவிட்டால் அன்றே உயிா் நீத்து விடுவேன்'' என்றாள் வளா்மதி.

**1263. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்**
**வரல்நசைஇ இன்னும் உளேன்.**

வெற்றியை விரும்பி ஊக்கத்தை துணையாகக் கொண்டு வெளிநாட்டுக்குச் சென்ற எனது காதலா், திரும்பி வருதலைக் காணவிரும்பியே நான் உயிரோடு இருக்கிறேன்.

**விரைந்து மறையும்**

''அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்து விடாதே காலம் கட்டாயம் எண்ணிய கருமத்தை முடித்துத் தரும். ஒரு மொட்டு மலா்ந்து பிஞ்சாகி காயாகிக் கனிய எவ்வளவு காலம் எடுக்கும். சில மரங்கள் பூத்துக் காய்த்துக் கனிய ஓரிரு மாதங்கள் போதும். சில மரங்கள் பூத்துக் காய்த்துக் கனிய ஐந்து பத்து வருடங்கள் செல்லும் சில மரங்களுக்கு அதற்குக் கூடவும் செல்லும். இதைப் போன்றது தான் வாழ்க்கை. தானாகக் கனிய முன் கனியப்பண்ணுவதால் அதன் சுவையை முற்றாகப் பெற முடியாது. காத்திரு உனது காதல் கனியும் நம்பிக்கை வீண்போவதில்லை; நம்பினாா் கெடுவதில்லை என்று பெரியவா்கள் கூறியிருக்கிறாா்கள். நம்பிக்கை உடைய ஒருவன் கடலையும் தூா்த்து விடுவான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். காதலா் செல்லும் பாதை கரடு முரடானது. செங்குத்தானது. கத்தி முனையில் நடப்பதைப் போல அவதானத்துடன் கடக்க வேண்டியது. கவலைப்படாது பொறுமையாக இருந்து உனது விருப்பத்தைப் பூா்த்தி செய்ய முயல். அதை விட்டு விட்டு துன்பத்தால் துடிதுடிப்பதாலோ, உயிரை மாய்த்துக் கொள்வதாலோ எந்த விதமான பிரயோசனமும் இல்லை. எனவே உயிரைப் போக்கிக் கொள்வேன் என்று மட்டும் நினைக்காதே'' என்றாள் அா்ச்சகா.

''நீ ஆதவனை விரும்பி விட்டாய். ஆரம்பத்தில் உன்னை விரும்பிய ஆதவன் தனது சகோதரன் மனநிலை பாதிக்கப்பட்டபின் தனக்கும் அந்நிலை ஏற்பட்டு விடுமோ எனப் பயப்படுகிறாா். முதலில் நீ அவருக்கேற்பட்ட பயத்தையும் தள்வையும் நீக்க வேண்டும். ஒரு பெண் நினைத்தால் எந்தவொரு ஆணையும் தன்வசப்படுத்த முடியுமென்று சொல்கிறாா்கள். அா்ச்சகாவை நகுலனை விரும்பியமையால் தான் அவனது காதல் இலகுவாகக் கைகூடியது. வித்தியா, கஜேந்திரனை விரும்பாததால் அவா்களது காதல் கைகூட சில வருடங்கள் எடுத்தது. இதே போல உனது காதல் கைகூடச் சில நாட்கள் செல்லலாம். அது வரை பொறுமையாக இரு. அவரைத் தொந்தரவு செய்யாதே. மிகவும் விருப்பமான பொருளென்றாலும் அதில் காரணமின்றி வெறுப்பேற்பட்டால், அந்த வெறுப்பை உள்ளத்திலிருந்து நீக்குவது மிகவும் சிரமமானது என்பதை நினைவில் வைத்துக் கொள். தேவையில்லாமல் ஆதவனைச் சந்திக்க முயலாதே. சந்தித்தாலும் கௌரவமாக நடந்து கொள். கஜேந்திரன் அவரைச் சமாதானப் படுத்துவாா். என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது'' என்றாள் சுவா்ணா.

முன்பு சோ்ந்திருந்து பின்பு, என்னை விட்டுப் பிரிந்து சென்ற எனது காதலரின் வருகையை எண்ணித் தினமும் எனது மனம் மரக்கிளையில் மீது ஏறி நின்று பாா்க்கிறது. நான் எவ்வளவோ முயற்சித்தும் அது கேட்கிறதாக இல்லை. அவா் வருவாா்; வருவாா் என்று தினமும் நம்புகிறது'' என்றாள் மாதுமை அவளின் குரல் தழுதழுத்தது.

''ஒருவரைச் சமாளித்தால். மற்றவா் அழத் தொடங்கி விடுகிறீா்கள். உங்களுக்கெல்லாம் அழக் கண்ணீா் எங்கிருந்து ஊறுகிறது. என்னைப் போல ஆடவா் மீது ஆசைப்படாது இன்பமாக இருங்கள். ஆசைப்பட்டால் அமைதியாக இருங்கள். தேவையில்லாத கற்பனைகளை யெல்லாம் செய்து உங்களையும் வருத்தி எம்மைப் போன்றவா்களையும் வருத்தாதீா்கள். மாதுமையின் மனம் அவா் வருவாரென்று நினைத்து மர உச்சியில் ஏறி இருந்து பாா்க்கிறதாம். மரக்கிளையின் உச்சியில் ஏறி இருந்து நீயும் பாா் ஆதவன் போய் வருவது தெரியும். பலநாட்களாகக் காணவில்லை. என்று சொல்கிறாய். மர உச்சியில் இருந்து பாா்க்கும் போது கவனமாக இரு. தற்செயலாக ஆதவன் உன்னைக் கண்டால் மீண்டும் பெண்மைக்குரிய தன்மைகள் உன்னிடம் இருக்கா என்று கேட்டபான்'' என்றாள் சுவா்ணா.

''உனக்குக் கதைக்கப் பேசத் தெரியாது. துன்பப்படுபவளைத் தேற்றுவதை விட்டு விட்டு புராணம் படுகிறாய். உனக்கும் இப்படியான ஒரு நிலை வந்தால் தான் தெரியும்'' என்றாள் வித்தியா.

''உங்களைப் போல என்னையும் ஆண்களின் பின்னால் அலையச் சொல்கிறாயா..?'' என்று கேட்டாள் சுவா்ணா.

“ஐயையோ நீ அலையாதை அம்மா. இப்பவே சோகத்தைத் தாங்க முடியவில்லை. நீயும் அலைந்து திரிந்து விட்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கினால் எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது” என்றாள் வித்தியா. அவர்கள் கதைத்துச் சிரித்த போதும் வளர்மதி சிரிக்கவில்லை.

**1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்**
**கோடுகொடு ஏறும்என் நெஞ்சு.**

முன்பு சேர்ந்திருந்து பின் பிரிந்து சென்ற காதலரின் வருகையை எண்ணி என் மனம் மரக்கிளையின் உச்சியில் ஏறிநின்று பார்க்கிறது.

### மறைந்து விடும்

“என் அன்புத் தோழியே! உனக்கு எனது சொற்களின் மீது நம்பிக்கையில்லையா...? நம்பிக்கையுள்ளவர்களின் நம்பிக்கை வைத்தாயேயானால் உனது துன்பங்கள் யாவும் பறந்து விடும். நம்பிக்கையின் அடையாளமாக முதலில் மனம் மகிழ்ந்து சிரி. கஜேந்திரப் பெருமான் இருக்கிறார் உன்னைக் காத்தருள்வார். அவர் தான் காதலரின் கடவுள். அவர் உனது நிலையைக் கண்டு இரங்கி சுந்தரருக்குச் சிவபெருமான் தூது சென்றதைப் போல தூது செல்ல ஆயத்தமாகி விட்டார். அதனால் நீ அஞ்சத் தேவையில்லை. காதலர் அஞ்சினால் பல துன்பங்கள் தானாகவே வந்து சேர்ந்து விடும். அதனால் மனதில் உள்ள அச்சத்தை வெளியே எடுத்து விடு உனக்கு சொர்க்கம் கிடைக்கும் பணத்தின் மீதும் பொருளின் மீதும் உனது அளவற்ற அழகின் மீதும் நம்பிக்கை வைக்காதே. பணத்தால் காதலை விலைக்கு வாங்க முடியாது. அதுவும் ஆதவனை விலைக்கு வாங்க முடியாது. பணம் காதலைச் சாகடிக்கும். பொறுமையும் நம்பிக்கையும் தான் வெற்றியளிக்கும். தன் நம்பிக்கையுடன் பொறுமையாக இருந்து போராடிய வித்தியா தனது காதலில் வெற்றி பெற்றுள்ளாள். அந்த வரலாறு தெரிந்த பின்பும் நீ ஏன் கவலைப்பட வேண்டும். உன்மீது ஆதவனுக்கு மோகம் இருக்கிறது. சாம்பருள் ஒளித்திருக்கும் சிறு நெருப்புத் துண்டு போல அவனது இதயத்தின் ஒரு மூலையில் உனது நினைவுகள் இருக்கின்றன. அதை ஊதிப் பெரு நெருப்பாக்கலாம். இல்லாவிட்டால் உனது சகோதரர்களுக்குத் தெரியப்படுத்தி முறைப்படி மாப்பிளை கேட்டு வீட்டுக்குச் செல்லலாம். அதற்க்கெனப் பல பெரியவர்கள் ஊரில் இருக்கிறார்கள் கவலைப்படாதே” எனறாள் சுவர்ணா.

“அண்ணாமார் இந்த விஷயத்தில் ஒத்துக் கொள்வார்களோ தெரியவில்லை. வெளிநாட்டில் அண்ணனின் உயிர் நண்பன் ஒருவன் இருக்கிறான். அவன் அடிக்கடி தொலைபேசியில் என்னுடன் கதைப்பான். அப்பாவுக்கு அவன் கதைத்தால் பெரும் மகிழ்ச்சி. அவனைப் பற்றி ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பார். அண்ணாவுக்கு அவனை எனக்குச் செய்ய விருப்பம். அண்ணா விரும்பினால் அப்பா மறுக்க மாட்டார். இதுவும் எனக்கொரு பாரிய பிரச்சினை. இதை எப்படி நான் சமாளிக்கப் போறன்” மீண்டும் விம்மினாள் வளர்மதி.

சுவர்ணா பேசாமல் சிலகணங்கள் இருந்தாள். அதற்கு மேல் அவளால் சிந்திக்க முடியவில்லை; “ இனி அர்ச்சகாவுக்குத் தான் பிரச்சினை வருமென்று நினைக்கிறன். கமலேஸ் மாமி அறிந்தால் தான் பிரச்சினை இருக்கு” என்றாள் சுவர்ணா.

அவாவைச் சமாளிப்பது கஷ்ரம் தான். என்றாலும் நகுலன் நல்லவன்; “அத்துடன் கல்வி மான், பெரிய உத்தியோகம் கிடைக்கும். அதனால் மாமி ஆசைப்படுவா” என்றாள் வித்தியா.

அர்ச்சகா பூரிப்புடன் சிரித்தாள்; “மாதுமைக்கும் வித்தியாவுக்கும் பிரச்சினைகள் தீர்ந்து விட்டன. என்று அர்ச்சகா சொல்லிக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டாள்; “ எனக்கெங்கே பிரச்சினை தீர்ந்தது. அவர் வெற்றியை விரும்பி ஊக்கத்தைத் துணையாகக் கொண்டு என்னைப் பிரிந்து வெளியூருக்குச் சென்று விட்டார். இனி எப்போது வருவாரோ? எத்தனை வருடங்கள் செல்லுமோ? துன்பத்துடன் காலம் கழிப்பது பெரும் சிரமமானது. அதை விட வளர்மதியின் நிலை நல்லது. எனது காதலரைக் காணாது மனம் துன்பப்படுகிறது. அவர் என்னோடு இருந்த காலங்களில் நாம் சேர்ந்து மகிழ்ந்திருந்த நிகழ்வுகள் அடிக்கடி மனதில் தோன்றிச் சித்திரவதை செய்கின்றன. எந்தச் செயலையும் என்னால் செய்ய முடியவில்லை. மெலிந்ததோடு மட்டுமல்லாது எனது தோள்களில் பசலை நிறம் படர்ந்து விட்டது தான். என் காதலரைக் கண்ணாரக் கண்டால் எனது தோளில் படர்ந்த பசலைநிறம் நீங்கும். அவரைக் காணாது எனது தோள்கள் பசலை அடைந்து தனது துக்கத்தை வெளிப்படுத்தி எனக்கு எந்நேரமும் அவரின் நினைவை உண்டாக்கும். அவ்வேளைகளில் அவர் வந்து என்னைத் தழுவியதும் பசலை நிறம் விரைந்து மறைந்து விடும். அந்தளவில் இன்பங் கண்ட அந்தப் பசலை தற்பொழுது நீங்காமல் இருந்து எனக்குத் தொந்தரவு தருகிறது” என்றாள் மாதுமை.

வளர்மதி அவர்கள் கதைப்பதைக் கேட்கவில்லை. தனிமையில் இருந்து அழுது கொண்டிருந்தாள்; ‘‘பொழுது போக்கிற்காக இங்கு வரும்போதெல்லாம் ஒருவர் மாறி ஒருவர் அழுகிறார்கள். வெறுப்பாக இருக்கிறது’’ என்று நினைத்தாள் சுவர்ணா.

**1265. காண்கமன் கொண்கனைக் கண்ணார; கண்டபின்**
**நீங்கும்என் மென்தோள் பசப்பு.**

எனது காதலனை நான் கண்ணாரக் காண்பேனேயானால், எனது மென்மையான அழகிய தோளில் படர்ந்திருக்கும் பசலை நிறம் மறைந்து விடும்.

## நோய்தீரும்

வீட்டு வாசலில் மோட்டார் வண்டியொன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது. மாதுமை வாசலுக்கு வந்தாள். விபுலன் மோட்டார் வண்டியால் இறங்கிக் கொண்டிருந்தான். முன்பு மெலிந்திருந்த அவனது உடல் சற்றுப் பருத்திருந்தது. கறுப்பு நிற நீளக்காற்சட்டையும் வெள்ளை மேற்சட்டையும் அணிந்திருந்தான். அவனது கன்னங்கள் வெளிநாட்டில் வசித்ததால் போலும் கொழுத்துப் பிரகாசமாக இருந்தன. அவளால் தனது கண்களை நம்ப முடியவில்லை. மகிழ்ச்சியின் அதிகரிப்பால் அவளது இதயம் ஆரவாரித்துக் கொண்டிருந்தமையால் அவனை ‘வா’ என்று கூட அவளால் அழைக்க முடியவில்லை. மாதுமையின் தாயார் வாசலுக்கு வந்தார். மருமகனைக் கண்டதும் அவரது முகம் பூரித்துப் பொங்கியது; ‘‘என்னடி சிலை மாதிரி நிற்கிறாய். போய் பெட்டியை வாங்கு என்றார்.

‘‘என்ன தம்பி அறிவிக்காமல் வந்து விட்டீர். நாங்கள் எதிர் பார்க்கவில்லை. உள்ளுக்கு வாங்கோ’’ என்று முகமலர்ந்தாள் புனிதவதி.

விபுலன் பெட்டியை மாதுமையிடம் கொடுத்து விட்டு அவளைப் பார்த்தான்; ‘‘எனது கனவில் வரும்போது ஒட்டி உலர்ந்திருந்த உமது முகம் நேரில் காணும் போது சந்திரனைப் போலப் பிரகாசிக்கிறது. வாரும் உள்ளே’’ என்று கூறிவிட்டு உள்ளே சென்றான்.

அவளது அறை மிகவும் அழகாக இருந்தது. மேசையில் அவர்கள் இருவரும் சோடியாக அணைத்துக் கொண்டிருந்த படம் மெல்ல நகைத்தது; ‘‘வெளிநாட்டில் நான் எவ்வளவு துன்பப்பட்டேன் தெரியுமா...? எமக்குத் தேவையான பணத்தை உழைத்து விட்டேன். இனி நான் உம்மைப் பிரிய வேண்டியதில்லை’’ என்று கூறி அவளை அணைத்தான். மாதுமைக்குச் சொர்க்கத்தில் மிதப்பதைப் போல இருந்தது. அவளால் பேசமுடியவில்லை; ‘‘முன்பென்றால் வாயோயாமல் கதைப்பீ. இப்பொழுது வாய்க்குள் என்ன இருக்கிறது’’ என்றவாறு அவளது கன்னத்தில் தட்டினான்.

மாதுமை சிலிர்த்துப் போனாள். இனிய உணர்வுகள் உடலெங்கும் பரவி அவளை ஆனந்தசாகரத்தில் தள்ளி விட்டன. விபுலன் வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த விலை உயர்ந்த இனிப்பு ஒன்றை எடுத்து அதை மூடியிந்த கடதாசியை நீக்கிவிட்டு அவளது வாயில் வைத்தான். அவள் அதைக் கடித்து விட்டு ஒரு துண்டை அவனது வாயருகே கொண்டு செல்ல விபுலன் தலையைச் சரித்து அவளை இழுத்து அணைத்தான். இனிப்பில் இருந்த பசை போன்ற வெளிப்பகுதி அவனது கன்னங்களெங்கும் வர்ணக்கோலங்களை இட்டது.

‘‘எனது காதலர் ஒரு நாள் என்னிடம் வருவார். அவர் வந்ததும் இவ்வளவு காலமும் நான்பட்ட துன்பங்கள் யாவும் என்னை விட்டு நீங்கும் வண்ணம் அவரோடு காதலின்பம் என்னும் அமிழ்தத்தை அருந்துவேன் என்று நினைத்திருந்தேன். அது இவ்வளவு சீக்கிரம் கைகூடுமென நான் நினைக்கவில்லை’’ முனகினாள் மாதுமை.

‘‘நானும் அப்படித்தான் நினைத்தேன். உம்மோடு முன்பு அனுபவித்த பேரின்பத்தை விரைவில் அனுபவிக்க வேண்டு மென்ற நினைவுதான் என்னை கடும் முயற்சியாளனாக மாற்றியது. உம்மை விரைவில் காணவேண்டும் என்பதற்காக நான் இரவு பகலாக உழைத்தேன். உழைக்கும் போது தளர்வும் சோர்வும் ஏற்படும். அப்போது உம்மை நினைப்பேன். நாம் இன்பமாகக் கழித்த அந்த நாட்களை எண்ணிப்பார்ப்பேன். பிரகாசிக்கும் நட்சத்திரங்களைப் போல இருக்கும் உமது பற்களும், தேனில் தோய்ந்த மாதுளம் பழம் போன்ற சுவையுடைய உதடுகளும் மிகவும் மெதுமையான கன்னங்களிலிருந்து ஊறும் மதுவும் எனது நினைவுக்கு வரும். அந்த நினைவுகள் எனது தளர்வையும் சோர்வையும் நீக்கி விடும் உம்மைக் காணும் ஆவலில் துடிக்கும் மனது அதன் பின் உற்சாகத்துடன் முயற்சியில் ஈடுபடும் என்றவாறு மாதுமையை இறுக அணைத்தான் விபுலன்.

‘‘கதைத்துக் கொண்டிருந்தாள், அதற்கிடையில் நித்திரையாகி விட்டாள். இரவு முழுவதும் விபுலனோடு கட்டிப் புரண்டிருப்பாள்’’ என்றவாறு மாதுமையின் தோள்களில் கையை வைத்தாள் சுவர்ணா. திடுக்கிட்டு விழித்த மாதுமை மிரள மிரள விழித்தாள்.

**1266. வருகமன் கொண்கன் ஒருநாள்; பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட.**

எனது காதலர் ஒரு நாள் என்னிடம் வருவார்; வந்ததும், எனது துன்பநோய்கள் யாவும் தீரும் வண்ணம் அவரோடு காதல் இன்பம் என்னும் அமிழ்தை அருந்துவேன்.

## என்ன செய்வேன்

‘‘என்னடி மிரள மிரள விழிக்கிறாய். நாங்கள் இருக்கும் போதே உனது காதலர் வந்து வெட்கமில்லாமல் தழுவி அணைத்தாரோ. காய்ந்திருந்த உனது முகம் திடீரென்று பொங்கிப்பூரித்திருக்கு. என்ன நடந்தது சொல்’’ என்றாள் சுவர்ணா.

‘‘நீ என்னை எதற்கும் விட மாட்டாய். வெளியூரில் இருக்கும் காதலர் செல்வத்தைத் தேடிக் கொண்டு பெரியபணக்காரர் போல மோட்டார் வண்டியில் வந்திறங்கிக் கலாட்டா செய்து விட்டார். பல நாட்களுக்குப் பின் அருமையான ஒரு கனவு. நிஜத்தில் கூட இவ்வளவு இன்பமிருக்காது. கெடுத்து விட்டுச் சிரிக்கிறாயா..?’’ சற்றுக் கோபமாகச் சொன்னாள் மாதுமை.

‘‘ஐயையோ இங்கு நான் வரக்கூடாது. இது பைத்தியக்கார வைத்தியசாலை. ஒவ்வொன்றும் என்னென்ன செய்யும் என்னென்ன சொல்லும் என்று தெரியாது. ஒருகணம் சிரிக்கும் மறுகணம் அழும். ஒரு கணம் காரணமின்றிச் சண்டைக்கு வரும். பின் அதை மறந்து சமாதானமாகும். இதுகளைப் பார்த்தால் எனக்கும் தட்டிப் போடும்’’ என்றாள் சுவர்ணா.

‘‘உனக்கு எங்கே இந்த இன்பங்களெல்லாம் புரியப் போகிறது. எதையும் வார்த்தைகளால் சொல்லிப் புரிய வைக்க முடியாது. அனுபவத்தால் தான் புரிந்து கொள்ள முடியும். நான் உங்களின் முன்னால் ஒரு ஐந்து நிமிடங்கள் உறங்கியிருப்பேன். அதற்குள் எனது மனதைக் கவர்ந்த மாயக்கள்வர் உங்களுக்குத் தெரியாமல் வந்து என்னை என்ன பாடு படுத்தினர் தெரியுமா? இது எனக்கு இந்த ஜென்மத்திற்குப் போதும். பலநாட்களுக்குப் பின்பு அவரை நேரில் கண்டு தழுவிய இன்பத்தைப் பெற்றேன். அவரது வசீகரமான சிரிப்பு என்னை மெய்மறக்கச் செய்தது’’ மாதுமை சொல்லிக் கொண்டிருந்தாள்.

‘‘அவர் வந்ததால் களைத்துப் போனாய் தேநீரைக் குடி’’ என்று தேநீர்க் கோப்பையை நீட்டினாள் வித்தியா. மாதுமையின் முகத்தைப் பார்த்தாள் அவளது முகம் பரவசத்திலாழ்ந்திருந்தது. சிறிது நேரத்திற்கு முன் ஒப்பாரி வைத்த அவளது கண்கள் மிகவும் அழகாக இருந்தன. முன்பு அதில் காணப்பட்ட துன்பத்தின் சாயலைக் காணவில்லை.

‘‘இப்போது விபுலன் வந்ததால் மாதுமை மிகவும் குதூகலமாக இருக்கிறாள். விபுலனைக் கண்டதும் நீ என்ன செய்தாய்?’’ என்று கேட்டாள் அர்ச்சகா.

‘‘என்னால் அவரை வா என்று கூட அழைக்க முடியவில்லை. திகைத்துத்திகிலடைந்து போனேன். அழைக்க வேண்டுமென்ற நினைப்புக் கூட வராததால் நானாகச் சென்று அவரைத் தழுவவுமில்லை கூடவும் இல்லை’’ என்றாள் மாதுமை.

சுவர்ணா பலமாகச் சிரித்தாள். பின்பு அர்ச்சகாவின் பக்கம் திரும்பி ‘‘இப்பொழுது நீ தனிமையில் இருக்கிறாய். நகுலன் வந்து விட்டாரென்று வை நீ என்ன செய்வாய்’’ சிரித்தாள் சுவர்ணா.

அர்ச்சகாவிற்கு மகிழ்ச்சியாக இந்தது. நகுலனை அவள் அப்போது எதிர்பாராததால் சற்றுத்தடுமாறினாள். நிமிர்ந்து அவனைப் பார்க்கக் கூடத் தயக்கமாக இருந்தது; ‘‘நான் கேட்கிறேன் நீ ஏதோ அவர் வந்து விட்டதைப் போல நவரசபாவம் காட்டுகிறாய். அவரைக் கண்டதும் அவரோடு ஊடுதல் செய்வாயோ...? இல்லைத் தழுவுவாயோ? அல்லது கூடுவாயோ..?’’என்று கேட்டாள் சுவர்ணா.

‘‘அதைப்பற்றித்தான் யோசிக்கிறன். என்னால் எந்த முடிவையும் எடுக்க முடியவில்லை. திட்டமிட்டு ஊடவேண்டும் என்று நினைத்துச் சென்ற பல சந்தர்ப்பங்களில் அவரைக் கண்டதும் எல்லாவற்றையும் மறந்து அவரின் மார்பில் புதைந்து விடுவேன். இப்பொழுது திடீரென்று அவர் வந்தால் எப்படி ஊடல் செய்ய முடியும்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘அப்போ தழுவுவாயா....?’’என்று கேட்டாள் சுவர்ணா.

‘‘போடீ, ஒரு கன்னிப் பெண் கேட்கிற கேள்வியே இது. நீ காதலித்து விட்டு அவர் திடீரென்று வந்து உன்னைச் சந்தித்தால் எனன் செய்வாய் என்று வந்து சொல்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘சும்மாய் ஓர் ஆராய்ச்சி செய்யலாமென்றால் குழப்புகிறாய். எனக்கென்றால் உனக்கு ஊடல் வராது. கூடுவாய் என்று தான் நான் நினைக்கிறேன்; ‘‘என்றாள் சுவர்ணா. அர்ச்சகாவின் முகம் சிவக்க அவளது தலை தாழ்ந்தது.

**1267. புலப்பேன்கொல்; புல்லுவேன் கொல்லோ; கலப்பேன்கொல்**
**கண் அன்ன கேளிர் வரின்?.**

எனது கண் போன்ற காதலர் வந்து விட்டால், நான் அவரோடு ஊடுதல் கொள்வேனோ? அல்லது அவரைத் தழுவுவேனோ? இல்லாவிட்டால் கூடுவேனோ?.

## விருந்து வைப்பேன்

‘‘ சும்மாய் ஓர் ஆராய்ச்சி செய்யலா மென்றால் குழப்புகிறாய். எனக்கென்றால் உனக்கு ஊடல் வராது கூடுவாய் என்று தான் நான் நினைக்கிறேன்’’ சுவர்ணா சொன்ன வார்த்தைகள் அர்ச்சகாவின் நெஞ்சில் இன்ப அதிர்வை ஏற்படுத்தியது. மென்மையான அவளது இதயத்தின் நரம்புகளை மெல்ல மீட்டுவது போல இருந்தது. அதுவும் நகுலன் மீட்டுவதைப் போல இருந்தது. அவன் அலங்காரமாகக் கதைப்பதில் வல்லவன். அவனது அலங்காரமான கதையின் இனிமை எப்பொழுதும் அவளை மெய்மறக்கச் செய்யும். அதனால் அவள் அவனைக் கண்டால் தன்நிலையை மறந்து விடுவாள்.

‘‘அன்பே இன்று நான் ஒரு நூலைப் படித்தேன். ஒரு போர்வீரனின் வீரத்தை விதந்து போற்றும் புலவன், அந்த வீரத்தினூடாகக் காதலை எப்படிக் கூறியிருக்கிறான் தெரியுமா....?’’ கேட்டு விட்டு நிறுத்தினான் நகுலன். அர்ச்சகாவின் மனம் பரபரத்தது. நகுலன் பழைய இலக்கிய நாயகர்கள் கொண்ட காதலை மிகவும் சுவரஸ்சியமாகக் கூறுவான். தற்போதைய திரைப்படங்களை விட மோசமான காதல் லீலைகள் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே ஆரம்பமாகி விட்டதை நினைக்க அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

‘‘மன்னன் காலமறிந்து மாற்றானுடன் போர் தொடுக்கிறான். மணிபோலத் தெளிந்த நீரும் வெட்ட வெளியும், மலையும் குளிர் நிழல் உள்ள காட்டுப் பகுதியில் உயரம், அகலம், உறுதி அழிக்க முடியாத தன்மையுடைய பலம் பொருந்திய அரணுள் அவன் இருக்கிறான். அவனுடன் நூற்றுக்கணக்கான வீரர்கள் இருக்கிறார்கள். காக்க வேண்டிய வாயில் சிறிதாகவும், மற்றைய இடங்கள் மிகப் பெரிதாகவும் இருக்கின்றன. மாலை மயங்குகின்றது. அவன் ஒருமரத்தின் கீழ் அமர்ந்திருக்கிறான். போர் தொடங்கி மூன்று மாதங்கள் கழிந்து விட்டன. எதிரியை ஓட ஓட விரட்டியாயிற்று. எனினும் போர் முடிவுக்கு வரவில்லை. ஓரிரு நாட்களில் முடிந்து விடும். நிலவு மங்கை நிர்வாணமாக வானத்தில் தோன்றுகிறாள். முகில்களற்ற முழுமையான நிலவுப் பெண் பூரிப்புடன் தனது ஒளியால் பூமியைப் பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கிறாள்.

‘‘என்மனதிற்கினியவளின் உயிரான தோழியே! போர் முடிவடைந்து விட்டபோதும் இன்னும் சில நாட்கள் நான் தங்க வேண்டிய நிலையில் உள்ளேன். முழுமையான நிலையில் இன்று நான் உன்னை மூன்றாவது தடவையாகச் சந்திக்கிறேன். முன்பு இருமுறையும் நான் உன்னைச் சந்திக்கும் போது எதிரியை நம் தாய் நாட்டிலிருந்து துரத்தும் சிந்தனையில் இருந்ததால் எனது காதலிக்கு என்னைப் பற்றிக் கூறச் சொல்லவில்லை. அத்துடன் எனது காதலியைப் பற்றியும் உன்னிடம் நான் விசாரிக்கவில்லை.

என்மீது அன்பானவளே! என் காதலியின் தோழியே! அவளிடம் சொல்; ‘‘அரசன் போரில் வெற்றி பெறுவான்’’என்று நான் விரைந்து வந்து காதலியோடு சேர்த்து உனக்கு விருந்து வைப்பேன். நான் அவளோடு சேர்ந்திருந்த போது எத்தனை தரம் நீ பார்த்திருப்பாய். நாம் தழுவி இன்பமடையும் போது நீ அதைக் காண வெட்கப்பட்டு கண்களை மூடுவதும் மறைவதுமாக இருப்பாய். சிலசமயம் நாங்கள் எம்மை மறந்திருக்கும் வேளைகளில் திறந்த வீட்டுள் நாய் நுளைவதைப் போல நுளைந்து எம்மை அதிர்ச்சிக் குள்ளாக்கியிருக்கிறாய். எனது அன்பானவளின் அழகை இரசிப்பதில் என்னை விட உனக்குத் தான் ஆர்வம் அதிகம். நீ வெட்கம் கெட்டவள். காதலர் மறைந்திருந்து அனுபவிக்கும் இன்பத்தை நீ களவாக இரசித்தால் பரவாயில்லை. ஒளிபாய்ச்சி ரசிக்கிறாய். இது உனக்கு நல்லதாகத் தோன்றுகிறதா....? அப்படியானால் நாலைந்து தினங்கள் கழிய வா நாமிருவரும் சேர்ந்துனக்கு விருந்து வைப்போம்...’’.

‘‘எனனடி வாய்க்குள் முணுமுணுக்கிறாய்’’ என்று கேட்டாள் சுவர்ணா.

‘‘நகுலன் கூறிய பழைய கதை ஒன்று... போர்க்களத்தில் நடந்த காதல் கதை எனது ஞாபகத்திற்கு வந்தது அது தான்’’ சிரித்தேன்.

‘‘நட்புறவோடு உறவாட வந்தால் உங்கள் வாழ்வில் நடந்தவற்றை நினைத்துச் சிரிக்கிறீர்கள்; அழுகிறீர்கள்; புலம்புகிறீர்கள்; நான் என்ன செய்வது எனக்கு விசர் பிடித்து விடும் போல இருக்கு’’ என்றாள் சுவர்ணா.

**1268. வினைகலந்து வென்றக வேந்தன்; மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.**

அரசன் போரில் வெற்றி பெறுவானாக, நான் போர்க்களத்தில் இருந்து வீட்டுக்குச் சென்று மனைவியோடு கூடியிருந்து அன்று வரும் மாலைப் பொழுதிற்கு விருந்து வைப்பேன்.

## ஏழு நாட்கள்

‘‘நான் இங்கு வந்து மூன்று மணித்தியாலங்களாகி விட்டன. மூன்று நிமிடங்களைப் போல அது கழிந்து விட்டது. வீட்டில் ஏராளமான வேலைகள் இருக்கின்றன. அம்மா தனியே அவற்றைச் செய்ய மாட்டா நான் அவாவிற்கு உதவி செய்ய வேண்டும். அம்மாவின் தாயார் நோய்வாய்ப்பட்டு ஒரு மாதகாலம் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றா அவாவைக் கவனிக்கவே ஓராள் வேண்டும் நான் புறப்படுகிறேன்’’ என்றாள் சுவர்ணா.

‘‘ஏனடி அவசரப்படுகிறாய். நீ இங்குள்ள வேளையில் தான் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம். நீ இல்லாவிட்டால் நாம் ஒரு நாளைக் கழிப்பது ஏழு நாட்களைக் கழிப்பதைப் போலாகும்’’ என்றாள் வித்தியா.

‘‘ஓமடி.. இன்னும் கொஞ்ச நேரம் இரு’’ என்றாள் அர்ச்சகா.

‘‘உங்களுக்கு காதலரை நினைப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் இல்லை. சும்மாய் இருந்து பழைய சம்பவங்களைப் பற்றி நினைத்து காலத்தை வீணாக்குவதை விட்டு விட்டு உருப்படியாக ஏதாவது செய்யுங்கள். நாம் வாழ்க்கையைத் திட்டமிட வேண்டும். அந்தந்த நேரம் நடக்க வேண்டியன வெல்லாம் தானாகவே நடக்கும். திட்டமிடும் உரிமையும் செயற்படும் தன்மையும் தான் நம்மிடம் உள்ளது. எமது பொருளாதாரத்திற்கு ஏற்ப நாம் திட்டமிடுகிறோம். அதன் அளவிற்கேற்பச் செயற்படுகிறோம். அதே போல எம்மைப் படைத்த ஆண்டவன் எமது பாவபுண்ணியங்களுக்கேற்பத் திட்டமிட்டே எம்மைப் படைத்துள்ளான். எனவே வீணாகப் பொழுதைக் கழிக்காது நல்ல முறையில் வாழுங்கள். நேரம் போவது தெரியாது’’ என்றாள் சுவர்ணா.

‘‘சரி சரி நீ போ. ஏதாவது கேட்டால் கிழவிகள் மாதிரி உபதேசம் செய்வாய். பிற்காலத்தில் உனக்கு வாய்ப்பவர் பாவம் செய்தவராகத் தான் இருப்பார்’’ என்று அர்ச்சகா கூறும் போது வித்தியா சொன்னாள்; ‘‘சாதாரண பாவமில்லை கடும் பாவம் செய்தவராகத் தான் இருப்பார். இந்த வயதில் கதைக்கிற கதையே இது. இப்படி அவருக்குக் கதைத்தாயானால் எழுந்து ஓடிவிடுவார்’’ என்றாள்.

‘‘காதலித்து விட்டுப் பிரிந்து சென்ற காதலரை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கும் உங்களைப் போன்றவர்களுக்கு ஒரு நாள் ஏழு நாட்களைப் போலத் தான் கழியும். இனியாவது உருப்படியான கருமங்கள் எதையாவது செய்யுங்கள்’’ கண்மணி மாமி விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்து எவ்வளவு வேலைகளைச் செய்கிறா. முற்றம் பெருக்குவதில் இருந்து உனக்குத் தேநீர் தருவது வரை அவா தானே செய்கிறா. பாவம் சின்னச் சின்ன வேலைகளையாவது நீ செய்யலாம் தானே. செய்தால் ஒரு நாள் கழிவது ஏழுநாள் கழிவது போல இராது’’ என்றாள் சுவர்ணா.

‘‘சுவர்ணா சொல்வது முற்றிலும் சரி, வீட்டில் நானும் எந்த வேலையும் செய்வதில்லை. அதனால் தான் பொழுது போவதில்லை. நான் ஆதவன் மேல் தேவையில்லாமல் அன்பை வைத்து விட்டேன். சுவர்ணா சொல்வது போல அவர் மீது ஆசைப்படாமலிருந்தால் எவ்வளவு இன்பமாக இருந்திருப்பேன் தெரியுமா?. ஒவ்வொரு பொருளும் ஆக்கத்திற்கும் பயன்படும், அழிவிற்கும் பயன்படும் என்பதை மெத்தப் படித்த அவரால் புரிந்து கொள்ள முடியவில்லையா? ஒரு கெட்ட குடியில் பிறந்த குடிகாரன்

நல்லவர்களை மதிக்காது கொடுமையாக நடந்ததற்காக எல்லோரையும் கெட்டவர்கள் என்று நினைத்து என்னுடன் கோபித்துக் கொள்வது எடுப்பது எவ்வளவு கேவலமானது. என்னை அன்று அவர் எவ்வளவு கேவலமாகப் பேசினார். அவரைப் போலத் தானே அவரது சகோதரன் காதலித்த பெண்ணின் தந்தையும் நடந்து கொண்டார். மனிதர்களை மதிக்கத் தெரியவேண்டும். எனக்கென்றால் இவரை மறந்து விட்டு வாழ்ந்தால் நிம்மதியும் இன்பமும் இருக்குமென்று நான் நினைக்கிறேன். அதைப்பற்றி நான் யோசித்து முடிவெடுக்கப் போகிறேன்'' என்றாள் வளர்மதி. அவளது வார்த்தைகள் சற்றுக் கோபமாக வெளிவந்தன.

அதை அர்ச்சகாவும் மாதுமையும் எதிர்பார்க்கவில்லை. வித்தியா சற்றுத் தடுமாறினாள். சுகுணா சிரித்தாள்; ''எனக்கெண்டால் உன்னுடைய பேச்சில் சிறிதளவும் நம்பிக்கையில்லை. காதலிப்பவர்கள் ஆற்றாமையால் வாழ்க்கை வெறுத்ததைப் போலக் கதைப்பார்கள். இரண்டொரு நாட்களில் மனம் மாறிவிடுவார்கள். இரண்டு நாட்கள் பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றாள் சுவர்ணா.

**1269. ஒருநாள் எழுநாள்போல் செல்லும், சேண் சென்றார்**
**வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.**

தொலைவில் உள்ள நாட்டிற்குச் சென்ற காதலர் திரும்பி வரும் நாளை நினைத்து ஏங்கும் பெண்களுக்கு ஒரு நாள் கழிவது ஏழுநாள் கழிவது போல் இருக்கும்.

**பயன் இல்லை**

தொடர்ந்து தோல்விகள் வந்தால் மனதில் உறுதி கருங்கல் போல இருந்தாலும் அது குலைந்து விடும். எத்தனையோ மைல்களுக்கப்பால் கடற்கரையில் உள்ள வெளிச்சவீட்டில் தெரியும் ஒளியை நம்பித்தான் கப்பல்கள் துறை முகங்களை அடைகின்றன. அப்படி ஒரு சிறு கீற்றளவாவது நம்பிக்கை இருந்தால் தான் அதை வளர்த்தெடுக்க முடியும். சிந்திக்காது பைத்தியக் காரனைப் போல நடந் கொள்ளும் ஒருவரை எப்படி நம்புவது என்று எனக்குப் புரியவில்லை. முன்பு கஜேந்திரனுக்கு என்மீது விருப்பமென்று சொன்னவர் தனது சகோதரர் ஒரு பெண்ணால் அதுவும் அவளால் அல்ல அவளின் பெற்றோரால் ஏற்பட்ட துன்பத்திற்காக மனமுடைவதானால் எப்படி இருக்கும். உலகில் தோல்விகளைச் சந்திப்பவர்களெல்லோரும் தன்னை அழிக்கிறார்களா...? இல்லையே அப்படியானால் உலகில் வாழ்பவர்கள் எல்லோரும் வெற்றியடைந்தவர்களாகத் தான் இருக்க வேண்டும். எதற்கும் ஓர் அளவு வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகி விடும் என்று ஒரு முது மொழி இருக்கு. நான் அவரை நினைத்து நினைத்துக் கவலைப்பட்டுப் பைத்தியக் காரிஆகி விடுவேனோ என்று பயமாக இருக்கு. இப்பொழுது மனம் மட்டும் வலிக்கவில்லை. தலையும் சேர்ந்து வலிக்கிறது, விறைக்கிறது. இதனால் எனது மனம் பிசகி விடுமோ என்று பயமாக இருக்கிறது. சிலவேளைகளில் உணர்வுகளின் கோரமான தாக்குதலால் எனக்கு உலக நினைவே இல்லாமல் போய்விடுகிறது'' என்றாள் வளர்மதி.

''அளவுக்கதிகமாகச் சிந்திக்காதே. சிந்தனைகளின் முதிர்ச்சி ஒருவனை ஞானியாக்கும். சிந்தனைகளின் கொடுமை அவனைப் பைத்தியக்காரனாக்கும். எனக்கென்றால் உனது கதையைக் கேட்கப் பயமாக உள்ளது. எனது நல்ல தோழியொருத்திக்கு மனநிலை பாதிக்க ஆரம்பித்து விட்டதென்றே நான் நினைக்கிறேன். அளவுக்கதிகமான யோசனைகளும், கற்பனைகளும் மூளையைக் குழப்பி அதன் செயலைத் திசைதிருப்பி விடும். நீ அந்த நிலைக்கு ஆட்பட்டுக் கொண்டிருக்கிறாய். துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மனம் உடைந்து அழிந்து விட்டால் நீ அவரைப் பெறுவதால் என்ன பயனை அனுபவிக்கப் போகிறாய்? ஒரு செயலின் பயன் அனுபவிக்கத் தக்க உடல் நிலை உள்ளபோது தான் கிடைக்க வேண்டும். நீ மனநிலை பிசகிய பின்பே இல்லை வயதான பின்பே கிடைப்பதால் பயன் இல்லை. எனவே வீணாகக் கற்பனை செய்து மனத்தை அழித்து விடாதே'' என்று கலங்கினாள் சுவர்ணா.

''எப்படிக் கற்பனை செய்யாமல் இருப்பது? எவ்வளவு ஆண்கள் எம்மத்தியில் இருக்கிறார்கள் அதை விட என்னில் எத்தனை ஆண்கள் ஆசைப்பட்டிருக்கிறார்கள்; ஆசைப்படுகிறார்கள். ஆனால் எனது மனம் அவரைத் தான் நீடுகிறது. அவரில் என்ன இருக்கிறது. என்று நீ கேட்கலாம். அதற்கு மறுமொழி சொல்ல என்னாலும் முடியாது; அர்ச்சகாவாலும் முடியாது. என்னுடைய இனத்தவள் ஒருத்தி இருக்கிறாள். நல்ல அழகி எத்தனையோ அழகான வாலிபர்கள் அவளை வட்டமிட்டனர். ஆனால் அவள் தற்செயலாக ஒரு கண் தெரியாத ஆண்மகனைச் சந்தித்தாள். அவனை விரும்பித் திருமணம் செய்தாள். இப்பொழுது அவள் இரண்டு பிள்ளைகளின் தாய். மிகவும் அன்பாகக் குடும்பம் நடத்துகின்றனர். அவளிடம் அல்லது அவனிடம் ஏன் நீங்கள் காதல் கொண்டீர்கள் என்று எப்படிக் கேட்பது. பெற்றோருக்கு பெரும் அதிர்ச்சி. ஆனால் என்ன செய்ய முடியும். காதலுக்கு வரைவிலக்கணம் கூற முடியாது. ஏனென்றால் ஒவ்வொருவருக்கும் ஏற்படுவது ஒவ்வொருவிதமான காதல். எனது தவறு எனக்குப் புரிகிறது. அதனால் சில கணங்கள் மனதில் அமைதி ஏற்படுகிறது. பின் மனம் பழைய படி கவலைப்பட ஆரம்பிக்கிறது. நீ கூறுவது போலத் துன்பத்தைத் தாங்க முடியாமல் உள்ளம் உடைந்து அழிந்த பின் அவள் நம்மைப் பெறுவதால் என்ன பயன்? பெற்று

விட்டால் தான் என்ன பயன்? அன்றி பெற்றுப் பொருந்தினால் தான் என்ன பயன்? என்று நினைத்து அவரது நினைவுகளை விலக்குவேன். இது சில மணித்தியாலங்களுக்கு மட்டும் தான் பின் பழைய நிலை வந்து விடுகிறது'' அழுதாள் வளர்மதி.

''ஆறுதல் அடைய முடியாத ஒரு பெரும் பிரச்சனை இது. ஆறுதல் யாராலும் கூற முடியாது. தான் தான் தனது மனதிற்கு ஆறுதல் அளித்தல் வேண்டும். வேறு எந்த எண்ணங்களையும் விட்டு விட்டு அவர் என்னைக் கட்டாயம் வந்தடைவார் என்று நம்பியிரு. அந்த நம்பிக்கை தான் உனது மனதைக் காப்பாற்றும் இதை விட என்னால் எதுவும் சொல்ல முடியாது'' என்றாள் வித்தியா.

**1270. பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்என்னாம்**
**உள்ளம் உடைந்துஉக்கக் கால்?.**

பிரிவுத் துன்பத்தைத் தாங்காது காதலியின் உள்ளம் உடைந்து சிதைந்து விட்டால், அவள் என்னைப் பெறுவதால் என்ன பயன்? அன்றியும் நான் அவளைப் பெறுவதால் என்ன பயன்? அவளைப் பெற்று தழுவிப் பொருந்தினாலும் என்ன பயன்?

## சொல்லும் செய்தி

வித்தியா அன்று மகிழ்வுடன் இருந்தாள். அவள் நினைக்காத சம்பவங்களெல்லாம் தற்பொழுது நடந்து அவளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருந்தன. கண்மணி தற்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள். அவள் சொன்னாள்; ''வித்தி நாம் மதிப்புடன் வாழ்பவர்கள். நீ கஜேந்திரனுடன் முன்பு எனக்குத் தெரியாமல் ஊர் சுற்றினாய். அப்பொழுது நான் உன்னை மிகவும் மோசமாகத் தண்டித்தேன். இருந்த போதும் அண்ணனின் மகன் உன்னை விரும்பாததால் நீ விரும்பிய கஜேந்திரனுக்கே உன்னைக் கட்டிக் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன். அதனால் நீ இனிமேல் அவனுடன் கண்டபடி வெளியே செல்லாதே. அது மானமுள்ள குடும்பத்தின் மரியாதையைக் கெடுத்து விடும். நான் நல்லதொரு நாளில் கஜேந்திரனது பெற்றோரைச் சந்தித்துக் கதைத்து முடிவு செய்கிறேன். அது வரை நீ வெளியே செல்ல வேண்டாம். ஏதாவது தேவையேற்பட்டால் அவரை இங்கு அழைத்துக் கதை'' வித்தியாவால் அதை நம்ப முடியவில்லை. முன்பு தாய் சொன்ன வார்த்தைகளை நினைத்துப் பார்த்தாள். எவ்வளவு நேரமாக வார்த்தைகள் அவை.

''கஜன், நல்லபையன் என்று கேள்விப்பட்டனான். அத்துடன் அவர்கள் வறியவர்களானாலும் அருமையானவர்கள் என்று நான் விசாரித்த அத்தனை பேரும் சொல்கிறார்கள். நீ விரும்புபவனை விட உன்னை விரும்புபவன் தான் உன்னைத் தன்கண்களைப் போலப் பாதுகாப்பான். அன்பு தான் வாழ்க்கை பணம், பொருள், காணி, பூமிகள் யாவும் நாம் விரும்புகின்ற மகிழ்ச்சியைத் தரமாட்டாது. எனது அண்ணனின் மகன் என்னைப் பார்ப்பான் என்று நினைத்தேன். ஆனால் அவன் வெளிநாட்டில் தங்கப் போகிறானாம். அவனது காதலிக்கு தனது பெற்றோரை விட்டு விட்டு இங்கு வரவிருப்பமில்லையாம். அதனால் தகப்பனை இங்கேயே இருக்கச் சொல்கிறான்; ''கோடிகோடியாகச் சொத்திருந்தும் என்ன பயன்'' என்று அண்ணா கவலைப்படுகிறார் வித்தி'' கலங்கினாள் கண்மணி.

''அம்மா'' பதறினாள் வித்தியா; ''என்னம்மா.... என்னம்மா...'' நீங்கள் இனி அழக்கூடாது'' வித்தியாவின் கண்கள் கலங்கின.

கண்மணி கண்களைத் துடைத்தாள்; ''வித்தி, மாமா அனாதையாகி விடுவாரோ என்று எனக்குக் கவலையாக உள்ளது. நீ அவரை உன் தந்தையாக நினைத்துக் கவனிக்க வேண்டும். அதற்குக் கஜேந்திரன் அனுமதிப்பானா...?''

வித்தியா மகிழ்ச்சி பொங்கச் சிரித்தாள்; ''இது தானா உங்கள் கவலை அம்மா அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. மனதளவில் அவர் வள்ளல் தன்னுயிரைக் கூட எனக்காகக் கொடுப்பார். தனது தந்தையைப் போல அவர் அவரைக் கவனித்துக் கொள்வார்'' என்றாள் வித்தியா.

அதைக்கேட்க கண்மணிக்குச் சந்தோசமாக இருந்தது. கண்மணி சென்ற பின் வித்தியா தொலைபேசியில் கஜேந்திரனுடன் தொடர்பு கொண்டு உடனே வரும்படி சொன்னாள். வீட்டுக்கு வந்த கஜேந்திரனை அன்புடன் வரவேற்று உபசரித்த வித்தியாவின் மகிழ்வைக் கண்டு பிரமித்துப் போனான் கஜேந்திரன்.

''அன்பான என்னுயிரே, என்றுமில்லாதவாறு உமது கண்கள் பிரகாசிக்கின்றன. கவனிப்பாரற்றுக் கிடந்த குத்து விளக்கைத் துலக்கினாற் போன்ற தொரு பிரகாசம் உமது உடலெங்கும் வியாபித்திருக்கிறது. அழகான கண்கள், அளவுக்கதிகமான மகிழ்வால் அசையக் கூடச் சக்தியற்று மயங்கிக் கிடக்கின்றன. உமது மகிழ்விற்கான காரணத்தைச் சொல்லும்.''

“ஒன்றும் இல்லை நான் வழமையாக இருப்பதைப் போலத்தான் இருக்கிறேன். இன்று உங்களை வீட்டில் அம்மாவுடைய சம்மதத்துடன் சந்தித்ததால் மகிழ்வாக இருக்கிறது” என்றாள் வித்தியா.

“நான் நம்பமாட்டன். உமது கண்களை நான் எத்தனை வருடங்களாகப் பார்த்திருக்கிறேன். அதில் எழுதப்பட்ட கவிதைகள் எத்தனை இன்று புதிய கவிதை ஒன்றை உமது கண்கள் படைத்து எனக்கு விருந்தாக்கியுள்ளன. அதைச் சொல்கிறேன். என் அன்பானவரே இதுவரை காலமும் ஊரவர்களுக்குப் பயந்து சந்தித்தோம். இனி அந்தப் பயமில்லை. எனது தாயார் திருமணம் செய்து கொடுக்க விரும்பி விட்டார். அவர் கொஞ்சி விளையாட ஓர் ஆண்குழந்தை தேவை. அது எனக்கும் தேவை. என்று நீர் எனக்குச் சொல்லாமல் மறைந்தாலும் அது உமது கட்டுப்பாட்டையும் கடந்து உமது கண்களால் வெளிப்பட்டு விட்டன. அவற்றால் அதை மறைக்க முடியாது.”

“போங்கோ அப்படி ஓர் ஆசை எனக்கில்லை” நாணிக் கோணினாள் வித்தியா. அவளது நாணத்தில் ஓர் அழகு ஒளிர்ந்தது.

**1271. கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்**
**உரைக்கல் உறுவதுஒன்று உண்டு.**

நீ சொல்லாமல் மறைத்தாலும் உன்னைக் கடந்து உன்னுடைய கண்கள் எனக்குச் சொல்லக் கூடிய செய்தி ஒன்று உள்ளது.

## நிறைந்த பெண்மை

“தமிழை நான் பாடமாகக் கற்காத போதும் தலை சிறந்த பழம் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைப் படித்திருக்கிறேன். பழைய இலக்கியங்களைப் படிப்பதென்றால் எனக்குக் கரும்பு சாப்பிடுவது மாதிரி. சில கவிதைகள் கரும்பைப் பிழிந்து தேனும் பாலும் கலந்துண்பதைப் போலச் சுவைக்கும். தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தார்களாம். அந்த அமிர்தத்தின் சுவை எப்படியானது என்று எனக்குத் தெரியாது. ஆனால் காதலின் சுவை எப்படியெப்படியான தென்று எனக்குத் தெரியும். நான் ஒவ்வொரு முறையும் உம்மைக் காணும் போது ஒவ்வொரு விதமான சுவையை அனுபவிக்கிறேன். உலகில் ஆறு சுவைமட்டும் தான் உள்ளது. என்று கூறுகிறார்கள். ஆனால் உம்மிடம் ஆயிரம் சுவைகள் உள்ளன. என்னை மயக்கித் தன்வசப்படுத்தியுள்ள உமது கண்களில் உள்ள புதுமை உலகில் எங்குள்ளது” கஜேந்திரன் உருகிக் கொண்டிருந்தான்.

“இதற்காகத்தான் நான் உங்களைச் சந்திப்பதைத் தவிர்ப்பது. பைத்தியக் காரனைப் போல அலட்டிக் கொண்டிருக்கிறீர்கள்” கோபித்தாள் வித்தியா.

“அழகான பெண்மைத் தன்மை நிறைந்து பூரித்துப் பொங்கும் ஒரு பெண்ணைக் காதலித்தால் பைத்தியம் தானாக வரும். இன்று என்றுமில்லாத பேரழகு உமதுடலெங்கும் கொட்டிக் கிடக்கிறது. அதை என்னால் வர்ணிக்க முடியவில்லை. இதுவரை காலமும் காணாத முழுமை பெற்ற பெண்மையை நான் இன்று காண்கிறேன். கடவுளின் மீது பக்தி கொண்டு தினம் தினம் அவரைக் கண்டு மகிழும் பக்தன். ஒரு நாள் அவரை நேரில் கண்டால் எப்படி இருப்பானோ அப்படி இருக்கிறேன். முழுமையான உமது மகிழ்வும், பெற்றோரின் ஆதரவும் கிடைத்தமையாலோ அல்லது காதலின் உச்சக் கட்டத்தை அடைந்ததாலோ தெரியவில்லை. இன்று முற்றாக மலர்ந்த மலரைப் போலப் பொலிந்து காணப்படுகிறீர். அதைப் பார்க்கப் பார்க்க எனது மனம் பொங்குகிறது” அவளின் அருகே வந்து மெல்ல அணைத்தான் வித்தியா அவனை நாணத்துடன் பார்த்தாள். அவன் சொல்வது உண்மை தான். இது நாள் வரையும் ஏற்படாத ஒரு புதுமையான மின் அலை போன்றதோர் உணர்வு சில்லிட்டு உடலெங்கும் பரவிக் கொண்டிருந்தது. இதை அவர் எப்படிப் புரிந்து கொண்டார். என்னைப் பார்த்ததும், எனது கண்களைப் பார்த்ததும் எனது மன உணர்வுகளை எப்படிப் புரிந்து கொள்கிறார்”.

“என்ன யோசிக்கிறீர். இதையெல்லாம் நான் எப்படிப் புரிந்து கொண்டேன் என்றா..? இவற்றையெல்லாம் புரியாதவன் காய்ந்த மரக்கட்டைக்குச் சமமானவன். எல்லோரும் நினைப்பார்கள் காதலி வாய் திறந்தால் தான் மொழி பேசுவாள் என்று. அப்படியல்ல உயிருக்குயிராக நேசிக்கும் ஒருவனைக் கண்டவுடன் காதலியின் அங்கங்கள் மகிழ்ந்து தனது கருத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்லும். சொல்லும் வேளைகளில் அங்கங்களுக்கிடையே உண்டாகும் போட்டியைப் பார்க்க வேண்டும். கண்களை விட கை முந்தும், கையை விடக் கால் முந்தும் அதைப் புருவம் தடுக்கும், கன்னங்கள் கெஞ்சும். இதையெல்லாம் காதல் என்ற மந்திரத்தைக் கசடறக் கற்றவனால் தான் புரிந்து கொள்ள முடியும். அவற்றிற் கெல்லாம் மொழி இருக்கு. அதைத் தேடிக் கண்டு பிடித்துக் கற்க வேண்டும்” புலம்பினான் கஜேந்திரன்.

வித்தியா சொக்கிப் போனாள். அவளுக்கு மயக்கம் வருவதைப் போன்றதோர் உணர்வு, மெல்ல அவனது நெஞ்சில் சாய்ந்தாள். பெண்மையின் முழுமை அவனைத் தொட்டுத் தழுவிப் பரவசமூட்டியது; ‘‘வித்தியா’’ மெல்ல அழைத்தான் வித்தியா ‘‘ம்’’ என்று கூடச் சொல்லவில்லை. ‘‘எனக்கு எவ்வளவு இன்பமாக இருக்கிறது. இந்த உலகில் பாக்கியம் செய்தவர்கள் நாம் தான். எம்மை விட யாரும் இப்படியான முழுமையான இன்பத்தை அடைந்திருக்க முடியாது. பூரண நிலவைப் போலவும், நன்றாக மலர்ந்த தாமரையைப் போலவும் சுவையான பழங்களின் கலவையைப் போலவும் இன்று நீர் எனக்குக் காட்சி தருகிறீர். இந்த நாளை என்னால் மறக்க முடியாது’’.

‘‘தற்செயலாக அம்மா வந்தால்’’ என்ற பயம் அவளது நெஞ்சில் புகுந்து வளர்ந்தது. அதனால் அவனது அணைப்பிலிருந்து விடுபட முயன்றாள். அதற்குக் கஜேந்திரன் அனுமதியளிக்கவில்லை.

**1272. கண்நிறைந்த காரிகைக் காம்புஏர்தோள் பேதைக்குப்**
**பெண்நிறைந்த நீர்மை பெரிது.**

கண்நிறைந்த அழகும் மூங்கில் போன்ற தோளும் உடைய எனது காதலிக்குப் பெண்மைத் தன்மை நிறைந்து விளங்கும் இயல்பு, மிகுதியாக உள்ளது.

### விளங்கும் குறிப்பு

‘‘உம்மால் எனக்கு எதையும் மறைக்கவே முடியாது. உதடுகள் சொல்ல மனம் விடாவிட்டாலும் உமது அங்கங்கள் கூறும் கதையை உம்மால் அல்ல உமது மனத்தாலும் அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில் மின்னல் தாக்கினால் தொலைத் தொடர்புக் கோபுரத்தின் சமிக்ஞைகள் தொடர்புகள் அற்றுப் போவதைப் போல உமது கண்கள் என்னைக் கண்டவுடன் மகிழ்வான அதிர்வைத் தரும். மின்னலால் தொலைத் தொடர்புக் கோபுரம் செயலிழந்து போவதைப் போல நீர் செயலிழந்து விடுகின்றீர். அதனால் கட்டுப்பாடின்றி இயங்க ஆரம்பிக்கின்றன. அமுத மழையைப் பொழியும் கருணை மிக்க மோகனமான கண்கள் தாமே முதலில் உறவாட விரும்புகின்றன. அதனால் அவை பல கதைகளை என்னுடன் பேசுகின்றன. இதை நீர் அறிய மாட்டீர். சிரித்தான் கஜேந்திரன்.

சிணுங்கினாள் வித்தியா; ‘‘இந்த மென்மையான போதையூட்டும் சிணுங்கல் உமக்குக் கொடை அந்தச் சிணுங்கலைக் கேட்டதும் இதயம் அதிர்கிறது. எனது நீர் சிரித்தால் என் உயிரைக் கொல்வது போல இருக்கின்றது. உமது அங்கங்கள் மட்டுமல்ல அவற்றின் அசைவுகளும் மொழி பேசுகின்றன. கோர்த்துக் கட்டிய பளிங்கு மணியின் உள்ளே தெளிவாகத் தெரியும் நூலைப் போலத் தெளிவாகத் தெரியும். குறிப்பொன்று உமது முகத்தில் தெரிகிறது. என்ன அது...? நீர் சொல்கிறீரா இல்லை நான் சொல்லட்டா’’ என்று கேட்டான் கஜேந்திரன்.

‘‘அம்மா உங்களோடு கதைக்க வேண்டும் என்று சொன்னவா தனது சகோதரனையும் நாங்கள் தானாம் பராமரிக்க வேண்டும். அங்கஜன் அப்பெண்ணின் மீது கொண்ட மோகத்தால் அவளுடன் வெளிநாட்டில் தங்கியிருக்க விரும்புகிறானாம். மாமாவை இங்கேயே இருக்கும் படி கூறியுள்ளானாம். அதற்காக மாமா கவலைப்படுகிறார். சிறுவயதிலேயே மனைவியை இழந்த அவர் தனது அன்பு மகனுக்காகத் தான் இவ்வளவு காலமும் வாழ்ந்தவர். இப்போது அவனைக் காணாமல் துடிதுடிக்கிறார். அவர் படும் வேதனையைப் பார்த்து என்னால் கூடச் சகிக்க முடியவில்லை. உடன் பிறந்த அம்மா எப்படித் தாங்குவா. இப்போது அவாவுக்குத் தனது சகோதரனைப் பற்றிய கவலை தான் மனதை வாட்டுகிறது. அவரை எனது தந்தையைப் போலக் கவனிக்க வேண்டுமாம். அதற்குக் கஜேந்திரன் சம்மதிப்பாரா என்று கேட்டார்’’ என்றாள் வித்தியா.

அதற்கு நீர் என்ன சொன்னீர்..’’ ஆவலுடன் கேட்டான் கஜேந்திரன்.

வித்தியா சில கணங்கள் அவனை உற்றுப் பார்த்தாள். பின் தனக்குள் பூரணமாகச் சிரித்தாள்; ‘‘நான் உங்களைக் கேட்காமல் இதற்கெல்லாம் பதில் சொல்ல முடியுமா என்று கேட்டேன். காதலிப்பவர்கள் மோகமிகுதியால் கண்டவற்றையெல்லாம் பிதற்றுவார்கள். பின் கஷ்டம் கரைச்சல் வந்தால் அன்பே என்றழைத்தவர் அசடே என்பார். கண்ணே என்றழைத்தவர் நாயே பேயே என்பார்’’ என்றேன்.

கஜேந்திரன் பலமாகச் சிரித்தான்; ‘‘எங்கே என்னைப் பாரும். எனது கண்களைப் பாரும்’’ என்றபடி தனது இரண்டு கைகளாலும் அவனது கன்னத்தைப் பற்றி தனது கண்களை அவளது கண்களுக்குக் கிட்டே கொண்டு சென்றான். உதடுகள் உரச கண்கள் கதைத்தன; ‘‘நீர் எப்படிச் சொன்னீர் தெரியுமா? ‘‘அம்மா அவரைப்பற்றி உங்களுக்குத் தெரியாது நான் உயிரை விடு என்று சொன்னால் சொல்லி முடிக்கு முன் உயிரை விட்டு விடுவார். அவர் என்னில் கொண்டுள்ள அன்பின் அளவை இவ்வளவெனக் கணிக்க முடியாது. வள்ளல் அம்மா வள்ளல். அன்பு வள்ளல் நான் சொன்னால்

மாமாவை அல்ல மாமாவின் பரம்பரையையே பார்ப்பார். நீங்கள் எதற்கும் கவலைப் படாதீர்கள். நீங்கள் நினைப்பது எல்லாவற்றையும் அவர் செய்வார்'' என்று சொன்னதாக உமது கண்கள் சொல்கின்றன. உதடுகள் உண்மை வெளியாகி விட்டதே. என்று கள்ளச் சிரிப்புச் சிரிக்கிறது. கன்னங்கள் தன்னைக் கேட்கவில்லையே என்று என்னுடன் கோபித்துச் சிவந்து விட்டன. அதன் கோபத்தைத் தணிக்க வேண்டும்'' வித்தியாவை இழுத்து அணைத்தான் கஜேந்திரன். அவன் தன்னை எப்படிப் புரிந்து வைத்திருக்கிறான் என்பதை நினைக்க அவளது உடல் சிலிர்த்தது. அவனது காதுக்குள்; ''நான் பாக்கியசாலி'' என்று முணுமுணுத்தாள்.

**1273. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை**
**அணியில் திகழ்வதுஒன்று உண்டு.**

கோர்த்து மாலையாகக் கட்டிய மணியினுள் தெளிவாகத் தெரியும் நூலைப் போல் எனது காதலியின் அழகினுள் விளங்கும் குறிப்பு ஒன்று இருக்கிறது.

**மறைந்திருக்கும் மலர்**

''கவிஞர்கள் பெண்களை மலருக்கு ஒப்பிடுவார்கள். அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. மாலையில் அழும்பி இரவெல்லாம் மெல்ல மெல்ல விரிந்து காலையில் பூரணமாகி மாலையில் கருகித் தனது வாழ்வை முடித்துக் கொள்ளும் மலர் எங்கே. காலம் பூராகவும் வாடாது மலர்ந்திருந்து மனதை மகிழ்விக்கும் நீர் எங்கே? பல நிறமுள்ள மலர்களைக் கோர்த்துக் கட்டிய மாலையை விட நவரச பாவம் காட்டும் வேளைகளில் சிவந்து பொலிந்து விளங்கும் உமது அங்கங்கள் எங்கே? அவற்றின் மோகத்தை எழிலை மலர் மாலைகளால் எனக்குத் தர முடியுமா....?''

''வித்தி'' வெளியே கண்மணி அழைத்தாள். வித்தியா வெளியே சென்றாள். சில கணங்களில் கண்மணி இரண்டு கோப்பைகளில் தேநீர் கொண்டு உள்ளே வந்தாள். கஜேந்திரன் நாற்காலியை விட்டெழுந்து முதல் தடவையாக அவளை நமஸ்கரித்தான். கண்மணி அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனது கண்கள் கலங்கியிருந்தன. அவனைப் பார்த்ததும் அவளது கண்களும் கலங்கின.

''உங்களது விருப்பத்தை வித்தியா எனக்குச் சொன்னாள். வித்தியா சொல்வதெதையும் என்னால் தட்டிக் கழிக்க முடியாது. அவளுக்காக நான் எதையும் செய்வேன். உங்களது சகோதரனின் மனம் கோணாமல் நான் அவரைக் கவனித்துக் கொள்வேன். நீங்கள் அதைப் பற்றிய கவலையை இன்றுடன் விட்டு விடுங்கள்'' என்றான் கஜேந்திரன்.

கண்மணி பூரித்துப் போனாள். தனக்கொரு மகன் இருந்தால் கூட அப்படிச் சொல்வானோ என நினைத்தாள். வித்தியா கூட இப்படிச் சொல்ல மாட்டாள். கஜேந்திரனது முழுமையான பண்புகளை அறிந்ததால் தான் சொன்னாள்; ''பெண்கள் தான் வாழ்வின் கண்கள். அவர்களால் தான் உலகம் உருவாகிறது. கணவனைச் சீர் செய்வதும், பிள்ளைகளை நற்பிரசைகளாக்குவதும் பெண்களே அந்தப் பெண்களை வழி நடத்த நல்ல தொரு கணவன் தேவை. வித்தியாவுக்கு நல்லதொரு கணவன் அமைந்து விட்டான். இனி நான் நிம்மதியாகச் சாகலாம்'' என்று நினைத்துப் பூரித்தாள் கண்மணி.

''தம்பி உம்மை எனது மகனாகத் தான் நான் கருதுகிறேன். நீர் வித்தியாவையும் எம்மையும் காத்துக் கொள்வீர் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நானும் அண்ணாவும் நல்லதொரு நாளில் உமது வீட்டுக்கு வருகிறோம் என்பதை உமது பெற்றோருக்குச் சொல்லி வையும்'' என்ற கண்மணி அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

கஜேந்திரன் அட்டகாசமாகச் சிரித்தான். பின்; ''இனி உம்மை எனக்குத் தேவையில்லை. என்னுடன் இனி மோத நினைத்தால் என்னிடம் பலமான ஆயுதமொன்றுள்ளது. மாமியிடம் சொன்னால் உம்மை என்ன செய்வா தெரியுமா...?''

''நேரத்திற்கு நேரம் சுவையான சாப்பாடு மட்டும் தான் கிடைக்கும். மற்றெல்லாவற்றிற்கும் எனது காலைத்தான் பிடிக்க வேண்டும்'' சினந்தாள் வித்தியா.

''காலை எப்போதோ பிடித்தாயிற்று இனி...'' சிரித்தான் கஜேந்திரன்.

''வித்தியா நளினமாகச் சிரித்தவாறு தலையைக் குனிந்தாள்'' ''அன்பே, அரும்பு தோன்றும் போதே அதனுள் அடங்கியிருக்கும் நறுமணத்தைப் போல உமது அரும்பு போன்ற புன்முறுவலுள் பெரியதொரு செய்தி உள்ளதை நான் காண்கிறேன். அந்த உதடுகள் துடித்து அசையும் கோலம் எனக்கு எதையோ சொல்கிறது. அதை நிறைவேற்ற வேண்டிய கடமை எனக்கிருக்கிறது. இல்லாவிட்டால் தனது

தேவையைக் கவனிக்காதஎன்னை அவை வெறுத்து ஒதுக்கி விடும்'' என்றவாறு அவளது தலையை உயர்த்தினான். கண்கள் சோர்ந்து மயங்க உதடுகள் பிரிய முயன்றன. கஜேந்திரனது அணைப்புத் தளர்ந்த போது வித்தியா தனது முகத்தை அவனது நெஞ்சில் புதைத்தாள்.

''இந்த இனிமையான இன்பம் இனிமேல் தினமும் எனக்குக் கிடைக்கப் போகிறது. கள்ளத்தனமாகச் சந்திப்பதில் காணாத இன்பங்களை யெல்லாம் உரிமையுடன் சந்திக்கும் போது காண்கிறேன். நான் கொடுத்து வைத்தவன். இரண்டு வருடங்களுக்கு முன்பு எதைஎதையெல்லாம் நினைத்தேனோ அயையெல்லாம் இப்போது கிடைக்கிறது'' என்றான் கஜேந்திரன்.

**1274. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை**
**நகைமொக்குள் உள்ளது ஒன்று உண்டு.**

அரும்பினுள் இருக்கும் மணத்தைப் போல, எனது அழகான காதலியின் புன் சிரிப்பில் குறிப்பு ஒன்று உள்ளது.

### கள்ளக் குறிப்பு

''நாற்காலியின் மீது கால் மேல் கால் போட்டு அமர்ந்தபடி தனக்கு முன்னால் இருக்கும் வித்தியாவை ஆசையோடு பார்த்தான் கஜேந்திரன் வெண்தாமரைப் பூவில் அமர்ந்திருக்கும் சரஸ்வதியின் சாயல் அவளில் தெரிந்தது. கையில் வீணையை வைத்திருந்தால் சரஸ்வதி தான். என்று நினைத்தான் கஜேந்திரன். அதனால் அவனுக்குச் சிரிப்பு வந்தது. மெல்லச் சிரித்தான்.

அவனது அழகை மெய்மறந்து இரசித்துக் கொண்டிருந்த வித்தியா அவனது அந்தச் சிரிப்பைக் கவனித்தாள். அதற்கு ஏதோ ஓர் அர்த்தம் இருக்கிறது என்று புரிந்து கொண்டாள். அவனின் அருகே வர எழுந்தாள்; ''இரும் இரும் எழும்ப வேண்டாம். நாற்காலியில் ஒய்யாரமாகச் சாய்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டிருக்கும் அழகு என்னைக் கொள்ளை கொண்டு விட்டது. ஒரு வீணை கிடைத்தால் கொண்டு வந்து தந்து விட்டு பார்க்கலாமென நினைத்தேன். அதற்கிடையில் என்னைக் குழப்புகிறீர்'' என்றான் கஜேந்திரன்.

''ஏன் சிரித்தீர்கள். சொல்லுங்கோ''

''உமது அங்க அசைவுகளையும் சிரிப்பையும் கண்டவுடன் உமது எண்ணத்தையும் கருத்தையும் நான் புரிந்து கொள்வேன். எனது சிரிப்பை உம்மால் புரிந்து கொள்ள முடியவில்லையே.? எப்போது புரிந்து கொள்ளப் போகிறீர்'' என்றான் கஜேந்திரன்.

''உங்களது கள்ளத்தனம் யாவும் எனக்குத் தெரியும். கதைக்கும் போது கதைக்கும் அர்த்தமும் புரியும். அது புரியாமலா இரண்டு வருடங்களுக்கு மேலாக உங்களைக் காதலிக்கிறேன். இப்போது நீங்கள் சிரித்த சிரிப்புக்கு வேறு ஓர் அர்த்தமிருப்பதாகவே எனக்குத் தெரிகிறது. நிட்சயமாக அது நான் சம்பந்தப்பட்டது அல்ல. சமாளிப்பதற்காகச் சரஸ்வதி, வீணை என்றெல்லாம் சொல்கிறீர்கள். உண்மையைச் சொல்லுங்கோ'' என்றாள் வித்தியா.

கஜேந்திரன் எதுவும் பேசாமல் மீண்டும் சிரித்தான்; ''நீங்கள் பொல்லாத ஆளென்பது எனக்குத் தெரியும். சிரித்துச் சிரித்தே காரியம் பார்த்து விடுவீர்கள். அத்துடன் சிரித்து என்னை ஏமாற்றியும் விடுவீர்கள். இன்று என்னை ஏமாற்ற முடியாது'' என்றாள் வித்தியா.

''மறைக்கக் கூடிய விஷயங்கள் எதுவும் என்னிடம் இல்லை. அப்படி இருந்தாலும் எப்போதோ ஒரு நாள் வாய் தவறியாவது சொல்லி விடுவேன். அரும்பினுள்ளே நறுமணம் மறைந்திருப்பதைப் போல உமது சிரிப்பினுள் எத்தனையோ கவிதைகள் மறைந்திருக்கின்றன. அதைப் புரிந்து சுவைக்க வேண்டியது எனது பொறுப்பு என்று நினைத்தேன். அப்பொழுது நகுலன் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. அவன் என்னை விடப் பாக்கிய சாலியாகி விட்டானோ என்று நினைத்தேன் சிரிப்பு வந்து விட்டது'' என்றான் கஜேந்திரன்.

''எந்த நேரமும் உங்களுக்கு அந்த நினைப்புத்தான். நகுலன் என்ன சொன்னவன்'' என்று கேட்டாள் வித்தியா.

''மூன்று தினங்களுக்கு முன்பு அர்ச்சகா மகா கணபதி ஆலய இரவுப் பூசைக்குப் போயிருக்கிறாள். குருக்கள் வரச் சற்றுத் தாமதமாகி விட்டது. நானும் நகுலனும் தற்செயலாகக் கோயிலுக்குச் சென்றிருந்தோம். பூசை முடிந்ததும் அர்ச்சகா இவனைப் பார்த்து தனது வலது கையால் இடது கைச் சின்னி விரலைப் பிடித்து தடவினாள். பின் நெற்றியில் பொட்டு வைத்து விட்டு வலது கையைத் தனது

நெஞ்சில் வைத்தாள். இது எனக்குப் புரிந்தது. நான் செய்யாத செயல்களா அவை நான் அதைக் கவனிக்காதது போல இருந்தேன். நகுலன் என்னருகே வந்து; ‘‘நண்பா, அர்ச்சகா கோயிலுக்குத் தனியே வந்திருக்கிறாள். அவள் காட்டிய குறிப்பில் இருந்து தன்னை அழைத்துச் சென்று வீட்டில் விடும்படி கூறுகிறாள். எனப்புரிந்து கொண்டேன். நின்று கொள் அவளை விட்டு விட்டு வந்து விடுகிறேன். என்று கூறி விட்டுச் சென்று விட்டான்.

அரைமணி நேரத்தின் பின் திரும்பி வந்தான். அப்பொழுது அவன் மிகவும் சந்தோசமாக இருந்தான்; ‘‘மச்சான் அர்ச்சகா என்னைப் பார்த்துச் செய்து விட்டுச் சென்ற குறிப்பின் படி நடந்ததால் நான் பல நாட்களாகப் பட்ட துன்பம் நீங்கியது. அன்பான காதலியின் குறிப்பு காதலனின் நோய் தீர்க்கும் மருந்தாகும். பல நாட்களுக்குப் பின் அவளை நான் துவிச்சக்கர வண்டியில் ஏற்றி அணைத்தபடி வீட்டில் கொண்டு சென்று விட்டேன்’’ என்றான். அது போல நீர் நாற்காலியில் ஒய்யாரமாகச் சாய்ந்திருப்பதன் குறிப்பு...’’ நிறுத்தினான்; ‘‘சொல்லுங்கள்’’ அவசரப்படுத்தினாள் வித்தியா.

‘‘கல்லுப்பிள்ளையார் மாதிரி இருக்கிறீர்கள். நான் இந்த மரத்திலா சாய்ந்திருக்க வேண்டும். பஞ்சணை போன்ற உங்கள் மடி எதற்கிருக்கு. நான் குறிப்பால் அறிவுறுத்தியும் புரியாமல் இருக்கிறீர்களளே. என்று நினைத்திருப்பீர’’ என்றான் கஜேந்திரன்.

‘‘சரியான மாயக்கள்வன். என்னை அறியாமல் எப்படி உள்ளே நுழைந்து எனது மனத்திடம் எனது விருப்பத்தைக் கேட்டு அறிந்தீர்கள்’’ என்று வியப்புடன் கேட்டாள் வித்தியா.

**1275. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்**
**தீர்க்கும் மருந்துஒன்று உடைத்து.**

எனது காதலி என்னைப் பார்த்துச் செய்து விட்டுச் சென்ற கள்ளமான குறிப்பில், எனது துயரத்தைத் தீர்க்கும் மருந்து ஒன்று இருக்கிறது.

## குறிப்பு உணர்த்துவது

வித்தியாவின் வீட்டுக்கு அர்ச்சகா வந்தாள். கஜேந்திரன் அங்கு வந்து அவளால் தாங்கிக் கொள்ள முடியாத அளவு மகிழ்வைக் கொடுத்து விட்டுச் சிறிது நேரத்திற்கு முன்பு தான் சென்றிருந்தான். என்றுமில்லாதவாறு வித்தியாவின் மனம் பொங்கிப் பூரித்திருந்தது. உடல் சிலிர்த்துக் காற்றில் மிதப்பதைப் போன்ற ஓர் உணர்வு அவன் சென்று பல நிமிடங்களுக்குப் பின்பும் இருந்தது; ‘‘மகா கணபதியே’’ எனது தாயாரின் மனதை மாற்றி அவரது மனதில் உள்ள எண்ணங்களை நான் மகிழும் படி மாற்றியமைக்க வேண்டு மென்று தான் நான் உன்னை வணங்கும் போதெல்லாம் கேட்டேன். நான் பிறந்தன்றில் இருந்து அம்மாவின் மனதில் மூளைவிட்டு வேரூன்றி வளர்ந்து விருட்சமாகி விட்ட எண்ணங்களை உன்னால் மாற்ற முடியுமோ...’’ என்று கூடச் சந்தேகப்பட்டேன். ஆனால் நீ எனது அம்மாவின் மனதை மாற்றுவதற்காக அங்கஜனின் மனதில் இன்னொரு பெண்ணைப் புகுத்தினாய். அதனால் அம்மாவின் மனம் சற்று மாறியதே தவிரச் சமாதானமடையவில்லை. என்று தான் நினைத்தேன் ஆனால் நீ அம்மாவின் மனதைச் சமாதானப்படுத்தி நம்பிக்கையூட்டி அவாவைக் கொண்டே கஜேந்திரனை அழைப்பித்துத் தனது தேவைகளையும் அவர் மூலம் நிறைவேற்ற வைத்துவிட்டாய் அது மட்டுமல்லாமல் இன்று அவரைச் சந்திக்க வைத்து உலகில் நான் காணாத இன்பங்களை யெல்லாம் அனுபவிக்கவும் வைத்தாய். இவ்வளவு இன்பங்களை அள்ளித்தரும் புதுமையானவர் அவர் என்று என்னைத் திகைக்க வைத்தாய். உனது புதுமையை என்னால் எடுத்துக் கூற முடியாது. இதற்காக நான் சாகும் வரையும் உனக்குத் தொண்டு செய்வேன்’’ என்று நினைத்தாள்.

‘‘வித்தி’’ என்றவாறு கட்டிலில் முகம்குப்புறப் படுத்திருந்த வித்தியாவின் முதுகில் கையை வைத்தாள் அர்ச்சகா.

‘‘யார் அர்ச்சகாவா?’’ என்று கேட்டவாறு கட்டிலால் எழுந்து உட்கார்ந்தாள் வித்தியா.

‘‘இவ்வளவு உரிமையுடன் பட்டப் பகல் வேளையில் உனது வீட்டாரெல்லாரும் இருக்கையில் இந்த வீட்டுள் நுழைந்து உனது அறைக்கு வரும் துணிவு என்னைத் தவிர வேறுயாருக்கும் வரும். நீ என்ன கஜேந்திரன் என்று நினைத்தாயா..?’’ என்று கேலியாகக் கேட்டாள் அர்ச்சகா.

வித்தியா சிரித்தாள்; ‘‘என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய். துணிவு மட்டுமல்ல உரிமையுடனும் கஜேந்திரன் இவ்வளவு நேரமும் வந்திருந்து என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிட்டுப் போகிறார். வாழ்க்கை இன்று போல என்றும் இருக்க வேண்டு மென்று நான் விரும்புகிறேன். அம்மா தேநீர் கொண்டு வந்து அவருக்குக் கொடுத்து விட்டு தன்னையும் தனது சகோதரனையும் பராமரிக்கும்

பொறுப்பையும் அவருக்குக் கொடுத்து விட்டா. அடுத்த நல்ல நாளில் டும் டும் டும்'' தான்'' என்று சிரித்தாள் வித்தியா.

''அவர் வந்து போன செய்தியை உனது முகம் சொல்கிறது. உனது கண்களில் காணப்படும் பரவசம் நீ அவர் மூலம் அனுபவித்த இன்பங்களைப் பறை சாற்றுகிறது. உனது உதடுகள் அவர் கதைக்காதவற்றையும் மௌன மொழியில் எனக்குக் கூறுகின்றன. நீ கொடுத்து வைத்தவள். எனக்கு உன்னைப் பார்க்கப் பொறாமையாக உள்ளது'' என்றாள் அர்ச்சகா.

''அவசரப்படாதை எல்லாம் சரி வரும். என்னை விட அதிகமான இன்பங்களை நீயும் அனுபவிப்பாய். பொறுமை வேண்டும் மகளே பொறுமை'' என்றாள் வித்தியா.

விரக்த்தியாகச் சிரித்தாள் அர்ச்சகா; ''என்னடி சிரிப்புச் சரியில்லை. என்ன நடந்தது'' என்று கேட்டாள் வித்தியா.

''எனது காதலர் என்னை நெருங்கி வந்து எனது பிரிவுத் துன்பத்தைப் போக்கி, எனக்கு இன்பமளித்தாரானால் அதைத் தொடர்ந்து துன்பங்கள் வரப் போகின்றன எனறு குறிப்பால் நான் அறிந்து கொள்வேன். முன்பு வீட்டுக்கு அவர் வந்த பின்பு படிப்பிற்காக என்னைச் சந்திக்காது விட்டார். பின் சுகுணா வீட்டிற்கு அம்மாவும் அப்பாவும் சென்ற போது வந்தார். இப்போ அவர் வெளியூருக்குப் போகப் போகிறாராம். திரும்பி வர நாலைந்து மாதங்கள் செல்லுமாம்'' என்றாள் அர்ச்சகா. அவளின் கண்கள் கலங்கின.

''காதலர் எப்போதும் சேர்ந்திருக்க முடியாதே. ஏதோ ஒரு வகையில் பிரிவு வரும். அப்பிரிவு முடிய இன்பம் வரும். இன்பத்தின் பின் துன்பம் வரும். இது காதலருக்கு அடிக்கடி வரும் நிகழ்வு அதற்காக வருந்தாதே அவர் வந்து நீ பட்ட துன்பங்களை யெல்லாம் போக்குவார்'' என்றாள் வித்தியா.

**1276. பெரிதுஆற்றிப் பெட்பக் கலத்தல் அரிதுஆற்றி**
**அன்புஇன்மை சூழ்வது உடைத்து.**

எனது காதலா் என்னை நெருங்கி வந்து, எனது பிரிவுத் துயரைப் போக்கி நான் ஆசை கொள்ளுமாறு கூடுவது, பின்பு பிரிந்து தாங்க முடியாத துன்பத்தைத் தரப் போகின்ற குறிப்பை உடையதாகத் தெரிகிறது.

### அறிந்த வளையல்

எமக்கு வரும் துன்பங்களை எம்மை விட நாம் அன்பாக வளர்க்கும் பிராணிகள் கண்டு கொள்ளும் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதே போல அவர் என்னைப் பிரிந்து செல்லப் போகின்றார் என்பதை எனது அங்கங்கள் எனக்கு உணர்த்தி விடும். இரண்டு மூன்று தினங்களாக எனது வலதுகண் துடித்துக் கொண்டே இருந்தது. அதைப் பற்றி நான் அம்மாவிடம் கேட்டேன்'' பெண்களுக்கு வலது கண்களும் ஆண்களுக்கு இடது கண்ணும் துடிப்பது கூடாது என்று சொன்னா. உனக்கு ஏதோ தீமை வரப் போகிறது அவதானமாக இரு. இரவில் இப்பொழுது நீ நேரம் செல்ல வருகிறாய். உன்னை நோட்ட மிடுபவர்கள் தான் உனது ஆபரணங்களைக் கவர்ந்தாலும் கவர்ந்து விடுவார்கள். சமையலறையிலும் அவதானமாக இரு'' என்று சொன்னா. நான் பயந்து விட்டேன். அதன் பின் மாலை நேரங்களில் வெளியே செல்லச் பயமாக இருந்தது. சமையலறையிலும் பயத்துடன் தான் செயற்பட்டேன். கண் துடிப்பது நிற்கவில்லை; ''சில சமயம் அவருக்கேதாவது ஆபத்தென்றாலும் உனக்கு அறிவுறுத்த உனது கண் துடிக்கும். அவரையும் எச்சரிக்கையாக இருக்கச் சொல்லு'' எமக்கு வரும் தீமைகளை குறிப்பால் அறிவுறுத்தி எம்மை எச்சரிக்கை செய்வன தான் சகுனங்கள். சகுனங்களைப் பொய்யெனக் கருதாதே. வலது கண் எனக்குத் துடிக்கின்ற காலங்களில் நான் பெரும் இடர்களை அனுபவித்துள்ளேன். ஒரு முறை ஒருவாரகாலமாக எனக்கு வலது கண் துடித்தது. அப்படித் துடித்த போது தான் ஆதவன் என்னை ஏசினார். எனது சகோதரன் ஒருவன் வெளிநாட்டில் விபத்துக்குள்ளானான். அப்பொழுது எனது வலதுகண் துடித்தது. சென்ற வாரம் எனது வலது கண் துடித்த போது நான் பயந்து விட்டேன். நான் பயந்த மாதிரி அப்பாவுக்கு நெஞ்சுவலி வந்து விட்டது. எனவே, அதை அலட்சியம் செய்யாதே'' என்றாள் வளர்மதி எனக்குப் பயமாக இருக்குதடி'' என்றாள் அர்ச்சகா.

''பயப்படுவதால் வரும் தீமைகளில் இருந்து தப்பிவிட முடியாது. அவதானமும் மனத்தைரியமும் தான் இப்படியான நேரங்களில் தேவை. அவற்றை அளவுக்கதிகமாக எண்ணிப் பலவீனப்படாதே. சகுனங்கள் மூலம் கடவுள் வரும் துன்பங்களைப் பற்றிய குறிப்பை எமக்கு அறிவுறுத்துகிறார். அவரைத் தொழுவதால் எல்லாத் துன்பங்களும் பறந்து விடும். மகா கணபதியை நம்பு. எனக்கு அனுக்கிரகம்

செய்தது போல உனக்கும் செய்வார். மகா கணபதி ஆலயக் குருக்களிடம் சென்று இருவரின் பெயரையும் நட்சத்திரத்தையும் கூறி அர்ச்சனை செய். எல்லாம் சரி வரும்'' என்றாள் வித்தியா.

''நேற்று மாலை அவரைச் சந்தித்தனான். கோயிலில் இருந்து வீடு வரை வந்தவர். அவரைக் கண்டதும் பொங்கிப் பூரிக்கும் எனது மனம் நேற்று மகிழ்ச்சியடையவில்லை. துவிச்சக்கர வண்டியின் முன் பகுதியில் ஏறி அமர்ந்திருந்தேன். எனது முதுகு அவரது நெஞ்சில் சாய்ந்திருந்தது. எனது கைத் தசைகள் அவருடைய கைத் தசைகளுடன் ஒட்டப்பட்டிருந்தன போலச் சேர்ந்திருந்தன. எனினும் முன்னைய குளிர்ச்சியை என்னால் அனுபவிக்க முடியவில்லை. கடற்கரையில் அவர் உடுத்தியிருக்கும் காற்சட்டைத் துணிபட்டாலே எனது உடல் குளிர்ந்து சிலிர்க்கும். ஏனோ தெரியவில்லை அன்று மரக்கட்டையைப் போல எனது உடல் இருந்தது. எனது அன்புக் காதலர் என்னை விட்டுப் பிரியப் போகிறார் என்பதை என்ன விட என் அங்கங்களுக்குத் தெரிந்து விட்ட போலத் தெரிகிறது. துவிச்சக்கர வண்டியில் அவரோடு ஒட்டியிருக்கும் போது எனது கைவளையல்கள் கழன்று விட்டன. இது துர்ச்சகுணம் என்று நான் நினைக்கிறேன்'' விம்மினாள் அர்ச்சகா.

''அப்படியல்ல மனமொத்த காதலரின் இதயத்தில் உருவாகும் எண்ணங்களை அறிந்து கொள்ளும் சக்தி காதலியின் உணர்வுகளுக்கு இருக்கு அதே போலக் காதலியின் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் சக்தி காதலனுடைய உணர்வுகளுக்கும் உண்டு. இதைத் தான் தெய்வீகத் தொடர்பு என்று இலக்கியங்களில் கூறுகிறார்கள்'' என்று வித்தியா கூறும் போது அர்ச்சகா சிரித்தாள்; ''கஜேந்திரனோடு பழகியதால் உனக்கும் இலக்கிய அறிவு வந்து விட்டது'' என்றாள்.

**1277. தண்அம் துறைவன் தணந்தமை நம்மினும்**
**முன்னம் உணர்ந்த வளை.**

குளிர்மையான தன்மையை எனக்குத் தரும் காதலன் என்னை விட்டுப் பிரிய எண்ணியதை, எனக்கு முன்பு என் கைவளையல்கள் அறிந்து என் கையை விட்டுக் கழன்று விட்டன.

### ஏழுநாள் போல்

''மற்றைய பிரிவுகளை இயற்கையானது என்கின்றோம். ஆனால் காதலரின் பிரிவை நாம் செய்த பாவத்தின் சம்பளம் என்கிறோம். மற்றைய பிரிவுகளுக்கு எம்மால் ஆறுதல் சொல்ல முடியும். காதலரின் பிரிவால் துயருற்று வாடும் பெண்களுக்குச் சமாதானம் கூற முடியாது. அத்தகைய பிரிவு அது. எனவே நீ மனதைச் சமாதானப் படுத்திக் கொள். வளர்மதி கூறியது போலப் பிரிவால் வாட்ட முற்று மனம் அழிந்து விட்டால் பின்பு அதை முன்னைய நிலைக்குக் கொண்டு வர முடியாது'' என்றாள் வித்தியா.

''கமலேஸ் மாமிக்கு உன்மீது இலேசாகச் சந்தேகமிருக்கிறது போலத் தெரிகிறது. அவா நேற்றுச் சொன்னா; ''மாதுமை, இப்போது முன்பு போல அர்ச்சகா இல்லை. நேற்று முழுவதும் அறைக்குள் அடைபட்டுக் கிடந்தாள். முன்பு போலக் கலகலப்பாகவும் இல்லை. கொழும்பில் நீங்கள் இருவரும் சேர்ந்து செய்யும் அட்டகாசங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. இப்போது ஆடி அடங்கி விட்டவளைப் போலத் தெரிகிறாள். கொழும்பால் வந்தவள் இந்த ஊரில் சிநேகிதங்கள் இல்லாமையால் சுறுசுறுப்பாக இல்லாமல் இருக்கிறாள் என்று நினைத்தேன். ஆனால் நீ வந்த பின்பும் அப்படித் தானே இருக்கிறாள். அவளது முகத்தை எந்த நேரமும் ஒருவித கலவர உணர்வு ஆட்கொண்டிருப்பதைப் போல உள்ளது. உனக்கு அப்படித் தெரிகிறதா?'' என்று கேட்டா. நான் சற்றுத் தடுமாறிப் போனேன். இருந்தும் சமாளித்துக் கொண்டு; ''இல்லை மாமி, அவள் முன்பு உள்ள மாதிரித்தான் இருக்கிறாள். எனக்கென்றால் வேறுபாடு தெரியவில்லை'' என்றேன். கொஞ்ச நேரம் யோசித்து விட்டுச் சொன்னார்; ''எனக்கென்றால் அவளில் ஒரு மாற்றம் தெரிகிறது. இதைப்பற்றி உனது அம்மாவோடு கதைத்தேன். புனிதமும் அவளைக் கவனித்திருக்கிறாள்; ''எனக்கும் அர்ச்சகா முன்பு போலக் கலகலப்பாக இல்லை என்று தான் தோன்றுகிறது. கன்னிப் பெண்களைப் பொறுத்த மட்டில் பாடசாலைக் காரியத்தில் குறும்புத்தனங்களும் விளையாட்டும் இருக்கும். பாடசாலையை விட்டு விட்டால் பொறுப்பு வந்து விடும். அத்துடன் கொழும்பில் பல சிநேகிதிகளுடன் திரிந்தவள். இங்கு யாருமில்லாததால் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கிறாள். மாதுமையின் விஷயம் வேறு அவளைத் தினமும் விபுலன் தொலைபேசியில் அழைப்பார். அந்த நினைவுகளுடனே அவள் இருப்பள். அதனால் தான் அர்ச்சகா அப்படியிருக்கிறாள்'' என்றாவாம். அதைக் கமலேஸ் மாமி ஒப்புக் கொண்டிருக்கிறா'' என்று கூறி விட்டுச் சிரித்தாள் மாதுமை.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டாள் வித்தியா.

‘‘பிரச்சினைகள் ஆரம்பமாவதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தத் தொடங்கி விட்டாய் இது கலியாணப் பேச்சிலை தான் போய் முடியும் ஏனென்றால் அம்மா சொன்னவவாம்; ‘‘மாதுமைக்கும் திருமணம் நிட்சயிக்கப்பட்டு விட்டது; வித்தியாவுக்கும் அதே நிலை தான். அர்ச்சகாவுக்கு எங்காவது மாப்பிளை பாருங்கோ; உள்ளது ஒரே ஒரு பிள்ளை காசு, நகை, நட்டு, வீடுவளவெல்லாம் இருக்குத்தானே. பிறகேன் யோசிக்கிறியள்’’ என்றாவாம். மாமி; ‘‘எங்காவது பார்க்கத் தான் வேண்டும். இப்ப தொடங்கினால் தான் இரண்டு மூன்று வருடங்களுக்குள் அவளது திருமணத்தை முடிக்கலாம்’’ என்றாவாம். அத்துடன் கொழும்பில் உள்ள சிவசுப்பிரமணியம் மாஸ்ரரின் மகன் ரமணனைக் கேட்டுப் பார்க்கும் படி ஆலோசனையும் கூறினாவாம்’’ என்றாள் மாதுமை.

‘‘அப்ப பூகம்பம் வெடிக்கப் போகுதென்று சொல்லு’’ என்று கூறிவிட்டுச் சிரித்தாள் வித்தியா.

‘‘பூகம்பம் புஷ்வாணமாகிவிடும். எனது உடம்பைப் பார். அவர் நேற்றுத் தான் என்னை விட்டுப் பிரிந்து சென்றார். என்னைப் பார்ப்பவர்கள் அவர். என்னை விட்டுப் பிரிந்து சென்று பல நாட்கள் ஆகிவிட்டன. என்று சொல்லுமளவிற்கு எனது உடல் மெலிந்து பசலை நிறமடைந்து விட்டது. அதனால் தான் நேற்றுக் கண்ட அம்மாவும் மாமியும் எனக்கு என்னவோ ஏதோவென்று பயப்படுகிறார்கள்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘கவனம்; மிகக் கவனம்; அகப்படப் போகிறாய்; அவதானமாக இரு’’ என்றாள் மாதுமை.

‘‘உங்களைப் போல நான் கோளையல்ல. அவர் சூரர் எனக்கேதாவது ஒன்றென்றால் என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்று விடுவார். அதனால் நான் எதற்கும் பயப்பட மாட்டேன்’’ என்றாள் அர்ச்சகா. அவளின் குரல் உறுதியாக ஒலித்தது.

**1278. நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்**
**எழுநாளேம் மேனி பசந்து.**

எனது காதலர் நேற்றுத் தான் என்னை விட்டுப் பிரிந்து சென்றார்; ஆனால் எனது அழகிய மேனி பசலை நிறமடைந்து ஏழு நாட்கள் ஆகி விட்டன போல் இருக்கிறது.

### உடன் போக்குக் குறிப்பு

கஜேந்திரனைத் தேடி நகுலன் வந்தான்; ‘‘கஜேந்திரா நான் தொழில் விஷயமாக நாளைக்கு கொழும்புக்குச் செல்லத் தீர்மானித்திருக்கிறேன். கொழும்பில் தான் எனக்கு வேலை கிடைக்கும் போலத் தோன்றுகிறது. நல்ல வேலை; கைநிறையச் சம்பளம் கொழும்பில் தான் இருக்க வேண்டும்; கொழும்புக்குச் சென்று வருமளவும் அர்ச்சகாவைப் பிரிந்திருப்பது கஷ்டமாக இருக்கிறது. வித்தியாவிற்கு யாவற்றையும் எடுத்துச் சொல்லி அர்ச்சகாவிற்கு ஆறுதல் கூறச் சொல்லு’’ என்று கலங்கினான்.

‘‘என்னடா... நீ ஆம்பிளையே ...ஒரு மல்யுத்த வீரன் பெண்களைப் போல கலங்கியழுதால் ....’’ கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது நகுலன் குறுக்கிட்டான்; ‘‘மாவீரனுக்கும் பிரிவுத்துன்பம் இருக்கத்தான் செய்யும். பாறைக்குள்ளேயும் நீர்க் கசிவு இருக்கிறது. பிரிவை வீரனாலல்ல கடவுள்களால்க் கூடத் தாங்க முடியாதென்று இதிகாச புராணங்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன. சீதையைப் பிரித்த இராமன் பட்ட துன்பம் உனக்குத் தெரியாததல்ல. அப்படியிருக்க என்னை நீ கவலைப்படுவதாகக் கூறுவது....’’ விம்மினான்.

வீரர்கள் துன்பத்தைத் தாங்கிக் கொள்வார்களே தவிர வாய்விட்டு அழமாட்டார்கள். நீ சொல்வது போலப் பாறைக்குள் இருக்கும் நீர்க்கசிவை உணர்ந்து கொள்ளலாமே தவிர வெளிப்படையாகக் காண முடியாது. அதைப் போல உறுதியானவர்கள் பிரிவால் வரும் துன்பத்தை வெளிக்காட்ட மாட்டார்கள். பிரிவு துன்பம் தான். ஆனால் அந்தப் பிரிவு உங்கள் இருவரையும் சேர்த்து வைக்கப் போகிறது’’ என்றான் கஜேந்திரன்.

‘‘நான் அவளை அழைத்துச் சென்று விடுவேன். ஆனால் தெரியாத இடத்தில் கஷ்டப்பட வேண்டும் என்பதற்காகத் தான் விட்டு விட்டுச் செல்கிறேன். நேற்று கோயிலில் அவளைச் சந்தித்தேன். கதைக்க முடியவில்லை. அவளுக்கு அருகே சென்று சுவாமியிடம் வேண்டுதல் செய்வது போல நான் கொழும்புக்குச் செல்லும் செய்தியைச் சொன்னேன். அவள் தடுமாறிப் போனாள். தாயார் அருகில் நின்றமையால் அவளால் எதுவும் பேச முடியவில்லை. துக்கப்பட்டுக் கண்ணீர் வடித்தாள். தனது வளையல்களைத் திருகிக் கொண்டு நின்றாள். கழற்றிக் கழற்றிப் போட்டாள். மெலிந்த தன் தோளை தனது கையால் தடவினாள். அடிக்கடி தோளை உயர்த்தினாள். தனது காலால் நெடுங்கோடுகளைக்

கீறினாள். அதிலிருந்து தானும் என்னுடன் கொழும்புக்கு வரப் போவதாகக் குறிப்பால் அறிவுறுத்தினாள். அவளைப் பார்க்காது செல்ல என்னால் முடியவில்லை. அவளை நான் பார்த்துக் கதைத்து விட்டுச் செல்ல வேண்டும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தா'' என்றான் நகுலன்.

''நான் நேற்றுத்தான் வித்தியாவின் வீட்டுக்குச் சென்று பலமணி நேரம் உரையாடி விட்டு வந்தேன். இன்று எப்படிப் போவது அங்கு சென்றால் வித்தியாவின் தாயார் என்னைக் குறைவாக மதிப்பிட்டு விடுவார் எனப்பயப்படுகிறேன் என்றான் கஜேந்திரன்.

''நீ நேர காலம் தெரியாமல் கதைக்கிறாய். நான் போனால் வர மூன்று மாதங்களாவது செல்லும். செல்லு முன் எனது அன்புக்குரியவளைக் கண்டு ஒரு கதையென்றாலும் கதைத்து விடைபெற வேண்டும். இல்லாவிட்டால் நான் அங்கு சென்று நிம்மதியாக இருக்க முடியாது. வித்தியாவின் தாயார் உன்னைத் தனது மகளுக்கு மாப்பிளையாக எடுப்பதாகத் தீர்மானித்து விட்டார். பிறகேன் தயங்குகிறாய்'' என்று கேட்டான் நகுலன்.

'' சுய கௌரவம் என்று ஒன்று இருக்கிறது. தினமும் நான் அங்கு சென்றால் என்னைப் பலவீனமானவன் என்று நினைத்து விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது. நீ கடிதம் எழுதித்தா நான் கொண்டு சென்று கொடுக்கிறேன். இல்லாவிட்டால் கொழும்புக்குச் சென்றதும் உனது தொலைபேசி இலக்கத்தைத் தா அர்ச்சகாவுக்குக் கொடுத்து உன்னுடன் பேசச் சொல்கிறேன்'' என்றான் கஜேந்திரன்.

''அது சரிப்பட்டு வராது. நீ இப்பவே சென்று அர்ச்சகாவுக்காக நான் காத்திருப்பதாகச் சொல்லு அவள் பறந்து வருவாள். அவளை நான் பார்ப்பதற்குக் கொண்டுள்ள ஆர்வத்தைவிட அர்ச்சகா என்னைப் பார்ப்பதற்கு ஆவலாக இருப்பாள்'' என்றான் நகுலன்.

**1279.தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**
**அஃது ஆண்டு அவள்செய்தது.**

எனது காதலி தனது வளையல்களையும், தனது மெலிந்த தோள்களையும், தனது கால்களையும் நோக்கி, செய்த குறிப்புக்கள் என்னுடன் வருவதை உணர்த்து வனவாய் இருந்தன.

### பெண்மையின் பெருமை

''என்னடா நான் உனக்கு எனது இறுதி நேர ஆசையைக் கூறிக் கொண்டிருக்கிறேன். நீ செயலற்ற கல்லுப் போல இருக்கிறாய். எழும்பிப் போடா'' என்றான் நகுலன்.

கஜேந்திரன் நகுலனின் முகத்தைப் பார்த்தான். பிரியப் போகிறோம். என்ற துயரம் அவனது முகத்தில் அளவுக்கதிகமாகப் பரவிக் கிடந்தது. மழிக்கப்படாத முகம் விகாரமாகத் தெரிந்தது. கண்கள் கலங்கிக் கண்ணீர் குதித்தோடுவதற்குத் தயாராக கீழ் இமைக்குள் நிரம்பி நின்றது.

''நான் எவ்வளவு காலம் துன்பப்பட்டனான். அதுவும் எனது காதல் பிரச்சினை வித்தியாவின் தாயாருக்குத் தெரிந்தமையால் அவர் வித்தியாவை எவ்வளவு சித்திரவதை செய்தார் என்று உனக்குத் தெரியுமா...? அவள் நீரையும் அருந்தாமல் உணவும் உண்ணாமல் தவஞ் செய்து நெருப்பிலிட்ட கொழுப்பைப் போல உருகிவள். துன்பத்தைத் தாங்க முடியாது அல்லற்பட்டவள். அதை அர்ச்சகா வந்து சொன்னவுடன் நான் பட்ட துன்பம் எவ்வளவு. அப்படி வித்தியா தாங்க முடியாத துன்பத்தில் இருந்த நிலையில் இப்போது அர்ச்சகா இல்லை. அதனால் நீ கவலைப்படாது எங்கும் செல்லலாம். அப்படியானதொரு நிலையில் அர்ச்சகா இருந்தால் தான் நீ கவலைப்படல் வேண்டும். ஏனென்றால் நீ கொழும்புக்குச் சென்ற பின்பு அவளுக்குத் திருமணம் நிட்சயமானால் அவளால் என்ன செய்ய முடியும். அப்படி ஒரு நிலை அர்ச்சகாவுக்கு ஏற்பட்டால் வித்தியாவிடம் சொல்லி நான் அவளை அழைத்து வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான் கஜேந்திரன்.

''எனது துயரத்தைப் பார்க்க உனக்குச் சிரிப்பாக இருக்கிறது'' கவலைப்பட்டான் நகுலன்.

''நகுலா, நீ போ. நான் உனது விஷயம் எல்லாவற்றையும் அர்ச்சகாவுக்குச் சொல்கிறேன். மாதுமையும் தாயும் தகப்பனும் இரண்டொரு நாளில் கொழும்புக்குச் செல்லப் போவதாகக் கூறுகிறார்கள். நான் அர்ச்சகாவுக்குச் சொல்லி அவளை மாதுமையுடன் கொழும்புக்கு அனுப்பி வைக்கிறேன். பின் மாதுமையைச் சந்தித்து அர்ச்சகாவுடன் கதை'' என்றான் கஜேந்திரன்.

நகுலனுக்கு அதைக் கேட்கக் கோபம் வந்தது; “ நான் பால் கேட்க நீ வெண்ணெய் தருகிறாய். அர்ச்சகா கொழும்புக்கு வரத்தேவையில்லை. நீ ஒரு முறை சென்று வித்தியாவுக்குச் சொல்லி இன்று மாலை அவளை வந்து சந்திக்கச் சொல்” என்றான் நகுலன்.

கஜேந்திரன் எதுவும் பேசாமல் இருந்தான். அவனுக்கு வித்தியாவின் வீட்டுக்குச் செல்லத் தயக்கமாக இருந்தது. திருமணம் செய்வதென்று தீர்மானித்தாலும் தினமும் சென்றால் அவர்கள் தரக் குறைவாக நினைப்பார்கள் என்று நினைத்தான். வித்தியாவும் ஒரு மாதிரியானவள்; “அவர் அவசரப்படுகிறார் என்பதற்காக நாம் அவமானப் பட முடியாது. உங்களுக்கும் கொஞ்சம் மூளை இருக்க வேண்டும். நாங்கள் துயரத்துடன் எத்தனை நாட்கள் பிரிந்திருந்தனாங்கள். பிரிவு என்பது காதலரிடையே அடிக்கடி நிகழும் ஒரு சாதாரண நிகழ்வு அதற்காக அலட்டிக் கொள்ள முடியாதென்று உங்களுக்குத் தெரியாதா?” என்பாள். கஜேந்திரனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது.

“டேய், அர்ச்சகா நேற்று என்னைக் கோயிலில் சந்தித் போது தன்னையும் கொழும்புக்கு அழைத்துச் செல்லும்படி குறிப்பால் அறிவுறுத்தினாள். அவள் தனது கால் பெரு விரலால் ஒரு கோட்டை நிலத்தில் கீறி அதன் அருகே சமாந்தரமாக இன்னொரு கோட்டையும் கீறினாள் பின் அழித்து விட்டுக் கீறிய கோட்டின் மேல் மேலும் ஒரு கோடு கீறினாள். அப்படி அவள் என்னுடன் வருவதாகக் குறிப்பால் அறிவுறுத்தும் போது நான் வாழாதிருக்கலாமா...? அத்துடன் அர்ச்சகா தனது கண்களால் தனது காதலின் தீவிரத்தைத் தெரிவித்துத் தன்னைப் பிரியாது இருக்குமாறு இரந்தாள். அப்படி இரந்தவளைக் காணாமல் போவதை நினைத்துப் பார்க்கக் கூட என்னால் முடியவில்லை” நகுலனின் குரல் தளர்ந்து ஒலித்தது.

“டேய், பெண்கள் குறிப்பால் அறிவுறுத்துவது காதலில் பெரிய விஷயமல்ல. அவர்கள் கண்களினால் காமநோயைத் தெரிவித்துப் பிரியாமல் இருக்குமாறு இரத்தல் என்பது பெண்தன்மைக்கு மேலும் மெருகூட்டுவதைப் போன்றது. அதனால் பெண்மை பெருமை பெறும்” கதைத்துக் கொண்டிருக்கும் கஜேந்திரனை ஆத்திரத்துடன் பார்த்தான் நகுலன். அவனுக்குக் கோபம் அதிகரித்தது.

**1280. பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப கண்ணினால்**
**காமநோய் சொல்லி இரவு.**

காதலி தன் கண்களால் காம நோயைத் தெரிவித்துத் தன்னை விட்டுப் பிரியாமல் இருக்குமாறு இரத்தல, பெண்மையின் பெருமை என்று கூறுவர்.

### கள்ளிற்கு இல்லை

நகுலன் கஜேந்திரனுக்குச் சொன்னான்; “நண்பா தயவு செய்து நான் சொல்வதைக் கேள். ஒரு காதலனுக்கு காதலியைக் காண்பதைத் தவிர வேறு தொழில் இவ் உலகில் இல்லை. எத்தனையாயிரம் கவலைகள் மனத்தை அரித்தாலும் அவளைக் கண்டவுடன் மனம் கவலைகள் யாவற்றையும் மறந்து அவளுடன் ஒன்றித்து விடுகிறது. அவளுடன் கதைக்க வேண்டும் கட்டியணைக்க வேண்டு மென்றெல்லாம் எண்ணுவதில்லை; அவளைப் பார்த்தாலே போதும் என்று தான் அவசரமான வேளைகளில் ஒரு காதலன் நினைப்பான். மனிதன் ஒரு செயலைச் செய்யத் தொடங்கு முன் கடவுளை வணங்குதல் வேண்டும் என்று நினைப்பதைப் போல காதலியின் அழகு முகத்தைக் காண வேண்டு மென்று தான் காதலன் விரும்புவான். அவளைக் காணாவிட்டால் தான் தொடங்கிய செயல் நல்ல முறையில் முடிவடைய மாட்டாது என்று தான் நினைப்பான் நினைத்த அளவில் களிப்படைதலும், பார்த்த அளவிலே மகிழ்ச்சியடைவதும் கள்ளிற்கு இல்லை, காமத்திற்கு உண்டு என்பதை நீ அறிவாய். தயவு செய்து எனக்காக உனது மானத்தை விட்டுக் கொடுத்து வித்தியாவிடம் செல்” என்றான் நகுலன்.

நகுலனின் தூண்டுதலால் எழுந்த கஜேந்திரனுக்கு வித்தியாவின் நினைப்பு வந்தது; “இன்று நான் அங்கு செல்வதை அவள் எதிர் பார்க்க மாட்டாள். என்னைக் கண்டவுடன் குதூகலிப்பாள்” என்று நினைத்தான். அந்த நினைவு அவனுக்கு இனித்தது. மனம் குதூகலிக்க வித்தியாவின் அழகான் முகம் அவனது மனத்துள்த் தோன்றிச் சிரித்தது. வித்தியா எவ்வளவு மென்மையானவள். எனக்காக எவ்வளவு துன்பங்களைத் தாங்கினாள். அவளிடம் இருக்கின்ற மனஉறுதி தான் என்னை இயக்குகிறது. பல முறை வாழ்க்கையில் ஏற்பட்ட எனது தோல்விகளை அவள் தானே சீர் செய்தாள்” உணர்வுகள் அவளின் நினைவால் களிப்படைந்தன. வீட்டு வாசலில் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே சென்றான். வித்தியாவின் நாய் குரைத்தது. கண்மணி வெளியே வந்தாள்; “தம்பியா? வாரும் என்றாள்.

கஜேந்திரனுக்கு அவரைப் பார்க்க ஒரு மாதிரியாக இருந்தது. தான் வருவதைத் தவறாக நினைத்து விடுவாரோ எனப்பயந்தான்.

“நான் உம்மைச் சந்திக்க வேண்டுமென்று நினைத்தனான். வந்து விட்டீர்” என்றவள் சிறிது நேரம் தாமதித்து விட்டுச் சொன்னாள்; “உம்முடைய சாதகத்தை ஒரு முறை கொண்டு வந்து தாரும். குருக்களைக் கொண்டு பூக்கட்டிப் பார்த்தனான். நினைத்த பூத்தான் வந்தது. குருக்கள் செய்யலாமென்று சொன்னவர். இருந்தாலும் ஒரு முறை உமது சாதகத்தைப் பார்ப்பம். பொருத்தம் பார்க்கா விட்டாலும் உமது எதிர் காலத்தைப் பற்றி நான் அறிந்து கொள்ளத் தானே வேண்டும். வித்தியாவுக்கு வாய்க்கும் கணவன் தொழிலில் உச்சக் கட்டத்தில் இருப்பன் என்று குருக்கள் வித்தியாவின் சாதகத்தைப் பார்த்துச் சொன்னவர். நீர் கணிதப்பட்டதாரி தானே” என்று கேட்டாள் கண்மணி.

பதில் சொல்லாது தலையை ஆட்டி விட்டு நிமிர்ந்த கஜேந்திரனின் முன் வித்தியா நின்றாள். அன்று அவளது தோற்றத்தில் ஒரு வேறுபாடு தெரிந்தது. வழமையாக இரட்டைப் பின்னல் பின்னும் அவள் அன்று கொண்டை கட்டியிருந்தாள். அவளைக் கொண்டையுடன் இது வரை பார்க்காத கஜேந்திரன் ஆவலோடு முகத்தைப் பார்த்தான்.

“வாருங்கோ” என்ற வித்தியா முன்னே செல்ல கஜேந்த்திரன் அவளின் பின்னால் சென்றான். நளினமாக அசையும் அவளின் மெல்லிடை அவனுக்கு மயக்கத்தைக் கொடுத்தது. நாற்காலியில் அமர்ந்து தனக்கெதிரே நிற்கும் வித்தியாவைப் பார்த்தான். அவன் அன்று முற்றிலும் வேறுபட்டவளாகத் தோன்றினாள். நெற்றியில் பெரியதொரு கறுப்புப் பொட்டு; அதன் கீழ் சிறிய புள்ளியாக இன்னொரு பொட்டு கழுத்தோடு ஒட்டிய நூலைப் போன்ற ஒரு சங்கிலி. அதில் பிள்ளையார் தொங்கிக் கொண்டிருந்தார். அது கஜேந்திரனுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

“ஏன் சிரிக்கிறியள்?”

மீண்டும் கஜேந்திரன் சிரித்தான்; “உமது கழுத்தில் கஜேந்திரன் தொங்குவதை நினைத்தன் சிரிப்பு வந்து விட்டது” என்றான்.

“கஜேந்திரனோ...?” என்ற படி கழுத்தைத் தடவிய வித்தியா; “ஓ.. பிள்ளையாரைச் சொல்லுறியளா...?” என்று கேட்டாள்.

“அம்மா அங்கஜனை விரும்பினவா நான் கஜேந்திரனை விரும்பினனான். இருவருடைய விருப்பத்தையும் பூர்த்தி செய்ய மகா கணபதி நினைத்து விட்டார் போலும்” என்று சிரித்தாள் வித்தியா.

**1281. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு.**

நினைத்த அளவிலே களிப்பு அடைவதும், பார்த்த அளவிலே மகிழ்ச்சியடைவதும் ஆகிய இரு தன்மைகளும் கள்ளுக்கு இல்லை; காமத்திற்கு உண்டு.

### பிணங்கக் கூடாது

“இன்று நீர் மிகவும் அழகாக இருக்கிறீர். இவ்வளவு நாளும் நான் உம்மைக் கொண்டையுடன் பார்த்ததில்லை. தலையை விரித்து விட்டு தேவமகளிர் போல வருவீர். இரட்டைப் பின்னலுடன் தேவதை போல வருவீர்; ஒற்றைப் பின்னலுடன் பல்லவர் காலப் பதுமை போல வருவீர். இன்று பெரும் தரிசனம் கிடைத்துள்ளது கொண்டை” என்று விட்டு தனது கையைத் தூக்கி மேலே காட்டி விட்டு அசத்தல்” என்றான்.

வித்தியா நாணிக்கோணினாள். என்றுமில்லாதவாறு அவளது கன்னங்கள் சிவந்து கொண்டு வந்தன. வலது கை அவளது கன்னத்தை மெதுவாகத் தடவி விட்டுக் கழுத்துப் பகுதியை நோக்கி இறங்கியது.

“நேற்று வந்து மூன்று மணிநேரம் இருந்து எல்லாவற்றையும் கதைத்து விட்டுச் சென்றீர்கள். அதற்குள் அதை மறந்து ஏன் இன்று வந்தீர்கள்” சற்றுக் கோபமாகக் கேட்டாள் வித்தியா.

“ஏன் வந்திருக்கிறேன் என்று புரியவில்லையா? நேற்றுக் கதைத்தது சிரித்ததெல்லாம் நேற்றோடு முடிந்து விட்டது” என்று கஜேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போது வித்தியா குறுக்கிட்டாள்; “அம்மா ஒரு மாதிரியானவா என்று நான் பல தடவைகள் உங்களுக்குக் கூறியிருக்கிறேன். மாமாவின் மகன் வேறு பெண்ணைக் காதலித்து விட்டான் என்ற காரணத்தால் தான் வேறு வழியின்றி உங்களைத் தனது மருமகனாக ஏற்றவா. அவாவுக்கு சாத்திர சம்பிரதாயங்களிலும் மத அனுட்டானங்களிலும் அதீத நம்பிக்கை உண்டு. அதை அவா உயிரிலும் மேலாகக் கருதுவா. எனவே

அவா உங்களுக்குப் புத்திமதிகளும் ஆலோசனைகளும் வழங்கு முன்பு அதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. சில சமயம் அவாவினது புத்திமதிகள் உங்களுக்குப் பிடிக்காதனவாக இருக்கலாம். பிறகு மாமிக்கும் மருமகனுக்கு மிடையில் தகராறு வந்து விடும். பல நாட்கள் உங்களோடு பழகியமையால் தான் இதைச் சொல்கிறேன். ஆரம்பத்தில் உண்டாகும் மனப்பதிவுகள் தான் ஒருவரைப் பற்றிய நல்லது கெட்டதைத் தீர்மானிக்கும்'' என்றாள் வித்தியா.

''நான் அப்படித்தான் நினைத்தனான்'' கஜேந்திரனைக் கதைக்க விடாமல் கதைத்தாள் வித்தியா; ''எனக்கு உங்களைப் பற்றித் தெரியும். கண்ணியவான்; மிகவும் நேர்மையானவர்; பிறருக்கு உதவுபவர்; தேவையில்லாத காரியங்களில் ஈடுபடாதவர்'' வித்தியாவின் வார்த்தைகள் கஜேந்திரனது மனதைக் குளிரப் பண்ணின. இதெல்லாம் பொதுவானவை. ஆனால் உம்மை நினைத்தால் இதெல்லாம் எனது மனதை விட்டுப் பறந்து விடும். கண்ணியம், நேர்மை, பிறருக்கு உதவல் போன்றன வெல்லாம் எனது மனதில் இராது. வித்தியாவைப் பார்க்க வேண்டும்; பேசவேண்டும்; அவள் பேசினாலும் அவளைத் தொட்டுப் பார்க்க வேண்டும். என்ற நினைவுகள் வந்து விடும் என்பீர்கள் இது எனக்குத் தெரியாதா?'' சீறினாள்.

கஜேந்திரனது மகிழ்வு சற்றுக் குறைத்தது ''நீர் சொல்வது உண்மை தான் ஆனால் நான் ஓர் அவசியமான விஷயமாக வந்தனான். நகுலன் நாளைக்குக் கொழும்புக்குச் செல்கிறான். அதற்கு முன் அர்ச்சகாவைக் காணவேண்டு மென்று துடிக்கிறான். தயவு செய்து அதை அவளுக்குச் சொல்லி இன்று மாலை அவளைக் கடற்கரைக்கு அழைத்து வாரும் என்றான் கஜேந்திரன்.

''அர்ச்சகா நகுலனுடன் செல்லப் போவதாகச் சொல்கிறாள். அந்த நிலையில் அவளை அழைத்து வந்தால் பின் என்னுடன் வரத் தயங்குவாள்'' என்றாள் வித்தியா.

''அவள் வராவிட்டால் நகுலனுடன் செல்லட்டன் எமக்கென்ன? நான் உம்மை அழைத்துச் செல்லப் பல தடைவைகள் இருந்தன. அந்தத் தடைகள் எதுவும் அர்ச்சகாவுக்கு இல்லையே'' என்றான் கஜேந்திரன். வித்தியா எதுவும் சொல்லவில்லை. அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தேங்கி நின்ற மயக்கம் கஜேந்திரனை உலுப்பியது மெல்ல அவளின் அருகே சென்றான். அவனது மனதுள் காதல் தினையளவாகத் தோன்றி கிடுகிடுவென வளர்ந்து பனையளவாகியது. அந்த அளவை வித்தியா அவனது கண்களுக்குள் கண்டாள். அவனது பார்வையின் நோக்கம் அவளுக்குப் புரியு முன் அவள் கஜேந்திரனது கைக்குள் இருந்தாள். அவள் எதுவும் சொல்லாதது கஜேந்திரனுக்கு வாய்ப்பாக இருந்தது. மெல்ல மெல்ல அணைப்பு இறுகிய போது வித்தியா கண்களை மூடினாள்.

**1282. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்.**

காமம் பனையளவாக நிறைய வரும் போது பெண்கள் காதலரோடு திணையளவாகக் கூட ஊடல் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

### முடியவில்லை

வித்தியாவை அணைத்திருந்த கஜேந்திரனின் கைகள் சற்றுத் தளர்ந்தன. வித்தியா தலையை நிமிர்த்திக் கஜேந்திரனைப் பார்த்தாள்; ''நான் வருவது விருப்பமில்லை. என்று சொன்னீர். இப்பொழுது என்னை போவதற்கு விட மாட்டீர். போலத் தெரிகிறது. அம்மா விரும்பினால் நான் இப்பொழுதிருந்தே இங்கேயே தங்கி விடுகிறேன்.'' என்றான் கஜேந்திரன்.

''காதலன் பனையளவு காதல் கொள்ளும் வேளைகளில், காதலி எக்காரணம் கொண்டும் திணையளவு கூடப் பிணக்கக் கூடாது என்று நீங்கள் வாசித்து ரசித்த அகத்திணை நூல்கள் கூறவில்லையா.? நூல்களைப் படிப்பது இரசிப்பதற்காக மட்டுமல்ல செயலில் ஈடுபட்டு ருசிப்பதற்காகவும் தான்''என்றாள் வித்தியா.

''அப்படியா கண்ணே நான் இதுவரை அப்படி நினைக்கவில்லை. இனி தங்களின் சொற்படி நடந்து கொள்வேன்'' என்றான்.

''இன்று மட்டும் தான் இந்த உரிமை. இனி மேல் இந்தப் பக்கம் வரக் கூடாது. அம்மாவாக விரும்பி வரச் சொன்னாலே தவிர இந்தப் திசையைத் திரும்பிக் கூடப் பார்க்கக் கூடாது. நாம் எமது விருப்பத்தைப் பூர்த்தியாக்கி விட்டோம். கைகூடாது என்று நினைத்த காதல் மிகவும் எளிதாகக் கைகூடி எமது பேரவாகைப் பூர்த்தி செய்து விட்டது. அதைப் போல அம்மாவுக்கும் சில ஆசைகள் இருக்கு. முன்பே நான் சொன்னனான் அம்மாவுக்குச் சாத்திர சம்பரதாயங்களில் நம்பிக்கை அதிகமென்று அதனால் நாம் அவாவின் ஆசைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். எனது

மனங்கவர்ந்த காதலர் எனது எண்ணங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்வாரென்று நான் நம்பியிருக்கிறேன். உங்களைப் பார்க்காமல் என்னால் ஒரு கணமும் இருக்க முடியாது. இன்று நீங்கள் இங்கு வந்தது எனக்கு விருப்பமில்லாமல் இருந்தாலும் உங்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமல் விட எனக்கு விருப்பமில்லை. அத்துடன் நீங்கள் நான் சொன்னதற்காக என்னைப் பார்க்க வீட்டிற்கு வரா விட்டாலும் நான் உங்களைப் பார்க்க கடற்கரைக்கு வருவேன். அம்மாவுக்காகப் பொறுத்திருங்கள்'' என்றாள் வித்தியா அவளது கண்கள் கலங்கின.

பதறிப் போனான் கஜேந்திரன்; ''ஐயையோ அழுகிறீரா... அழாதையும் உமது விருப்பத்தை நான் எப்போதாவது பூர்த்தி செய்யாமல் விட்டேனா? என் உயிரே நீர் கலங்குவதைப் பார்த்து எனது இதயம் கலங்குகிறது. அழாதையும். உமது அம்மா வாசலில் வைத்தே எனது சாதகத்தைக் கேட்டவா. அந்தச் சாதகத்தைக் கொண்டு வரும் சாட்டாகக் கூட நான் இங்கு வரமாட்டேன். ஒரு கடதாசியும் பேனாவும் தாரும் எழுதித் தருகிறேன்'' என்றான்.

''நினைவில் வைத்திருக்கிறீர்களா?''

''எனக்கு உமது சாதகமே நினைவில் இருக்கு. தனுராசி; லக்கனத்தில் கிரகமில்லை. இரண்டாம் வீட்டில் குருவும் சந்திரனும் சேர்ந்திருக்கினை; மூன்றாம் வீட்டில் கிரகமில்லை; நான்காம் வீட்டில் புதன் சூரியன் சுக்கிரனும் செவ்வாயும் சேர்ந்து இருக்கிறார்கள். ஐந்தில் இராகு, ஆறு, ஏழு, எட்டாம் வீடுகளில் கிரகம் இல்லை ஒன்பதில் சனி; பத்தில் இல்லை; பதினொன்றில் கேது; பன்னிரண்டில் கிரகமில்லை'' சிரித்தான் கஜேந்திரன்.

வித்தியா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்; ''உமது சாதகத்தைக் கணித்துப் பார்ப்பதற்காக நான் சோதிடம் பயின்றேன். இப்ப என்னால் சோதிடம் சொல்ல முடியும். உமக்கும் எனக்கும் தொண்ணூறு வீதப் பொருத்தமிருக்கு. கட்டாயம் இருவருக்கும் திருமணம் நடைபெறும் என்பதால் தான் நான் அமைதியாக இருந்தேன்...'' கோபத்துடன் குறுக்கிட்டாள் வித்தியா. அதை எனக்குச் முன்பே சொல்லியிருக்கலாம் தானே''.

நான் சோதிடம் கற்பதைச் சொன்னால் நீர் ஏசுவீர். அதனால் உமது சாதகத்தையும் எனது சாதகத்தையும் குருக்களிடம் காட்டினனான் என்று சொன்னனான் தானே''.

''இப்படி எனக்குத் தெரியாமல் என்னென்ன வெல்லாம் மறைத்து வைத்திருக்கிறீர்களோ தெரியாது'' சிணுங்கினாள் வித்தியா.

''இதைத் தவிர வேறு எதுவும் இல்லை. அதுவும் சாடை மாடையாய்ச் சொன்னனான். இலக்கியங்களைப் புரிந்து கொள்ளுமளவிற்கு என்னையும் புரிந்து கொள்ள வேண்டும். கிரகநிலைப்படி நாம் இருவரும் சேர்ந்து வாழ்வோம். எமக்கு மூன்று பிள்ளைகள் பிறப்பார்கள் மூன்றும் ஆண்பிள்ளைகள்'' என்று சொன்னனான்.

''ம் அப்படிச் சொன்னனீங்களே தவிரச் சாத்திரம் கற்பதாகச் சொல்லவில்லை.

''சொன்னனான் இப்போதெல்லாம் நான் இலக்கியப் புத்தகங்களுடன் சோதிட நூல்களையும் வாசித்துப் பார்க்கிறேன். என் மீது அன்பு கொண்டவளின் எதிர்காலத்தை அறிந்து கொள்ள வேண்டு மென்ற ஆசை இப்போது எனது மனதில் துளிர்த்துள்ளது. அதற்காகச் சோதிட நூல்களைத் தேடிச் சென்று கற்கிறேன். என்று நான் சொன்ன போது நீர் என்ன சொன்னனீர் நினைத்துப் பாரும்.''

யோசித்துப் பார்த்தாள். அவளின் நினைவுக்கு அது வந்தது; ''உங்களுக்கு விசர். வீடு கட்ட வேண்டுமானால் மேசன் வேலை கற்பீர்கள் போலத் தெரிகிறது. அதற்கற்கென ஒவ்வொரு தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதை அவர்கள் செய்வார்கள். நீங்கள் படியுங்கோ'' என்று சொன்னது அவளது நினைவுக்கு வந்தது; ''எனது ஆசை அத்தான். எல்லாவற்றிலும் வல்லவர்'' என்றவாறு எழுந்து சென்று அவனை அணைத்தாள். அவனது உதடுகள் ஆசையோடு தனது உறவைத் தேடிச் சென்றன.

**1283. பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்**
**காணாது அமையல கண்.**

என்னை விரும்பாமல் புறக்கணித்துத் தான் விரும்பியவற்றையே எனது கண்கள் செய்தாலும், என் கண்களால் காதலரைக் காணாமல் இருக்க முடிவதில்லை.

## மறக்கும் நெஞ்சு

கஜேந்திரன் எழுதிக் கொடுத்து விட்டுச் சென்ற சாதகத்தை தாயிடம் கொடுத்தாள் வித்தியா; “இது அவருடைய சாதகம் நீங்கள் கேட்டதாகச் சொல்லிக் கொடுக்கச் சொன்னார்”.

கண்மணி மகளை வியப்புடன் பார்த்தாள். அந்தப் பார்வையில்; “அவர் தனது சாதகத்தை எந்நேரமும் கொண்டு திரிபவரா?” என்று கேட்பதைப் போல இருந்தது.

“உங்களது மருமகனும் சாஸ்திரப் பிரியர். குருக்களை விட அவர் அதிகம் கற்றுள்ளார். குருக்களுக்குத் தகப்பனார் சொல்லிக் கொடுத்த அனுபவம் நிறைய உண்டு. இவர் கணித வல்லுனர். கணிப்பு சரியாக இருக்கும்” என்றாள்.

கண்மணி ஆச்சரியத்துடன் மகளைப் பார்த்தாள். அவளது மனதில் கஜேந்திரனது முகம் தோன்றிச் சிரித்தது. நெற்றியில் பளீச்சிடும் வீபூதிக் குறியும், சந்தணப் பொட்டும் அதற்குள் வைத்த குங்குமமும் சுவாலையாகத் தெரிந்தன; “வித்தியா கொடுத்து வைத்தவள். அவளை உயிருக்குயிராக நேசிக்கும் கஜேந்திரன், அங்கஜனை விட உயர்ந்தவன். எனக்கு துன்பஞ் செய்ய மகா கணபதி விரும்ப மாட்டார். தன்னுடைய பெயரைக் கொண்டவனையே எனக்கு மருமகனாக்கி விட்டார்” என்று நினைத்தாள்.

வித்தியா சென்ற பின்பும் கண்மணியின் வியப்பு நீங்கவில்லை. மகா கணபதியை நினைத்துக் கொண்டு அவனது சாதகத்தை விரித்துப் பார்த்தாள். அவளுக்குச் சோதிடம் தெரியும். அவளது தாயின் தகப்பனார் ஊரில் பெயர் பெற்ற சோதிடர். அவரின் செல்லப் பிள்ளையாக அவரின் மடியில் வளர்ந்த அவள் அவரிடம் சோதிடக் கலையைக் கற்றிருந்தாள். அவளின் உதடுகளில் புன்னகை தவழ்ந்தது. நல்ல சாதகம். கஜேந்திரன், குருக்கள் சொன்னது போல உயர்பதவி வகிப்பான். அவனது ஏவல்களைச் செய்யப் பலர் காத்திருப்பா. அவனது கிரக நிலையைப் பார்த்து மிகவும் மகிழ்ந்து போனவள் கண்மணி.

“தேநீர் குடியுங்கோ அம்மா” என்றவாறு தேநீர் கோப்பையை நீட்டினாள் வித்தியா. தாய்க்குத் தேநீர் கொடுக்கும் சாட்டாகச் சென்றால், அவள் கஜேந்திரனது கிரக நிலையைப் பற்றிச் சொல்வாள் என்பது அவளுக்குத் தெரியும்.

“நீ கொடுத்து வைத்தவளம்மா. சாதகம் நல்ல முறையில் பொருந்தியிருக்கு. நீ அவனுக்காகவும் அவன் உனக்காகவும் பிறந்துள்ளது போலச் சாதகம் அமைந்துள்ளது. கணிதத் துறையில் கஜேந்திரன் வல்லவனாக வருவான். அவனுக்கு எந்தக் குறையும் ஏற்படாது. நீ மகாராணி மாதிரி நீ வாழ்வாய். அங்கஜனைச் செய்தால் நீ சொத்துச் சுகங்களோடு வாழ்வாய் என்று நினைத்தேன். அதை விட உச்ச நிலையில் நீ வாழ்வாய் சாஸ்திரம் தெரிந்த நானே இவற்றை யெல்லாம் புரிந்து கொள்ளாமல் உன்னைத் துன்புறுத்தி விடடேன். நீ காதலிக்கிறவனைத் தான் திருமணம் செய்வாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் நீ கஜேந்திரனைக் காதலிப்பாய் என்று நான் நினைக்கவில்லை. குருக்களும்; “உன்னுடைய விருப்பத்தின் படி தான் எல்லாம் நடக்கும் என்றார். நான் தான் வித்தியாசமாக நினைத்து விட்டேன்” என்றாள்.

அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா அங்கு வந்தாள். அர்ச்சகாவை தனது அறைக்கு அழைத்துச் சென்ற வித்தியா சொன்னாள்; “அவர் இப்ப வந்தவர். நாளைக் காலை நகுலன் கொழும்புக்குப் போகிறவராம். உன்னைப் பார்க்காமல் செல்ல முடியவில்லையாம். அதனால் பின்நேரம் கடற்கரைக்கு வரட்டாம்” என்றாள்.

அர்ச்சகாவின் மனதில் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கியது. முழுமையாகச் சிரித்தாள்; “உன்னுடைய பிரச்சினையும் விரைவில் தீர்த்து விடும். மூன்று மாதங்களுக்கு அமைதியாக இரு. அவர் வந்ததும் உங்கள் வீட்டுக்கு வந்து பெண் கேட்கச் சொல்லு” என்றாள் வித்தியா. அர்ச்சகா வித்தியாவைப் பார்த்துச் சிரித்த படி நின்றாள்; “நான் மூன்று மாதங்கள் தவிக்க வேண்டும். நீ கட்டிப் புரள்” என்றாள்.

அர்ச்சகாவின் குரலில் பொறாமையாக இருந்தது;“அம்மாவைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. அதனால் அவரைக் கண்ட படி வரவேண்டாமென்று கோபித்தனான். அவர் சரியென்று சொல்லி விட்டுச் சென்றார். அவர் வந்தது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் பல பிரச்சினைகள் வரும். அம்மா சாஸ்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கையுள்ளவர். நீங்கள் இங்கு வருவதை அம்மா விரும்ப மாட்டா. என்று கூறி அவருடன் ஊடல் கொண்டேன். கதைக்கக் கூடாதென்று நினைத்தேன். ஆனால் எனது நெஞ்சு அதை ஏற்க மறுத்ததால் நானே அவரின் அருகே சென்று கட்டித் தழுவி விட்டேன்:” என்றாள் வித்தியா.

**1284. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து**
**கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு.**

தோழி! நான் அவரோடு ஊடுவதற்காகச் சென்றேன்; ஆனால் என்னுடய நெஞ்சம் நான் சென்ற நோக்கத்தை மறந்து அவரோடு கூடிவதற்காகச் சென்று விட்டது.

## மை தீட்டும் கோல்

‘‘உலகில் அபூர்வமான சம்பவங்கள் எப்போதாவது நடை பெறுகின்றன. ஆனால் காதலர்களிடையே தினமும் பல அபூர்வமான சம்பவங்கள் நடைபெறுவதை நீ உணர்ந்துள்ளாயா..? காதலரிடையே திருப்தி என்பது ஒரு போதும் வந்ததில்லை. அவர் தினமும் என்னைப் பார்க்கும் போதெல்லாம் இன்று உன்னில் கண்ட அழகை நான் முன்னெப்பொழுதும் உன்னிடம் காணவில்லை என்று சொல்கிறார். இது அப்பட்டமான பொய் யென்று அவர் இருக்கும் வரை எனக்குத் தோன்றாது. அவர் சென்ற பின்பு நினைத்துப் பார்த்தால் அவர் என்னை அந்த நேரம் திருப்த்திப்படுத்தத்தான் அப்படிச் சொல்கிறாரோ என்று எண்ணுகிறேன். அந்த நிலை பின் அவரைக் காணும் வரை எனது நெஞ்சை விட்டு அகல்வதில்லை. அவர் இன்று வரட்டும். அளவுக்கதிகமான வர்ணனைகளில் ஈடுபட்டால் இன்று அதை நிறுத்த வேண்டும் என்று நினைப்பேன். அவர் தனது பேச்சால் தான் என்னை அதையும் நினைக்கவிடாமல் செய்கிறார். இது அவர் போன பின்பு தான் எனக்குத் தெரிகிறது. அத்துடன் தான் ஏதாவது குற்றம் செய்தால் அதை மறைக்கப் பல வித்தைகள் செய்கிறார். அதனால் அவரைக் கோபிக்க முடியவில்லை. நேரில் கண்டதும் என் கண்கள் அவரின் காலடியில் சரணடைந்து விடுகின்றன. அவரைச் சில சமயம் சந்தித்தால் வேலைக்களைப்பாலோ அல்லது வேறேதாவது பிரச்சினைகளாலோ சற்று நேரம் பேசாமல் இருந்து யோசித்துக் கொண்டிருப்பாரேயானால் எனது மனம் தவிக்க ஆரம்பித்து விடும். நானாகவே அவரை நெருங்கிச் சென்று பேச ஆரம்பித்து விடுவேன். மைதீட்டும் போது கோலைக் காணாத கண்ணைப் போல காதலரைக் காணும் போது அவர் மேல் குற்றங்களைக் காண என்னால் முடியவில்லை. இது அவரைக் காணும் வேளைகளில் என்னுள் ஏற்படும் ஓர் அபூர்வமான நிகழ்வு’’ என்றாள் வித்தியா.

‘‘மனமே அபூர்வமானது அப்படியிருக்க அதன் செயல்களில் அபூர்வமில்லாமலா இருக்கும். நான் அவருடன் கொழும்புக்குச் செல்லவே விரும்புகிறேன். தனிமையில் இருக்கும் போது அவருடன் நான் சென்றே தீர வேண்டும் என்று திடமான முடிவெடுப்பேன். நான் அவரைச் சந்திக்கக் கடற்கரைக்குச் செல்லு முன் பெட்டி எடுத்து எனக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்து அடுக்கி வைத்தேன். மாதுமை எனக்குப் பல புத்திமதிகள் கூறினாள். அதில் பல உண்மைகள் இருந்தன; ‘‘உனது குடும்ப மானத்தைக் கெடுக்காதே. அவருடன் நீ செல்ல வேண்டும் என்பது தான் எனது விருப்பம். ஆனால் அதற்கு இப்ப என்னஅவசரம். உனது காதல் பிரச்சினை வீட்டாருக்குத் தெரிந்து, அவர்கள் அதை எதிர்த்தால் தான் உடன்போக்குப் பற்றி முடிவு செய்தல் வேண்டும். வித்தியாவுக் கேற்பட்ட நிலை உனக்குத் தெரியும். அவள் தனது தாயின் நோய்க்காகக் காத்திருந்து எவ்வளவு துன்பப்பட்டாள். உனக்கு அப்படியான ஒரு நிலைமை வந்தால் உனது பெட்டியை நான் தூக்கி வந்து வழியனுப்பி வைப்பேன். அத்துடன் உனது தாயார் நேற்று எனக்குச் சொன்னார்; ‘‘சிவசுப்பிரமணியம் ஆசிரியரின் மகன் நல்ல பிள்ளை. நல்ல தொழிலில் இருக்கிறான்தான். ஆனால் தாய்க்கும் பேர்த்தியாருக்கும் சிறிதான மனக்குழப்பம் இருக்கு. கனத்த நாட்களில் இரண்டு பேரும் வாய்க்குள் முணுமுணுப்பார்கள். அதை நேரில் பல முறை கண்டுள்ளேன். அதனால் அவனுக்குச் செய்ய விருப்பமில்லை. ஊருக்குள் பார்ப்போம். தரகரிடம் சொல்ல வேண்டும்’’ என்றா. அதை அவசரப்பட்டு கெடுத்து விடாதே’’ என்றாள். நான் அவற்றைக் கேட்கவில்லை. பெட்டியை அடுக்கி வைத்து விட்டு மாதுமையுடன் கடற்கரைக்குச் சென்றேன்; ‘‘மூச்சுவிட்டாள் அர்ச்சகா.

சிறிது நேரத்தின் பின் மீண்டும் அர்ச்சகா சொன்னாள்; ‘‘அவரைக் கண்டவுடன் என்னால் பேச முடியவில்லை. கண்கள் கலங்கின. தொண்டை அடைத்தது விம்மினேன்; ‘‘அன்பே! நான் உம்மை என்னுடன் அழைத்துச் செல்ல விருந்தேன். காலையில் அம்மா சொன்னா; ‘‘தம்பீ உனது மைத்துனர் வெளிநாட்டிலிருந்து அடுத்த வாரம் வருகிறார். அவர் கமலினியைத் திருமணம் செய்து அழைத்துச் செல்லப் போகிறாராம். அதனால், நீயும் அந்த நேரம் இங்கு இருக்க வேண்டும். அத்துடன் உனக்கும் வயதாகிறது பெண் பார்க்க வேண்டும்’’ என்றாவாம். அதனால் தான் ஒருவாரத்துள் திரும்பி வந்து தங்கையின் திருமணத்தை முடிக்க வேண்டுமாம். அதன் பின் அம்மாவுக்கு எனது பிரச்சினையைச் சொல்வோம்’’ என்றார். அந்த நேரம் சம்மதித்து விட்டேன். இப்பொழுது மனச்சஞ்சலமாக இருக்கிறது. அவரது மைத்துனருக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். தற்செயலாக அவளைச் செய்தால் தான் கமலினியைச் செய்வோம் என்று அவர் கூறினால் எனது நிலை என்ன என்று யோசனையாக இருக்கு. நான் அவருடன் சென்றிருக்கலாமென்று இப்பொழுது யோசிக்கிறேன்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘நாம் நினைப்பதெல்லாம் காதலரைக் கண்டதும் கரைந்து விடுகின்றன. இதனால் அவர் சொல்வதே வேத வாக்கு என்ற நிலை உருவாகி விடுகிறது’’ என்றாள் வித்தியா.

‘‘உண்மை தான் அவரைக் காணுமுன் உண்டான உணர்வுகள் எவையும் கண்டபின் இருப்பதில்லை. அவர் மீதுள்ள குற்றங்கள் யாவும் அவரது நிழலைக் கண்டவுடனேயே மறைந்து விடுகின்றன. அதனால்

என்னால் எதையும் தீர்மானித்துச் செய்ய முடியவில்லை'' என்றாள் அர்ச்சகா. அவளது குரலில் அளவுக்கதிகமான சோகம் ஒலித்தது.

**1285. எழுதும்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்**
**பழிகாணேன் கண்டஇடத்து.**

மைதீட்டும் போது மைதீட்டும் கோலைக் காணாத கண்ணைப் போல, காதலனைக் கண்ட போது அவனுடைய குற்றத்தை காணாது மறந்து விடுகிறேன்.

**தவறு தெரியும் வேளை**

''சிலநேரம் அவர் என்னை ஏசுகிறார். முன்பு கண்ணே மணியே என்றவர் நேற்றுக் கடற்கரையில் சந்தித்த போது முன்பை விட வித்தியாசமானவராக இருந்தார். முதல் நாள் கடற்கரையில் நகுலனைச் சந்தித்ததை நினைத்துப் பார்த்தாள் அர்ச்சகா.

நகுலன் அன்று பரபரப்புடன் இருந்தான். அவனது தலை கலைந்திருந்தது. மற்றய நாட்களிளென்றால் கடற்காற்று தலைமுடியைக் கலைக்கும் போதெல்லாம் உடனுக்குடன் சீப்பை எடுத்து தலையை வாருவார். ஆனால் அவர் தலை கலைந்திருந்தும் சீவாமல் அன்று இருப்பதால் ஏதோ குழப்பத்தில் இருக்கிறான் என்று நினைத்தாள் அர்ச்சகா.

''உங்களைப் பிரிந்து என்னால் இங்கு தனியே இருக்க முடியாது. அதனால் நான் உங்களுடன் வரப்போகிறேன்'' அழுதாள் அர்ச்சகா.

முன்பென்றால் அவள் அழுவது போலப் பாசாங்கு காட்டினால் துடிதுடித்துப் போவான் நகுலன். போலியாக வரும் கண்ணீரைத் தனது கையால் பல முறை துடைப்பான்; ''அழாதை அர்ச்சகா இதெல்லாம் பெரிய விசயமா? இனிமேல் நான் அப்படி நடக்க மாட்டேன் என்று அடிக்கடி கூறிச் சத்தியம் செய்வான். அவன் கண்களைத் துடைக்க வேண்டும் என்பதற்காகவும் கையைப் பிடித்துச் சத்தியம் செய்ய வேண்டும் என்பதற்காகவும் அடிக்கடி ஏதாவது ஒரு குற்றங் கண்டு சிணுங்குவாள் அர்ச்சகா. ஆனால் அன்று அவள் கண்ணீர் ஆறாகப் பாய அழுதபோதும் அவன் அவளது கன்னங்களால் வடித்த கண்ணீரைத் துடைக்கவில்லை; ''அர்ச்சகா சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் அழாதே. அது பின் பழக்கமாகி விடும். அந்தப் பழக்கம் வாழ்க்கையைக் கெடுத்து விடும். என்னால் மட்டும் உம்மைப் பிரிந்து செல்ல முடியுமென்று நினைக்கிறீரா? நான் முன்பு உம்மையும் என்னுடன் அழைத்துச் செல்வதென்று தான் நினைத்திருந்தேன். அடுத்த வாரம் எனது மைத்துனர் வருகிறார். அவர் வந்தவுடன் தங்கையின் திருமணம் முடிந்து விடும். எனவே அதற்கு முன்பு நான் அவசரப்படக் கூடாது'' என்றான் நகுலன்.

அவன் அப்படிச் சொல்லியும் அவளது அழுகை ஓயவில்லை. அதனால் நகுலனுக்குச் சற்றுக் கோபம் வந்தது; ''உமக்கு நான் சொல்வது விளங்கவில்லையா..? நீர் அழுவதைப் பார்த்தால் நான் சொல்வதை நீர் நம்பவில்லை என்று தெரிகிறது. என்னில் உண்மையான அன்பிருந்தால், நான் சொல்பவற்றைக் கேட்டிருப்பீர். இதற்கு முன்பு நாம் பல நாட்கள் சந்திக்க முடியாத நிலையில் இருந்தோம். இப்போது ஒரு ஏழு நாட்கள் மட்டும் பிரிந்திருக்கப் போகிறோம். அதையும், எனது கடமைகளையும் புரிந்து கொள்ள முடியாத நீர் ...'' கோபமாக நகுலன் சொல்லிக் கொண்டிருந்தான்.

அர்ச்சகா திகைத்துப் போனாள். நகுலன் இப்படிப் பேசுவான். என அவள் நினைக்கவில்லை. அப்போது அவளுள் எழுந்த துக்கத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை எனினும் அவள் அவனை நெருங்கிச் சென்று அவனது வாயைத் தனது கரத்தால் பொத்தினாள்.

நகுலன் அவளது மென்மையான விரல்களைக் கடித்தான்.; அவளை இழுத்துத் தன்னுடன் அணைத்தான்; அவளது கன்னங்களால் வழிந்த கண்ணீரைத் துடைத்தான்; அந்த உரசல் அர்ச்சகாவைத் தடுமாறச் செய்தது. வெட்கத்தையும் மறந்து சொன்னாள்; ''இந்த நிலை எனக்குத் தினமும் வேண்டும்.

''எனக்கும் வேண்டும். ஆனால் அவசரப்படக்கூடாது. சற்றுப் பொறுத்துக் கொள்ளும். நான் சென்று வந்த பின்பு அம்மாவுக்கு எல்லாவற்றையும் சொல்ல இருக்கிறேன். அத்துடன் நான் கொழும்புக்குச் சென்ற பின்பு அம்மாவுக்கு எமது காதல் விஷயத்தைச் சொல்லும்படி கஜேந்திரனுக்குக் கூறியுள்ளேன். அம்மா விரும்புவா. அப்படி விரும்பினால் மைத்துனரைப் பார்க்கும் சாட்டாக அர்ச்சகாவை வீட்டுக்கு வரச் சொல்லு என்றும் சொல்லியிருக்கிறன். கஜேந்திரன் வந்து சொன்னால் போய் அம்மாவைச் சந்தியும். அத்துடன் எனது காதல் விஷயத்தை நான் எப்படி வீட்டாருக்குக் கூறுவது அதனால் தான் கஜேந்திரனிடம் சொன்னேன்....'' யோசனையில் ஆழ்ந்த அர்ச்சகாவை ''அர்ச்சகா'' என்று அழைத்தாள் வித்தியா.

திடுக்கிட்டு நிமிர்ந்த அர்ச்சகா சொன்னாள்; ‘‘நேரில் அவரைப் பார்க்கின்ற போது அவர் செய்த தவறுகளை என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவனைப் பார்க்காத போது அவர் சொன்ன அன்பான வார்த்தைகளும் கடுஞ் சொற்களாகவே தோன்றி என்னைச் சித்திரவதை செய்கிறது. அவர் கூறியவற்றை நல்ல வார்த்தைகள் என என்னால் எண்ண முடியவில்லை’’ என்றாள் அர்ச்சகா.

**1286. காணும்கால் காணேன் தவறாய; காணாக்கால்
காணேன் தவறல் லவை.**

காதலரை நான் காணும் போது அவரது செயல்களில் தவறுகளை என்னால் காணமுடிவதில்லை; அவரைக் காணாத போது அவர் செய்த தவறுகளைத் தவிர வேறெதையும் என்னால் நினைக்க முடியவில்லை.

### பயனில்லாத ஊடல்

‘‘நாம் காதலருடன் ஊடல் கொள்ளுமுன் சற்று நிதானமாக இருந்து ஊடல் கொள்வதற்கான காரணங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். உணவிற்குத் தொட்டுக் கொள்ளப் பயன்படும் ஊறுகாயைப் போல ஊடல் இருத்தல் வேண்டுமே தவிர சோற்றிற்குக் கறியாக ஒரு போதும் ஊடல் இருக்கக் கூடாது. அத்துடன் ஊடும் காலம் தான் ஊடலில் இனிமையைத் தோற்றுவிக்கும். காதலர் இன்பமாக எம்மைத் தேவையென்று அவதிப்படும் வேளைகளில் ஊடல் கொள்வது உச்சமான இன்பத்தைத் தரும். அவர் களைத்திருக்கும் வேளைகளில் முன்பு ஊடல் கொண்டிருந்தாலும் அவ்வூடலைக் கருத்திற் கொள்ளாது கூடி மகிழ்ந்து விட்டு, அவர் பலவீனராக இருக்கும் போது ஊடல் கொள்ளல் வேண்டுமே தவிர உன்னைப் போல நேரகாலம் அறியாது ஊடல் கொள்ளல் ஆகாது அவ்வூடலானது பாய்ந்து செல்லும் காட்டாற்று வெள்ளம் தன்னை மரக்கட்டையைத் தள்ளிச் செல்வது போலத் தள்ளிச் செல்லும் என்று அறிந்திருந்தும் அதற்குள்க் குதித்து நீந்துபவனைப் போன்றதாகும். நகுலன் உன்னைச் சந்திக்கும் போது சில பிரச்சினைகளில் மாட்டியிருந்தார். கமலினியை முன்பு திருமணம் செய்வதாகக் கூறிய மாமன் மகன் சற்றுப் பின்னடிக்கிறார். அதற்கு ஒரு காணிப் பிரச்சினை தான் காரணம். அந்தக் காணிக்குள் ஒரு சிறிய வைரவர் கோயில் இருக்கிறது. அதைப் பராமரிப்பவன் மாமனாரின் சகோதரன். இப்பொழுது சகோதரர் இருவருக்குமிடையில் ஏதோ பிரச்சினை. இது நகுலனின் அப்பாவுக்குத் தெரியாது. அவர் அக்காணியைப் பராமரிப்பவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி விட்டாள். ஆனால் மாமனாருக்கு அது விருப்பமில்லை. அதனால் சிறு மனஸ்தாபம். இது நகுலனின் மைத்துனனுக்குப் பிடிக்கவில்லை. தனது தகப்பனில் தான் குற்றம் என்று சொல்லி விட்டார். இதனால் தகப்பனுக்கும் மகனுக்கும் தகராறு; ‘‘தனது மகன் பெண் வீட்டாரின் சொல்லுக்கு ஆடுகிறான்’’ என்று ஊரில் சொல்லித்திரிகிறார். அதனால் தான் நகுலன் உன்னுடன் அப்படி நடந்ததாகச் சொன்னாராம்’’ என்றாள் வித்தியா.

அர்ச்சகா துயரத்துடன் வித்தியாவைப் பார்த்தாள்; ‘‘அது தான் அவர் அளவுக்கதிகமாகக் குழம்பியிருந்தவர்’’ என்றாள். காதலனின் முகத்தைப் பார்த்தவுடன் அவனது மனதில் இருப்பதைப் புரிந்து கொள்ள முடியாத காதலியைப் பெற்ற காதலன் பெரும் பழி செய்தவனாவான். நாம் காதலரைச் சந்திக்கும் போது எமது மனத்தை சந்தோசமாக எப்பொழுதும் வைத்துக் கொள்ளல் வேண்டும். எமக்கு எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை மறந்து அவளை மகிழ்விக்கும் தோற்றத்தை உண்டாக்கிக் கொள்ளல் வேண்டும். ஆண்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். தனிய காதலியின் நினைவு மட்டும் தான் இருக்க வேண்டும் என்று ஒரு போதும் நினைக்கக் கூடாது’’ என்றாள் வித்தியா.

‘‘பிழை தான் அன்று குழம்பியிருந்த அவர் சிறிது நேரத்துக்குள் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டார். பின்பு தான் திரும்பி வந்ததும் என்னைத் தனது வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னார்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘கஜேந்திரன் என்னை முழுமையாகப் புரிந்து வைத்திருக்கிறார். கஜேந்திரன் அதே போல் நானும் அவரைப் புரிந்து வைத்துள்ளேன். அவரைச் சந்திக்கும் போது அவரின் முகத்தில் படர்ந்திருக்கும் உணர்வுகளையும், உதட்டில் பூக்கும் புன்னகையையும் கொண்டு அவரின் மனநிலையைப் புரிந்து கொள்வேன். மகிழ்வுடன் இருந்தால் முழுமையாகப் புன்னகைப்பார். மனதில் துயரமிருந்தால் தலையைச் சொறிந்தபடி புன்னகைப்பார். அந்தப் புன்னகையில் சுருதியிரது. நான் அப்புன்னகையின் தன்மையை உணர்ந்து நடந்து கொள்வேன். அவருக்குக் கவலையைக் கொடுப்பது தாயின் நோய்தான்; ‘‘மாமி எப்படிச் சுகமாக இருக்கிறாரா? நீங்கள் தான் இன்றைக்குச் சமைத்தீர்களா...?’’ என்று கேட்பேன்; அவர் உருகிப் போவார். சில நிமிடங்களில் பழைய நிலைக்கு வந்து விடுவார். அதை விட அவர் என்னைப் புரிந்து கொண்டதை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கும். நான் நடந்து வரும் போதே

என் மனதில் உள்ளதைப் புரிந்து கொள்வார்; ‘‘அம்மாவைப் பற்றி உமக்குத் தெரியும் தானே பிறகேன் கோவிப்பான் என்பார்.

‘‘எனக்கும் அம்மாவுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை’’ என்பேன். அவர் சிரிப்பார். இன்று நீர் வைத்திருக்கும் சிறிய பொட்டு சற்றுத் தள்ளி இருக்கிறது’’ என்பார். அது உண்மை தான். மறு முறை அம்மாவுடன் பிரச்சினைப்படும் போது பொட்டை வைக்கும் போது அவதானமாக இருப்பேன். ஆனால் அவர் எதையாவது கண்டு பிடித்து விடுவார். ‘‘தலையில் வகிடு பிரித்தது சற்றுக் கோணலாக இருக்கு என்பார். சில சமயம் கண்ணுக்கு மைதீட்டியதில் குறை கண்டு பிடிப்பார். இப்படி அவர் என்னை முழுமையாக உணர்ந்தவர். அதனால் காலம் அறிந்து தான் ஊடுவார்’’ என்றாள் வித்தியா.

அர்ச்சகா எதுவும் பேசாமல் வித்தியாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

**1287. உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்**
**பொய்த்தல் அறிந்துஎன் புலந்து.**

வெள்ளம் தள்ளிச் செல்லும் என்பதை அறிந்திருந்தும் பாய்ந்து செல்லும் வெள்ளத்தில் பாய்பவனைப் போல் பயனில்லை என்று தெரிந்தும் ஊடல் கொள்வதால் பயன் என்ன?.

## கள்ளைப் போன்ற மார்பு

மென்மையான புல்லாங்குழல் இசை ஒலிப்பதிவு நடாவிலிருந்து வானொலியினூடாக மெல்லக் காற்றில் மிதந்து வந்து வித்தியாவின் காதை நிறைத்து இனிக்கச் செய்தது. கஜேந்திரனது நினைவு வந்தால் ஒலிப்பதிவு நாடாவை வானொலியில் போட்டு இரசிப்பாள் வித்தியா. முன்பு அவன் தாய்க்குத் தெரியாதவாறு வந்து சென்ற நாட்களில் தனிமையில் அவனைச் சந்திக்கும் போது வானொலியை மிகவும் குறைத்து வைப்பாள். தம்மிருவருக்கு மட்டும் கேட்கும் அவ் இனிமை மிகுந்த ஒலியைக் கஜேந்திரனுடன் சேர்ந்து இரசிப்பதில் அளவில்லாத ஆனந்தத்தை அனுபவிப்பாள்.

புல்லாங்குழல் வித்துவான் ஓய்ந்திருக்கத் தாள வாத்தியக் கலைஞர்கள் வாசித்துக் கொண்டிருந்தனர். கடம் வாசிக்கும் கலைஞன் மிகவும் அற்புதமாகக் கடம் வாசித்துக் கொண்டிருந்தார். ராக தாளத்திற்கேற்ற வகையில் சுருதி தவறாது ஒலித்த அவ்விசையில் மெய் மறந்து கண்களை மூடினாள் வித்தியா.

அவளது விழித் திரைக்குள் கஜேந்திரன் தோன்றினான். கஜேந்திரனின் தாயார் சுகயீன முற்றிருந்த காலம் அது. கஜேந்திரன் சமைத்து விட்டு, குளித்து விட்டு வந்தான். வெறுமையாக இருந்த அவனது மார்பில் நீர்த்துளிகள் முத்திட்டிருந்தன. மார்பெங்கும் அடர்ந்த கருமுடிகள் அகன்று பருத்த மார்புப் பகுதி திரண்டிருந்தது. அன்னிய ஆடவனொருவனின் திறந்த மார்புப் பகுதியைத் திடீரென்று நினைக்காத வேளையில் கண்டதால் அவள் சற்று அதிர்ந்து போனாள். கடற்கரையில் கலகலப்பாகக் கதைக்கும் கஜேந்திரனும் வெட்கப்பட்டான். அவனால் அவளோடு நின்று கதைக்க முடியாததால் தடுமாறினான். மார்பை மூடுவதற்கு அவனது கையில் எதுவும் இருக்கவில்லை; ‘‘உள்ளுக்குப் போங்கோ வருகிறேன்’’ என்று சொல்லி விட்டுச் சென்றான்.

அதன் பின் அவன் பலமுறை வீட்டுக்கு வந்திருக்கிறான். அவனைத் தனிமையில் சந்திக்கும் போது அவளுக்கு அன்று அவன் குளித்து விட்டு வந்த தோற்றம் தான் ஞாபகத்திற்கு வரும்.

கடவாத்தியம் நின்றதும் மிருதங்கக் கலைஞர் மிருதங்கம் வாசிக்கத் தொடங்கினார். அந்த நேரம் வித்தியாவின் கண்களுக்குள் கஜேந்திரன் சட்டை அணியாத மார்புடன் தோன்றினான். எவ்வளவு அழகான திரண்ட மார்பு. அவள் அவனைக் கனவில் காணும் போது அவனது மார்பைத் தனது கைகளால் ஒரு முறை தொட்டுப் பார்க்க வேண்டும் என்று நினைப்பாள். பல முறை அதை நினைத்தும் அப்படியான கனவு ஒருமுறை கூட வருகிறதில்லையே என்று கவலைப்படுவாள்.

கண்மூடிக்கிடந்த வித்தியாவை இறுக அணைத்தான் கஜேந்திரன். வெறுமையாக இருந்த அந்த மார்பு பஞ்சு மெத்தையைப் போல இருந்தது. ‘‘அன்பரே உம்மைப் பற்றி நான் காணும் கனவுகள் இழிந்தனவாக இருந்தாலும் அவை எனக்கு இன்பத்தையே தருகின்றன. இழிந்த செயல்களைச் செய்யத் தூண்டும் கள்ளை ஒருவன் குடிக்கக் குடிக்க மேலும் மேலும் அதைக் குடிக்க வேண்டு மென்ற ஆசை குடிகாரனுக்கு ஏற்படுவதைப் போல உமது மார்பும் உள்ளது. பார்க்கப் பார்க்க இன்னும் பார்க்க வேண்டு மென்ற ஆசையை என் மனதிற்குக் கொடுக்கிறது. அதனால் நீங்கள் எந்தத் தீய செயல்களைச் செய்தாலும் அவற்றைத் தீதாக எண்ண என்னால் முடியவில்லை’’ என்று முணுமுணுத்தாள் வித்தியா.

அவளுக்கு அருகே வந்த அர்ச்சகா வானொலியிலிருந்து மிதந்து வரும் புல்லாங்குழலின் இசையை வித்தியா மெய்மறந்து இரசிப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். வானொலியில் புல்லாங்குழல்

இசையை வித்தியா கேட்டால், அவளுக்கு கஜேந்திரனது நினைவு வந்து விட்டதென்று அர்த்தம். அதனால் குழப்பாது அவளின் அருகில் இருந்தாள். அந்த இனிமையான இசை அர்ச்சகாவையும் மோகிக்க வைத்தது.

வானொலியில் இருந்து இசை வெளிவருவது நின்றதும் மெல்ல கண்களைத் திறந்தாள் வித்தியா. அவளுக்கருகே இருந்த அர்ச்சகாவைக் கண்டதும்; ''எப்போது வந்தாய்?'' என்று கேட்டாள்.

''கடவித்துவான் கச்சேரி செய்யும் போது வந்து விட்டேன் உன்னை ஏன் குழப்புவான் என்று இருந்து விட்டேன்'' என்றாள் அர்ச்சகா.

''நீ கடக்கச்சேரி ஆரம்பிக்கும் போது வந்தாய். நான் வந்ததைக் கண்டியா? ''என்று கேட்டாள் சுவர்ணா. அர்ச்சகாவும் வித்தியாவும் அப்போது தான் சுவர்ணாவைக் கண்டனர்.

**1288. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.**

கள்ளத்தனம் மிக்க என் தலைவனே! பல இழிவான துன்பங்களைத் தந்தாலும் கள்ளுண்பவர்களுக்கு மேலும் மேலும் ஆசையை உண்டாக்கும் கள்ளைப் போன்றது உன் மார்பு.

**மிகச் சிலர்**

''உங்களின் கதையைக் கேட்க எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. மனிதன் குழந்தையாகப் பிறக்கிறான். ஓடியாடி விளையாடுகிறான்; கல்வி கற்கிறான்; காதலிக்கிறான்; தொழில் தேடுகிறான்; திருமணம் செய்கிறான். பின் முன்னில் இருந்து வாழ்க்கை தொடங்குகிறது. இதில் பூரணமாக வாழ்பவர்கள் சிலரே. வாழ்க்கை துன்பமானது என்று நினைப்பவன், நிரந்தர இன்பத்தைப் பெறவும் பின்பு பிறவாத நிலையைப் பெறவும் கடவுளை நோக்கித் தவஞ் செய்கிறான். பலர் தம் வாழ்வு சிறப்படையச் சேவை செய்கிறார்கள். தவஞ் செய்பவர்களிலும் சேவை செய்வதிலும் சிலரே வெற்றி பெறுகின்றனர். வெற்றி பெற்றவர்களின் வரலாறே உலக சரித்திரமாகிறது. ஆனால் காதலைப் பொறுத்த வரையும் அதில் வெற்றி பெறுபவர்கள் மிகச் சிலரே. காதலிக்கும் ஆணும் பெண்ணும் காதல் கைகூடித் திருமணம் செய்து விட்டால் அவர்கள் காதலில் வெற்றியடைந்து விட்டதாகக் கருதுகின்றனர். சமூகமும் அப்படியே கருதுகிறது ஆனால் மலரை விட மென்மையான காதலின் உண்மையை அறிந்து காமத்தின் நல்ல பயனைப் பெறக் கூடியவர்கள் மிகச் சிலரே'' என்றாள் சுவர்ணா.

''அர்ச்சகாவும் வித்தியாவும் சுவர்ணா சொல்வது விளங்காமல் அவளைப் பார்த்தனர்; ''நீ எப்பவும் விசர்க் கதை தான் கதைப்பாய். நீ சொல்வதென்றும் எனக்குப் புரியவில்லை'' என்றாள் அர்ச்சகா.

''அர்ச்சகா உனக்குக் காதலைப் பற்றி என்ன தெரியும்? நகுலனைக் காணாவிட்டால் அழத் தான் தெரியும். சுவர்ணா படு கிழவி; பாட்டி; காதலைப் பற்றி ஏதோ எமக்குச் உபதேசித்தவா அது எமக்கு விளங்கவில்லை. தயவு செய்து எமக்கு விளங்கும்படி சொல்லுங்கோ பாட்டி என்றாள் வித்தியா.

''இலட்சியமில்லாது வாழும் வாழ்க்கையில் என்ன பயன் இருக்கிறது? வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இலட்சியம் தேவையென்று சொல்வார்கள். ஆனால் காதலிக்கும் போது வெற்றியடைய வேண்டும் என்று நினைப்பவர்கள் திருமணம் செய்தபின் காதலிப்பதில்லை. முன்பிருந்த வேகம், அக்கறை, அனுதாபம், அன்பு எவையும் இல்லாமல் உண்டோம், உறங்கினோம், எழுந்தோம் என்ற நிலையிலேயே வாழ்கிறார்கள். பெரும்பாலானோர் திருமணமான பின்பு தமது சீவனத்திற்காக தொழிலிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர். பணத்தைத் தேடுவதிலும் அக்கறை காட்டுகின்றனர். அதனால் குடும்பத்தில் உள்ள ஈடுபாடு மிகக் குறைவாக உள்ளது. தீவிரமாகக் காதலித்த பெண்ணும் ஆணைப் பணம் சம்பாதிக்க அனுப்புவதிலேயே அக்கறையுடையவளாக இருக்கிறாள். ஆணும் ஏதோ வாழ்கிறோம். என்றளவிலேயே தனது மனைவியுடன் தொடர்பு வைத்துள்ளான். பணம்; பணம்; பணம் இது தான் இருவரினதும் நோக்காக உள்ளது. இப்படி வாழ்வோர் தான் உலகத்தில் அனேகர். மலரை விட மென்மையான காதலின் சுவையை உணர்ந்து முழுமையான இன்பத்தை பெறக் கூடியவர் மிகவும் சிலரே''. என்ற சுவர்ணா கதைப்பதை நிறுத்தி விட்டு அர்ச்சகாவையும் வித்தியாவையும் பார்த்தாள்.

''நீ உண்மையில் பெரியவள் தான். சொல்லப் போனால் காதல் காதலிக்கும் வரை தான் பெருமை வாய்ந்ததாக இருக்கிறது'' என்று வித்தியா சொல்லிக் கொண்டிருக்கையில் சுவர்ணா குறுக்கிட்டுச் சொன்னாள்; ''காதலின் பெருமையை உணர்ந்து ஒருவருக்காக ஒருவர் வாழ்ந்த வரலாறு உலகத்தில் இருக்கிறது. எனது தாத்தாவும் பாட்டியும் வாழும் வாழ்க்கை உண்மையில் சிறந்தது. இப்போது இருவரும் எழுபது வயதைக் கடந்து விட்டனர். வித்தியாவுக்கும் கஜேந்திரனுக்கும் உள்ள அன்பு நெருக்கம் பாசம் இந்த வயதிலும் இருவருக்கிடையேயும் இருக்கிறது. அவர்கள் காதலின் உச்சப் பயனைப் பெற்றவர்கள் என்று தான் நான் கூறுவேன். அப்படி வாழ்கிறார்கள்'' என்றாள் சுவர்ணா.

“நான் அப்படி வாழா விட்டாலும் கஜேந்திரன் அப்படி வாழ்வார். அவ்வளவு தீவிரமான அன்பு என்மீது வைத்துள்ளார்” என்றாள் வித்தியா.

சுவர்ணா சிரித்தாள்; “காதலின் பெருமையைக் காதலிக்கும் போது உணர முடியாது கண்ணே. திருமணம் முடித்துப் பத்து வருடங்களாவது சென்ற பின்பு தான் அதைப் பற்றிச் சொல்ல முடியும். பெரிதாக அவரைப் பற்றி கற்பனை பண்ணி ஏமாந்து விடாதே” என்றாள் சுவர்ணா. வித்தியா எதுவும் பேசவில்லை.

**1289. மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்**
**செவ்வி தலைப்படு வார்.**

காமம் மலரை விட மென்மையானது; அதன் உண்மையை அறிந்து முழுப் பயனையும் பெறக் கூடியார் மிகச் சிலரே.

### மறந்த கோபம்

“வித்தியா, கஜேந்திரன் மிகவும் நல்லவர். உன்னில் பற்றும் பாசமும் அளவுக்கதிகமாக வைத்திருப்பவர். சாதகமும் நல்ல பொருத்தம். ஆனால் அவரின் பெற்றோரை நான் சந்தித்துக் கதைக்க வேண்டும். பிள்ளையைப் பெற்றவர்களின் சம்மதத்தைப் பெறாது அவரை நாம் வீட்டுக்கு வரவழைப்பது தர்மத்திற்கு முரணானது. நாம் எவ்வளவு தான் சீதனம் கொடுத்தாலும், அவரின் பெற்றோர் தமக்குத் தெரியாமல் தமது பிள்ளையை ஆசை காட்டி அணைத்துக் கொண்டார்கள் என்று எண்ணக் கூடாது. நானாக இருந்தாலும் அப்படித்தான் நினைப்பேன். அதை விட காதலித்துப் பெற்றோரின் விருப்பத்தைப் பெற்றாலும் சடங்கு சம்பிரதாயங்களின் பின்பு தான் மாப்பிளை பெண்ணின் வீட்டுக்கு வந்து தங்கிச் செல்வது முறையாகும். அதைத் தான் ஊரவர்களும் விரும்புவார்கள். எனவே நான் கஜேந்திரனின் வீட்டுக்குச் சென்று அவரின் பெற்றோரோடு கலந்து பேசி முடிவெடுக்கும் வரை கஜேந்திரனை இங்கு வரவேண்டாமென்று சொல்லு. நான் சொன்னதாகச் சொல்லாதே அத்துடன் மெதுவாக அவர் கோபப்படாத வகையில் சொல். சில ஆண்பிள்ளைகளுக்கு நாம் அப்படிச் சொல்வது பிடிக்காது. எனது சிநேகிதி ஒருத்திக்குத் தகப்பன் மாப்பிளை பார்த்தார். இரு வீட்டாரும் சம்மதித்தமையால் திருமணப்பதிவும் முடிந்து விட்டது. அதன் பின் மாப்பிளை பெண் வீட்டுக்கு அடிக்கடி வரத் தொடங்கினார். பெண்ணின் தகப்பனார் சாத்திரத்தில் நம்பிக்கை உடையவர். அதனால் அவர் மாப்பிளையுடன் தனது மகளைக் கதைக்க விடவில்லை. அதனால் ஏற்பட்ட தகராற்றால் பெண்ணின் தகப்பன் இறக்கும் வரை மாப்பிளை வரவில்லை. பத்து வருடங்களின் பின் பெண்ணின் தகப்பனார் இறந்த பின்பு தான் அவர்களுக்குத் திருமணம் நடை பெற்றது. எனவே பக்குவமாக எடுத்துச் சொல்” என்றாள் கண்மணி.

வித்தியா தாய் அப்படிச் சொல்வாள் என எதிர்பார்த்திருந்தமையால் வியப்படையவில்லை. கஜேந்திரனுக்கு அம்மாவின் குணங்கள் தெரியும். இருந்தாலும் அதை எப்படிச் சொல்வதென்று தெரியாமல் கலங்கினாள்; “கஜேந்திரனுக்கு யாவும் புரியும். தேவையில்லாமல் வரமாட்டார். ஆனால் அர்ச்சகாவுக்கு ஏதாவது சொல்ல வேண்டுமானால் வருவாள். இது அம்மாவுக்குப் புரியாது. அவருடன் ஏதாவது கதைத்தால் கரைச்சல்.” என்று நினைத்தாள். எனினும் அவளுக்கு அவனைக் காணமல் இருக்க முடியாது. இரண்டு நாட்கள் காணா விட்டால் அவளது மனம் தவிக்க ஆரம்பித்து விடும்; “ பொல்லாத சாஸ்திரமும் சம்பிரதாயமும் மனம் பொருந்தியதனால் தானே விரும்பினோம். மனம் விரும்பி இருவரும் கதைத்தன்று என்ன நாளே தெரியாது அந்த நாள் தான் முக்கியமான நாள். திருமணம் பேசி செய்வதானால் நல்ல நாளில் தான் மாப்பிளையுடன் கதைக்க விடுவார்கள். எப்பவோ முடிந்த விஷயத்திற்கு இனியேன் சோதிடம், மதச்சடங்கு என்று நினைத்தாள் வித்தியா.

அப்பொழுது கண்மணி, வித்தியாவின் அறைக்கு வந்தாள்; “வித்தியா கஜேந்திரன் வந்திருக்கிறார். நான் சொன்னதைச் சொல்லி விடு” என்று கூறிவிட்டுச் சென்றாள். அது வித்தியாவுக்குப் பிடிக்கவில்லை.

கஜேந்திரன் அவனது அறைக்கு வந்த போது வித்தியாவின் முகத்தில் ஈயாடவில்லை. மிகவும் சோகமாக இருந்தாள். தான் வந்ததும் அவளுக்குப் பிடிக்கவில்லை என்று அவனுக்குத் தோன்றியது; “நான் வந்திருக்க மாட்டன் கமலினிக்குத் திருமணம் நிட்சயமாயிட்டுது. ஏற்கனவே கமலினிக்கு அவளது தோழிகள் மூலம் அர்ச்சகாவைத் தெரியும். அவளை இன்று அல்லது நாளை தனது வீட்டுக்கு வருமாறு கமலினி கூறச் சொன்னாள். அர்ச்சகாவின் வீட்டுக்குச் சென்று அதைச் சொல்லி விட்டு அவள் என்ன சொல்கிறான். என்று வந்து சொல்லும். நான் போனவுடன் கமலினி கேட்பாள்” என்று கூறிவிட்டு வெளியே வந்தான் கஜேந்திரன்.

வித்தியா எதுவும் பேசவில்லை. அறைக்கு வெளியே வந்தாள். கஜேந்திரன் வெளியே இருந்தான்; ''இருங்கோ வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள் வித்தியா.

கண்மணி அவனுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுக்கும் போது கஜேந்திரன் சொன்னான்; ''நான் ஒரு புத்தகம் பொது நூல் நிலையத்தில் எடுத்து வந்து வித்தியாவுக்குக் கொடுத்தனான். அதை இன்று திருப்பிக் கொடுத்தல் வேண்டும். வித்தியா அதை அர்ச்சகாவுக்குக் கொடுத்து விட்டாள்'' என்றான்.

கண்மணி அவனுக்கு அருகில் இருந்தாள். கஜேந்திரன் அவளுடன் எதுவும் பேசவில்லை; ''அம்மாவுக்குச் சுகமில்லை என்று கேள்விப்பட்டனான். இந்த மாசம் சரியில்லை. வந்து பார்க்க முடியவில்லை. நீங்கள் தான் சமைப்பதாகவும் கேள்விப்பட்டேன். உங்களுக்குப் பெருஞ் சிரமம் தானே. இங்கு வந்து சாப்பிடுங்கோவன்'' என்றாள் கண்மணி.

''இல்லை.. இல்லை.. நான் இங்கு வந்து சாப்பிட்டாலும் வீட்டாருக்குச் சமைக்க வேண்டும். அப்பா சமைப்பார். ஆனால் அது அம்மாவுக்குப் பிடிக்காது. சாப்பிட மாட்டா. ஏற்கனவே பலவீனமான அவா சாப்பிடாமல் விடுதல் கூடாது. அத்துடன் நான் இங்கு சாப்பிடுவதை அம்மா விரும்ப மாட்டா. நான் இங்கு வருவது அவாவுக்குத் தெரியாது; ''அடிக்கடி வித்தியாவின் வீட்டுக்குச் சொல்லாதே. திருமணம் முடிந்த பின்பு தான் செல்ல வேண்டும். என்ன தான் காதல் என்றாலும் எமது வழக்கத்தை மாற்றக் கூடாது. விரைவில் திருமணத்தை முடித்து வைக்க நான் யோசித்துள்ளேன்'' என்றவா. அதனால் அம்மாவுக்குத் தெரியாமல் தான் இங்கு வந்து செல்கிறேன். அம்மாவின் விருப்பத்திற்கு மாறாக நடக்க எனக்கு ஒரு மாதிரியாக உள்ளது. முக்கியமான தேவைகள் சில அடிக்கடி வந்து விடுகின்றன'' எனக் கவலைப் பட்டான் கஜேந்திரன்.

கண்மணி அவனது முகத்தைப் பார்த்தாள். அவனது முகம் சோகமாக இருந்தது; ''அம்மா நீங்கள் அவரைப் பற்றித் தவறாக நினைக்கிறீர்கள். அவருக்கென்று சில கொள்கைகள், இலட்சியங்கள் இருக்கு. அதைப் பின்பு தான் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். உங்களை விட அவர் சாத்திர சம்பரதாயங்களிலும் கடவுளிலும் நம்பிக்கை கூடியவர். எந்த ஒரு விஷயத்திலும் தவறாக நடக்க விரும்பாத உத்தமர்; உயர்ந்தவர்'' என்று வித்தியா கூறியது அவளுக்கு நினைவில் வந்தது; ''அவனைப் பார்த்தாள். வித்தியா கூறியது உண்மை யென அவனது முகம் எடுத்துச் சொன்னது; ''இன்று நின்று சாப்பிட்டு விட்டுச் செல்லுங்கள். நான் சமைக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள் கண்மணி.

வித்தியா வந்து; ''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்தாள்.

கஜேந்திரன் அறைக்குள்ச் சென்று வழமையாக அமரும் நாற்காலியில் அமர்ந்து மேசையில் இருந்த புத்தகத்தை எடுத்து விரித்தான். அது வித்தியாவுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது; ''அர்ச்சகா நாளைக்கு வருகிறாளாம். என்னையும் வரச் சொன்னாள்'' என்றாள்.

''சரி'' என்று ஒரு வார்த்தையில் கூறிவிட்டுப் புத்தகத்தைப் படித்தான். கஜேந்திரன் பின்; ''அம்மா தேநீர் தந்து விட்டு நின்று சாப்பிட்டு விட்டுச் சொல்லட்டாம். மாட்டன் என்று எபப்டிச் சொல்வது''.

''இங்கு புத்தகம் படிக்கவா வந்தனீங்கள்'' என்றவாறு அவளது கையில் இருந்த புத்தகத்தைப் பறித்து மேசையில் வைத்து விட்டு அவனுக்கு அருகில் வந்தாள். அவளது உடை அவனை உரசியது.

''கண்பார்வையளவிலேயே பிணக்கம் கொண்டு விட்டு, நான் வந்ததையும் அலட்சியம் செய்தவள். ஆனால் நான் அவளைத் தொடக் கூட விரும்பவில்லை. இருப்பினும் என்னைத் தழுவுதலை விரும்பி தனது பொய்க் கோபத்தைக் கணப்பொழுதில் மறந்து விட்டாளே'' என்று எண்ணினான் கஜேந்திரன்; ''இது வித்தியாவின் வழமையான போக்கு'' என்பதை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது.

**1290. கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.**

கண்களால் சிறிது கோபித்துப் பார்த்தளவில் பிணக்கம் கொள்பவள், ஆனாலும் என்னை விடத் தான் முந்தித் தழுவித்தன் பொய்யான கோபத்தை மறந்து கலங்குவாள்.

**துணையாகாதது ஏன்?**

“நாலைந்து தினங்களுக்குப் பின்பு வளர்மதி மிகுந்த துயரத்துடன் வித்தியாவின் வீட்டுக்கு வந்தாள். அன்று வெள்ளிக்கிழமை. அதனால் வித்தியாவும் அர்ச்சகாவும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றிருந்தனர். வளர்மதியைக் கண்மணிக்கு மிகவும் பிடிக்கும். அதனால் அவள் வளர்மதியுடன் கதைத்துக் கொண்டிருந்தாள்.

“நான் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதளவு நல்ல பல பண்புகளை உடையவராகக் கஜேந்திரன் இருக்கிறார். நான் உன்னை முழுமையாக நம்பியிருந்தனான். அப்படியிருந்தும் நீ எனக்கு அவர்களின் காதலைப் பற்றிச் சொல்லாதது எனக்குப் பெரும் கவலை” என்றாள் பூமணி.

“நான் எப்படி மாமி சொல்வது ஏற்கனவே எனக்கு எல்லா விஷயமும் தெரியும். வித்தியாவுக்கு நான் புத்திமதிகள் சொன்னனான். அவள் கேட்பாள் என்று நினைத்தேன். அதனால் உங்களுக்குச் சொல்லவில்லை. சொன்னால் நீங்கள் குழம்பிப் போவீர்கள் என்று நினைத்தேன். வித்தியாவும் என்னைச் சொல்ல விடவில்லை. இருந்த போதும் கஜேந்திரன் மிகவும் நல்லவர்; குடும்பத்தை மிகவும் நேசிப்பவர்; பண்புள்ளவர்; வித்தியா கொடுத்து வைத்ததால் தான் அவரைக் கணவனாகப் பெற்றாள். அத்துடன் கணிதத்தில் நிபுணன். பாருங்கோ ஒரு காலத்தில் பெரிய ஆளாக இருப்பார்” என்றாள் வளர்மதி.

கண்மணி பூரித்துப் போனாள்; “இந்த நாளேல் பெண் பிள்ளைகளே தாய்க்குச் சுகவீனமென்றால் சாப்பாட்டுக் கடையில் சாப்பாடு கட்டுவோம் என்பார்கள். அவர் தாய் சாப்பிட மாட்டார் என்று சமைப்பதாகக் கூறுகிறார். அதை நினைக்கக் கண்மணியின் உடல் புல்லரித்தது.

“மாமி கவலைப்படாதைங்கோ. உங்கள் சகோதரனின் மகனைச் செய்யாமல் விட்டது உங்களுக்கு மனவருத்தமாக இக்கலாம். ஆனால் பின்பு தான் அதைப் பற்றி உணர்வீர்கள். பாசம் மிகுந்த அன்புள்ளம் கொண்ட கஜேந்திரன் யாருக்கும் உதவி செய்வார். தகுதி வெட்கம் எதுவும் பார்க்க மாட்டார். நானும் பல சகோதரங்களுடன் பிறந்தனான். பலரைப் பார்த்திருக்கிறன். ஆனால் கஜேந்திரனைப் போல ஒருவரைக் காணவில்லை. வித்தியா பாக்கியசாலி. நீங்கள் எதற்கும் கவலைப்படாதைங்கோ” என்றாள் வளர்மதி.

கண்மணி திக்கு முக்காடிப் போனாள். அவளால் வாய்திறந்து ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. அன்று வீட்டுக்கு வந்த வித்தியாவின் விரிவுரையாளரும் கஜேந்திரனைப் பற்றி அப்படித்தான் சொன்னார். என்று நினைத்து மகிழ்ந்தாள் கண்மணி.

அப்போது வித்தியாவும் அர்ச்சகாவும் கோயிலால் வந்தனர். கண்மணி எழுந்து சமையல் வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்; “உனக்குச் செய்தி தெரியுமா...? அர்ச்சகா நகுலனின் வீட்டுக்குச் சென்றவள்...” என்று வித்தியா சொல்ல; “ஊர் முழுக்க உந்த விஷயம் தெரியும். இப்ப ஊரில் பரபரப்பாகப் பேசப்படும் கடைசிப் புதினம் உது தான்” என்றாள் வளர்மதி. அர்ச்சகா நாணிக் கோணித் தலையைக் குனிந்தாள்.

“நீ ஒன்றுக்கும் யோசிக்காதை கஜேந்திரன் ஆதவனுடன் இரண்டு மூன்று தரம் கதைத்தவர். அவனுக்கு உன் மீது காதல் இருக்கு. அதை வெளிப்படுத்தத் தான் பயப்படுகிறான். ஊரில் தெரிந்தால் பிரச்சினைகள் வருமென்று கூறினானாம்; “அவன் ஆசைப்படுறான். பயம் தான் மிகுதியாக இருக்கு. பிரச்சினை இல்லை. நான் பெற்றோருடன் கதைத்துச் சரிப்படுத்துவன். வளர்மதியைக் கவலைப்படாமல் இருக்கச் சொல்லு” என்றவர். இப்ப எல்லாருடைய வாழ்க்கையும் அவரவர் விருப்பப்படி நடை பெறப் போகிறது. உனக்கும் நல்லது நடக்கும் என்றாள் வித்தியா.

“ஆதவனின் மனம் என்னை நினையாமல், என்னுடன் கலந்துறவாடாமல் அவரின் சொற்படி நடந்து கொள்கிறது. மனதில் சலனமிருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது இருக்கிறார். ஆனால் எனது மனம் எந்த நேரமும் அவரை நினைத்து அல்லற்படுகிறது. இதை அவர் புரிந்து கொள்ளாததை நினைக்க எனக்கு, என் மனதின் மீது வெறுப்பு வெறுப்பாய் வருகிறது” என்றாள் வளர்மதி.

“ஊருக்குள் அர்ச்சகாவைப் பற்றிக் கதைக்கிறார்கள் என்கிறாய். நகுலனின் பெற்றோர் என்ன கதைக்கிறார்கள்” என்று கேட்டாள் வித்தியா.

“நகுலனின் தகப்பன் நல்லவர். தாய் அதை விட நல்லவா. எந்தப் பிரச்சினையும் அங்கிருந்து வராது. கமலினியின் விஷயம் முடிந்த கையோடு நகுலனுக்கும் முடிக்க வேண்டு மென்று தாய் சொன்னதாக ஊரில் கதைக்கிறார்கள். அர்ச்சகா வீட்டார் சம்மதிப்பார்களா?” என்று கேட்டாள் வளர்மதி.

“சம்மதிப்பினை என்று தான் நினைக்கிறேன்” என்றாள் வித்தியா.

**1291. அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே**
**நீஎமக்கு ஆகா தது?.**

நெஞ்சே! காதலரது நெஞ்சம் என்னை நினையாமல், என்னிடம் வராமல் அவருக்கே துணையாக இருக்கும் போது, நீ எனக்குத் துணையாகாமல் இருப்பது ஏன்.?

### நம்பும் மனது

‘‘நான் நகுலனின் வீட்டுக்குச் சென்ற போது கமலினி தான் முதலில் என்னை அழைத்துச் சென்றாள். அவள் அடிக்கடி என்னை ‘‘அண்ணி, அண்ணி’’ என்று அழைத்த போது எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. தனது தோழியர்களுக்கு என்னைத் தனது சகோதரனின் மனைவி என்று அறிமுகப்படுத்தினாள். தனது கணவருக்கும்; ‘‘இவாவைத் உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டாள். அவர்; ‘‘இல்லை’’ என்று தலையசைத்தார்; ‘‘என்ன அப்படிச் சொல்கிறீர்கள் உங்களுக்கு இவள் ஒரு முறையில் தங்கை’’ என்றாள்.

‘‘அப்படியா எனக்குத் தெரியவில்லை. நீர் யாருடைய மகள்’’ என்று கேட்டார். எனக்கு உடல் நடுங்கத் தொடங்கியது. பயத்தால் உடல் வியர்த்தது. எனது நிலையைக் கவனித்த கமலினி அவரின் காதுக்குள் ஏதோ சொன்னாள். அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்தார் பின்பு; ‘‘நகுலனின் தெரிவு மிகப் பிரமாதம்’’ என்றார்.

‘‘மாமாவும் மாமியும் கதைக்கவில்லையா?’’ என்று கேட்டாள் வளர்மதி.

‘‘கமலினி என்னை தனது தோழியென்று தான் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினவள். எனது பெயர் அர்ச்சகா என்று நான் சொன்னதும் மாமியின் முகத்தில் ஓர் அசாதாரண உணர்வு பரவுவதை உணர்ந்தேன். பின்பு அடிக்கடி வந்து கதைத்தா. சாப்பாடும் தந்தா. அவாவுக்கு எல்லாம் தெரியும் போலத் தெரிகிறது. ஆனால் அதைப் பற்றிக் கதைக்கவில்லை’’ என்றாள் அர்ச்சகா.

‘‘நீ கொடுத்து வைத்தவள். நான் தான் அளவுக்கதிகமாகப் பாவம் செய்தனான். எவ்வளவு தான் முயன்றாலும் அவர் என்னைத் திரும்பிக் கூடப் பார்க்கிறாரில்லையே கதைக்க வேண்டாம். சரி, ஒரு பார்வை பார்த்ததாலே போதும். என்னைக் கண்டதும் பூனையைக் கண்ட எலி மாதிரியெல்லே தறி கெட்டு ஓடுகிறார். அப்படி அவர் என்னை வெறுத்தோடினாலும் எனது மனம் அவரைத் தான் நாடிச் செல்கிறது. எனது உள்ளுணர்வுகள் அவர் உன்னைக் கட்டாயம் விரும்புவார் என்று கூறுகின்றன. எனது மனம் அவர் விரும்ப மாட்டார். நீ மறந்து விடு என்று சொல்லாது, அவர் உன்னைக் கட்டாயம் விரும்புவார். கவலைப்படாமல் பொறுத்திரு என்றல்லவா எனக்கு ஆறுதல் கூறுகிறது’’ எனறு விம்மினாள் வளர்மதி.

‘‘காதல், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவத்தைத் தரும். நாம் நால்வரும் தோழிகள். எனக்கு வந்த அனுபவங்கள் எவையும் அர்ச்சகாவுக்கு வரவில்லை. மாதுமையின் காதல் இன்னொரு வகையானது. உனது காதல் மிகவும் வித்தியாசமானது. அனுபவங்கள் வேறானாலும் காதல் ஒன்று தான் அதை அடையும் வழிகள் தான் மாறுபட்டவை. எந்த ஒரு செயலும் காலத்திற்கேற்றவாறு மாற்றமடையத் தான் செய்யும். எனது காதலைப் பற்றிய விவரம் முழுவதும் உனக்குத் தெரியும். நான் எவ்வளவு துன்பப்பட்டேன். மாதுமையின் காதல் விஷயமும் உனக்குத் தெரியும். அவர்களது பெற்றோரே காதலரைச் சேர்த்து வைத்தனர். அர்ச்சகாவின் காதல் அதை விட வேறுபட்டது. நகுலனின் பெற்றோருக்கு விருப்பம். இனி அர்ச்சகாவின் பெற்றோர் என்ன சொல்கிறார்களோ தெரியாது’’ என்றாள் வித்தியா.

‘‘கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா. நகுலனைப் போன்றதொரு மாப்பிளையை எடுக்க அவர்கள் கொடுத்து வைக்க வேண்டும்’’ என்றாள் வளர்மதி.

‘‘நீ நினைப்பதைப் போல அவர்கள் நினைப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. நீ பெரிய பணக்காரி நல்ல அழகி உனக்கு என்ன குறை இருக்கு ஆனால் ஆதவன் உன்னை விரும்புகிறார் இல்லையே. அதைப் போல அர்ச்சகாவின் பெற்றோரும் இருக்கலாம். வலியப் போனால் தங்கத்தின் பெறுமதியையும் சந்தேகிப்பார்கள்’’ என்றாள் வித்தியா.

‘‘நீ அவளையும் குழப்பி என்னையும் குழப்புறாய். நான் பிரச்சினை வராதென்று நினைத்து மிகவும் மகிழ்வுடன் இருக்கிறேன். அதைக் கெடுக்காதே’’ என்றாள் அர்ச்சகா.

''உனக்குப் பிரச்சினை வராது. அப்படி வந்தால் நகுலன் உன்னைத் தன்னுடன் அழைத்துச் சென்று விடுவான்'' என்றாள் வளா்மதி.

''நகுலன் அழைத்துச் செல்லா விட்டாலும் இவள் அவனை அழைத்துச் சென்று விடுவாள்'' என்று சிரித்தாள் வித்தியா.

**1292. உறாஅ தவா்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறிஎன் நெஞ்சு!.**

என் நெஞ்சே! என் மீது அன்பு கொள்ளாத காதலரைக் கண்ட போதும், அவா் வெறுக்க மாட்டாா் என்று எண்ணி நீ அவரிடம் சொல்கின்றாயே!.

**நண்பா் இல்லாமையோ**

'' அப்படித்தான் நானும் செய்வன். உயிா் உள்ள வரை நான் அவரைத்தான் விரும்புவன். அவரைத் தவிர என்னால் வேறு எவரையும் நினைத்துக் கூடப் பாா்க்க முடியாது. அத்துடன் அவா் என்னைத் தவிர வேறு யாரையும் நினைக்கவும் கூடாது. அப்படி நினைத்தாரேயானால் என்ன செய்வேனென்று எனக்கே தெரியாது'' ஆத்திரப் பட்டாள் வளா்மதி. அவளது முகம் கோபத்தால் சிவக்க உதடுகள் துடித்தன.

''மகளே! தீவிரமான ஒரு தலைக் காதல் எப்பொழுதும் பிரச்சினைகளைத் தான் உருவாக்கும். நீ இப்படிச் சொல்கிறாய். நீ விரும்பாத ஒருவன் உன்னைத் தீவிரமாக விரும்பிப் பலாத்காரமாக உன்னைத் தூக்கிச் சென்றால் என்ன செய்வாய்?'' என்று கேட்டு விட்டு அவளது முகத்தைப் பாா்த்தாள் அா்ச்சகா.

''அவனைக் கொலை செய்வேன். ஒரு நிமிடங் கூட அவனுடன் வாழமாட்டேன்?'' என்று பல்லை நெருடினாள் வளா்மதி.

''நீ நினைப்பது சரி இன்னொருவா் அதை நினைத்தால் பிழையா...? இலக்கியங்களில் விரும்பாத காதலியைப் பலாத்காரமாகக் கவா்ந்து செல்வதைப்பற்றிக் கூறியுள்ளனா். அப்படியொரு வழக்கு நமது சமூகத்தில் இருந்திருக்கிறது. இருவா் காதலித்து திருமணம் புரிவதைக் காந்தா்வமணம் என்றும் பெண் விரும்பாமல் பலாத்காரமாக அவளைத் தூக்கிச் செல்வதை இராட்சத மணம் என்றும் கூறுவா். அதனால் வன்முறையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காதே. சிலா் கண்டவுடன் காதல் கொள்வாா்கள். அா்ச்சகா கொழும்பில் இருந்த காலத்தில் இளைஞா்களைக் காணவில்லையா...? அப்படியிருக்க யாழ்ப்பாணத்திற்கு வந்த இரண்டொரு நாளிலேயே நகுலனைக் கண்டு காதல் கொண்டு விட்டாள். இதெல்லாம் பூா்வ புண்ணியத் தொடா்பு. மின்சாரத்திற்கும் மின்குமிழுக்கும் தொடா்பிருந்தால் தான் அது ஒளிரும். இரண்டும் தானாகத் தொடா்புகளை ஏற்படுத்திக் கொள்ளாது ஆனால் தொடா்பு படுத்தலாம். அதற்காக வருந்தாதே; வன்முறையைப் பற்றிச் சிந்திக்காதே. அப்படி நீ வன்முறையை உபயோகித்தாய் என்று வைத்துக் கொள். ஆதவனின் சகோதரனுக்கு நோ்ந்த நிலை தான் ஆதவனுக்குத் ஏற்படும். அதற்காகத்தான் சொல்கிறேன்'' என்றாள் வித்தியா.

சிலகணங்கள் எதுவும் பேசாமல் இருந்தாள் வளா்மதி. பின் ''எதைச் சொன்னாலும் எனது மனம் ஆறுதலடைய மறுக்கிறது. அவரை வேண்டு மென்று அடம் பிடிக்கிறது. அவா் ஒரு வித்தியாசமான மனிதனாக இருக்கிறாா். அவருக்கென்று நண்பா்கள் இல்லை. எப்பொழுதும் தனிமையாகவே நான் அவரைச் சந்திக்கிறேன். நான்கு நண்பா்கள் இருந்தாா்களேயானால் அவருக்குப் புத்திமதி கூறுவாா்கள். காதலைத் தூண்டிவிடுவாா்கள். பொதுவாக நண்பா்கள் தானே இருவருக்கும் பள்ளிப் பருவத்தில் சோடி சோ்த்துக் காதலை உண்டாக்கி, அதை வளா்த்து விடுவது நண்பா்களின் துணையால் தான் அனேகமான ஆடவா்களுக்கு துணிவு ஏற்படுகிறது. இவரைத் தூண்டி விட நண்பா்கள் இல்லை'' என்று கவலைப்பட்டாள் வளா்மதி.

''உண்மை தான் கஜேந்திரன் கதைப்பது கூட ஆதவனுக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. சில சமயங்களில் அவா் கதைத்தாலும் கதைக்காமல் சென்று விடுகிறாராம் ஏன் இவனோடு கதைத்தோம் என்று கவலைப்படும்படியாகவும் சில சமயங்களில் நடந்து கொள்வாராம்'' என்றாள் வித்தியா.

''பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம்'' பாடினாள் அா்ச்சகா.

''நீ பாடுவாய்... பாடுவாய்...கமலேஸ்மாமி பொல்லுத் தூக்கினால் தான் அருமை தெரியும்'' என்றாள் வித்தியா.

“நான் பொல்லுக்கல்ல, வெடிகுண்டுக்கும் பயப்படமாட்டன்” வளர்மதிக்குத் துக்கமாக இருந்தது. “என் அன்பான மனமே, நீ ஏன் எனது கட்டுப்பாட்டையும் மீறி வெட்கமில்லாமல் அவரின் பின்னால் செல்கிறாய். அவர் உன்னை அவமதித்தும் உனக்கு வெட்கமில்லையா..? அவர் துன்பப்படுகிறார். நண்பர்கள் எவரும் அவருக்கில்லை. நான் அவரிடம் சென்று அவருக்கு ஆறுதலளிப்போம் என்று நினைக்கிறாயா..?” என்று மனத்தைக் கேட்டாள் வளர்மதி.

“வளர், நீ பயப்படாதை, அவர் உன்னை விரும்பா விட்டால் நீ அவரைப் பலாத்காரமாகத் தூக்கிவா. நான் உதவி செய்வன்” என்றாள் அர்ச்சகா. வித்தியா அவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

**1293. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்?.**

நெஞ்சே! நீ உன் விருப்பப் படி அவரின் பின்னால் செல்வதற்குக் காரணம், துன்பத்தால் வருந்துபவர்களுக்கு ஆறுதல் சொல்ல நண்பர் இல்லை என்னும் எண்ணமோ?.

## உரிய பயன்

தொலைபேசி மெல்ல நாதம் எழுப்ப வித்தியா அதை எடுத்தாள்; “நான் கஜன் கதைக்கிறேன். வித்தியாவா?” என்று கேட்டது தொலை பேசி ‘ம்’ என்றாள் வித்தியா.

“என்ன ‘ம்’ மனநிலை சரியில்லைப் போலத் தெரிகிறது என்ன நடந்தது?” என்று கேட்டான் கஜேந்திரன்.

“ஒன்றுமில்லையே உங்களுக்கு என்னுடன் தொலைபேசியில் பேசும் போது ஏதாவது குறை கண்டு பிடிக்காவிட்டால் சரிப்பட்டு வராது”

“கோபிக்காதே கண்ணே! எனக்கென்றால் உமது குரலிசையில் உள்ள ஏற்றத் தாழ்வைக் கொண்டு மனதில் உள்ளவற்றைக் கண்டு பிடிக்க முடியும். தொலைபேசியில் நீர் பேசும் போது குஷாலாக இருந்தால் தொலை பேசியும் குஷிப்பட்டு இனிமையாகப் பேசும். இன்று அழுகிறது” என்றான் கஜேந்திரன்.

“இல்லை நீங்கள் இன்று என்னை வருத்த வேண்டு மென்று நினைத்துக் கூறுகிறீர்கள். என்னில் எந்த மாற்றமும் இல்லை. குரல் வழமை போலத் தான் இருக்கிறது. நான் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன்” என்றாள் வித்தியா.

“அதைத்தானே நானும் விரும்புகிறேன். என்று அன்புக்குரியவளுக்கு எந்த வேளையிலும் எந்தத் துன்பமும் வரக் கூடாது. அவள் எந்நாளும் இன்புற்றிருக்க வேண்டும். அவள் இன்புற்றிருந்தால் தான் அவள் மூலமாக எனக்குச் சொர்க்கம் தெரியும். அனிச்சம் பூப்போன்ற மனமுடைய எனது காதலியின் மனம் வாடினால் அவளால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாதென்பது எனக்குத் தெரியும்” கஜேந்திரன் சத்தமிட்டுச் சிரித்தான்.

“உந்தச் சிரிப்புத் தேவை இல்லை. இப்ப சிரிக்கும் படியாக என்ன நடந்தது. விசர்கதைகளைக் கதைத்து விட்டுச் சத்தமிட்டுச் சிரித்தால் விசர் என்று சொல்லுவினை” சற்றுக் கடுமையாகச் சொன்னாள் வித்தியா.

“விசர்தானே. அது உமக்குத் தெரியாதா? வித்தியாவைக் காணாத விசர் ஒரு முறை நேரில் சந்தித்துப் பெற வேண்டியவற்றைப் பெற்றால் தான் நீர் விசர் என்று கூறிய விசரனுக்கு விசர் தீரும்”.

“உங்களின் கதையைக் கேட்க எனக்கு விசர் வந்து விடும்”

“இரண்டு விசரும் ஒரு கணம் சேர்ந்திருந்தால் எப்படி இருக்கும்” மீண்டும் சத்தமிட்டுச் சிரித்தான் கஜேந்திரன்.

“எனக்கு வர்ற ஆத்திரத்திற்கு என்று வித்தியா கூறிக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் குறுக்கிட்டுச் சொன்னான்; “என்னைக் கட்டியணைக்க வேண்டும் என்று தோன்றுகிறதா? எனக்குப் பயமாக இருக்கு. உமக்கு விசர் வந்து விட்டதாகச் சொன்னீர். பிறகு விசரில் என்னைக் கடித்து விட்டால் என்ன செய்வது? ஊசி போட வேண்டும். ஊசி போடுவதை நினைக்க எனக்குப் பயமாக உள்ளது”.

வித்தியா பேசுவதை நிறுத்தினாள்; “தொலைபேசியின் இணைப்பைத் துண்டித்தாள். கஜேந்திரன் மீண்டும் மீண்டும் தொலைபேசியை இயக்கிக் கொண்டிருந்தான். வித்தியா பேசும் கருவியை மேசையில் எடுத்து வைத்தாள்.

பத்து நிமிடங்கள் கழிந்ததும் மேசையில் இருந்த பேசும் பகுதியை எடுத்துத் தொலைபேசியின் மேல் வைத்தாள். வைத்தவுடன் தொலைபேசி நாதமிசைத்தது. அதை எடுத்து காதில் வைத்தாள்; “வித்தி உமக்கு இன்று என்ன நடந்தது. மிகவும் முக்கியமான விஷயம் பற்றிப் பேசத்தான் உம்மோடு தொடர்பு கொண்டேன். நீர் காலநேரம் தெரியாது விளையாடுகிறீர்.

“நான் விளையாடுகிறேனோ...?” என்று கேட்ட வித்தியா தொலைபேசியின் தொடர்பைத் துண்டித்தாள். சிறிது நேரம் அவனைத் தவிக்க வைக்க வேண்டு மென்ற ஆவல் அவன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட நேரத்தில் இருந்து அவளது மனதில் இருந்தது.

ஒரு மணிநேரத்தின் பின்பு அர்ச்சகா அங்கு வந்தாள்; “உனக்குச் சில நேரங்களில் விசர் முற்றி விடுகிறது. கஜேந்திரனுக்குத் தொழில் கிடைத்து விட்டதாம். உன்னுடன் தொலைபேசியில் கதைக்க முடியவில்லையாம். மாலை நான்கு மணிக்கு தான் வருவதாக நகுலனிடம் சொல்லி விட்டார்” என்றாள் அர்ச்சகா.

வித்தியா அதைக் கேட்டு அதிர்ந்து போனாள். அவளுக்கு தன் மீது முதல் முறையாகக் கோபம் வந்தது. “நெஞ்சே! நீ எனது காதலர் என்மீது அன்பு கொண்டு, தான் தொழில் பெற்ற விசயத்தை எனக்குக் கூற முற்பட்ட போது அதைத் தெரிந்து கொள்ள முடியாது ஊடினாய். இப்போது கவலைப்படுகிறாய். எனது செயலால் அவர் எவ்வளவு துன்பங்களை அனுபவித்திருப்பர்” என்பதை நினைக்க அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. உடனே அவனைப் பார்க்க வேண்டும் மென்ற ஆவல் மனதில் எழுந்து வளர்ந்து கொண்டிருந்தது.

**1294. இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே**
**துனிசெய்து துவ்வாய்காண் மற்று?.**

நெஞ்சமே! நீ காதலரைக் கண்டவுடன் ஊடல் கொண்டு உரிய பயனை அனுபவிக்க மாட்டாய்; இனிமேல் அவரைப் பற்றி உன்னோடு கலந்து எண்ணிப் பார்க்கப் போகிறவர் யார்?.

## தீராத அச்சம்

“மனம் மிகமிகப் புதுமையானதடி இதோடு வாழ்வதென்பது முடியாத காரியம். நான் அவருடன் தொலைபேசியில் பேச ஆரம்பித்த உடனேயே அவர் எனது மனநிலையைப் புரிந்து கொண்டார். அதனால் அவர் என்னைத் திருப்திப்படுத்தி, மகிழ்ச்சியில் ஆழ்த்தி விட்டு என்னைத் திகைக்கப் பண்ண விரும்பியே அவர் தனக்குத் தொழில் கிடைத்ததை முதலில் சொல்லவில்லை. என்ன தான் அம்மா புத்திமதிகள், ஆலோசனைகள் கூறினாலும் என்னால் அவரைக் காணாமல் இருக்க முடிவதில்லை. அவரிடமிருக்கும் ஏதோ ஒரு சக்தி என்னைக் காந்தம் போலக் கவருகிறது. அதனால் சாத்திர சம்பிரதாயங்களை யெல்லாம் மனம் ஏற்க்க மறுக்கிறது. அம்மா சொல்லும் வேளையிலும், அவரைக் காணும் வேளையிலும் அம்மாவின் அறிவுரைகளைப் பற்றி மனம் சிந்திக்கிறது. ஆனால் அவர் இல்லாத போது அவரைக் காண முடியவில்லையே என்று மனம் தவியாகத் தவிக்கிறது. அந்த நேரங்களில் சாத்திர சம்பிரதாயங்கள் அல்ல வாழ்க்கை எனக்கென்று ஒரு வாழ்க்கை ஏற்கனவே திட்டமிடப் பட்டிருந்தால் தான் நான் கஜேந்திரனை அடையக் கூடியதாக இருந்தது. அதனால் தான் அங்கஜன் இன்னொரு பெண்ணை விரும்பினார். எனக்கெனக் கடவுளால் தீர்மானிக்கப்பட்ட வாழ்வில் ஒரு சிறிதளவையும் கூட்டவோ குறைக்கவோ யாராலும் முடியாது. எனவே சாத்திர சம்பிரதாயங்கள் தேவையில்லை என்று மனம் கூறி அவரை வீட்டுக்கு வருமாறு அழைக்கச் சொல்லும்” என்றாள் வித்தியா.

அப்பொழுது கஜேந்திரன் அங்கு வந்தான். அவளின் பின்னால் கண்மணி வந்தாள். அவளது முகமெல்லாம் பற்களாக இருந்தன. “தம்பிக்கு வேலை கிடைத்து விட்டதாம். கணித விரிவுரையாளராகப் பல்கலைக் கழகத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றாள்.

வித்தியா மட்டற்ற மகிழ்ச்சியுடன் கஜேந்திரனைப் பார்த்தாள். அவனது குறுந்தாடியுள்ள முகம் மலர்ந்திருந்தது. அவன் வந்ததும் அர்ச்சகா சொல்லாமலே விலகிச் சென்றாள்; “இன்றைக்கு இங்கேயே சாப்பிட்டு விட்டுப் போம் தம்பி” என்ற கண்மணி அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

“உமக்குக் கால நேரம் தெரியாது. எல்லா நேரமும் கொஞ்சி விளையாடுவீர். தபாற்காரன் கடிதத்தைத் தந்தவுடன் பிரித்துப் பார்த்தேன். உடனே அச்செய்தியை உமக்குச் சொல்லி மகிழ

வேண்டும் என்று நினைத்தால் நீர் விளையாடுகிறீர். பிறகு நகுலனிடம் சொன்னேன். அவன் தான் அர்ச்சகாவுக்குத் தொலை பேசியில் சொன்னது. இனியென்றாலும் குழந்தைப் பிள்ளைத் தனத்தை விடும். குழந்தையைப் பராமரிக்க வேண்டிய வயதிலை குழந்தைப் பிள்ளை விளையாட்டு'' அருகே வந்த கஜேந்திரன் தலை குனிந்து நின்ற வித்தியாவின் தலையை அவளது நாடியைப் பிடித்து நிமிர்த்தினான் அவளது கண்கள் குளமாகியிருந்தன; ''என்ன? என்ன நடந்தது. காலையிலும் ஒரு மாதிரியாக இருந்தீர். இப்பவும்.. சுகமில்லையா?'' பதறினான் கஜேந்திரன்.

வித்தியா முறுவலித்தாள். பிரகாசமான அவளது கன்னங்கள் மேலும் பிரகாசமாகின. அவற்றினூடாகக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது; ''நான் அந்த நல்ல செய்தியைக் கேட்க முடியாமல் போயிற்றது. இன்றைக்குத் தான் எனக்கு நிம்மதி..'' விம்மினாள்.

''மகிழ்ச்சி; நிம்மதி என்று சொல்லி விட்டு அழுதால் ....'' என்று கஜேந்திரன் சொல்ல; ''இது ஆனந்தக் கண்ணீர். எனது வாழ்வைச் சிறப்பித்து உங்களுடன் சேரும் நாள் நெருங்கி விட்டதை நினைத்து மகிழ்வதால் உண்டான கண்ணீர் வேலை கிடைத்து விட்டது. இனி உங்களை நான் விட்டுப் பிரிய மாட்டேன்'' சிரித்தாள் வித்தியா.

''திருமணமாகும் வரை கூடப் பிரிய மாட்டீரா? உமது அம்மாவின் சாத்திர சம்பரதாயங்கள்...'' கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது வித்தியா சொன்னாள்; ''பழங்காலத்து மனிதரின் கதையை ஒரு கதையாக மதிக்கத் தேவையில்லை. இனி உங்களை என்னை விட்டுச் செல்ல அனுமதிக்க மாட்டன். இனிப் பிரிந்திருக்க முடியாது. அம்மா என்ன செய்வா? புத்திமதிகள் கூறுவா சாத்திர சம்பிரதாயங்களைச் சொல்லுவா. இதையெல்லாம் நம்பத் தேவையில்லையென்று கூறுவேன். சாத்திர சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று தான் எம்மைச் சேர்த்து வைத்தது. இனி எவற்றாலும் எமமைப் பிரிக்க முடியாது. நீங்கள் என்னை விட்டு விட்டுச் செல்ல இனி நான் அனுமதிக்க மாட்டன்''. என்றாள் வித்தியா உறுதியாக.

கஜேந்திரன் சிரித்தான்; ''என்னைக் காணாவிட்டால் காணவில்லையே என்று துன்பப்படுவீர். கண்டு விட்டால் பிரிந்து சென்று விடுவேன் என்று துக்கப்படுவீர். எந்த நேரமும் தேவையில்லாமல் துன்பப்படுவது தான் உமது இயல்பு'' என்றான் கஜேந்திரன்.

**1295. பெறாஅமை அஞ்சும்; பெறின்பிரிவு அஞ்சும்**
**அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு.**

காதலர் இல்லாத போது அவரைக் காண முடியவில்லையே என்று அஞ்சுவாய்; காதலரைக் கண்டால் அவர் பிரிந்து சென்று விடுவார் என்று அஞ்சுவாய்; இப்படித் தீராத துன்பத்தைத் தருவதற்காகவே நெஞ்சு என்னுடன் இருக்கிறது.

## நெஞ்சின் வருத்தம்

''காதலரின் இயல்பு அது தானே. என்னைத் தேவையில்லாமல் சீண்டுவதும் நான் விரும்பிய நேரம் வராமல் விடுவதும், நான் வரச் சொன்னால் பல வேலைகள் இருப்பதாகக் கூறுவதாலும் தான் எனக்கு அந்த நிலை ஏற்படுகிறது'' முணுமுணுத்தாள் வித்தியா.

''உம்முடன் நான் முழுநேரமும் இருக்க முடியுமா...? எனக்கென்று வேறு வேலைகள் இல்லையா..? நான் கடற்கரைக்கு வரச் சொன்னால் எத்தனை சாட்டுக்கள் சொல்வீர். கடற்கரைக்கு வந்தாலும் பரபரப்புத்தான். சரியாகக் கதைக்க முடிகிறதா? இல்லை பிரயோசனமான கதைகள் ஏதாவற்றையும் கதைக்கிறீரா? அம்மா அறிந்தால் கரைச்சல்; இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்பதை நினைக்க எனக்குப் பயமாக இருக்கிறது. அம்மா கடைசி வரையும் எமது திருமணத்திற்குச் சம்மதிக்க மாட்டா; அம்மா நோயாளி நான் உங்களுடன் வந்தால் அவா அதிர்ச்சியால் இறந்து விடுவா'' என்பீர். அருகில் வந்தால்; கிட்ட வராதைங்கோ யாராவது கண்டால் கரைச்சல் என்பீர். அது சரி. உமக்கு அதனால் துன்பமேற்படும் என்பதை உணர்ந்து மனதில் பல்வேறுபட்ட ஆசைகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் வெளிக்காட்டாமல் உமது மனமகிழ்ச்சிக்காக நான் எனக்குள்ளே எரிந்து கொண்டிருந்தேன். ஏனென்றால் உம்மை நான் அளவுக்கதிகமாகக் காதலிக்கிறேன். அதற்காக எதையும் பொறுக்க என்னால் முடியும். ஆனால் இப்பொழுது இரு வீட்டாரும் சம்மதித்து விட்னர். மனதில் பல ஆசைகளைச் சுமந்து கொண்டு உம்மோடு கதைக்க வந்தால் நீர் அம்மாவுக்குப் பிடிக்காது; சாத்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கை வைத்துள்ளா; இங்கே வரவேண்டாம் என்பீர்...'' என்று கஜேந்திரன் சொல்லிக் கொண்டிருந்தான் வித்தியா கோபத்துடன் குறுக்கிட்டாள்; ''அப்போ நான் சொல்வதெல்லாம் பொய். நீங்கள் தான் அம்பிகாபதி. நான் மனதில் ஈரமில்லாதனான். அப்படித்தானே. உங்களைப் பிரிந்து நான் தனியாக இருக்கும் வேளைகளிலெல்லாம் எனது நெஞ்சு எனது காதலரைக் காண

வேண்டும். அவரோடு கூடிக்குலாவ வேண்டும் என்று என்னைத் தின்று விடும். நீங்கள் என்னடா வென்றால் அடுக்கு வசனம் பேசுகிறீர்கள்''

''அதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நீர் பேசும் பேச்சுத்தான். எனக்குப் பிடிக்கவில்லை. முன்பு நீர் சொன்னது யாவும் சரி. ஆனால் இப்பொழுது நான் வந்த பின் கூறியது சரியா...?'' என்று கேட்டு விட்டு வித்தியாவைப் பார்த்தான் கஜேந்திரன். அவள் எதுவும் பேசவில்லை. அதனால் அவன் சொன்னான்; ''ஒன்றில் நீர் அம்மா சொல்வதைப் போலச் சாத்திர சம்பரதாயங்களை நம்பி நடக்க வேண்டும் இல்லாவிட்டால் அவற்றை விட்டு விட்டு என்னுடன் சந்தோசமாகப் பேச வேண்டும். இரண்டையும் விடக் கூடாதென்றால் நான் என்ன செய்வது. நான் இன்று இரவு இங்கு தங்கி விட்டு விடியப் போகட்டா?'' என்று கேட்டான்.

வித்தியா அவன் அப்படிக் கேட்பான் என்று எதிர்பாராததால் சற்றுத் தடுமாறினாள். பின் சிரித்தாள்; ''என்னை மயக்குவது போதையான உந்தச் சிரிப்புத்தான். சிரித்து மழுப்பாமல் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்லும்...'' என்றான் கஜேந்திரன்.

''உண்மையைச் சொல்வதனால் நீங்கள் இரவு என்னுடன் தங்கினால் நான் மிகவும் சந்தோசப்படுவேன். நான் தனியே இருந்து உங்களை நினைத்தால் என் நெஞ்சமே என்னைத் தின்பது போல வருத்தும். அதனால்....'' வித்தியாவை மடக்கினான் கஜேந்திரன்; ''அதனால் உங்களின் வீட்டுக்குச் சொல்லுங்கோ. அம்மாவின் மனதை ஏன் நோகப் பண்ணுவான். என்னைத் தின்னும் எனது மனதிற்குச் நான் சமாதானம் சொல்கிறேன் அது சற்று நேரம் ஏற்காமல் அடம்பிடிக்கும். ஆனால் பின் அழுதழுது ஏற்றுக் கொள்ளும்'' அப்படித்தானே.

''நீங்கள் பயங்கரமான ஆள். உங்களுடன் கதைத்து வெல்ல முடியாது. அதிருக்கட்டும் வேலை கிடைத்ததற்குப் பரிசாக என்ன கொண்டு வந்துள்ளீர்கள்? நான் உங்களுக்குப் பரிசாக...'' என்றவள் அவனைக் கட்டித் தழுவினாள்.

''கடவுளே! இத்தனை பெரிய பரிசா...? இதற்காக எனக்குத் தினமும் ஒவ்வொரு வேலை கிடைக்க வேண்டும்'' என்றான் கஜேந்திரன். வித்தியா நாணிக் கோணியபடி முணுமுணுத்தாள்; ''இன்றைக்கு உங்களை நான் போக விட மாட்டன்''.

**1296. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்**
**தினிய இருந்ததுஎன் நெஞ்சு.**

காதலரைப் பிரிந்து தனியே இருந்து அவருடைய தவறுகளை நினைத்தால், எனது நெஞ்சே என்னைத் தின்பது போலத் துன்பம் உண்டாகிறது.

### நெஞ்சோடு சேர்ந்து

''அடுத்தடுத்து இப்படியான பரிசு தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருந்தால் நான் வீட்டுக்கு ஏன் செல்லப் போகிறேன். எனக்குரியவள் எனக்கு எப்போது தருவாள் என எந்நாளும் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தேன். அதிஸ்டலாபச் சீட்டில் ஒரு கோடி ரூபா பரிசு விழுந்ததைப் போல இன்று நான் மிகவும் சந்தோசமாகவுள்ளேன். இது எனக்கு இன்ப அதிர்ச்சியைத் தந்து விட்டது. வித்தியாவா? என்வித்தியாவா? இப்படி என்னுடன் நடந்து கொண்டது நான் கனவு காணவில்லையே..? அப்படி ஒரு நிகழ்வு நடந்ததா..?'' என்று ஆச்சரியப்பட்டான் கஜேந்திரன்.

வித்தியா தலை குனிந்து நின்றாள் அவளுக்கு வெட்கமாக இருந்தது; ''அப்படி ஒரு துணிவு எனக்கு எப்படி ஏற்பட்டது'' என்று எண்ணினாள்.

''நான் இரண்டு பரிகள் தர வேண்டும். ஒன்று எனக்கு உத்தியோகம் கிடைத்ததற்காக. மற்றது உமது பரிசுக்குப் பதில் பரிசாக'' சிரித்தான் கஜேந்திரன்.

மெல்லத் தலையை நிமிர்த்திக் கஜேந்திரனைப் பார்த்தாள் வித்தியா; ''காதலரை மறக்க முடியாத என் மட நெஞ்சோடு சேர்ந்து, நான் மறக்கக் கூடாத நாணத்தையும் மறந்து விட்டேன். இது எனது நெஞ்சு செய்த வேலை'' என்றாள் வித்தியா.

''பல நாட்களாக கிடைக்காதா என்று ஏங்கித் தவித்தது இன்று கிடைத்து விட்டது. இனிமேல் தொடர்ந்து கிடைக்கும்.''

வித்தியா எதுவும் பேசாமல் சிலகணங்கள் நின்றாள். அப்போது வாசலில் கண்மணி வந்து வித்தியாவின் பெயரைச் சொல்லி அழைத்தாள்; ‘‘வித்தி, மருமகனுக்கு வேலை கிடைத்தமைக்காக நான் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு அர்ச்சகாவுடன் சென்று அர்ச்சனை செய்து கொண்டு வந்துள்ளேன். இந்த வீபூதி பிரசாதத்தை அவருக்குக் கொடுத்து நிறம் பூசு என்ற கண்மணி கஜேந்திரனின் பக்கம் திரும்பிச் சொன்னாள்; ‘‘எனது குல தெய்வமான நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி எனக்கு ஒரு போதும் குறை வைத்ததில்லை. அவரின் அனுக்கிரகத்தால் தான் இவள் பிறந்தவள். அதனால் தான் மகா கணபதியின் முன்னுள்ள பெயரான வித்தியாவை இவளுக்குப் பெயராக வைத்தேன். அண்ணாவுக்கும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி மீது பற்று அதிகம். அதனால் தான் தனது மகனுக்கு அங்கஜன் எனப் பெயரிட்டார். என்ன அதிசயமோ தெரியாது அங்கஜன் திருமணம் செய்ய மறுத்த போது மகா கணபதி கஜேந்திரன் என்ற தனது நாமத்துக்குரியவனை எனக்கு மருமகனாக்கியுள்ளார். அவரது புதுமை புதுமை தான் என்று கூறிவிட்டுக் கலங்கிய கண்களுடன் அறையை விட்டுச் சென்றாள்.

‘‘உமது அம்மா என்னைத் தனது மருமகனாக அதாவது நாவலர் ஸ்ரீவித்தியா கணபதியின் கொடையாக ஏற்று விட்டா. இனி நான் தினமும் வரலாம். உம்மைக் கேட்டால் மகா கணபதி தான் வந்து போகிறார். அவரோடு கதைக்கக்கூடாத கதைகளைக் கதைக்கக் கூடாது என்று சொல்லும்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘வித்தியா முழுமையாகச் சிரித்தாள். தாயின் மனமாற்றத்தையும் அதனால் அவர் பெறும் சந்தோசத்தையும் நினைக்க அவளுக்குப் பூரிப்பாக இருந்தது; ‘‘உண்மையில் மகா கணபதியின் கருணை தான் அது’’ என்று நினைத்து ஒரு கணம் கண்களை மூடினாள் வித்தியா.

‘‘வித்தி, நான் அவசரமாக வீட்டுக்குச் செல்ல வேண்டும். எனக்குக் கடிதம் வந்த போது அப்பா வீட்டில் இருக்கவில்லை. சிறு வயது முதல் எனது நல்வாழ்விற்காகக் கடுமையாக உழைத்த அப்பாவுக்கு இச் செய்தியைச் சொல்லி அவர் படும் இன்பத்தை நான் கண்குளிரப் பார்க்க வேண்டும். நான் போய் வரட்டா?’’ என்று கேட்டான் கஜேந்திரன்.

‘‘போய் அப்பாவுக்குச் சொல்லி விட்டு உடனே திரும்பி வாருங்கள். இன்று உங்களின் அருகில் இருந்து உணவை நான் பரிமாற வேண்டும். அப்படி ஓர் ஆசை இன்று எனது மனதில் வந்து விட்டது’’ என்றாள் வித்தியா.

‘‘சரி’’ என்று கூறி விட்டுப் புறப்பட்டான் கஜேந்திரன். அவன் சென்ற சிறிது நேரத்தில் கண்மணி தேநீருடன் வந்தாள். அங்கு கஜேந்திரனைக் காணாமையால் வித்தியாவைக் கண்டித்தாள்; ‘‘வேலை கிடைத்ததாகக் கூறிய பிள்ளைக்கு இனிப்பாக ஏதாவது கொடுத்தாயா...? என்ன பிள்ளைகளோ..’’ என்றாள்.

வித்தியா சிரித்தாள்; ‘‘வாழ்க்கையில் மறக்க முடியாத தொன்றைக் கொடுத்துள்ளேன். இனிப்பாம் இனிப்பு’’ என்று நினைத்தாள்.

**1297. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்**
**மாணா மடநெஞ்சில் பட்டு.**

காதலரை மறக்க முடியாத என்னுடைய மடமை பொருந்திய நெஞ்சோடு சேர்ந்து, மறக்கத் தகாததாகிய நாணத்தையும் நான் மறந்து விட்டேன்.

## நெஞ்சு நினைக்கும் குணம்

மாதுமைக்குப் பொழுது போவது மிகவும் சிரமமாக இருந்தது. முன்பென்றால் அர்ச்சகாவுடன் இருந்தால் பொழுது போவதே தெரியாது. கலகலப்பாகக் கதைப்பாள். எங்காவது வெளியே செல்ல வேண்டும் என்று சொல்வாள். ஆனால் இப்பொழுது அர்ச்சகா வாய் மூடி மௌனியாகி விட்டாள். கலகலப்பான நகைச்சுவைக் கதைகளும் கேலியும் கிண்டலும் முற்றாகக் குறைந்து விட்டன. கட்டிலில் படுத்திருந்து கொண்டு முகட்டைப் பார்த்தபடி படுத்திருப்பாள். யாராவது கிட்டச் சென்று கதைத்தாலும் அவளுக்குக் கேளாது. ஏதோ பெருங் கோட்டையைப் பிடிக்கத் திட்டமிடுபவளைப் போலிருப்பாள். கேட்டால் தான் ஏதாவது சொல்வாள். அந்த நிலையில் அவள் கொழும்பில் இருந்தமையால் தான் அவள் யாழ்ப்பாணத்திற்கு வந்தாள். இங்கு வந்தால் அர்ச்சகாவும் அந்த நிலையில் இருந்தால் அவளுக்கு அங்கிருக்க வெறுப்பாக இருந்தது. கொழும்பில் வேறு பல தோழிகள் இருந்தனர். அவர்களுடன் மிருகக் காட்சிச் சாலை, தொல்பொருள் காட்சிச் சாலை, விகாரமகாதேவி பூங்கா, பேராதனைப் பூங்கா, என்று உலாச் செல்லலாம். இல்லாவிட்டால் சினிமாப்படம், நாடகம், நடனம் என்று

செல்லலாம். இவை யெல்லாம் யாழ்ப்பாணத்தில் இல்லாததாலும் அர்ச்சகா கலகலப்பாகக் கதைக்காததாலும் கொழும்புக்குச் செல்ல விரும்பினாள் மாதுமை.

“அர்ச்சகா நான் வரும் போது மிகவும் மகிழ்வுடன் வந்தேன். இப்போது அந்த மகிழ்வில் நூறில் ஒரு பகுதி கூட இல்லை. என்னைப் போல நீயும் எந்நேரமும் யோசித்துக் கொண்டிருப்பதால் நான் இங்கிருப்பதால் என்ன பயன். அதனால் நான் வீட்டுக்குப் போகலாமென்று நினைக்கிறன் என்றாள் மாதுமை.

மாதுமையை அர்ச்சகா பரிதாபத்துடன் பார்த்தாள்; “என்னடி செய்வது, உன்னைப் போலத் தானே நானும் இருக்கிறன். அவர் என்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். அதனால் உண்டான மனவருத்தம் தான். என்னை மன்னித்துக் கொள்ளடீ” கெஞ்சினாள் அர்ச்சகா.

மாதுமை எதுவும் பேசவில்லை. அர்ச்சகாவைப் பார்த்தாள். அவளது முகம் கவலையால் கறுத்திருந்தது; “நான் உன் மீது கொண்ட வெறுப்பிலா சொல்கிறேன். எனது நிலையைச் சொன்னேன்” என்றாள்.
அர்ச்சகா எதுவும் சொல்லவில்லை. அவளது நினைவுகள் நகுலனை நோக்கிச் சென்றனர்; “சிறிது நேரம் கழித்து மாதுமை சொன்னாள் வழமையாக அவர் தொலை பேசியில் கதைக்கும் போதுள்ளது போல காலையில் கதைக்கும் போது குரல் இருக்கவில்லை. முன்பு ஒரு முறை நண்பர்களுடன் சேர்ந்து மதுபானம் அருந்தி விட்டு விழுந்து விட்டார். அன்று அவரது குரல் மாறுபட்டிருந்தது. அதன் பின் நான் அவருடன் ஒரு மாதம் வரை கதைக்கவில்லை. அதனால் விபுலன் எனது கையில் அடித்து; “நான் இனிமேல் மதுபானம் அருந்த மாட்டேன்” என்று சத்தியம் செய்தான்.

இன்றும் அப்படிக் குடித்திருப்பர் என்று எண்ணிக் கவலைப்படுகிறாயா?” என்று கேட்டாள் அர்ச்சகா; “இல்லை அவர் என்மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். அதன் பின் அவர் குடிக்கவில்லை. தனது குடிகார நண்பர்களுடனும் சேர்வதில்லை. எனக்காக அவர் தனது பல செயற்பாடுகளை விட்டிருக்கிறார். முன்பு அவருக்குக் கோயிலுக்குச் செல்ல விருப்பமில்லை. என்னை விரும்பிய பின்பு செவ்வாய்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் அர்ச்சனைத் தட்டும் கொண்டு என்னுடன் கோயிலுக்கு வருவார். பஜனை பாடுவார், சுவாமிகாவுவார். கோயிலில் திருத் தொண்டுகள் பலவும் செய்வார் என்றாள் மாதுமை.

“மாதுமை உம்மால் தான் நான் மனிதனானேன். கெட்ட நண்பர்கள் பலர் என்னுடன் நட்புப் பூண்டிருந்தனர். அவர்களை உமக்குப் பிடிக்காததால் நான் அவர்களின் நட்பை விட்டு விட்டேன். கடவுளில் பற்றில்லாத நான் இப்பொழுது உமக்காகப் பக்தனாகி விட்டேன். தேவாரம் திருவாசகம், புராணம், திருப்புகழ் யாவும் எனக்குத் தெரியும் அத்துடன் திருவிழாக்காலங்களில் சிறு பிள்ளைகளுக்கு பஜனை சொல்லிக் கொடுப்பான். அச்சொற்கள் மாதுமைக்குச் சந்தோசத்தைக் கொடுத்தன. விபுலனின் தாய் ஒரு நாள் சொன்னார்; “மாதுமை நீ விபுலனைக் கொண்டு அர்ச்சனைத் தட்டைத் தூக்கப் பண்ணிவிட்டாய். பஜனை பாடப் பண்ணி விட்டாய், இது ஒரு பெரிய சாதனை” அதை நினைக்க மாதுமைக்குப் பெருமையாக இருந்தது. அப்படியிருக்க அவர் மீண்டும் குடித்திருப்பார் என்று எண்ணுவது தவறு. அவரை நானே குறைத்து மதிப்பிடலாகாது. அவர் உயர்ந்தவர்.” என்று நினைத்தாள் மாதுமை. அவளது மனம் அவனது உயர்ந்த செயல்களை எண்ணிப் பார்த்து மகிழ்ந்தது.

**1298. எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்**
**உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.**

உயிரின் மேல் காதல் கொண்ட எனது நெஞ்சு, பிரிந்து சென்ற காதலரை இகழ்தல் இழிவான செயல் என்று எண்ணி அவருடைய உயர்ந்த பண்புகளையே நினைக்கிறது.

**யார் துணை**

காதலிப்பவர்களுக்கு அடிக்கடி துன்பங்கள் வரும். அது இயற்கையின் நியதி. காதலிக்கும் போது சிறு சிறு பிரச்சினைகள் ஊடலாகத் தோன்றினாலும் அவை துன்பத்தையே கொடுக்கும். அதற்கு ஆறுதல் கூற யாராலும் இயலாது. தனக்குத் தானே ஆறுதல் கூறுதல் வேண்டும். துன்பம் வரும் போது ஒருவருக்கு, உரிமையான நெஞ்சே உடனிருந்து துணை செய்யும். அப்படிச் செய்யா விட்டால் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்து விடும். நீ இங்கு என்னுடன் ஒரு மாதம் தங்கப் போவதாகச் சொன்னாய். பெற்றோர் சென்ற பின்பும் என்னுடன் தங்கியிருந்து சிறிது காலம் இவ் ஊரைப் பார்க்கப் போவதாகச் சொன்னாய் அதனால் மிகவும் மகிழ்ந்தேன். இப்பொழுது நான் உன்னைப் போலவே சோகத்தில் இருப்பதாகக் கூறி வீட்டுக்குப் போகப் போறதாகக் கூறுகிறாய். தயவு செய்து உனது நிலையை நினைத்துப் பார். நான் கொழும்பில் இருந்த காலத்தில் நீ விபுலனைக் காதலித்தாய் அப்பொழுது நானும் எனது தோழியரும் உனது வீட்டுக்கு வரும் வேளைகளில் வந்தால் விபுலன்

வீட்டில் இருந்தால் அவனுடனே கூட இருப்பாய்; ''மன்னித்துக் கொள்ளுங்கோ. ஏழெட்டுத் தினங்களுக்குப் பின்பு இப்பொழுது தான் என்னைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். அவர் சென்ற பின்பு உங்களிடம் வருகிறேன்'' என்பாய். அவர் எப்போது போவார் எனக்காத்திருந்து களைத்துப் போய் திரும்புவோம். விபுலன் இல்லாத வேளைகளில் அவரின் புராணத்தையே பாடிக் கொண்டிருப்பாய். அதைக் கேட்டுச் சகிக்க முடியாமல் நாம் அவதிப்படுவோம். நாம் வரும் வேளைகளில் நீ விபுலனுடன் ஏதாவது ஊடல் கொண்டிருந்தால் ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பாய். இது தானே வழமை. அப்போது நான் காதலிக்கவில்லை. காதலிக்காததால் அதன் தன்மை புரியவில்லை. தோழியர்கள் சந்திக்கும் போது அதைப்பற்றிக் கதைத்துச் சிரிப்போம். அதை நினைத்துப் பார். நாலைந்து தினங்களாக அவர் என்னை விட்டுக் கொழும்புக்குச் செல்வதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்ததால் நான் தவித்துப் போனேன். அதனால் தான் உன்னுடன் கதைக்க முடியவில்லை. அது குறையானால் என்னை மன்னித்துக் கொள்ளடி'' அர்ச்சகா கலங்கினாள்.

மாதுமை பதறிப்போனாள்; ''இதற்கெல்லாம் எதற்கு மன்னிப்பு , நான் தாங்க முடியாத சோகத்தில் இருந்ததால் தவறாகக் கதைத்து விட்டேன் என்று எண்ணுகிறேன். விபுலனின் நினைவு வந்தால் நீ சொன்னது போல எனது மனம் துயரப்படும். பின் எனது மனமே எனக்கு ஆறுதல் கூறும். இப்பொழுது எனது மனம் ஆறுதல் கூற மறுத்து அவரைக் காணவேண்டும்; அவரோடு பேச வேண்டும் என்று அடம் பிடிக்கிறது. துன்பத்தில் ஒருவருக்கு, உரிமை உடையதாகிய நெஞ்சே உடனிருந்து துணை செய்யா விட்டால் வேறுயார் துணை செய்வார்கள்?'' என்று கேட்டாள் மாதுமை.

''அது எனக்குத் தெரியும். அதனால் நான், நீ கூறியவற்றைக் குறையாக நினைக்கவில்லை. நீ முன்பு கூறியதைப் போல என்னுடன் இங்கு தங்கியிரு. அவர் கொழும்புக்குச் செல்கிறார். திரும்பி வந்ததும் தங்கையின் திருமணம் நடைபெறும். எமது வழக்கப் படி ஒரு வருடத்துக்குள் ஒரு வீட்டில் இரண்டு திருமணங்கள் நடைபெறக் கூடாது. அது கெடுதியை விளைவிக்கும் என்பார்கள். அதில் உண்மை இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. எனவே இருவரும் சேர்ந்திருந்து துன்பத்தைப் பயிர்ந்து கொள்வோம்'' என்றாள் அர்ச்சகா.

''நான் நடுச்சாம வேளைகளில் விழித்து விடுகிறேன். அந்த நேரம் நான் படும் துன்பத்திற்கு ஆறுதல் கூறுவதற்கு யாரும் இல்லை. என் நெஞ்சு தான் அவர் விரைவாக வந்து எனக்கு இன்பமளிப்பார் என்று உறுதியாகக் கூறும். அதை நம்பித்தான் நான் உயிர் வாழ்கிறேன். சில சமயம் அவரைப் பற்றி விபரீதமாகக் கூறும். நான் அதனால் பெரும் வேதனைப்படுவேன். சில மணி நேரத்தின் பின் தான் கூறிய விபரீதமான சம்பவங்களுக்குத் தானே ஆறுதல் கூறும். இப்படி மாறி மாறிக் கூறிக் கொண்டிருப்பதால் தான் எனக்கு அவரின் மீது நம்பிக்கை ஏற்படுகிறது. அடுத்தவர்கள் கூறுவதை எனது நெஞ்சு ஏற்க மறுத்ததால் தான் அவரின் மீது எனக்குக் காதல் உண்டானது. இந்த நெஞ்சின் போக்கே விசித்திரமானது'' என்றாள் மாதுமை.

**1299. துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய**
**நெஞ்சம் துணையல் வழி?.**

ஒருவருக்குத் துன்பம் வந்த போது, அவருக்கு உரிமையான நெஞ்சே துணையாகா விட்டால், வேறு யார் துணையாவர்.

**இயல்பானது**

ஒருவருக்குத் துன்பம் வந்த காலத்தில் அவருக்கு உற்ற துணையாக இருப்பது அவரது நெஞ்சு தான். ஆனால் எவரும் தமது மனதைக் கட்டியாளும் திறமை படைத்தவர்களாக இருப்பதில்லை என்னால் ஒரு கணம் கூட எனது மனத்தை என்னால் கட்டியாள முடிவதில்லை. அத்துடன் என்மீது அளவற்ற அன்பு செலுத்தும் காதலரைக் கூடச் சில நேரங்களில் எனது மனம் சந்தேகப்பட வைத்து விடுகிறது. எமது தோழி சாவித்திரி கணேசன் மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தாள். எவ்வளவு தீவிரமாக அவனைக் காதலித்தாள். அவனை நம்பி கடற்கரைக்கும் சினிமாவுக்கும் சென்றாள். அவன் சாவித்திரியைப் பற்றி எமக்கு எப்படியெல்லாம் சொன்னான். விபுலன் உன்னில் வைத்திருந்த அன்பிலும் பார்க்க அவன் எவ்வளவு அன்பு வைத்திருந்தான். பலதடவைகள் நீயே அவனைப் பற்றிக் கூறியிருக்கிறாய்; ''அர்ச்சகா கணேசன் சாவித்திரி மீது உயிரையே வைத்திருக்கிறான். எந்நேரமும் அவளின் கதைதான். இப்படி உன்னோடு ஒரு நாளென்றாலும் விபுலன் கதைத்திருப்பாரா? வருவார், வந்தால் நாமிருவரும் கதைப்போம். ஆனால் கணேசனும் சாவித்திரியும் கதைப்பதைப் போல ஒரு நாளென்றாலும் கதைக்கவில்லை. சாவித்திரி கொடுத்து வைத்தவள். அவளுக்குப் பின்னால், அவள் சொல்வதை மந்திர வாக்காகக் கேட்டுக் கொண்டு திரிகிறான்'' என்பாய். நானும் அவர்களின் காதலைப் பற்றி உயர்வாக நினைத்தேன். கடைசியில் வேலை கிடைத்ததும் அலுவலகத்தில் உள்ள ஒரு பெண்ணோடு சுற்றினான். நாம் அதை அறிந்து சாவித்திரியிடம் கேட்ட போது அவள் என்ன சொன்னவள்; ''எனது காதலர் என்மீது உயிரையே வைத்திருக்கிறார். அலுவலகத்தில் வேலை

செய்பவர்களுடன் சகசமாகப் பேச வேண்டும் தானே. விபுலன் எம்மோடெல்லாம் கலகலப்பாகக் கதைக்கிறார். கண்ட இடங்களில் தீன் பண்டங்கள் வாங்கித் தருகிறார். இதையெல்லாம் தப்பாக நாம் எண்ண முடியுமா...? எம்மோடு கதைக்கும் போது நீ அவரைத் தப்பாக நினைக்கிறாயா?'' என்று கேட்பாள். எனக்கு அதில் நம்பிக்கை இல்லா விட்டாலும் அவள் சொல்வதில் நியாயம் இருப்பதைப் போலத் தோன்றும். பின்பு கணேசன் சாவித்திரியை ஏமாற்றி விட்டு அலுவலகத்தில் தான் கூடித் திரிந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். அதை நினைக்க எனக்குப் பயமாக இருக்கு இப்போது நான் உன்னோடு கலகலப்பாகக் கதைக்காமைக்கும் அது தான் காரணம். சில வேளை நகுலன் என்னை ஏமாற்றினால், நான் சாவித்திரியைப் போல உயிர் வாழ மாட்டன். உடனேயே செத்துப்போவன்'' விம்மினாள் அர்ச்சகா.

''வீணான கற்பனைகளைப் பண்ணி மனதைக் கெடுக்காதே. நீ அவர்களின் வீட்டுக்குச் சென்று வந்துள்ளாய். எல்லோரும் கணேசனைப் போல இருக்க மாட்டார்கள். ஆயிரத்தில் ஒருவர் அப்படி இருக்கலாம். கஜேந்திரனை நீ ஏன் நினைத்துப் பார்ப்பதில்லை தன்னில் நம்பிக்கை வைக்க வேண்டும் இல்லாவிட்டால் மனம் தவறான கற்பனைகளை சிருஸ்டிக்கும். மேலும் மேலும் உண்மைக்குப் புறம்பானவற்றைச் சிந்திக்கச் செய்து நம்மை அழித்துவிடும். நம்பிக்கையுள்ள மனம் எம்மைச் சரியான வழியில் எண்ண வைக்கும். அதனால் இன்பமுண்டாகும்'' என்றாள் மாதுமை.

''ஒருவருக்கு, உரிமையும் உறவும் உடையவர்களுடைய நெஞ்சம் எப்பொழுதும் அவருக்குத் துணையாக இருத்தல் வேண்டும். அப்படி இல்லாவிட்டால் உறவே இல்லாத அயலவர் துணைவராமல் இருப்பது இயல்பு. சாவித்திரி உரிமையும் உறவும் உடையதென நினைத்திருந்த கணேசனது நெஞ்சம் உதவி செய்யாமல் அவளை மீள முடியாத துன்பத்திற்கு உட்படுத்தி விட்டது. இனி அவளுக்கு ஆறுதல் கூற யார் இருக்கிறார்கள். பாவம் அவள் ஆனால் உனது நிலை அப்படியானதல்ல. வீணாகக் கவலைப்படாதே'' என்றாள் மாதுமை.

''அது எனக்குத் தெரியும். என்றாலும் மனம் பிரிவால் தவிப்படைகிறது. சமாதானம் சொன்னாலும் ஏற்க மறுக்கிறது. நான் அவரைப் பூரணமாக நம்புகிறேன். அவர் என்னை ஏமாற்ற மாட்டார்'' என்றாள் அர்ச்சகா. எனினும் அவளது விழிகள் கலங்கின; ''நம்பிக்கை அவரின் மேல் இருக்கு கணேசனைப் போல வேலைக்குச் சென்ற இடத்தில் ஏதாவது நடந்து விடுமோ என எனது மனம் பயப்படுகிறது'' என்றாள்.

**1300. தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாம்உடைய**
**நெஞ்சம் தமர்அல் வழி.**

ஒருவருக்கு உரிமையாகப் பெற்ற நெஞ்சமே துணையாகாத போது, உறவே இல்லாத அயலவர் துணையாக வராமல் இருப்பது இயல்பானது

### காணவேண்டுமானால்

கஜேந்திரன் அன்று மிகவும் சந்தோசமாக இருந்தான். அவனது முகத்தில் எப்பொழுதும் சிறியதாடி ஒன்றிருக்கும். அது வித்தியாவுக்குப் பிடிப்பதே இல்லை. அதை மழித்து விடும்படி அவனைக் காணும் போதெல்லாம் கூறுவாள். அதற்கு அவன் சொல்வான்; ''அன்பே! இதற்கு ஒரு சரித்திரம் இருக்கிறது. அது உம்முடன் தொடர்பு உள்ளது. எனது மனதில் உள்ள திட்டம் நிறைவேறியதும் அதை நான் நீர் சொல்லாமலே மழித்து விடுவேன்.

''அப்படியென்ன தொடர்பு என்னைப் பற்றியதானால் எனக்கு விருப்பமில்லாதவற்றை ஏன் செய்தல் வேண்டும். நான் சொல்வதிலும் பார்க்க அக்கறையுடன் நீங்கள் தாடியை வளர்ப்பதால் என்னிலும் பார்க்க தாடியைத் தான் நீங்கள் தீவிரமாக நேசிக்கிறீர்கள். அதனால் நான் இனிமேல் உங்களைச் சந்திக்க மாட்டேன்'' என்பாள்.

''அப்படி நீர் சொல்லக் கூடாது. உமக்காகத்தான் நான் இதை வளர்க்கிறேன்''. நிறுத்தினான் கஜேந்திரன்.

''நான் நம்ப மாட்டேன் இது தற்போதய இளைஞர்களின் ஒரு பைத்தியக் காரத்தனம். கவலை கஷ்டம் இருக்கிறது என்பதற்காக நீங்கள் தாடி வளர்க்கிறீர்கள் என்று சொல்வீர்கள். பெண்கள் அதற்காக எதை வளர்ப்பது?

கஜேந்திரன் சிரித்தான்; ''வித்தி, வேறு இளைஞர்கள் கஷ்ரம் கவலைகளுக்காக வளர்க்கலாம். அப்படி வளர்ப்பதால் கவலையும் கஷ்டமும் மறைந்து விடுமென்று எல்லோரும் நினைத்தால் ஆண்கள்

எல்லோரும் முனிவர்களைப் போலத் தாடி வளர்த்துக் கொண்டு தான் திரிவார்கள். முயற்சிகள் எதுவும் இல்லாமல் தாடி வளர்ப்பதன் மூலம் எல்லாப் பயனையும் அடைந்து விடலாமென நினைப்பார்கள். ஆனால் நான் அப்படியல்ல உம்மைக் கண்டவுடன் தீவிரமாகக் காதல் கொண்டேன். அப்பொழுது நான் தாடி வளர்க்கவில்லை. என்று நீர் என்னை உமது காதலனாக ஏற்றுக் கொண்டீரோ அன்று முதல் தான் நான் தாடி வளர்க்க ஆரம்பித்தேன். நீர் இன்னொருவனுக்கு நிட்சயிக்கப்பட்டவள். அத்துடன் உமது தாயார் என்னைத் திருமணம் செய்ய விரும்பமாட்டார். அதனால் கடும் முயற்சி எடுத்தல் வேண்டும். உம்மை அடைந்த பின்பு தான் இந்தத் தாடியை மழிக்க வேண்டும் என்று நினைத்தேன். எனக்கு இத்தாடி எனது திட்டத்தை அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் மழிக்காமல் இருக்கிறேன். அதற்கு நீர் தடை செய்யக் கூடாது. முனிவர்களைப் போல நான் முற்றாக வளர்க்க மாட்டேன். வளர வளர அளவாகக் கத்தரிப்பேன். தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்'' என்றான்.

''வித்தியாவுக்கு அத்தாடியில் விருப்பமே இல்லை. அதை அவள் அருவருப்புடனேயே நோக்குவாள். அன்று கஜேந்திரன் தாடியை மழித்து விட்டு வந்திருந்தான். வித்தியாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக இருந்தது. மயிர்க் கொட்டிப் புழுவின் மயிர்கள் உதிர்ந்த பின் வண்ணச் செட்டைகளுடன் பறக்கும் வண்ணத்துப் பூச்சியைப் போல மிகவும் அழகாகவும் எடுப்பாகவும் அவனது முகம் இருந்தது. எனினும் ஊடலின் போது தனது அன்புக்குரிய அன்று காதலன் அடைகின்ற துன்பத்தைப் பார்க்க விரும்பினாள். அதனால் தான் மகிழ்வில்லாதது போல இருப்பதாக நடித்தாள்.

''என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்'' சுகமில்லையா...? பதறினான் கஜேந்திரன்.

வித்தியா எதுவும் பேசவில்லை. அவனை நிமிர்ந்து பார்த்தான். அவளின் விழியோரங்களில் நீர் திரண்டு நின்றது; ''என்ன வித்தி.. என்ன நடந்தது. நான் வந்தது பிடிக்காமையால் அம்மா ஏதாவது சொன்னாவா?'' என்றவாறு அவளது கன்னங்களால் வழியும் கண்ணீரைத் துடைக்கக் கையைக் கொண்டு சென்றான். வித்தியா அவனது கையைத் தட்டி விட்டுத் தனது கையில் வைத்திருந்த கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்தாள்.

''என்னவென்று சொல்லும். என்னால் உமது அழுகையைத் தாங்க முடியாது... சொல்லும்... சொல்லும்'' பரபரத்தான். நிமிடங்கள் பல கழிந்தும் அவள் எதுவும் சொல்லவில்லை; ''உமக்கு எங்கிருந்து தான் இந்தக் கண்ணீர் சுரக்கிறதோ தெரியவில்லை. என்னைப் பலவீனப்படுத்துவது உமது கண்ணீர் என்று உமக்குத் தெரியும். என்னென்று சொல்லி விட்டு அழும். என் உயிர் போகிறது''.

''என்னில் உங்களுக்கு அன்பிருக்கா?'' கோபத்துடன் கேட்டாள் வித்தியா.

வித்தியாவை ஆச்சரியத்துடன் பார்த்தான் கஜேந்திரன்; ''அதை நீர் தான் சொல்ல வேண்டும்'' என்றான் சாதாரணமாக அவன் அப்படிச் சொன்னதால் அவளின் அழுகை கூடியது.

''இப்ப உங்களுக்கு என்னில் விருப்பம் குறைவு. நீங்கள் நினைத்தபடி தான் எல்லாம் செய்வது. முன்பென்றால் எதையும் என்னைக் கேட்டுத் தான் செய்வீர்கள். இப்பொழுது நீங்கள் நினைத்தபடி நடக்கிறீர்கள்'' விம்மினாள்; ''இப்பொழுது நான் உங்களுக்குரியவளாகி விட்டேன். இனி ஏன் இவளைக் கேட்க வேண்டும் என்று நினைத்து விட்டீர்கள். முன்பென்றால் என்னை அடைய வேண்டு மென்பதற்காக நடித்தீர்கள்....'' விம்மி விம்மி அழுதாள்.

கஜேந்திரன் ஆடிப் போனான். தான் செய்தவற்றை எல்லாம் நினைத்துப் பார்த்தான் எதுவும் புரியவில்லை; 'அன்பே' எனது உயிரே! நான் தவறு ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. அப்படித் தவறேதும் செய்திருந்தால் பொறுத்தருளல் வேண்டும்'' என்றான்.

அதைக் கேட்டு வித்தியா முகத்தை மறுபக்கம் திருப்பினாள் ஒன்றும் செய்யவில்லையா...? தாடியை மழித்திருக்கிறீர்கள். எனக்காக அனுதாபப்பட்டு எனது நலனுக்காக வளர்த்த அன்புள்ளம் கொண்ட தாடியை மழிக்கும் போது என்னைக் கேட்க வேண்டாமா? அது எனது அனுதாபி. எனக்கு இப்போது தாடியுடன் பார்க்க வேண்டும் என்று தான் ஆசையாக இருக்கு. தாடி வளர்ந்த பின்பு வாருங்கள்'' கோபித்தாள்.

''ஐயையோ... எனக்கு விருப்பமில்லை இப்படித் தெரிந்திருந்தால் மழிக்காமல் விட்டிருப்பேன். எதையும் கேட்டுத்தான் செய்ய வேண்டும். இனிமேல் நான் உமது விருப்பப்படி நடப்பன். பழையபடி எனது தாடி வளர சில நாட்கள் செல்லும். அது வரை உம்மைத் தரிசிக்க அனுமதி தரவேண்டும் என்றான் கஜேந்திரன்.

வித்தியா மகிழ்வுடன் சிரித்தாள். தனது ஊடல் மூலம் கஜேந்திரன் பட்ட அவஸ்தையை நினைக்க அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எனினும் அதை அவள் வெளிக்காட்டவில்லை.

**1301. புல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்**
**அல்லல்நோய் காண்கம் சிறிது.**

ஊடலின் போது காதலர் அடைகின்ற துன்பத்தைப் பார்க்க வேண்டுமானால் அவரைத் தழுவாமல் சற்று விலகி இருக்க வேண்டும்.

**அளவான உடல்**

''என்னுடைய மனிசி கோவிப்பதிலும் ஓர் அழகிருக்கு. ஒரு விடுவிக்க முடியாத புதிர் இருக்கு. சுவையான ஒரு கவிதையின் பொருள் இருக்கு. அதை நான் இரசித்து மகிழு முன் ஊடலை முடித்து விடும்'' என்றவாறு அவளின் அருகே வந்தான் கஜேந்திரன். அவன் தன்னைத் தழுவ வருகிறான் என்றெண்ணிய வித்தியா நாற்காலியால் எழுந்து நின்றாள்.வித்தியாவுக்குக் கிட்ட வந்த கஜேந்திரன் அவனின் அருகில் சென்று மெல்லச் செல்லமாக அவளது கன்னத்தைத் தனது மூன்று விரல்களால் தட்டினான். அவன் செல்லமாக அப்படித் தட்டினால் அவளைத் தழுவும் நிலையில் அவன் இல்லை. என்பது அர்த்தம். தன்னைச் சீண்டி வேதனைப்படுத்திய வித்தியாவைச் சற்றுத் தவிக்க விட வேண்டும் என்பதற்காக அவன் அப்படிச் செய்வான். அவளோடு கூட அவனுக்கு விருப்பமதிகமானாலும் கூட அவன் அவளைச் சற்றுத் தவிக்க விட்டு வேடிக்கை பார்ப்பதில் விருப்பமுள்ளவன். அதனால் அவள் அவனோடு அளவோடு தான் ஊடல் கொள்வாள். வித்தியாவுக்கு அவனது செயல் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

முன்பு ஒரு நாள் கண்மணி கோயிலுக்குச் சிவராத்திரிக்குச் சென்ற போது கஜேந்திரன் அங்கு வந்தான். பல நாட்கள் அவளைக் காணாததால் அவளின் அருகே வந்து அவளது தோள்களைப் பற்றினான். வித்தியாவுக்குப் பயமாக இருந்தது. தற்செயலாகத் தாயார் கோயிலால் திரும்பி வந்தாரென்றால் என்ன செய்வது என்று நினைத்தாள். அந்த எண்ணம் அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. உடல் நடுங்க; ''என்னைத் தொடதீர்கள்'' என்றாள் கஜேந்திரன். அதை எதிர் பார்க்கவில்லை. சற்றுத் தடுமாறிப் போனான். ஆனால் அதை அவன் தனது தவறு என்று நினைத்தான். அதற்காக வேதனைப் பட்டான். அப்பொழுது வித்தியா சொன்னாள்; ''காதலர்கள் தொட்டுப் பேசுவது சரியில்லை தற்செயலாக எமது திருமணம் நடை பெறாவிட்டால் எனது நிலை என்ன ஆகும். நீங்கள் இங்கு வருவதை நான் விரும்புகிறேன். ஆனால் தள்ளி இருந்து கதையுங்கள்'' என்றாள்.

''நீர் சொல்வது சரி ஊடாக நான் இனிமேல் உம்முடன் தூர இருந்தே கதைக்கிறேன். நான் உம்மீது உயிரை வைத்திருக்கிறேன். நீர் இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது. காதல் என்பது உணர்வுகளைக் குளிர்விக்கிறதென்று நான் நினைக்கவில்லை. உணர்வுகளின் புனிதத் தன்மையைப் வெளிப்படுத்தும் ஊடகமென்றே நினைக்கின்றேன். அதை நீர் புரிந்து கொள்ளும் வரை நாம் தூர இருந்தே பழகுவோம். உம்மைக் காணவேண்டு மென்று தான் எனது இருதயம் விரும்புகிறது. பேச வேண்டும் என்று தான் என் நாக்குத் துடிக்கிறது. இதைத் தவிர வேறு எந்த விதமான கெட்ட எண்ணமும் எனது மனதிற்கு இல்லை. இதை நீர் புரிந்து கொள்ளும் வரை நான் உமக்குக் கால அவகாசம் தருகிறேன். என்னைப் புரிந்து கொள்ளும் வரை நீர் விரும்பிய படியே பழகுகிறேன்'' என்றான். அதன் பின் அவர்கள் பல முறை சந்தித்திருக்கிறார்கள். அவன் முன்பு போல அவளுடன் இனிமையாகவும் கலகலப்பாகவும் பழகி வந்தான். எந்த ஒரு சந்தர்பத்திலாவது அவன் அவளைக் கோபிக்கவில்லை. தவறுதலாகக் கூட அவளை அவன் தொடவில்லை.

''என்ன யோசிக்கிறீர்? யோசனையைப் பார்த்தால், எமது காதல் நிறைவேறுமா என்று கேட்ட காலப் பகுதியைப் போல இருக்கிறது. அப்படி என்ன யோசனை''.

''அந்தக் காலப் பகுதிக்குத் தான் நான் ஒரு கணம் சென்று வந்தேன். நீங்கள் வித்தியாசமானவர். விளையாட்டாக ஊடல் கொண்டாலும் திருமணமான பின்பு சந்திப்போம் என்று சொல்லி விட்டுச் சென்று விடுவீர்கள். உங்களுக்குப் பகிடியும் தெரியாது'' என்றாள் வித்தியா.

''நீர் நினைப்பது பிழை. ஊடல் என்பது காதலரிடையே பிணைப்பையும் அன்பையும் அதிகரிக்கச் செய்யும் மருந்தாகும். அந்த ஊடலைப் பெண் அளவோடு வைத்திருந்தால் தான் அமிழ்தாக இனிக்கும். சற்று அதிகமானாலும் அது திகட்டிவிடும். உணவுக்கு உப்பு அதிகமானால் எப்படி இருக்குமோ அது போலத் தான் ஊடலும் அதிகமானால் வாழ்க்கை பயனற்றுப் போய்விடும்'' என்றான் கஜேந்திரன்.

''உங்களின் குணம் எனக்குத் தெரிம். அது தான் உங்களோடு ஊடல் கொண்டு சிறிது நேரம் விளையாடி உங்களைச் சிறிது நேரம் தவிக்கப் பண்ணினால் என்னில் உள்ள அக்கறையையும் அன்பையும் நான் அறிந்து கொள்ளலாம்'' என்றவாறு மெல்லச் சென்று அவனது தோள்களைப் பற்றித்

தழுவினாள். கஜேந்திரன் தன்னை மறந்து தான், இருக்கும் இடத்தையும் மறந்து அவளை இறுகத் தழுவினான். சொர்க்கம் அவனது கண்களுக்குள் தெரிந்தது.

**1302. உப்புஅமைந் தற்றால் புலவி; அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்.**

உணவில் உப்பு அளவோடு அமைந்திருப்பதைப் போல ஊடலும் அளவாக இருத்தல் வேண்டும்; ஊடல் அளவுக்கதிகமானால் உப்பு மிகுந்த உணவு போல ஊடலும் பயனற்றுப் போய்விடும்.

## அளவு

''மிகவும் கோலாகலமாக கஜேந்திரனுக்கும் வித்தியாவுக்கும் திருமணம் நடந்து முடிந்தது. திருமண வீட்டுக்கு வந்தவர்களெல்லோரும் சென்று விட்னர். கஜேந்திரனது நெருங்கிய உறவினர்களும் வித்தியாவின் நெருங்கிய உறவினர்களும் வித்தியாவின் வீட்டில் கூடியிருந்தனர். மாதுமையும் அர்ச்சகாவும் வந்தவர்களை வரவேற்று உபசரித்தமையால் மிகவும் களைத்துப் போயிருந்தனர்.

வித்தியாவையும் கஜேந்திரனையும் அழைத்துச் செல்ல கஜேந்திரனது தந்தையும் உறவினர்களும் ஆயத்தமாகினர். வித்தியாவும் கஜேந்திரனும் வந்து கண்மணியின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர். கண்மணி அவர்களை ஆசீர்வதித்தாள். அவளது நெஞ்சில் லேசான வலி உண்டானது. மெல்ல நாற்காலியில் அமர்ந்த கண்மணி; ''அர்ச்சகா உள்ளே மேசையில் மருந்துக் குளிசைகள் அடங்கிய பெட்டி ஒன்றுள்ளது எடுத்தா'' என்றாள்.

'' என்னம்மா நெஞ்சு வலியா?''

கண்மணி தனது நெஞ்சுவலியை மறைத்துக் கொண்டு; ''இல்லையம்மா கலியாண வீட்டு வேலைகளால் இரண்டு நாட்களாக மாத்திரை சாப்பிடவில்லை. இப்பத்தான் நினைவு வந்தது. எனக்கு ஒன்றுமில்லை. நீ போயிட்டு வாம்மா'' என்றாள்.

வித்தியாவுக்கு பயமாக இருந்தது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்; ''உண்மையைச் சொல்லம்மா'' என்றாள்.

''எனக்கு ஒன்றுமில்லை. நீ சந்தோசமாகச் சென்று வா'' என்றபடி தனது நெஞ்சின் வலது பக்கத்தைத் தடவியவாறு; ''அர்ச்சகா சுடு நீர் எடுத்து வாம்மா'' என்றாள்.

வித்தியா கஜேந்திரனது வீட்டுக்கு வந்து விட்டாள். இரவு பத்துமணி வரை கஜேந்திரனது உறவினர்கள் அங்கு வந்து சென்று கொண்டிருந்தனர்; ''கஜேந்திரனது தாயார் அவர்கள் வீட்டுக்கு வந்த பின்பு பத்து முறை வந்து இரவு உணவை உண்ணுமாறு கேட்டு விட்டாள்.

''அம்மா தனது மருமகளுக்கு முதன் முதலாக உணவு தர ஆசைப்படுகிறா.. வாரும்'' என்றான் கஜேந்திரன். சாப்பாட்டு மேசையில் அமர்ந்த இருவருக்கும் உணவை எடுத்துத் தட்டில் வைத்தாள் இலட்சுமி. வித்தியாவால் உணவை உண்ண முடியவில்லை. தட்டில் இருந்த இட்லியைப் பிரித்து சாம்பாரில் தொட்டுப் பிசைந்தாளே தவிரச் சாப்பிடவில்லை.

''சாப்பிடம்மா..'' என்றாள் இலட்சுமி

வித்தியாவின் முகம் சோகத்தில் கறுத்திருந்தது. அவள் சாப்பிடக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்த கஜேந்திரன்; அம்மா காலையில் இருந்து மணவறையில் இருந்தால் வித்தியா களைத்துப் போனாள். கரைச்சல் படுத்தாதைங்கோ. விருப்பப்படி சாப்பிடட்டும்'' என்றான்.

ஒப்புக்குச் சாப்பிட்டு விட்டுக் கையைக் கழுவினாள் வித்தியா.

படுக்கையறையில் இருந்த வித்தியாவின் தலை குனிந்திருந்தது. அவளின் முகத்தில் திருமணக்களைக்குரிய பூரிப்பில்லாமல் இருப்பதைக் கண்ட கஜேந்திரன் சொன்னான்; ''வித்தி, உமது அம்மாவுக்கு நாம் புறப்படும் போது நெஞ்சுவலி ஏற்பட்டிருக்கும் என்று தானே கவலைப்படுகிறீர். அவாவுக்கு ஒன்றும் ஏற்பட்டிராது.'' என்று அவன் கூறிக் கொண்டிருக்கும் போது வித்தியா குறுக்கிட்டுச் சொன்னாள்; ''சென்ற வாரம் அவாவுக்கு இரத்த அழுத்தம் சற்று அதிகரித்திருப்பதாக வைத்தியர்

சொன்னவர். நெஞ்சு வலிக்காவிட்டால் அவா நாம் புறப்படும் போது மாத்திரை சாப்பிட்டிருக்க மாட்டா'' அழுதாள்.

''அவா தனக்கு எந்த வருத்தமும் இல்லையென்று சொன்னவா தானே''

''உங்களுக்கு அதைப்பற்றித் தெரியாது. அவா இப்ப என்ன பாடு படுகிறாவோ'' அழுதாள்.

''அவாவுக்கு ஒன்றுமாகாது'' என்றான் கஜேந்திரன்.

வித்தியாவுக்கு அவனது பதில் சற்று எரிச்சலைக் கொடுத்தது; ''உனக்குச் சந்தேகமாக இருந்தால் இந்தா கைத் தொலைபேசி அம்மாவுடன் கதை'' என்றான் கஜேந்திரன்.

''இதில் கதைத்தால் அம்மா வருத்தமிருந்தாலும் இல்லை என்று தான் சொல்வா''.

ஒரு வாரகாலமாகத் திருமண வேலைகள் யாவற்றைச் செய்ததாலும், அன்று முழுக்க மணவறையில் இருந்தமையாலும் களைத்திருந்த கஜேந்திரனுக்குச் சற்றுக் கோபம் வந்தது; ''இப்ப என்னால் என்ன செய்ய முடியும்? தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாதென்றால் வாரும் கொண்டு போய் உமது வீட்டில் விட்டு விட்டு வருகிறேன்.

''கோபிக்கிறீர்களா..? என்னுடன் கோபிக்கிறீர்களா...? என்னைக் கோபிக்க உங்களால் எப்படி முடிந்தது. அம்மா நோயால் வருந்தும் போது நான் கவலைப்படக் கூடாதா.? நான் உங்களைப் பற்றி எவ்வளவு நினைத்திருந்தேன். எல்லாம் நாசமாகி விட்டது'' விம்மி விம்மி அழுதாள் வித்தியா.

ஒரு கணம் தடுமாறிய கஜேந்திரன் மறுகணம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்; ''கோபங்கொண்டிருக்கும் மனைவியின் ஊடலை நீக்காமல் அவளுடன் கூடுவது துன்பம் அடைந்துள்ள அவளை மேலும் துன்பப்படுத்தும் எப்படியாவது அவளின் துயரைப் போக்குதல் வேண்டும்'' என்று நினைத்தான் கஜேந்திரன்.

வெளியே மோட்டார் வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்டு அழுது கொண்டிருந்த வித்தியா; ''வருவது யாராக இருக்கும். ஒருவேளை அம்மாவுக்கு ஏதாவது'' என்று நினைத்துப் பயந்தவாறு வெளியே வந்தாள். வாசலில் கண்மணியும் கஜேந்திரனும் நின்றனர். அதைக் கண்டு திகைத்து விட்டாள் வித்தியா.

'' நீ என்னம்மா படித்தும் அறிவில்லாத பிள்ளையாக இருக்கிறாய். எனக்கொன்று மில்லை. திருமணத்தன்றே மாப்பிளை தனியாக வீட்டுக்கு வருதல் கூடாது. தொலைபேசியில் தொடர்பு கொண்டிருக்கலாம். இல்லாவிட்டால் வேறு யாரையாவது அனுப்பியிருக்கலாம்'' என்றாள் கண்மணி.

அறைக்குள் வந்த வித்தியாவுக்குக் கஜேந்திரன் சொன்னான்; ''முதல் நாளே உமக்கு என்னில் நம்பிக்கையீனம் வரக் கூடாது. அத்துடன் நல்ல நாளில் வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது என்னுடன் கோபித்த உமது கோபத்தை அகற்றி என்மீது நம்பிக்கை ஏற்படச் செய்தல் வேண்டும். மனத்துக்கத்துடன் நமது வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டுமா என்ன...? உமக்கிருக்கும் சந்தேகத்தை நீக்கிய பின்பே உம்மைத் தழுவ வேண்டும் என்று நினைத்தேன். அது தான்...'' கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது விரைந்து சென்று அவனைத் தழுவினாள் வித்தியா.

**1303. அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல்.**

தம்மோடு பிணங்கியவரை ஊடல் நீக்கி தழுவாது செல்லுதல், துன்பத்தால் வருந்துபவருக்கு மேலும் துன்பம் செய்வதைப் போன்றது.

### வேரோடு அறுந்த கொடி

'' என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ, நான் எப்பொழுதும் அவசர புத்திக்காரி. அத்துடன் நான் நினைப்பது தான் சரியென்று நினைப்பவள். இதனால் தான் எமக்கிடையே முன்பு பல தடவை ஊடல் ஏற்பட்டது. கோபப்பட்ட என்னைச் சமாளிப்பதற்காக நீங்கள் பிழை செய்யா விட்டாலும் பிழை செய்ததாகக் கருதி என்னிடம் மன்னிப்புக் கூடக் கேட்டிருக்கிறீர்கள். அப்பொழுதெல்லாம் நான் செய்தவை சரியென்று திருப்த்திப்பட்டிருக்கிறேன். பின்பு தான் நான் செய்த செயல்களில் தவறு இருப்பது தெரியும். பின் வருந்தும் போதும் என்னைச் சமாளிப்பீர்கள். எனது துன்பம் அதிகமானால்; ''ஏன் அழுகிறீர் வாழ்க்கை என்பது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நடக்கும் போட்டியென்றா

நீர் நினைக்கிறீர். புரிந்துணர்வின் அடிப்படையில் எம்மிடையே உண்டாகும் கோபதாபங்களை மனிதாபிமான ரீதியில் அணுகி அவற்றைத் தீர்த்துக் கொள்ளாமல் பிரச்சினைப்பட்டு பிரிந்து வாழ வேண்டும் என்று நினைக்கிறீரா. உம்மால் விட்டுக் கொடுக்க முடியாது. பிடிவாதம் சற்று அதிகம். அதே பிடிவாதத்தை நானும் பிடித்தால் என்றோ பிரிந்திருப்போம். உமது பிடிவாதம் உமது மனம் அறியாமையால் ஏற்பட்டது. இரண்டொரு நாளில் தீர்ந்து விடும். அதன் பின் நாம் இன்பமாக வாழலாம்'' என்று சொல்வீர்கள். அதைக் கேட்டு எனது நடவடிக்கைகளைத் தீர ஆராய்ந்தே உங்கள் மீது கோபம் கொள்வேன். ஆனால் இன்று அம்மாவின் மீதுள்ள அளவற்ற பாசம் என் கண்களை மறைத்து விட்டது. விருத்தெரியாத வயதில் தந்தையை இழந்த என்னை வளர்க்க அம்மா பட்ட கஷ்டங்களை நினைக்க எனக்கு என்னையும் அறியாமல் கோபம் வந்து விட்டது. வாழ்க்கையை ஆரம்பிக்கின்ற முதல் நாளில் இப்படியொரு துன்பமான நிகழ்வு நடந்ததை என்னால் சீரணிக்க முடியவில்லை'' விம்மி விம்மி அழுதாள் வித்தியா.

கஜேந்திரன் அவளது முதுகை ஆதரவுடன் தடவினான்; ''நான் உம்மில் உயிரையே வைத்திருக்கிறேன். நீர் எனக்காகப் பட்ட கஷ்டங்களை ஒருகணம் நினைத்துப் பார்த்தேன். கஷ்டப்பட்டு உம்மை வளர்த்த உமது தாயாரையும் தூக்கி வீசிவிட்டு என்னுடன் புறப்படவிருந்தது உமது மனத் துணிவை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தேன். திருமண நாளானாலும் துன்பப்படும் மனைவியைத் தேற்றி அவளது துன்பத்தைத் துடைக்க முடியாது. அவள் விடியும் வரை வேதனைப்படுவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. சுபநாளில் பெரியோர்கள் எல்லாம் எம்மை ஆசீர்வதித்துப் புது வாழ்வு தொடங்கும் படி அன்புடன் ஆணையிட, நாம் ஏன் துன்பப்படுவான் என்று நினைத்தேன். வீட்டில் யாருக்காவது சொன்னால் ஏதாவது நினைப்பார்கள் உமக்கு ஆலோசனை கூறுவார்கள். தொலைபேசியில் கதைப்பார்கள். இதனால் நீர் ஆறுதலடைய மாட்டீர் என்று எனக்குத் தெரியும். அதனால் தான் நான் யாருக்கும் தெரியாமல் சென்றேன். உமது மகிழ்வு தான் எனது வாழ்வு. பிணங்கியவரை நன்கு புரிந்து அவரது துன்பத்தைத் தீராமல் விடுவது வாடிய செடியை அடியிலே அறுப்பதைப் போன்றது. அதனால் தான் சென்றேன்''.

வித்தியா கஜேந்திரனது நெஞ்சில் முகம் புதைத்து விம்மினாள்; ''அழாதையும் இப்பொழுது எல்லாம் சரிதானே. உமது அம்மா தனது மகளும் மருமகனும் தன்மீது கொண்ட பற்றைப் பற்றி வாயோயாமல் சொல்லிய படியே வந்தா. இப்படியான மகளும் மருமகனும் வாய்த்ததால் இனித் தனக்கு மருந்தில்லாமலே நோய் குணமாகி விடும். என்று சொன்னா. இனி ஏன் அழுகிறீர்.''

''நான் அழவில்லை இது ஆனந்தக் கண்ணீர். என்னில் எவ்வளவு அன்பு வைத்துள்ளீர்கள். சாத்திர சம்பிரதாயங்களை மறந்து நீங்கள் சென்றது'' மேலே கதைக்க முடியாது தடுமாறினாள் வித்தியா; ''அசடு... அசடு... சாத்திர சம்பிரதாயங்களெல்லாம் மனிதனின் நல்வாழ்விற்காக உருவாக்கப்பட்டவை. நீர் இரவு முழுவதும் அழுது கொண்டிருந்தால் எமது வாழ்வு சிறக்குமா..? வாழ்வு அமைவது அவரவரின் மனத்தில் உள்ளபடி இன்று நான் உமது துயரத்தைப் போக்காவிட்டால் எதிர் காலத்தில் எமக்குக் குழந்தைகள் பிறக்காவிட்டால் சில சமயம் ஊரவர் இன்று நடந்ததைச் சாத்திர சம்பிரதாயமாகச் சொல்ல எனது பெற்றாரும் உமது தாயாரும் கவலைப்படுவார்கள். இதையெல்லாம் விட்டு விட்டு சிரியும்'' என்றான் கஜேந்திரன். பூரண நிலவு தரையில் வந்து தனக்கருகே பிரகாசிப்பதைப் போல இருந்தது அவளது சிரிப்பு.

**1304. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று.**

தம்மோடு பிணங்கியவரை ஊடல் நீக்கி அன்பு செய்யாதிருத்தல், முன்னமே நீரின்றி வாடியுள்ள செடியை அதன் அடியில் அறுப்பதைப் போன்றது.

## ஆடவரின் அழகு

தனது நெஞ்சில் புதைந்து குதூகலித்திருந்து ஒளி வீசிய பூரண நிலவு போன்ற வித்தியாவின் முகத்தைத் தன் இருகரத்திலும் ஏந்திப் பார்த்தான். கஜேந்திரன் மலர் போன்ற கண்களை உடைய வித்தியாவின் ஒளி பொருந்திய முகம் மெல்லச் சிவந்து கொண்டு வந்தது. அன்று மணப் பெண்ணாக இருந்தமையால் அழகுமிகுந்த அவளது முகத்தை ஒப்பனை செய்தவர்கள் மேலும் அழகுறச் செய்திருந்தனர். முன்பு பார்த்தாலே மோக மயக்கத்தை உண்டாக்கும் அவளது எழில் அன்று ஒப்பனை செய்ததால் மேலும் அழகாக இருந்து அவனுக்கு மயக்கமான ஓர் உணர்வை நெஞ்சில் பிறப்பித்தது; ''வித்தி இந்த நாளுக்காக நாம் எவ்வளவு காலம் காத்திருந்தோம். புத்தகங்களில் வாசித்து விட்டுக் கற்பனையிலும் கனவிலும் எப்பொழுது வருமென ஏங்கியிருந்த நான் இன்று உமது ஊடலால் தவித்துப் போனேன். கற்பனைக் கோட்டைகள் சிதற கனவுகள் கலைய ஒரு கணம் உயிரற்றவனானேன். முதல் நாள் மெல்ல வந்து என் நெஞ்சில் சாய்ந்து கதைக்க முடியாது நாணத்தால் அல்லற்படும் உம்மை நான் நெருங்கி வர... மிகவும் பிரமாதமான கற்பனைகள் யாவும்

சிதறிவிடுமோ. எனப்பயந்து தான் நான் உமக்கும் கூடச் சொல்லாது மெதுவாக வீட்டு வாசலில் நின்ற துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு அருகில் இருந்த நண்பனின் வீட்டுக்குச் சென்றேன். என்னைக் கண்டதும் அவன் திகைத்துப் போனான். என்னை வீட்டுக்குச் செல்லும் படி வற்புறுத்திக் கூறினான்; ''திருமணமான பின்பு பெண் வீட்டுக்குத் தனியே செல்லக் கூடாது'' என்றான் பல்வேறு புத்திமதிகள் கூறினான். ஆனால் நான் அவற்றைக் கேட்கவில்லை. என் மனங் கவர்ந்தவள் ஒரு கணமாவது துன்பப்படக் கூடாது. என்பதற்காக, நான் உமது வீட்டுக்குச் சென்றேன். மாதுமையும் அர்ச்சகாவும் அங்கு நின்றனர். உமது தாயார் திகைத்துப் போனார். ஓய்வாகப் படுத்திருந்து எனது பெருமைகளை மாதுமைக்கும் அர்ச்சகாவுக்கும் சொல்லிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் எல்லோரும் திகைத்து விட்டனர். செய்தி அறிந்ததும் உமது தாயார் உடனே புறப்பட்டு வந்து விட்டார். மாதுமையும் வந்திருக்கிறாள்'' என்றான் கஜேந்திரன். வித்தியா பதிலேதும் கூறாமல் அவனை இறுக அணைத்தாள். மெதுமையான குளிர்மை கலந்த ஓர் உணர்வு அவளது உடலில் இருந்து மெல்ல எழுந்து அவனது உடலுள் புகுந்து கொண்டிருந்தது; அத்தான் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். கிடைக்க முடியாத பெரும் புதையலைப் போன்ற உங்களை நான் நல்ல நாளில் துன்புறுத்தி விட்டேன்''.

''மெல்லிய மஞ்சள்நிற இரவில் ஒளிரும் மின்குமிழின் வெளிச்சத்தில் அவளது உடல் பொன்னாகப் பிரகாசித்தது. அவளது விழிகள் ஏக்கத்துடன் அவனை நோக்க, அவளது கரங்களைப் பற்றி அருகில் இருந்த கட்டிலில் இருத்தினான். அவள் அவனது மடியில் படுத்தாள். காலையில், அவன் கழுத்தில் அணிந்த மாலையின் மென்மையை விட சிறப்பான தொரு மென்மையை அவனது உள்ளம் உணர்ந்தது; ''ஓர் ஆடவனுக்கு அழகு என்ன தெரியுமா...? சங்ககால அகத்திணை நூலொன்றில் வரும் பாடலில் புலவன் ஒருவன் கூறுகிறான்; ''நற்பண்புகள் அமைந்த ஆடவர்களுக்கு அழகு, மலர் போன்ற கண்களை உடைய காதலியின் நெஞ்சில் விளையும் ஊடலின் சிறப்பு என்கிறான். அதை நான் உம்மோடு பழகும் நாட்களில் உணர்ந்திருக்கிறேன். ஊடலின் அளவும் எனது மனத்தின் நிலையும் உமக்குப் புரியும். என்னை ஊடலின் போது கூட வருத்த விரும்பாத மனநிலையும் எனக்குத் தெரியும். அதனால் தான் நான் உமக்காக எதையும் செய்து வந்தேன்'' என்றான்.

''எங்கோ சாமக் கோழி கூவும் சத்தம் கேட்டது. கஜேந்திரனின் அணைப்பில் கிடைத்த இன்ப மேலீட்டால் அவனது நெஞ்சில் படர்ந்திருந்த வித்தியா, அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். என்றுமில்லாத ஒரு புதுப் பொலிவு அவனது முகத்தில் அன்று இருப்பதைப் போல இருந்தது; ''முன்பு போலக் குறுந்தாடி வையுங்கள். எனக்கு இப்போ அது பிடிக்கும்'' சிணுங்கினாள்.

''முன்பு பிடிக்காததால் தான் அதை மழித்தேன். இனி உமது விருப்பம்'' என்றான் கஜேந்திரன்.

''எனக்காகக் காத்திருந்த அதை என்னால் மறக்க முடியவில்லை'' என்றவாறு தனது அணைப்பை இறுக்கினாள் வித்தியா.

**1305. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை**
**பூஅன்ன கண்ணார் அகத்து.**

மலர் போன்ற கண்களை உடைய காதலியின் உள்ளத்தில் உண்டாகும் ஊடலின் சிறப்பே, நல்ல பண்புகள் நிறைந்த நல்ல ஆடவர்களுக்கு அழகாகும்.

## பயன்படாப் பழம்

அதிகாலை ஐந்துமணிப் பூசைக்காக ஒலிக்கும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய காண்டாமணி ஒலித்துக் கொண்டிருந்தது. வித்தியா, மகா கணபதி ஆலய மணி ஒலிக்கு முன் எழுந்து பல் துலக்கி முகம் கழுவி விடுவாள். கோயிலுக்குச் செல்லா விட்டாலும் அவள் பூசை அறையில் இருக்கும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் உருவப்படத்திற்கு நெய்யிட்டு விளக்கேற்றி விடுவாள். அன்றும் அவள் கஜேந்திரனின் வீட்டு சுவாமி அறையில் இருந்த வித்தியா மகா கணபதி படத்திற்கு விளக்கேற்றினாள். வித்தியா மகா கணபதியின் தேர்த்திருவிழாவின் போது பிடிக்கப்பட்ட படத்தை பெருப்பித்து அதற்குச் சட்டமிட்டு இருவீட்டாரும் தமது பூசையறையில் வைத்திருந்தனர்.

மெய்மறந்து மகா கணபதியை வணங்கிய வித்தியா நீற்றை எடுத்துக் கண்களை மூடியவாறு வித்தியா மகா கணபதியை வணங்கி விட்டு தனது நெற்றியில் பூசினாள். பின் நீற்றை எடுத்து கஜேந்திரனின் நெற்றியில் பூசிவிட்டு அவனது பாதங்களைப் பணிந்தாள். குனிந்து அவளை அணைத்தெடுத்தான் கஜேந்திரன். கொழு கொம்பில்லாத கொடி போல மெல்ல அசைந்து சரிந்து அவனது கைக்குள் சிக்கிய வித்தியா தனது மூடிய கையைத் திறந்தாள். அதற்குள் ஒரு குங்குமச் சிமிழ் இருந்தது. கஜேந்திரன் அவளை அணைத்து முத்தமிட முயன்றான்; ''இதெல்லாம் பிறகு.

முதலில் எனது நெற்றியில் இந்தக் குங்குமத்தை இடுங்கள். இனிறிலிருந்து நான் உயிரோடு இருக்கும் வரை தினமும் காலையில் எனது நெற்றியில் நீங்கள் தான் குங்குமத் திலகமிடல் வேண்டும். இடுவீர்களா...?'' ஏக்கத்துடன் அவளது விழிகள் அவனை இரந்தன.

''இதென்ன வித்தியா கேள்வி தினமும் நாம் பூசையறையில் இந்த நேரம் சந்திப்போம். அப்பொழுது மகா கணபதியின் முன்னால் திலகமிட நான் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். என் காதலி என்னை அடைய எவ்வளவு துன்பப்பட்டாள் என்பது எனக்குத் தான் புரியும். நினைத்துப் பார்த்தால் அசோக வனத்தில் சீதா பிராட்டியார் பட்ட துன்பத்தை விட மோசமான துன்பங்களை யெல்லாம் நீ அனுபவித்தனீர். இராவணைப் போலப் பலர் உம்மைத் துன்புறுத்தியும் சீதா பிராட்டியைப் போல உறுதியாக இருந்து என்னை வந்தடைந்த உமக்கு தினமும் சேவகம் செய்யக் காத்திருக்கிறேன். இது பெரிய வேலையா....?'' என்ற படி அவளது கையில் இருந்த குங்குமச் சிமிழில் இருந்து குங்குமத்தை எடுத்து வித்தியாவின் அழகான நெற்றியில் திலகமிட்டு விட்டு அவளை இறுக அணைத்தான். சிலகணங்கள் மெய்மறந்து நின்ற வித்தியா மெல்லச் சுய நினைவடைந்து அவனது பிடியிலிருந்து விடுபட்டாள்.

''காலை உணவைக் கஜேந்திரனும் மாதுமையும் அர்ச்சகாவும் சுகுணாவும் கண்மணியும் கஜேந்திரனும் பெற்றோரும் ஒன்றாக இருந்து உண்டனர். கஜேந்திரனுக்கு அருகில் மகிழ்வுடன் இருந்து உண்ட வித்தியா சொன்னாள்; ''இரவு நான் உணவைச் சரியாக உண்ணாமையால் மாமி கலங்கிப் போனா. இப்போது இரவு உணவையும் சேர்த்து உண்ணப் போகிறேன். மாமி எனக்கு வையுங்கள்'' இலட்சுமி, தனது மருமகளைப் பூரிப்புடன் பார்த்தாள். இலட்சுமியே நேரில் வந்து தமது வீட்டில் இருப்பதைப் போல இருந்தது. தான் நோயுற்ற வேளையில் கூலிக்குப் பராமரிக்கும் பெண் என்று கூறித் தன்னைப் பராமரித்ததை எண்ணிப் பார்த்தாள். அவளது மனம் நெகிழ்ந்து விட்டது; ''இப்படியான உத்தமியை அடைய கஜேந்திரன் கொடுத்து வைத்தவன்'' என்று நினைத்தாள்.

சாப்பிட்டு முடிந்ததும் சுவர்ணாவும் மாதுமையும் அர்ச்சகாவும் வித்தியாவைத் தனிமையில் சந்தித்தனர்; '' இனி எங்களைத் தேட மாட்டாள். இப்போதே நாம் இங்கு வந்திருப்பது அவளுக்கு இடைஞ்சலாக இருக்கும். அம்மா கண்ணு கால நேரம் தெரியாமல் அவரோடு ஊடல் கொள்ளாதே. இரவு நீ செய்த அமர்களத்தை அவர் பொறுத்துக் கொண்டார். நான் ஓர் ஆணாக இருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமா...? உதைத்திருப்பன். பாவம் கஜேந்திரன்'' என்ற சுவர்ணா; ''அங்கை திரும்பும் கன்னத்திலை என்ன...?'' பெரிதாகச் சிரித்தாள். பின்பு அதை விடு ஊடலுக்கு ஓர் அளவு இருக்கு'' என்று சொல்ல மாதுமை சொன்னாள்; ''பாட்டி தொடங்கீற்றா''.

''பாட்டியைச் சொல்லவிடு எமக்கும் பயன்படும்'' என்றாள் அர்ச்சகா.

''சரி கவனமாகக் கேளுங்கோ. பிறகு உங்களுக்கென்று தனி வகுப்பு எடுக்கத் தேவையில்லை. ஊடல் என்பது காதலரை மகிழ்விக்கக் கூடியதாக இருந்து அதன் மூலம் இருவரும் பேரின்பம் பெற வேண்டும். ஊடல் காதலின் பெருமையைக் காதலர்களுக்கு உணர்த்தும். ஊடலால் வரும் பிரிவை எப்போது அகற்றிக் கூடலாமென்று காதலரைக் காக்க வைப்பதில் ஒரு பெண் எப்போதும் வெற்றியடைதல் வேண்டும். ஊடலில் சில சமயம் பெரும்பிணக்குகள் ஏற்படும். அது சில நாட்களுக்கு நீடிக்கும். சில சமயம் சிறு பிணக்குகள் ஏற்படும். அது இரண்டொரு மணிநேரத்திலோ அல்லது இரண்டொரு நாட்களிலோ மறைந்து விடும். இவை ஏற்படவேண்டும். இவை ஏற்படா விட்டால் காமம், மிகப்பழுத்த பழத்தைப் போலவும் முற்றாத இளங்காயைப் போலவும் பயனற்றதாகி விடும். ஊடல் என்பது காதலரின் மனத்தை அறிந்து அளவோடு பொய்க் கோபம் கொள்வது அதை விட்டு விட வேண்டிய நேரத்தில் விடாது விட்டால் வாழ்க்கை நாசமாகி விடும். சந்தர்பங்களுக் கேற்றவாறு விட்டு விட்டு பொருத்தமான நேரத்தில் கைக் கொள்ளல் வேண்டும். ஊடல் ஆண்களை தம்வசப்படுத்தும் பெண்களின் ஆயுதம்'' என்ற சுவர்ணா மூவரையும் பார்த்து விட்டு; ''விளங்கி விட்டதா? சந்தேகமிருந்தால் கேளுங்கள்'' என்றாள்.

''விளங்கி விட்டது பாட்டி'' என்று மூவரும் சொல்ல; ''அங்கு சிரித்தபடி வந்த கஜேந்திரன்; ''சுவர்ணாப் பாட்டி இவற்றையெல்லாம் எங்கே கற்றார். எனக்குச் சந்தேகமாக இருக்கு'' என்று சொல்ல சுவர்ணா நாண மேலீட்டால் தலை குனிய மற்றய மூவரும் பெரிதாகச் சிரித்தனர்.

**1306. துனியும் புலவியும் இல்லாயின் காமம்**
**கனியும் கருக்காயும் அற்று.**

பெரும் பிணக்குகளும் சிறு பிணக்குகளும் இல்லா விட்டால், காமம் மிகப்பழுத்த பழமும் முற்றாத இளங்காயையும் போலப் பயனற்றதாகும்.

**எண்ணும் துன்பம்**

வித்தியாவின் வீட்டு மேல் மாடியில் அழகான தொரு அறை கஜேந்திரனுக்கும் வித்தியாவுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது. மாடியில் அமைந்துள்ள அந்த அறையில் இரவில் படுத்திருப்பதில் அவாதியான விருப்பம் வித்தியாவுக்கு உண்டு. மாடியில் அமைந்துள்ள அந்த அறையின் சாளரங்களைத் திறந்து விட்டால் குளிர்மையான காற்று பஞ்சணையில் படுத்திருப்பவர்களைத் தொட்டு வருடித் தாலாட்டும் பௌர்ணமி தினங்களில் நிலவு கைக்குள் வந்து விட்டதைப் போன்றதொரு பிரமை வித்தியாவுக்கு ஏற்படும். பௌர்ணமி தினங்களில் இரவு பத்துப் பதினொரு மணி வரை வித்தியா பூரண சந்திரனைப் பார்த்துக் கொண்டிருப்பாள். வித்தியாவுக்கு திருமணமாகு முன்பு கண்மணி அவளை இரவில் மாடியில் தங்குவதற்கு அனுமதிக்க மாட்டாள். கீழே தனக்குத் துணையாக வந்து, தனது அறையில் படுக்குமாறு சொல்வாள். அதனால் பௌர்ணமி தினங்களில் இருவருக்கிடையிலும் சிறு தகராறு வரும்.

பூரண சந்திரனின் பொன்னொளி அறையெங்கும் பரவியிருந்ததால் இரவு விளக்கை அணைத்திருந்தாள் வித்தியா. சுவரில் அழகான தொரு வெளிநாட்டு மணிக்கூடு தொங்கிக் கொண்டிருந்தது. கஜேந்திரனது நண்பன் ஒருவன் வெளிநாட்டில் இருந்து வந்த போது அதை அவனுக்குத் தனது நினைவாகக் கொடுத்திருந்தான். அதன் அழகில் மயங்கிய கஜேந்திரன் அம்மணிக்கூட்டை வித்தியாவிடம் கொடுத்தான். கஜேந்திரனைக் காணாத வேளைகளில் அவளுடன் கதை பேசுவது அந்த மணிக்கூடு தான். அதை சுவரில் இருந்து இறக்கித் தனது மடியில் வைத்துக் கொஞ்சி விளையாடுவாள்; கதைத்து மகிழ்வாள்.

மணிக்கூட்டினுள்ளே இருந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த அழகான பொன்நிறச் சேவல் ஒன்று தனது செட்டையை அடித்து மூன்று முறை இனிமையாகக் கூவியது. பின்; ‘‘அன்புள்ளவர்களே இப்பொழுது அதிகாலை மூன்றுமணி’’ என்று மூன்று முறை மிகவும் இனிமையாக ஆங்கிலத்தில் கூறியது அப்பொழுது இனிமையான இசை ஒலித்தது கஜேந்திரனது மடியில் படுத்திருந்தாள் வித்தியா. அவனது வலது கை அவளது மெதுமையான தலைமுடியைக் கோதிக் கொண்டிருந்தது. வானத்தில் பூரண சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். சந்திரனின் அருகில் முகில் கூட்டங்கள் இல்லாமையால் மிகவும் பிரகாசமாக இருந்தான். சந்திரனது முகில் ஆடைகள் அவனருகே குவியல் குவியல்களாக அசைவற்றுக் கிடந்தன. தனது மடியில் வானத்துச் சந்திரனைப் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்த வித்தியாவின் முகத்தைத் தனது இரண்டு கைகளாலும் அள்ளி அணைத்துத் தூக்கினான். வித்தியாவின் கரங்கள் அவனது தோளில் மாலையாக விழுந்தன. பல வர்ணப்பூக்களால் கட்டப்பட்ட மாலையொன்று கழுத்தில் இருந்து கால்கள் வரை அணியப்பட்டதைப் போன்ற தொரு மென்மை அவனது உடலெங்குப் பரவியது.

‘‘வித்தியா, நான் நாளைக்கு தொழில் விடயமாக எனது மேலாளருடன் வெளியே செல்ல வேண்டும். பின் விரிவுரைகள் இருக்கிறது. மாணவர்கள் எனக்காகக் காத்திருப்பர். நேற்றிரவு முழுவதும் தூங்காமையால் பகல் வேளையின் போது தூங்கி விழுந்தேன். எனது மேலாளர் சிரித்து விட்டுச் ‘‘புதுமாப்பிளை என்று தெரிகிறது’’ என்று கேலி செய்தார். எனவே அதிகாலை மூன்று மணியாகி விட்டது. சற்றுக் கண்ணயரல் வேண்டும்’’ என்றான்.

வித்தியா மெதுவாகச் சிணுங்கினாள்; நாளைக்கு வேலைக்குச் செல்ல வேண்டாம். திருமணமாகி ஒரு வாரத்திற் கிடையில் என்ன வேலை என்னால் உங்களைப் பிரிந்திருக்க முடியவில்லை. உங்களைக் காதலிக்கும் போது மனதிற்குச் சமாதானம் சொன்னால் அது முரண்டு பிடித்தாலும் பின் கேட்டு ஆறுதல் அடையும். இப்பொழுது எப்படிச் சமாதானம் கூறினாலும் கேட்பதாக இல்லை. மாலை வேளையில் நீங்கள் சற்றுத் தாமதமாக வந்தாலும் தவித்துப் போய் விடுகிறேன். நாளை முழுவதும் என்னுடன் இருங்கள்’’ கலங்கினாள் வித்தியா. விழி ஓரங்களில் கண்ணீர் பளபளத்தது நிலவொளியில் கஜேந்திரனுக்குத் தெரிந்தது.

‘‘முக்கியமான வேலை இருக்கிறது. நான் செல்ல வேண்டும்’’ என்று கூறி விட்டுப் பஞ்சணையில் சரிந்தான் கஜேந்திரன். வித்தியா அவனைப் பார்த்துக் கொண்டு வெகுநேரமாக இருந்தாள். அவளுக்கு நித்திரை வரவில்லை; ‘‘கூடியிருக்கும் இன்பம் மேலும் மேலும் நீடிக்காதோ என்று எண்ணி ஏங்குவதால் கூடியிருத்தலிலும் காதலருக்கு ஒருவகைத் துன்பம் இருக்கிறது’’ என்று எண்ணினாள் வித்தியா.

**1307. ஊடலின் உண்டுஆங்குஓர் துன்பம் புணர்வது**
**நீடுவது அன்றுகொல் என்று.**

கூடி இருக்கும் இன்பம் நீடிக்காதோ என்றுஏக்கம் கொள்வதால், ஊடியிருப்பதிலும் காதலருக்கு ஒரு வகைத் துன்பம் உள்ளது.

**பயன் இல்லாத துன்பம்**

அழகான மரச்சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த அந்தக் கட்டிலில் கஜேந்திரன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். இலவம் பஞ்சால் செய்யப்பட்ட அந்த மலரைப் போன்ற பஞ்சனையில் உருண்டு விளையாடுவது வித்தியாவுக்கு மிகவும் பிடிக்கும். கஜேந்திரனைச் சந்தித்து விட்டு வரும் வேளைகளில் குதூகலித்த மனதுடன் வந்து அந்தப் பஞ்சணையில் படுத்து உருண்டு விளையாடுவாள். மிகவும் அகலமான அந்தக் கட்டிலில் மூன்று பேர் வசதியாகத் தூங்கலாம்; 'அம்மா, நானும் கஜேந்திரனும் எனது பிள்ளையும் சேர்ந்து படுக்கத்தான் இதை வாங்கினாவோ?''அதை எண்ண ஒரு குளிர்மையான இன்ப பரவசம் அவளின் உடலெங்கும் பரவிச் சிலிர்த்தது.

நன்றாக அயர்ந்து உலகை மறந்து தூங்கிக் கொண்டிருக்கும் கஜேந்திரனைப் பார்த்தாள். பின் வானத்தைப் பார்த்தாள். இன்னும் சந்திரன் ஆடைகள் அணியவில்லை முன்பிருந்தது போலவே அவனைச் சுற்றி முகிற் கூட்டங்கள் பொதி பொதியாக இருந்தன. கஜேந்திரனுக்கு அருகே சென்று அவனது முகத்தை வருடினாள். முதல் நாள் சவரம் செய்யப்பட்டதால் வளர்ந்திருந்த முடிகள் அவளது கையை முள்ளாகக் குத்தின. அதிலும் ஒரு பரவசம் இருந்தது. தாடி வளர்த்திருந்த போது ஒரு நாள் கஜேந்திரன் அவளது தாயார் இல்லாத நேரம் அங்கு வந்திருந்தான். அவன் அவளை அணைக்கும் போது வெட்டி அழகாக சீர் செய்யப்பட்டிருந்த அவனது தாடி அவளது கன்னத்தை உரசியது. முதல் முதலாக அவளுக்குக் கிடைத்த பேரின்பம் அது. ஒரு கணம் தடுமாறினாலும் அவளுக்கு அந்த நினைவு வரும் போதெல்லாம் அந்தப் பேரின்பம் பல்கிப் பெருகி அவளைப் பரவசத்தில் ஆழ்த்தும்.

மீண்டும் ஒரு முறை அவனது கன்னத்தைத் தடவினாள் வித்தியா. ஓர் இனிமையான இன்பப் பரவசம் உடலெங்கும் திடீரென்று சிலிர்த்துப் பரவியது. அந்த நேரம் அவனது அணைப்புத் தேவையென ஐம்புலன்களும் அடம் பிடித்தன. மெல்ல அவனது நெஞ்சில் முகம் புதைத்தாள். கஜேந்திரன் அவளை விலக்கி விட்டு போர்வையை இழுத்து மூடினான். அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது; ''எனக்கு இருக்கின்ற கூடியிருக்கும் இன்பம் நீடிக்காதோ என்ற உணர்வு ஏன் இவரிடம் இல்லை. காதலிக்கும் போதே இவர் உணர்வுகளை அடக்கக் கூடியவர். அப்பொழுதே ஞானி உணர்வில்லாத கல்லைப் போன்ற உடல்களுக்கெல்லாம் எதற்குக் காதல், நான் வந்து உங்களுக்காக எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறேன். நான் இங்கு வருவதற்கு எவ்வளவு திட்டமிட்டு அம்மாவை ஏமாற்றினேன் தெரியுமா? நீங்கள் அக்கறை இல்லாமல் எங்கோ வெல்லாம் உலாத்தி விட்டு வருகிறீர்கள்'' என்று ஊடுவாள் வித்தியா.

கஜேந்திரன் சலனமின்றிச் சிரிப்பான்; ''அன்பே உமக்கு முன்பே நான் வந்து விட்டேன். வேறோர் இடத்தில் மறைந்திருந்து சில கணங்கள் உம்மைத் தவிக்க விட்டுப் பார்த்தேன். வந்த சில கணங்களுக்குள் எத்தனை முறை நீர் நான் வரும் திசையையும் மணிக்கூட்டையும் பார்த்தீர் என்று சொல்லவா..?''

''போங்கோ, நீங்கள் எதிலும் வித்தியாசமானவர். என்னைத் தவிக்க விட்டுப் பார்ப்பதில் உங்களுக்கு அப்படி என்ன விருப்பம்...'' என்றாள் வித்தியா.

''அன்பே! புலன்களின் மூலம் காதலின் இன்பத்தை அடைவோம் என்று நினைப்பவர்கள் தான் பலர். அது சாதாரண காதல் ஐம்புலன்களால் உண்டாகும் உணர்வுகளை இன்பப்படுத்தும் காதலர் அது. எனது காதல் ஆத்மாத்தமானது. மனதால் அனுபவிக்கும் காதல் அது உணர்வுகளைக் கடந்து மனதுடன் உறவாடுவது அன்பே மயமானது. மனதிலிருந்து புலன்களால் வரும் ஆசையை நீக்கி விட்டு அன்போடு நேசிக்கும் காதல் என்பதால் அது அமரத்துவமானது. அழியாதது. விலக்க முடியாதது. பிறப்புக்கள் எடுத்தால் பிறப்புக்களோடு கூட வருவது. இது உமக்குப் புதுமையானதாக இருக்கலாம். ஆனால் நாள் செல்லச் செல்லப் புரியும்'' என்ற வார்த்தைகள் வித்தியாவின் காதில் ஒலித்தன. ஆனால் அவன் சொன்ன எவையும் அவளுக்கு இப்பொழுதும் விளங்கவில்லை. அவனைத் தழுவினாள். அவன் விலகினான். குறட்டை ஒலி மெதுவாக அதிகரித்துக் கொண்டிருந்தது; ''நான் விழித்திருந்து இவருக்காக இவரின் அணைப்புக்காக வருந்துகிறேன் என்பதை அறியாது அயர்ந்து தூங்கும் இவருக்காகக் காத்திருப்பதில் பயன் இல்லை.'' என்று பெருமூச்சு விட்டவாறு கட்டிலில் அவனின் அருகில் படுத்தாள் வித்தியா. எனினும் அவளுக்கு நித்திரை வரவில்லை.

**1308. நோதல் எவன்மற்று நொந்தாா்என்று அஃதுஅறியும்**
**காதலா் இல்லா வழி?.**

என்னால் தான் எனது காதலி துன்பப்படுகிறாள் என்று அந்தத் துன்பத்தை அறிகின்ற காதலர் இல்லாத போது, வருந்துவதால் பயன் இல்லை.

## நீரும் நிழலும்

காலை எட்டுமணியாகியும் நித்திரை விட்டெழும்பாது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த கஜேந்திரனை எழுப்பி விட்டு படுக்கையறைக்கு வெளியே வந்த வித்தியா அடுப்பை மூட்டி விட்டு குளிப்பதற்காக

குளியல் அறைக்குள்ச் சென்றான்; ''தனது மேலாளருடன் தொழில் விடயமாக வெளியே செல்ல வேண்டும்'' என்று இரவு கஜேந்திரன் கூறியது நினைவுக்கு வந்ததும் விரைவாக இயந்திர கதியில் குளித்து விட்டு வெளியே வந்து தன்னை அலங்காரம் செய்தாள். பின் ரோஜாப் பூவொன்றைப் பறிப்பதற்காக முற்றத்திற்கு வந்தாள். அவள் ஒரு ரோஜாப் பிரியை அதனால் பல வர்ண ரோஜாச் செடிகளை முற்றத்தில் நட்டு நல்லமுறையில் பராமரித்து வந்தாள். முற்றத்தில் பத்து வர்ணத்தில் ரோஜாச் செடிகளை நட்டுப் பராமரித்து வந்தாள் வித்தியா. ஒவ்வொன்றிலும் அவள் அதிக அன்பு வைத்திருந்தமையால் அச் செடிகள் யாவும் பூத்துக் குலுங்கி மகிழ்வுடன் அவளை வரவேற்றன. வரிசையாக நின்ற பத்து மரங்களும் பூத்துச் சிரித்தன. ஒவ்வொரு பூவையும் பிடித்து அதை இரசித்து முத்தமிட்டுக் கொண்டு வந்த வித்தியா இளம் சிவப்பு நிறப் பூவின் அருகில் வந்து நின்றாள்; வித்தி, இன்று என்னைப் பறித்து உன் கூந்தலில் கஜேந்திரனைக் கொண்டு வை. பல நாட்களாக எனது சகோதரர்களை நீ சூடினாய். இன்று என்னைச் சூடு'' என்று இரப்பதைப் போல இருந்தது. வித்தியா அப்பூவை மெல்லப் பறித்து விட்டு அருகில் உள்ள மஞ்சள் ரோஜாவைப் பார்த்துச் சொன்னாள்; ''நாளைக்கு உன்னைத் தான் சூடுவேன்''.

''வித்தி... என்னம்மா குழந்தைப் பிள்ளைகள் மாதிரி ரோஜாப்பூவோடு கதைக்கிறாய். கல்யாணமாகியும் விளையாட்டுத் தன்மை போகவில்லை. மாப்பிளை குளித்து விட்டு வந்து வெகுநேரமாகி விட்டது தேநீர்க் கொண்டு போய்க் கொடு'' என்றாள்.

தேநீருடன் வித்தியா அறைக்குள் வந்த பொழுது குளித்து விட்டு வந்து கஜேந்திரன் வித்தியாவுக்காகக் காத்திருந்தான். வலது கையில் கொண்டு வந்த தேநீரை மேசையின் மீது வைத்து விட்டு ஓரக் கண்ணால் கஜேந்திரனைப் பார்த்தாள் வித்தியா. கஜேந்திரன் சிரித்தபடி அவளின் அருகே வந்தான். சந்தண வாசமுடைய சவர்க்காரத்தின் நறுமணம் அவனது மனதில் கிளர்ச்சியை உண்டாக்கியது. மெல்ல வித்தியாவின் இடது கையில் இருந்த ரோஜா மலரை எடுத்து அவளது தலையில் செருகினான். ரோஜா, சந்தணத்துடன் சேர்ந்து உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. நிலைக் கண்ணாடிக்கு முன்பாக இருந்த குங்குமச் சிமிழை எடுத்து திறந்து மோதிர விரலால் குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியை நிமிர்த்தி மூக்குக்கு மேலே இட்டான். பின் குங்குமச் சிமிழை மூடி விட்டு மேசையில் அதை வைத்தான்.

வித்தியா மேசையில் இருந்த தேநீர்க் கோப்பையை எடுத்து நீட்டினாள். அதைப் பெற்றுக் கொண்ட கஜேந்திரன் அவளது தோளைப் பற்றி தன்னுடன் அணைத்தவாறு தேநீர்க் கோப்பையை அவளது உதட்டின் அருகே கொண்டு சென்றான். அவள் எதுவும் பேசாது 'வேண்டாம்' எனத் தலையை அசைத்தாள். கஜேந்திரனது கண்கள் 'ஏன்' என்று கேட்டு விரிய; இரவு முழுவதும் நன்றாகத் தூங்கி விட்டு இப்போது என்ன அணைப்பு'' சிணுங்கினாள்.

''இரவு முழுவதுமா...?'' விடியற்காலை நான்குமணிக்கு நீர் கதைத்ததைச் சொல்லவா...?''

''என்னோடு கதைக்க வேண்டாம் என்னை விட உங்களுக்கு உங்கள் மேலாளரும் மாணவர்களும் தான் முக்கியம். திருமணமாகி ஒரு வாரம் கூடக் கழியவில்லை. அதற்குள் என்னைக் கசந்து விட்டது.

கஜேந்திரன் மெல்லச் சிரித்தான். முழுமையான பாசத்தை வெளிப்படுத்தும் குறு நகை அது. மிக மிகச் சந்தோசமான வேளைகளில் அந்தமோகனமான முறுவலை அவனது உதடுகளில் கண்டு களித்திருக்கிறாள் வித்தியா. அந்தச் சிரிப்பு அவளுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் அச்சிரிப்பைக் காணப் பல நாட்கள் பொறுத்திருத்தல் வேண்டும். அந்தச் சிரிப்பில் அவளது இதயம் சொக்கிச் செயலிழந்த போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்; ''உங்கள் மேலாளரும் மாணவர்களும் காத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள். என்னை விடுங்கள்'' என்று அவனது பிடியிலிருந்து விடுபட முயற்சிப்பவள் போலப் பாசாங்கு செய்தாள்.

கஜேந்திரன் சற்றுப் பலமாகச் சிரித்தபடி சொன்னான்; ''நீர் சொல்வது தான் உண்மை. சரி போம்'' வித்தியாவைத் தழுவிய கையை விட்டான் கஜேந்திரன். வித்தியா நாணத்துடன் அவனது நெஞ்சில் முகத்தைப் புதைத்துத் தனது இரண்டு கைகளையும் கோர்த்து அவளது கழுத்தில் போட்டாள். கஜேந்திரன் தேநீர்க் கோப்பையை அவளது உதட்டின் அருகே கொண்டு செல்ல அவள் மெல்லத் தனது உதடுகளை அதில் பொருத்தி தேநீரை மெல்ல உறிஞ்சினாள்; ''தேநீர் குடித்தவுடன் நான் உங்களிடம் நேசமாகி விட்டேன். என்று கருதாதீர்கள். என்னை விடுங்கோ. நான் இனி உங்களுடன் கதைக்க மாட்டன்'' என்றாள்.

''நான் எங்கே உம்மைப் பிடித்தேன். ஒரு கையில் தேநீர்க் கோப்பை உள்ளது. மற்றக் கையைப் பாரும்'' அவன் கையை உயர்த்திய படி நின்றான்.

வித்தியா சிணுங்கியபடி உயர்ந்திருந்த கஜேந்திரனின் கையை மடக்கித் தனது இடுப்பில் விட்டாள்; '' இன்றைக்கு மிகவும் முக்கியமான பல வேலைகள் இருக்கிறது'' என்றவாறு வித்தியாவின் இடையில் இருந்த கையை எடுத்த கஜேந்திரன் சட்டை ஒன்றை எடுத்து அணிந்தான்.

வேலைக்குப் புறப்படத் தயாரான கஜேந்திரனைப் பார்க்க வித்தியாவுக்கு பெருமையாக இருந்தது; ''உயிர் வாழ உதவும் நீர், நிழலை அடுத்திருப்பது மிகவும் இனிமையானது. அது போல, ஊடலும் தம்மீது நிறைந்த அன்பு செலுத்துவோரிடத்தில் கொள்வதே இன்பமானது. என்று நினைத்தவாறு அவனைப் பார்த்தாள்; அன்பு அதிகரித்தால் தான் நீர் என்னுடன் மோகத்தைத் தரும் பிணக்குகளில் ஈடுபடுவீர். அது உமது இயல்பு. அது எனக்கு மகிழ்வு'' என்றவாறு அவளை அணைத்தான். சில நிமிடங்கள் இருவரும் பேசவில்லை. பின் கஜேந்திரன் சொன்னான்; ''வேலைத்தளத்திலும் இது நினைவுக்கு வரும். விரைவாக வருகிறேன்.''

**1309. நீரும் நிழலது இனிதே புலவியும்**
**வீழுநர் கண்ணே இனிது.**

நீர், நிழலின் அருகில் இருப்பது தான் இனிமையானது; அது போல, ஊடலும் அன்பு செலுத்து வோரிடத்தில் கொள்வதே இன்பமானது.

## ஆசை

''இன்று மட்டும் என்னுடன் கூட இருங்கள்'' கெஞ்சினாள் வித்தியா.

''மிகவும் முக்கியமான வேலை இருக்கிறது வித்தியா. நான் இன்னொரு நாள் உம்முடன் தங்கியிருக்கிறேன். இன்று கட்டாயம் செல்ல வேண்டும்'' என்றான் கஜேந்திரன்.

''சுகுணா விருந்திற்கு வரும்படி கேட்கிறாள். மாமா உங்களுக்கு சாப்பாடு தர வேண்டுமாம். உறவினர்களும் நண்பர்களும் நாங்கள் தங்களது வீட்டிற்கு வரவில்லை யெனக் குறை சொல்கிறார்கள். எமக்குத் திருமணமாகி இரண்டு வாரங்கள் தானே ஆகிறது. திருமணம் முடிந்த ஆறாவது நாள் நல்ல நாள் என்று சொல்லி விட்டுச் சென்றீர்கள். அதன் பின் தினமும் இப்படித்தான் சொல்கிறீர்கள். என்னை மதிக்காத உங்களையும் உங்களது வேலைகளையும் எனக்குப் பிடிக்க வில்லை. ஒரு வாரம் வேலைக்குச் செல்லாது என்னுடன் கூடியிருந்து எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நான் உங்களுடன் பேசமாட்டேன்'' சற்று உறுதியான குரலில் கோபமாகச் சொன்னாள் வித்தியா.

''என்னுடன் கதைக்காமல் இருக்க உம்மால் முடியுமா....? பனிக்கட்டி சூரியனைக் கண்டதும் உருகுவதைப் போல என்னை நினைத்தாலே உருகிப் போவீர் சரி. இன்று நீர் என்னுடன் கதையாமல் இரும். கதைக்காமல் இருந்தால் உம்முடன் ஒரு வாரம் தங்குகிறேன்'' என்றான் கஜேந்திரன்.

''நான் நினைத்தால் நினைத்தது தான் இன்று நீங்கள் என்னுடன் சுவர்ணாவின் வீட்டுக்கு வர வேண்டும். எனது அன்புக் கட்டளையை மீறிப் போனால் பின்நேரம் இங்கு வரவேண்டாம்''.

''வித்திக்குட்டி... எனது நிலையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாரம்மா, பல்கலைக்கழகத்தில் பரீட்சை நெருங்குகிறது அதற்கான வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் இன்று கட்டாயம் போக வேண்டும். என்னுடைய அன்பான வித்தி... நான் காதல் கொண்ட வித்தி, நான் செல்ல எனக்கு விடை தாரும்'' என்றவாறு அவளது கன்னத்தில் செல்லமாகத் தட்டி விட்டு அவளது பதிலை எதிர்பாராது அலுவலகப் பையை எடுத்துக் கொண்டு நடந்தான் கஜேந்திரன்.

வித்தியாவுக்கு அழுகை வந்து விட்டது. சுவர்ணா அவளை திருமணமான பின் விருந்திற்கு அழைத்தாள். பல முறை எப்போது வருவீர்கள் என்று அவள் கேட்டும் அவளுக்கு முடிவான ஒரு பதிலை வித்தியாவால் சொல்ல முடியவில்லை. நேற்று வந்த அவள் வித்தியாவைக் கேட்டாள்; ''கஜேந்திரன் என்ன சொன்னவர். அப்பா ஆறு மாதம் வெளியூரில் வேலை செய்யச் செல்கிறார். அதற்கு முன்பு நான் உனக்கு விருந்து தரவேண்டும். சில சமயம் நாம் வருவது தாமதமானால் மூன்றாவதாளுக்கும் விருந்து வைக்க வேண்டி வந்திடும். அது கட்டுப்படியாகாது தாயே... மூன்றாவது நபருக்குச் சங்கிலி போட எனக்கு வசதியில்லை'' என்று சிரித்தாள் சுவர்ணா. வித்தியா நாணிக் கோணினாள்.

''அவருக்கு அலுவலகத்தில் சரியான வேலை. அவர் இல்லா விட்டால் பல்கலைக்கழகத்தை மூடிவிடுவார்கள் என்று அவர் சொல்லுவார். இவர் வேலைக்குச் சேர முன்பு பல்கலைக்கழகம் மூடித்தானே கிடந்தது. வித்தி, எல்லா ஆண்களும் மாயக்கள்வர்கள். காதலிக்கும் போது தான் மயக்கு

வார்த்தைகள் பேசுவார்கள். கலியாணமானால் எல்லாம் சரி. இனி நான் உன்னை எனது வீட்டுக்கு வரும்படி கேட்க மாட்டன்'' அந்த வார்த்தைகள் வித்தியாவின் காதில் எதிரொலித்தன.

''இன்று அவருடன் கதைப்பதில்லை'' என்று திடமாகத் தீர்மானித்திருந்தாள் வித்தியா. ஐந்து மணிக்கு கஜேந்திரனின் மோட்டார் வண்டி வந்து வீட்டு வாசலில் நின்றது. வழமையாக அவனின் வரவை எதிர் பார்த்து வாசலில் நிற்கும் வித்தியாவைக் காணாமையால் உள்ளே வந்தான் கஜேந்திரன். காலையில் அவள் சொன்ன வார்த்தைகள் அவனின் மனதில் வந்தன. வித்தியா பிடிவாதக் காரி என்பது அவனுக்குத் தெரியும் அதனால் திட்ட மொன்றை அன்று உருவாக்கியபடி அறைக்குள் நுழைந்தான். வித்தியா கட்டிலில் முகம் குப்புறப் படுத்திருந்தாள். தலைமுடி முதுகெங்கும் ஒழுங்கின்றிச் சிதறிக் கிடந்தது. பரபரப்புடன் அவளின் அருகில் அமர்ந்த கஜேந்திரன்; ''என்ன வித்தி சுகமில்லையா...? எழும்பும் வைத்தியரிடம் செல்வோம். இரவு உமது உடல் லேசாகக் கொதித்தது. இரவு முழுவதும் கண்விழித்தால் வருத்தம் வரும் தானே. நான் இன்று வேலைக்குச் சென்றும் பிரயோசனமில்லை. நித்திரையாகி விட்டேன். எனது மேலாளர் வந்த போது ''வித்தியா'' என்று புலம்பியும் விட்டேன். அதனால் ஒரு வாரம் உனது அன்புக் காதலியுடன் இருந்து அவளின் விருப்பமெல்லாவற்றையும் பூர்த்தி செய்து விட்டு வா என்று சொல்லி விட்டார். நீர் சுகமில்லாத போது நான் தங்கியிருந்து என்ன செய்வது. எழும்பும் வைத்தியரிடம் செல்வோம்'' என்றான் கஜேந்திரன்.

கட்டிலால் துள்ளி எழுந்த வித்தியா; ''எனக்கொன்றுமில்லை. நீங்கள் தாராளமாகத் தங்கலாம்'' என்று கூறியபடி அவனை அணைத்தாள். கஜேந்திரன் சிரித்தான்; ''என்னில் உயிரை வைத்திருக்கும் நீங்கள் இன்று விடுமுறை எடுத்து வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்'' என்றாள் வித்தியா.

கஜேந்திரன் பலமாகச் சிரித்தான். உம்மை நான் ஏமாற்றி விட்டேன் நாளைக்கு நான் வேலைக்குச் செல்ல வேண்டும்'' என்றான்.

வித்தியாவின் மனம் வாடிச் சோர்ந்தது; ''காலையில் நான் கோபம் கொண்ட போது அதை விலக்கி மகிழ்விக்காமல் சென்றவரோடு என் நெஞ்சம் கூடியிருக்க வேண்டு மென்று நினைப்பதற்குக் காரணம் அவர் மீது நான் கொண்ட ஆசைதான்'' என்று நினைத்த வித்தியா; ''உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். நீங்கள் நாளைக்கு போகமாட்டீர்கள்''என்றாள்.

''ஐயோ வித்தி, ஒரு வாரம் பொறுத்துக் கொள். அதன் பின் உனது விருப்பப்படி நடப்பேன்'' என்றான் கஜேந்திரன். வித்தியாவின் மனம் வாடிச் சோர்ந்த போதும் அவனின் மீதிருந்த மோகத்தைக் குறைக்கவில்லை.

**1310. ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்**
**கூடுவேம் என்பது அவா.**

ஊடல் கொண்ட போது அன்பு செலுத்தி உறவு கொண்டு மகிழ்விக்காமல் வாட விடுகின்றவரோடு கூடியிருக்க என் நெஞ்சம் முயல்வதற்குக் காரணம் ஆசையே.

### பொதுவான தல்ல

அன்று சனிக்கிழமை, விடியற்காலை ஐந்துமணியில் இருந்து கண்மணி பத்து முறை மாடிப் படிகளில் ஏறிவந்து வித்தியாவின் அறை திறந்திருக்கிறதா என்று பார்த்தாள். காலை ஏழுமணியாகியும் அறைக் கதவு திறக்கப்படவில்லை. முதல் நாள் வெள்ளிக்கிழமை கஜேந்திரன் விடுமுறையில் நின்றான். கண்மணிக்கு வித்தியாவின் காதல் விஷயம் தெரிந்த நாள் முதல் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியை மனமுருகிப் பிரார்த்தித்து அவர்கள் இருவரையும் பிரித்து விடும்படி வேண்டினாள். அப்படிப் பிரிந்தால் கண்மணி மகா கணபதிக்குப் பெரிய தொரு சங்காபிஷேகம் செய்வதாக நேர்த்தியும் வைத்திருந்தாள். ஆனால் முதல் முறையாக மகாகணபதி கண்மணியை ஏமாற்றி விட்டார். திருமணம் நடந்த பின்பு கண்மணிக்குத் தான் வைத்த நேர்த்திக்கடன் பற்றிப் பயமாக இருந்தது. தான் கேட்டுக் கொண்டது திருமணம் நடந்து முடிந்த பின்பு நடைபெற்றால் என்ன செய்யலாம் என்ற பயம் அவளைத் தினமும் வருத்தியது. குருக்களும் வித்தியாவும் கஜேந்திரனும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கண்மணியின் மனம் சாந்தியடையவில்லை. அதனால் ஓர் அபிஷேகம் செய்யும்படி கஜேந்திரனைக் கேட்டுக் கொண்டாள். கண்மணியின் மீது அளவற்ற அன்பும் மரியாதையும் வைத்திருந்த கஜேந்திரன் அவளின் விருப்பத்திற்கு இணங்கிச் சகல காரியங்களையும் செய்து வந்தான். அதனால் மறுக்காது அவன் விரதமிருந்து தர்ப்பை தரித்து அபிஷேகத்தில் கலந்து கொண்டான். அது அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அன்று அபிஷேகத்தில் கலந்து கொண்ட கஜேந்திரனை அவ்வூர் மக்களும் அவளது உறவினர்களும் கண்டு திகைத்து விட்டனர்; ''கண்மணி, நீ கொடுத்து வைத்தவள். மிகவும் அழகான

மாப்பிளை; படித்தவன்; உயர்ந்த உத்தியோகத்தன். இவ்வளவு ஒழுக்கமாக இருப்பானென நான் நினைக்கவில்லை. பண்பும் பலமுமுள்ள மாப்பிளையை அடைந்த நீ கொடுத்து வைத்தனீ. எனது மகனை அவள் கட்டியிருந்தால் இவ்வளவு இன்பத்தை அடைந்திருக்க முடியாது'' என்றார் அவளது சகோதரன் வரதராஜன்.

''நல்ல அழகான நெஞ்சுறுதியுள்ள மாப்பிளை'' என்றாள் புனிதவதி.

''நீ கொடுத்து வைத்தவள். பத்துப்பேருக்கு அடிக்கக் கூடிய தைரியசாலி. பரந்த மார்பு; உறுதியான மனம்; கருணை மிக்க இதயம்'' இதற்கு மேல் உனக்கென்ன வேண்டும்'' என்று கேட்டாள் கோயிலுக்கு வந்த ஒரு பெண்.

ஏழரைமணிக்குப் படுக்கை அறைக்கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்தாள் வித்தியா. அறை வாசலில் அம்ர்ந்திருந்த தாயைக் கண்டதும் திகைத்துப் போனாள்; ''என்னம்மா...? என்ன...? பதறினாள்.

''ஒன்றுமில்லை அம்மா நேற்று முழுக்கக் கோயிலில் கஜனைப் பற்றித்தான் கதைத்தார்கள். அதனால் திருஷ்டிபட்டிருக்கும் இந்தா உப்பும் மிளகாயும் கஜேந்திரனைத் துடைத்து விட்டு துப்பச் சொல்லு பின் வீட்டு வாசலில் கொண்டு போய் எரி. திருஷ்டி சுற்றாமல் போனால் அவருக்கு ஏதாவது கேடு வந்து விடும். பார்த்த பெண்களெல்லாம் கஜனின் அழகைப்பற்றியும்' பரந்த மார்பைப் பற்றியும் தான் கதைத்தவை'' என்று கூறி விட்டு தான் கொண்டு வந்த மிளகாயையும் உப்பையும் கொடுத்து விட்டு மாடிப்படிகளால் இறங்கிச் சென்றாள்.

''நீ அதிட்டக்காரி. ஆண்கள் சிவந்த நிறமாக இருப்பதை விடப் பரந்த மார்புள்ளவர்களாக இருப்பது தான் அழகு; பலம்; ஆண்மை கஜேந்திரனிடம் அந்த மூன்றும் இருக்கு உனது தெரிவு மிகப்பிரமாதம்'' என்று முன்பு சுவர்ணா சொன்னது அவளது நினைவுக்கு வந்தது.

''நீ அதிட்டம் செய்தவள். நகுலனைக் காண்பதற்கு முன்பு நான் கஜேந்திரனைக் கண்டிருந்தால் அவரைத்தான் நான் விரும்பியிருப்பேன். அழகான மார்படி... கோயிலில் கஜேந்திரனைச் சட்டை இல்லாமல் கண்டு ரசித்தேன்'' கண் சிமிட்டினாள் அர்ச்சகா.

''நான் உன்னை நினைத்துப் பொறாமைப் படுவதுண்டு. உண்மையில் அழகான மார்பைக் உடைய கஜேந்திரனை அடைந்த நீ மிகவும் கொடுத்து வைத்தவள்'' வளர்மதி சொன்னது அவளது நினைவுக்கு வந்தது.

உள்ளே அவசரமாசக் சென்ற வித்தியா மேற்சட்டையின்றி கட்டிலில் அமர்ந்திருந்த கஜேந்திரனது மார்பை கட்டிலில் இருந்த போர்வையால் எடுத்து மூடினாள். அவளது செயலை அதிர்ச்சியுடன் பார்த்த கஜேந்திரன் போர்வையை விலக்க முயன்றான்; ''விலக்காதீர்கள். போர்வையை விலக்காதீர்கள்'' என்றாள் வித்தியா.

சிரித்தான் கஜேந்திரன். கொண்டு வந்த உப்பையும் மிளகாயையும் மூன்று முறை அவனது உடலெங்கும் தடவிய வித்தியா, அதை அவனது உதட்டருகே கொண்டு சென்று மூன்று முறை துப்பும் படி கையை விரித்தாள். கஜேந்திரன் மறுபேச்சின்றித் துப்பினான்.

பத்து நிமிடங்களுக்குப் பின்பு அங்கு வந்த வித்தியா சொன்னாள்; ''இனிமேல் நீங்கள் வீட்டில் இருக்கும் போது கூட மேற்சட்டை அணிந்து கொண்டு தான் இருக்க வேண்டும். மற்றய பெண்கள் உங்களது மார்பைப் பார்க்கக் கூடாது. பெண்கள் பலர் உங்களது அழகான மார்பை தம் கண்களால் பார்த்து இரசிக்கின்றனர். அப்படி இரசித்தால் நான் உங்களைத் தழுவ மாட்டேன். கோயிலுக்கு வரும் போது இனிமேல் மேல்சட்டை அணிந்து வாருங்கள்'' என்றாள் வித்தியா.

**1311. பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு.**

உன்னைப் பார்த்தவுடன் பெண்கள் ஆசை கொண்டு விடுகின்றனர்; உனது திரண்ட மார்பைப் பெண்கள் பலரும் பொதுப் பொருளாகக் கொண்டு பார்த்து இன்பம் பெறுகின்றனர்; எனவே நான் உனது மார்பைத் தழுவ மாட்டேன்.

### வாழ்த்தும் தும்மல்

“ஏன் மிளகாயும் உப்பும் கொண்டு வந்து எனது மேலெல்லாம் தடவினீர். பின் துப்பச் சொன்னீர்” கஜேந்திரன் கேட்டான்.

“உண்மையாக உங்களுக்குத் தெரியாதா....? நீங்கள் கேட்கும் கேள்வியைப் பார்த்தால் உங்கள் அழகான பரந்த வலிமை மிக்க மார்பை எல்லாப் பெண்களும் பார்த்து மோகம் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறீர்கள் போலத் தெரிகிறது. இது என்னுடையது யாரும் பார்க்க விட மாட்டன்”

“எனக்கு சாஸ்திரத்தில் நம்பிக்கையுண்டு. இப்படியான பிற்போக்கான சம்பிரதாயங்களில் நம்பிக்கையில்லை. மிளகாயும் உப்பும் நெருப்பிலிட்டவுடன் வெடித்துப் பக்கத்தில் உள்ளவர்களைத் தும்மச் செய்யும். இதை நீர் என்னில் தேய்க்காமல் நெருப்பிலிட்டாலும் வெடிக்கத்தான் செய்யும். அதற்காக எனக்கு வந்த கேடு நீங்கி விட்தென்று அர்த்தமல்ல”.

“இல்லை யாராவது பார்த்து உங்களுக்கு திருஷ்டி ஏற்பட்டால் மிளகாயையும் உப்பையும் எடுத்து உடலில் தடவி துப்பிவிட்டு நெருப்பிலிட்டால் திருஷ்டி நீங்கும். அதை நானும் அம்மாவும் நம்புறம்” சற்றுக் கடுமையாகச் சொன்னாள் வித்தியா.

“எனக்கு இவற்றிலெல்லாம் நம்பிக்கை இல்லை. என்மனதிற்கினயவளின் மனம் கோணக் கூடாதென்பதற்காக இதற்கல்ல வேறு எதற்கும் சம்மதிப்பேன்” என்றான் கஜேந்திரன்.

“உங்களின் இந்தக் குணம் எனக்கு முன்பிருந்தே பிடிப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியும். நான் சில சமயங்களில் அறியாமையால் சில செயல்களைச் செய்வேன். அதை நீங்கள் சரியென்று ஒப்புக் கொண்டால் அதனால் எவ்வளவு தீமைகள் வரும் தெரியுமா...?” வேண்டுமென்றே என்னைப் பழி வாங்குவது போலவும் பரிகாசிப்பது போலவும் தெரிகிறது.”

“விடியற்காலையில் ஏன் என்னுடன் சண்டைக்கு வாறீர். அத்துடன் நீர் படிக்காதவரா அறியாமையால் சொல்ல. அத்துடன் பாரதூரமான விஷயங்களென்றால் என்னைத் தானே ஆலோசனை கேட்பீர். இன்று விடுமுறை தினம். உம்முடன் மகிழ்வுடன் இருக்கலாமென்றால் வேண்டுமென்றே சண்டைக்கு வருகிறீர். நீர் கேட்பது போல ஒரு வாரம் நான் விடுமுறையில் இருந்தால் எப்படி இருக்கும்” சிரித்தான் கஜேந்திரன்.

விம்மினாள் வித்தியா; “நீங்கள் முன்பு போல இல்லை. இப்போது என்னில் நீங்கள் எப்பொழுதும் குறை காண்கிறீர்கள். குற்றம் சொல்கிறீர்கள்”

கஜேந்திரன் எதுவும் பேசாமல் இருந்தான். சில கணங்கள் நிசப்தமாகக் கழிந்தன; “இப்போ உங்களுக்கு என்னுடன் கதைக்கவும் பிடிப்பதில்லை. முன்பென்றால் மணிக்கணக்கில் கதைப்பீர்கள் என்னைக் காணா விட்டால் துடிப்பீர்கள். இப்போது நான் அருகில் இருந்தால் உங்களுக்குப் பிடிப்பதில்லை”.

“உண்மை தான் எப்படிக் கண்டு பிடித்தீர்” சிரித்தான் கஜேந்திரன். அவளது சிரிப்பு வித்தியாவுக்குக் கோபத்தை வரவழைத்தது;“ நீங்கள் திருமணம் செய்த பின் மாறி விட்டீர்கள். பேசாமல் காதலித்துக் கொண்டே இருந்திருக்கலாம். கலியாணம் செய்ததால் எனது மகிழ்ச்சி பறந்து விட்டது. நேற்றுக் கோயிலில் கண்ட பெண்களெல்லாம் உங்களைப் பற்றித்தானாம் அம்மாவுடன் கதைத்தவை. அது அம்மாவுக்குப் பெருமையாக இருந்ததாம். அவர்கள் கதைத்ததால் உங்களுக்கு திருஷ்டி பட்டுவிடுமென நினைத்து திருஷ்டி கழிக்கிறா. எனக்கென்றால் ஆத்திரமாக இருக்கு. எனக்குரிய ஓர் ஆணை எப்படி மற்றய பெண்கள் பார்த்து இரசித்துப் பெருமையாகக் கூறலாம்....”

“எனக்கொரு தேநீர் தருவீரா...”

வித்தியா எழுந்து சென்றாள். சில நிமிடங்களில் தேநீருடன் வந்து சொன்னாள்; “இப்போது நீங்கள் நடந்து கொள்ளும் விதம் எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் நான் உங்களோடு கதைக்க மாட்டேன்”.

அப்படி ஒரு தண்டணையை எனக்குத் தரவேண்டாம். அதை விட என்னைக் கொல்லலாம். காதலிக்கும் போது எவ்வளவு கலகலப்பாகவும் அன்பாகவும் இருந்தீர். இப்பொழுது எல்லாம் அடியோடு மாறிவிட்டது. எல்லாம் எனது பூர்வ புண்ணியப்பலன். இப்படி நடக்குமென்று முன்பே தெரிந்திருந்தால் நானும் மகா கணபதியைப் போலப் பிரமச்சாரியாக இருந்திருப்பேன். எவ்வளவு கொடுத்து வைத்தவர் அவர். காதலிக்கும் போது இனிமையானவர்களாகத் தோன்றும் பெண்கள் பின் எப்படியெல்லாம் மாறி விடுகிறார்கள்” பெருமூச்சு விட்ட கஜேந்திரன் இரண்டு முறை தும்மினான்.

“எனக்கு உங்களின் கள்ளத்தனம் விளங்காதா? நான் வாய்திறந்து நெடுங்காலம் வாழ்க என வாழ்த்துவேன் என்று நினைத்துத் தானே தும்முகிறீர்கள். நான் வாய் திறந்து உங்களுடன் ஒரு சொல்லுக் கூடப் பேசமாட்டேன்” என்று நினைத்தாள் வித்தியா.

மீண்டும் ஒரு முறை தும்மிய கஜேந்திரன் வித்தியாவை ஏக்கத்துடன் பார்த்தான். முன்பென்றால் அவன் தும்மியவுடன் அவள் “நெடுங்காலம் வாழ்க” என்று வாழ்த்துவாள். அவனது உச்சந்தலையைத் தடவுவாள். அத்துடன் அவளது ஊடல் மறைந்து விடும்.

மீண்டும் ஒரு முறை தும்மினான் கஜேந்திரன். வித்தியா எழுந்து அவனருகே சென்று சைகையால்; “நெடுங்காலம் வாழ்க” என வாழ்த்தி விட்டு முகத்தை மறுகரை திருப்பினாள். கஜேந்திரனுக்குச் சிரிப்பு வந்தது.

**1312. ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை**
**நீடுவாழ்க என்பாக்கு அறிந்து.**

நான் அவரோடு ஊடல் கொண்டிருந்தேன்; நெடுங்காலம் வாழ்க என்று நான் வாய்திறந்து வாழ்த்துவேன் என்று நினைத்து அவர் தும்மினார்.

## கோட்டுப்பூ சூடினும்

அன்று வெள்ளிக்கிழமை ஐந்துமணிக்கு கஜேந்திரன் வேலையால் வந்த போது வித்தியா காய்ச்சலால் முனகிக் கொண்டு கட்டிலில் படுத்திருந்தாள். வைத்தியரிடம் பெற்ற மருந்துச் சரைகள் மேசையில் பிரிக்கப்படாமல் கிடந்தன. அவன் பல்கலைக்கழகத்தில் இருந்த போது கண்மணி தொலைபேசியில் தொடர்பு கொண்டு; “வித்தியாவுக்கு லேசான காய்ச்சலும் தலை வலியும்” என்றாள்.

“வைத்தியரிடம் அவளை அழைத்துச் செல்ல நான் வரட்டா” என்று கேட்டான் கஜேந்திரன்.

“வேண்டாம், வேண்டாம் சாதாரண காய்ச்சல் தான். நான் வைத்தியரிடம் அழைத்துச் செல்கிறேன்” என்றாள் கண்மணி. இருந்தும் கஜேந்திரன் வித்தியாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டான்; “ஏன் என்ன பிரச்சினை. நான் வரும் போது நன்றாகத் தானே இருந்தீர். வாசல் வரை வந்து நீர் என்னை வழியனுப்பும் போது முகத்தில் வாட்டம் தென்படவில்லையே. நான் வந்து வைத்தியரிடம் அழைத்துச் செல்கிறேன்” என்று பரபரத்தான் கஜேந்திரன்.

மற்றய நாட்களானால் அவள் வரும்படி சொல்லி விடுவாள் ஆனால் அவன் அன்று வந்தால் உடனே வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று விடுவான். பின்பு வைத்தியர் கூறியபடி மருந்தைச் சாப்பிடச் சொல்வான். மருந்து சாப்பிடுவது வித்தியாவுக்குப் பிடிப்பதில்லை. அவர்களது குடும்ப வைத்தியர் கணேசமூர்த்தி தான் கொடுக்கும் மருந்து முழுவதையும் சாப்பிடும்படி வற்புறுத்திக் கூறுவார். அதனால் அவள் அவனை வரவேண்டா மென்று கூறினாள்.

வீட்டுக்கு வந்த கஜேந்திரன் நேரே வித்தியாவின் படுக்கை அறைக்கு வந்து கட்டிலில் முகம் குப்புறப்படுத்திருந்த வித்தியாவைப் புரட்டினான். பின் அவளது நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான். லேசான உஷ்ணம் அவனது கையில் பரவியது; “மருந்து வாங்குவது மேசையில் வைக்கவா?” என்றவாறு ஒவ்வொரு சரைகளாகப் பிரித்து மாத்திரைகளைக் கையில் எடுத்துக் கொண்டு மேசையில் இருந்த தண்ணீர்ப் போத்தலையும் எடுத்துக் கொண்டு வந்து அவளின் அருகில் அமர்ந்தான்.

அப்போது கண்மணி தேநீருடன் அங்கே வந்தாள்; “பத்து மணிக்கு மருந்து எடுத்தது. இன்னும் அவள் மருந்து சாப்பிடவில்லை. வைத்தியசாலைக்கும் கஷ்டப்படுத்தித் தான் அழைத்துச் சென்றேன். திருஷ்டிதான் மகா கணபதிக்கு ஓர் அர்ச்சனை செய்தால் சரிவரும். குருக்களிடம் மந்திரித்து நூல் கட்டினால் நல்லது” என்றாள்.

“எழும்பி முகத்தைக் கழுவி விட்டு மருந்தைக் குடித்து விட்டு வாரும். மகா கணபதிக்கு அர்ச்சனை செய்து விட்டு வருவோம்”.

“நான் வரவில்லை தலைவலிக்கிறது” படுக்கையில் படுத்திருந்தவாறு முனகினாள் வித்தியா.

“மருந்தை வாங்கி வந்து மேசையில் வைத்தால் தலை வலிக்காமல் என்ன செய்யும். எழும்பி மருந்தைக் குடி” என்றாள் கண்மணி.

‘‘எழும்பும்’’ என்றவாறு அவளை அணைத்துத் தூக்கினான் கஜேந்திரன்; ‘‘இவளுக்கு நீங்கள் அளவுக்கதிகமான செல்லம் கொடுத்து விட்டீர்கள். திருமணத்திற்குப் பிறகு நான் சொல்வ தொன்றையும் கேட்கிறாளில்லை’’ என்றாள் கண்மணி.

அவளைத் தூக்கி நிறுத்திய கஜேந்திரன் மாத்திரைகளைக் கையில் கொடுத்தான். அவள் குடிக்கமாட்டேன் என்று அடம்பிடித்தாள். கண்மணிக்கு கோபம் ஒரு கணம் வந்த போது பின் சிரிப்பு வந்தது.

கஜேந்திரன் அவளது வாய்க்குள் நீரை விட்டு விட்டு மாத்திரைகளை வாயுள் போட அவள் அதை விழுங்கி விட்டு திரும்பவும் கட்டிலில் படுத்துப் போர்வையால் தனது உடம்பை மூடினாள்.

‘‘நானும் வருகிறேன் வாங்கோ போய் மகா கணபதிக்கு அர்ச்சனை செய்து கொண்டு வருவோம்’’ என்றாள் கண்மணி.

குருக்கள் அர்ச்சனை செய்து விட்டுக் கொடுத்த திருநீற்றையும் நூலையும் கொண்டு வந்தான் கஜேந்திரன். அவனது நெற்றியில் திருநீறு அணியப்பட்டு சந்தணத் திலகமிடப்பட்டிருந்தது. காதில் பெரிய தொரு செவ்வரத்தம்பூ வைத்திருந்தான். அவன் கோயிலுக்குச் சென்றால் தனது காதில் விரும்பி அணிவது செவ்வரத்தம் பூவையே. அதைப் பார்க்க வித்தியாவுக்குச் சிரிப்பு வந்தது; ‘‘என்னடி உன்னுடைய ஆள் வெட்கமில்லாமல் முழுமையான பெரிய தொரு செவ்வரத்தம்பூவை காதில் அணிந்து வருகிறார். ஒரு இதழைக் காதில் வைக்கச் சொல். இல்லா விட்டால் சிறிய பூக்களில் ஒன்றை வைக்கச் சொல். பார்க்க வேடிக்கையாக இருக்கு என்பாள் சுகுணா.

‘‘நான் இந்தப் பூவை அணிய வேண்டா மென்று உங்களுக்கு எத்தனை தடவைகள் சொல்லியிருப்பன். எனக்கு விருப்பமில்லாத ஒன்றைச் செய்வதில் உங்களுக்கு பிரிய மிருக்கென்றால் அதற்கொரு முக்கிய காரணம் இருத்தல் வேண்டும். நீங்கள் இப்பூவைச் சூடியிருக்கும் அழகை யாரோ ஒருத்திக்குக் காட்ட வேண்டும் என்று நினைக்கிறீர்கள்’’ என்று கோபம் கொண்டாள் வித்தியா.

அவன், அவள் சொல்வதைக் கவனிக்காது அவளது நெற்றியில் திருநீற்றைப் பூசிவிட்டு சந்தணப் பொட்டை வைத்தான். பின் அவளது இடது கையில் குருக்கள் கொடுத்த நூலைக் கட்டி விட்டு, தனது காதில் இருந்த செவ்வரத்தம் பூவை எடுத்து அவளது தலையில் சூடினான்.

‘‘யாரோ பார்த்து இரசித்து மகிழ நீங்கள் சூடிய பூவை ஏன் எடுத்து எனக்குச் சூடுகிறீர்கள்’’ என்று கோபித்தாள் வித்தியா.

**1313. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.**

கிளைகளில் மலர்ந்த மலர்களை நான் சூடினாலும், நீர் இந்த அழகை யாரோ ஒருத்திக்குக் காட்டுவதற்காகத் தான் சூடினீர், என்று அவள் கோபம் கொள்வாள்.

**வேறுயாரை விட**

கஜேந்திரன் வித்தியாவைப் பார்த்தான். அவளது மெலிவான ஒளிவீசும் முகம் சோர்ந்து கறுத்திருந்தது. வாடிய ரோஜாப் பூவைப் போல இருந்த அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கஜேந்திரன் அவளது நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான். பெரிதாகக் கொதிக்கவில்லை யென்றாலும் இலேசான உஷ்ணமிருப்பது தெரிந்தது; ‘‘காலையில் இருந்து எதுவும் சாப்பிடவில்லை என்றும், குடிக்கவில்லை என்றும் மாமி சொன்னா...? ஏதாவது குடிப்பதற்குக் கரைத்துத் தரட்டுமா? எனது சமையலை ருசித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காகப் பல நாட்கள் உமக்கு நான் சமைத்த உணவைக் கொண்டு வந்து தந்திருக்கிறேன். அதை நீர் மகிழ்வுடன் சுவைத்து ரசித்து சாப்பிட்டதை நான் கண்குளிரக் கண்டு களித்துள்ளேன். எனக்குச் சுவையாகத் தேநீரும் தயாரிக்கத் தெரியும்; தேசிக்காய் கரைக்கவும் தெரியும். உமக்கு ஏதாவது குடிப்பதற்குத் தர வேண்டும் என்று எனது மனம் பரபரக்கிறது என்ன வேண்டும் சொல்லும்’’ பாசம் பொங்கக் கேட்டான் கஜேந்திரன்.

அவனது பாசம் மிகுந்த வார்த்தைகளில் வித்தியா கரைந்து போனாள். அவனைத் தனக்குக் கொடையாகத் தந்துதவிய நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியை ஒரு கணம் கண் மூடித் தியானித்தாள். அவள் கண்களை மூடியதும் கஜேந்திரன் அதைத் தவறாக நினைத்தான். நோயின் தாக்கத்தினால் தான் அவள் கண்களை மூடினாள் என்று நினைத்தான். அவளது கடைக் கண்ணில் இருந்து நீர் வழிந்தது.

கஜேந்திரன் பதறிப் போனான்; ‘‘வித்தி உடம்பிற்கு என்ன. எழும்பும் பெரியாஸ்பத்திரிக்குச் செல்வோம். உமது கண்கள் கலங்குவதைப் பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாது’’.

வித்தியா சிரித்தாள். அவனது மடியில் பூரண நிலவு பிரகாசித்தது; ‘‘ஒரு சின்னத் தலைவலிக்கு இப்படிப் பதறுகிறீர்களே, பெரிய தொரு நோய் எனக்கு வந்தால் என்ன செய்வீர்கள். என் மீது பேரன்பு மிக்க உங்களைக் கணவனாக அடைய நான் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். உங்கள் கையால் மருந்தைப் பெற்றுச் சாப்பிட வேண்டும் மென்பதற்காகத் தான் நான் மருந்துண்ணாமல் இவ்வளவு நேரமும் வேதனையைப் பொறுத்துக் கொண்டு உங்களின் வருகைக்காகக் காத்திருந்தேன். இப்போது நீங்கள் என்னைத் தொட்டதும் எனது நோய் மாறி விட்டது.’’ வித்தியாவின் குரல் உணர்ச்சி பொங்க ஒலித்தது.

கரைந்து போனான் கஜேந்திரன். அவளது அன்பு கனிந்த வார்த்தைகள் இதயத்துள் தித்தித்தன. மடியில் படுத்திருந்து அவனை நோக்கிப் பிரகாசித்துக் கொண்டிருந்த வித்தியாவின் தலை முடியை ஆதரவுடன் கோதினான்; ‘‘அன்பே! வேறு யாரையும் விட நான் உம்மை அதிகமாக நேசிக்கிறேன்...’’ என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது அவனது மடியிலிருந்து துள்ளி யெழுந்தாள் வித்தியா; ‘‘என்ன சொன்னீர்கள்.. திருப்பிச் சொல்லுங்கள்.. என்ன? என்ன? வேறு யாரையும் விட என்னை அதிகமாக நேசிக்கிறீர்களா...? அப்போ நீங்கள் நேசிப்பதற்கு என்னை விட வேறு யாரோ இருக்கிறார்கள்’’ சிணுங்கியபடி எழுந்து கட்டிலில் படுத்தாள் வித்தியா.

‘‘நான் சொன்னதை நீர் தவறாக எடுத்து விட்டீர். உம்மை விட உயர்ந்த பொருள் இந்த உலகத்தில் எனக்கு இல்லை. அதே போல வேறு யாரையும் விட உம்மை நான் நேசிக்கிறேன்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘பின்பும் நீங்கள் தவறாகத் தானே பேசுகிறீர்கள். வேறு பலர் உங்களுக்கு இருப்பதால் தானே அவர்களை விட என்னை அதிகமாக நேசிப்பதாகக் கூறுகிறீர்கள். நீங்கள் என்னை மட்டும் தான் நேசிக்க வேண்டும். நேசித்தல் என்பது காதலித்தல் தந்தை, தாய் சகோதரரில் வைக்கும் அன்பு பாசமாகும் நண்பர்கள் மீது வைக்கும் அன்பு நட்பாகும் இப்படி எமது தமிழில் ஒவ்வொரு உறவுக்கும், ஒவ்வொரு செயலுக்கும், ஒவ்வொரு பருவத்திற்கும், ஒவ்வொரு வயதிற்கும் ஒவ்வொரு பெயர் உள்ளது. நீங்கள் நேசிப்பது என்று கூறுவதால் வேறு யாரையோ மனதுள் ஒளித்து வைத்திருக்கிறீர்கள். இது எனக்குச் செய்யும் துரோகம். நான் இனி உங்களுடன் கதைக்க மாட்டேன்’’ என்று ஊடல் கொண்டாள் வித்தியா.

கஜேந்திரன் அவளைச் சமாதானப்படுத்த முடியாது சற்றுத் தடுமாறினான். வித்தியா அவனை கோபத்துடன் முறாய்த்துப் பார்த்தாள்.

**1314. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்**
**யாரினும் யாரினும் என்று.**

யாரையும் விட நான் உன் மீதுமிக்க காதல் கொண்டிருக்கிறேன். என்று சொன்னேன்; அதற்கு அவள்; ‘‘யாரை விட? யாரை விட? என்று கேட்டு ஊடல் கொண்டாள்.

## இனிவரும் பிறப்பிலும்

வித்தியாவை அவனுக்குப் பிடித்ததற்குக் காரணம் சின்னஞ் சிறிய செயல்களை அவள் செய்தாலும் சரி, வாய்தவறி ஏதாவது சொன்னாலும் சரி உடனே அதற்கு ஓர் அர்த்தம்கண்டு பிடித்து விடுவாள். ஒரு முறை அவன் கடற்கரையில் அவளைச் சந்தித்தான். அன்று அவள் நீல நிறச் சட்டை அணிந்திருந்தாள். வெண்மையும், கருமையும் கலந்த இளங் கறுப்பு நிறத்தில் அச்சட்டை மீது நேர்த்தியாகக் கோடுகள் வரையப்பட்டிருந்தன. சட்டையின் பல்வேறு இடங்களில் சுருக்குகளும் மடிப்புகளும் விட்டுத் தைக்கப்பட்டிருந்த போதும் கோடுகள் யாவும் மிகவும் நுட்பமான முறையில் பொருந்தியிருந்தன. தையல் கலையில் கைதேர்ந்த ஒருவரால் தான் அச்சட்டை தைக்கப்பட்டிருந்தது. அதன் தையல் அழகை மிகவும் இரசித்துப் பார்த்த கஜேந்திரன்; ‘‘இன்று நீர் மிகவும் அழகாக இருக்கிறீர்’’ அளவெடுத்து தைத்தவர் மிகுந்த அனுபவசாலி போலத் தெரிகிறது. அங்கங்களுக்குப் பொருந்தும் படியாகச் சட்டையை வெட்டியுள்ளார். உமது அளவுகள் தெரியும் போலத் தோன்றுகிறது’’என்றான்.

‘‘சந்தேகப்படுகிறீர்களா...? என்னுடைய அங்கங்களையெல்லாம் பார்த்து அளவெடுத்துத் தான் தைத்திருக்கிறார் என்றால் நான் அங்கங்களைக் காட்டியிருப்பதாகத் தானே அர்த்தம். அடுத்துக் கேட்பீர்கள், தைத்தவர் ஆணா பெண்ணா என்று’’ .

“ஐயையோ நான் அப்படி நினைக்கவில்லை அளவெடுத்தது அசத்துகிறது என்று சொன்னேன். ஒரு பெண் அழகாக இருக்கப் பல காரணங்கள் உண்டு. அழகான துணிக்கு மெருகூட்டுவது தையற்காரனின் திறமை. பெரிதாக அல்லது சிறிதாக, கோடுகள் பொருந்தாமல் வைத்ததால் அழகான பெண்ணின் அழகு சிதைந்து விடும். அளவெடுத்து வெட்டுவதில் தான் அழகின் தன்மை தங்கியுள்ளது. என்று சொன்னேன்”.

“இல்லை உங்களுக்கு சந்தேகமிருக்கு. அதனால் இதைத் தைத்தவர் யார் என்று நான் சொல்லாவிட்டால் உங்கள் தலை வெடித்துச் சிதறி விடும். இதைத் தைத்தது நான் தான்” என்றாள் வித்தியா.

“அப்படியா ?” ஆச்சரியப்பட்டான் கஜேந்திரன்; “இவ்வளவு நுட்பமாகத் தைத்திருக்கிறீர். எமக்குக் குழந்தைகள் பிறந்தால் அழகான விதம் விதமான சட்டைகள் தைத்துப் போடலாம்” என்றான் கஜேந்திரன். அந்த நினைவு இனிக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது.

“ஏன் சிரிக்கிறீர்கள்?” என்று கேட்டாள் வித்தியா.

“ஒன்றுமில்லை” என்று கூறி விட்டு மீண்டும் சிரித்தான் கஜேந்திரன்.

“யாருடைய நினைவு வந்து சிரிக்கிறீர்கள்? என்னோடு இருக்கும் போது உங்களுக்கு எப்படி இன்னொரு நினைவு வரமுடியும். அப்படி வந்ததானால் அது என்னை விட அன்பில் கூடியவரின் நினைவாகத் தான் இருக்கும். என்ணெண்டு சொல்லுங்கோ” என்று கேட்டாள் வித்தியா.

“இப்ப உமக்கு முன் எதுவும் செய்யக் கூடாது; சொல்லக் கூடாது போலத் தெரிகிறது. அன்பே! இந்தப் பிறவியில்உம்மை விட உயர்ந்தவர்கள் யார் இருக்கிறார்கள்? நான் அன்பு வைக்கக் கூடிய உயிர் ஏதும் இப்பிறப்பில் இல்லை. ஒரிரு நிமிடங்கள் கூட உம்மைப் பிரிந்து என்னால் இருக்க முடியவில்லை. அப்படியிருக்க நீர் இப்படிச் சொல்கிறீர்” கலங்கினான் கஜேந்திரன்.

“இப்பிறப்பில் என்னை விட உயர்ந்தவர்கள் யார் இருக்கிறார்கள் என்கிறீர்கள். அத்துடன் இப்பிறப்பில் உன்னை விட்டு பிரிய மாட்டேன் என்றும் கூறுகிறீர்கள். எமது சமயம் ஒரு பிறப்பைப் பற்றிச் சொல்லவில்லையே. எமக்கு ஏழு பிறப்பிருக்கிறது என்று கூறுகிறது. அப்போ மிகுதியான பிறப்புக்களில் என்னை விட்டுப் பிரியப் போகிறீர்கள் என்று தானே அர்த்தம்” விம்மினாள் வித்தி.

வித்தியாவைக் கனிவுடன் நோக்கிய கஜேந்திரனின் உள்ளம் உவகையால் பூத்தது; “வித்தியா என் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள். பிறக்கும் ஒவ்வொரு பிறவியிலும் என்னைத் தான் துணையாக அடைய வேண்டு மென்று நினைத்தால், அவள் என்மீது வைத்துள்ள அன்பின் அளவை எவ்வாறு கணிப்பது.”

“என்ன பேசாமல் இருக்கிறீர்கள். இப்பிறவியில் உன்னைப் பிரிய மாட்டேன் என்றால், இப்பிறவியில் தெரியாத்தனமாக காதலித்து உறவை ஏற்படுத்தி விட்டேன். அடுத்த பிறவிகளிலாவது நல்ல துணையைத் தேட வேண்டும் என்று தானே அர்த்தம்.; “விம்மியபடி அவனை அணைத்த வித்தியாவின் முதுகை ஆதரவுடன் வருடினான் கஜேந்திரன். அவனுக்கு உலகம் இருண்டு வருவதைப் போல இருந்தது.

**1315. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்**
**கண்நிறை நீர்கொண் டனள்.**

‘இப்பிறவியில் நான் உன்னைப் பிரியமாட்டேன்’. என்று எனது காதலியிடம் சொன்னேன், ‘அப்படியானால் இனி வரும் பிறவிகளில் பிரிந்து விடுவீர்கள்’ என்று எண்ணிக் கண்ணீர் விட்டாள்.

**ஏன்மறந்தீர்**

நெஞ்சில் முகம் புதைத்துச் சிணுங்கிய வித்தியாவின் முகத்தைத் தனது கையால் மெல்ல நிமித்திய கஜேந்திரன் அவளது கண்கள் சிவந்து கலங்கியிருப்பதைக் கண்டு வேதனைப் பட்டான். மருந்து குடித்ததால் அவளது உடலில் சற்று உஷ்ணம் குறைந்திருந்தது. கண்கள் சிவந்தமையால் அவளது முகம் சற்று வீங்கியிருந்தது; “நோயான வேளைகளில் ஏன் வீணான கற்பனை களில் ஈடுபடுகிறீர். கேலிக்கும் விளையாட்டுக்கும் இதுவா நேரம்? படுத்து ஓய்வெடும். உமக்கு நோய் என்றதும் என்னால் இயங்க முடியவில்லை. காலையில் இருந்து நீரோ ஆகாரமோ அருந்தாததால் நீர்

பலவீனமடைந்துள்ளீர். குடிப்பதற்கு ஏதாவது தரட்டா'' பாசம் பொங்கக் கேட்டான் கஜேந்திரன். அவ்வார்த்தைகள் அவளுக்கு தாயார் சுகவீன முற்றிருக்கும் வேளைகளில் வீட்டாருக்குச் சமைப்பதால் மிகவும் சுவையாக கஜேந்திரன் சமைப்பான். அத்துடன் அவன் வீட்டில் இருக்கும் வேளைகளில் நோயாளியான தாயாரை அதிகம் வேலை செய்ய விட மாட்டான். தானே எல்லா வேலைகளையும் செய்வான். அவள் திருமணமாகி வீட்டில் இருந்த போது கஜேந்திரன் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தான். அப்போது அவனது இனத்தவரான பெண் ஒருத்தி அங்கு வந்தாள். கஜேந்திரன் வேலை செய்வதைப் பார்த்து விட்டுச் சொன்னாள்; ''வித்தியா நீ உண்மையில் கொடுத்து வைத்தவள். கஜேந்திரன் மிகவும் நல்லவன் தனது பெற்றோரில் மட்டுமல்ல உறவினர்கள் அயலவர்கள் மீதும் பாசம் உள்ளவன். யார் எதைக் கேட்டாலும் செய்து கொடுப்பான். அப்படியானவன் உன்னைப் பூப்போல வைத்திருப்பான். அதை விடத் தாயும் தகப்பனும் மிகவும் நல்லவர்கள். உனக்கு எந்தக் குறையும் இல்லை. நீ கொடுத்து வைத்தவள். ஒரு பெண்ணுக்குச் சிறந்த அணிகலம் கணவனுடைய அன்பு தான். அது நிறைய உனக்கிருக்கு'' என்றாள்.

அந்த வார்த்தைகள் மனதில் இனிக்கத் தனது கைகள் இரண்டையும் கோர்த்து அவனது கழுத்தில் மாலையாகப் போட்டாள் வித்தியா. கஜேந்திரன் அவளது அன்பான செயல்களை நினைத்துப் பார்த்தான். எப்பொழுதும் அவன் தன்னையே நினைத்திருக்க வேண்டுமென்று நினைப்பாள். ஒரு நாள் அவளைக் கடற்கரையில் சந்தித்தான் கஜேந்திரன் அவனோடு கல்வி கற்கும் மாணவன் ஒருவன் விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அவனைப் பார்க்கச் செல்ல வேண்டு மென்ற துடிப்பு அவனது நெஞ்சை அரித்துக் கொண்டிருந்தது. அதனால் வித்தியாவுடன் அன்று கதைக்க அவனுக்குச் சற்றுப் பதட்டமாக இருந்தது. வித்தியா தனது தாயார் அங்கஜனைத் திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்திய சம்பவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள். தனது நண்பன் விபத்துக்குள்ளானதால் அவனைப் பார்க்கச் செல்ல வேண்டு மென்ற துடிப்பில் இருந்த கஜேந்திரன் அவள் சொல்வதைக் கவனிக்கவில்லை. அத்துடன் அவ்விஷயத்தைப் பற்றி அவள் அடிக்கடி கூறுவதால் அவன் யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

''நான் முக்கியமான பிரச்சினையொன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் ஏதோ யோசனையில் இருக்கிறீர்கள்'' என்றவாறு கஜேந்திரனின் பக்கம் திரும்பி அவனது கையைப் பிடித்தாள்; ''இப்போ நான் என்ன சொன்னேன் சொல்லுங்கள் பார்ப்போம்'' என்றாள்.

கஜேந்திரன் வசீகரமாகச் சிரித்தான்; ''உந்தச் சிரிப்பில் நான் மயங்க மாட்டேன். என்னை என்ன விசரியென்றா நினைக்கிறீர்கள். நான் என்னுடைய துன்பங்களையும் துயரங்களையும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எனது வார்த்தைகளைக் கேளாமல் யாரைப் பற்றியோ நினைக்கிறீர்கள். அந்தளவில் என்னை விட வேறு யாரோ உங்களின் உள்ளத்தில் இருக்கிறார்கள். இல்லா விட்டால் என்னைப் புளித்து விட்டது''

''இப்படியே உங்களைச் கட்டியணைத்துக் கொண்டு காலம் பூராகவும் இருக்க வேண்டும். எனது நினைப்பைத் தவிர உங்களது மனதில் வேறு எதுவும் இருக்கக் கூடாது கிசுகிசுத்தாள் வித்தியா.

சிரித்தான் கஜேந்திரன்; ''ஏன் சிரிக்கிறீர்கள் நான் ஏதாவது தவறாகச் சொல்லி விட்டேனா...?

இல்லை முன்பு ஒரு சமயம் நீர் சொன்னதை நினைத்துப் பார்த்தேன்'' என்றான் கஜேந்திரன்.

''அப்படியானால் நினைபதற்கு முன்பு மறப்பு உண்டு. அப்படி மறந்ததால் தானே இப்பொழுது நினைக்கிறீர்கள். நீங்கள் அடிக்கடி என்னை மறந்து விடுகிறீர்கள்'' என்றவாறு மாலையாகக் கோத்திருந்த கையை விலக்கி விட்டு சினத்தோடு கட்டிலில் படுத்தாள்.

**1316. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்**
**புல்லாள் புலத்தக் கனள்.**

'உன்னை நினைத்தேன்' என்று அன்போடு சொன்னேன்; 'என்னை மறந்து போவதா தானே நினைக்க வேண்டி வரும்' என்று கூறி என்னைத் தழுவிய கைகளைச் சினத்தோடு விலக்கினாள்.

**நூறாண்டு வாழ்க**

''திருமணமாகிக் குழந்தை பெறப் போகிறீர் இப்பொழுதும் நீர் குழந்தை மாதிரியே இருக்கிறீர். இதை நான் விரும்புகிறேன். வாழ்க்கையைச் சிறப்பிப்பது அன்பு தான் என்று என்னை உணர வைத்து உமது காலடியில் என்னை ஆட்கொண்டு வைத்திருக்கும் சிறப்பை எண்ணிப் பார்க்கிறேன். ஒரு பெண்ணுக்கு பொன், பொருள், காணி, பூமிகளால் இன்பம் வராது. கணவனின் முழுமையான அன்பால் தான் இன்பம் வருமென்று நினைத்தால் அவளுக்குச் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். அழியும் பொருட்களைத் தான் பெரும்பான்மையான பெண்கள் விரும்புவார்கள். ஆனால் நீர் அழியாத

பொருளான அன்பை விரும்புகிறீா். இது ஆத்மாவோடு தொடா்புடைய உறவு பொன்னும் பொருளும் ஒரு பெண்ணின் கண்ணுக்குக் கருவூலமாகத் தெரியும் என்ற கருத்தை நீா் தகா்த்து விட்டீா். காதல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இறப்பு வரையல்ல பிறப்பெடுக்கும் பிறப்புக்கள் தோறும் தொடரும் என்று நீா் கருதுவது நான் செய்த பாக்கியம்'' உருகினான் கஜேந்திரன்.

எரியும் மெழுகாக தன் முன் உருகி நிற்கும் கஜேந்திரனைப் பாசத்துடன் பாா்த்தாள் வித்தியா. தன்னை அடைவதற்காக உலகத்தையே வில்லாக வளைக்க முற்பட்ட கஜேந்திரனது காதலின் வலிமையை ஒரு கணம் சிந்தித்துப் பாா்த்தாள். அவளது உடல் சிலிா்த்தது. மேன்மேலும் அவனுடன் ஊடல் கொண்டு அவன் தன்மீது கொண்டுள்ள அன்பின் புனிதத்தை புடமிட வேண்டு மென்று நினைத்தாள். காதல் கொண்டவா்களுக்கு காதல் மீது மட்டும் தான் பற்று, பாசம், ஆசை என்பன இத்தல் வேண்டும். பெண்ணின் அழகிலோ கவா்ச்சியிலோ அல்லது அவளின் வீட்டிலிருந்து கிடைக்கும் பொன் பொருளிலோ ஆசை இருக்கக் கூடாது. அதே போல ஒரு பெண்ணுக்கு ஆணில் தொழிலிலோ அல்லது திடகாத்திரமான உடலிலோ ஆசை இருக்கக் கூடாது'' என்று அடிக்கடி கஜேந்திரன் கூறுவது அவளது நினைவுக்கு வந்தது.

''நான் எத்தனை முறை கேட்டுவிட்டேன். காலையில் இருந்து நீா் எதையும் சாப்பிடவில்லை. எழும்பும், எழும்பி ஏதாவது சாப்பிடும் எனக்குப் பசிக்கிறது. இவ்வளவு காலமும் நீா் பரிமாறித்தான் நான் சாப்பிட்டேன். எழும்பும்'' என்றான் கஜேந்திரன்.

கட்டிலில் முகம் குப்புறப்படுத்திருந்த வித்தியா நிமிா்ந்து அவனைப் பாா்த்தாள். நான் நோயால் துடிதுடிக்கும் போது உங்களுக்கு எப்படி பசிக்கும்...'' என்று அவள் கேட்கும் போது கஜேந்திரனுக்குத் தும்பல் வந்தது. தும்மினான். மீண்டும் ஒரு முறை தும்மினான்.

''நூறாண்டு காலம் வாழ்க'' என்று வாழ்த்திய வித்தியா மறுகணம்;''நீங்கள் சொல்வதெல்லாம் பொய் என்று எனக்குத் தெரியும். யாரோ ஒருத்தி உங்களை அடிக்கடி நினைக்கிறாள். வேலையால் வந்த பின்பு பல முறை தும்மி விட்டீா்கள்.'' என்று அழுதாள்.

''எனது சொற்கள் எல்லாவற்றிற்கும் அா்த்தம் கண்டு பிடிப்பதில் பாண்டித்தியம் பெற்றிருக்கிறீா். வேறு நினைவுகள் எதுவும் இல்லாமல் நான் அருகில் உம்மை அணைத்துக் கொண்டிருக்கும் ளேயிலும் என்னையே நினைத்துக் கொண்டிருக்கிறீா். அதனால் தான் நான் தும்முகிறேன். இப்போ என்னை நீா் நினைக்கவில்லை என்று சொல்லும் பாா்ப்போம்''.

வித்தியா மெதுவாகச் சிரித்தாள். அவளது கண்கள் அவனை மோகத்துடன் மொய்த்துச் சிறகடித்தன; ''என்னைப் பொய் சொல்லச் சொல்கிறீா்களா...? இல்லை எனது உதடுகளால் சொரியும் வாா்த்தைகளின் இனிமையை பருகச் சொல்கிறீா்களா...?'' என்று அவளது கண்கள் கேட்பதைப் போல கஜேந்திரனுக்குத் தோன்றியது.

''உங்களோடு ஊடல் கொண்டு விளையாடுவது தான் எனக்கு இன்பத்தைக் கொடுக்கும். நான் ஊடல் கொள்வது அந்தச் சாட்டாக நீங்கள் என்னைத் தொட்டு அணைத்துப் பேச, நான் விரும்பாதவள் போல நடிக்க அதைப் புரிந்து கொண்டு நீங்கள் மேலும் மேலும் நெருங்கி வந்து சல்லாபிக்க எவ்வளவு இன்பமாக இருக்கும் தெரியுமா?'' என்று நினைத்தாள் வித்தியா.

''என்ன யோசிக்கிறீா்'' என்றவாறு அருகே நெருங்கி வந்தான் கஜேந்திரன். வித்தியா மெய்மறந்து அவனைக் கட்டித் தழுவினாள்.

**1317. வழுத்தினாள் தும்மினே னாக அழித்துஅழுதாள்**
**யாா்உள்ளித் தும்மினீா் என்று.**

நான் தும்மினேன்; உடனே அவள்; ''நூறாண்டு காலம் வாழ்க'' என்று வாழ்த்தினாள்.; அடுத்த கணம் ''என் அருகில் இருக்கும் போது யாரோ ஒருத்தி நினைத்ததால் தானே தும்மினீா்கள்'' என்று கேட்டு அழுதாள்.

### மறைப்பு

கஜேந்திரனின் இறுக்கமான அணைப்புக்குட்பட்டிருந்த வித்தியா நினைத்தாள்; ''சுவா்க்கத்தில் இருப்பதைப் போலவுள்ளது. இந்த இன்பமயக்கத்துடன் எனது உயிா் உடம்பை விட்டுச் செல்ல வேண்டும். ஒரு பெண்ணுக்கு மனம் கனிந்த காதலா் கிடைப்பது சொா்க்கத்தில் வாழ்வதை விடமேலானது. அவனது இறுக்கமான அணைப்புக்குள்க் கிடைக்கும் இன்பம் தேவா்கள் வாழும் சுவா்க்க பூமியிலும் இல்லை'' காலையில் இருந்து அவளை வருத்திய தலைவலி இப்பொழுது போன

இடம் தெரியாமல் போய்விட்டது. உடல் அசதியும் நோயும் அகன்றதால் கஜேந்திரனது நெருக்கம் அதிகரிக்க வேண்டு மென மனமும் உடலும் வேண்டிக் கொண்டிருந்தன.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீர் எனக்குக் கிடைப்பீர். என நான் எதிர்பார்க்கவில்லை. ஏற்கனவே முறை மாப்பிளைக்கு நிட்சயிக்கப்பட்ட உம்மை நான் காதலிப்பது சரி தானா என்று நினைப்பேன். மனம் போராடும். சரியென்று மனம் சொல்லும் வேளைகளில் கிடைக்காவிட்டால் என்ன செய்வதென்று ஏங்குவேன். பிழையென்று மனம் சொல்லும் போது பேரழகியான உம்மை எப்படி மறப்பதென்று போராடுவேன். இன்று கிடைக்காதென்று நினைத்து அல்லற்பட்ட பேரின்பம் எனது கைக்குள் எந்நேரமும் சிக்கி என்னை உவகைக்குள்ளாக்குவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நீர் வீட்டில் இருக்குமாறு கேட்கும் போதெல்லாம் உமது விருப்பத்தை நிறைவேற்றாமல் செல்வதைவிட்டு நான் பெரும் துயரடைவேன். ஆனால் தொழில் நிமிர்த்தம் பிரிய வேண்டியுள்ளது...'' கவலைப்பட்டான் கஜேந்திரன்.

''என்னை முழுமையாகப் புரிந்து கொண்டவர் நீங்கள். ஒரு பெண்ணின் மனதைப் புரிந்து கொண்டு அவள் மீது குறைவில்லாத அன்பைச் செலுத்தும் பாக்கியம் பெற்ற காதலன் ஒரு பெண்ணுக்குக் கிடைப்பது அபூர்வம். எனக்கு அப்படியானதொரு காதலன் கிடைத்துள்ளார். நான் புண்ணியவதி. உங்களை எனக்குத் தந்த நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியை நான் என் வாழ்நாளில் மறக்க மாட்டேன். ஏழேழு பிறப்பிலும் நான் உங்களை அடைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்து வருகிறேன்.'' கஜேந்திரன் சிலிர்த்துப் போனான். மனதுள் இன்பமான ஓர் இனிய ஊற்று சுரந்து பொங்கிப் பிரவாகிப்பது போல இருந்தது. கண்களை மூடியவாறு அவளை இறுக அணைத்தான். முதல் நாள் தூறிய மழையில் நனைந்தமையால் அவனுக்கு தடிமன் நோய் வரும் அறிகுறிகள் தென்பட்டன. மூக்கு அரித்தது, யாரோ மூக்குக்குள் நுளைந்து அரிப்பதைப் போன்ற உணர்வு இறுக்கமாகக் கட்டியணைத்திருந்த கைகளைச் சற்றுத் தளர்த்தினான்.

வித்தியா நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்த்தாள். அவன் தனது வலது கையால் மூக்கைப் பிடித்து தடவினான். தும்மல் வருவது போல இருந்தது. எனினும் தும்மல் வரவில்லை. அவன் அவதிப்படுவதை வித்தியா கண்டாள். அவனைச் சற்றுத் சீண்டி விளையாட விரும்பினாள்; தும்மினால் முன்பு போல யாராவது உம்மை நினைக்கிறார்கள். அதனால் தான் தும்முகிறீர்கள். என்று வித்தியா ஊடுவாள். விளையாட்டாகக் கூட அவளின் மனம் நோவதை விரும்பாத கஜேந்திரன் தும்மலை சிரமப் பட்டு அடக்கினான்.

''ஏன் சிரமம்பட்டு தும்மலை அடக்குகிறீர்கள். எனக்குத் தெரியாமல் உமக்குரியவர் யாரோ ஒருவர் உம்மை நினைக்கிறார் என்பதை நான் அறிந்து விடுவேன் என்று தானே வந்த தும்மலைத் தும்மாது அடக்குகிறீர்கள். உங்களின் முகத்தைப் பார்த்தே நான் மனதில் உள்ளதை அறிந்து கொள்வேன். செயலைப் பார்த்தா அறிய வேண்டும்'' சினந்தாள் வித்தியா.

''முகத்தைப் பார்த்து அறியும் தன்மையுள்ள என் அபூர்வமான காதலியே! அப்படியே மனத்தில் உள்ளவரையும் அறிந்து சொல்லும். உம்மிலும் பார்க்க உள்ளிருப்பவள் கூடுதலான அன்பு செலுத்துபவளாக இருந்தால் அவளிடம் சென்று பார்க்கலாம்'' என்றான் கஜேந்திரன்.

வித்தியா மனம் முகர்ந்த அனிச்சம்பூவாக வாடிச் சோர்ந்தது; ''வேடிக்கையாகக் கூட வேறு பெண்களைப் பற்றி எனக்குக் கூறக் கூடாது'' என்று சொல்லியும் இவர் அதை நினைத்துப் பார்க்கிறாரில்லையே'' என்று நினைத்தாள் வித்தியா. நினைத்தவுடன் கண்கள் கலங்கி உடைப்பெடுத்தன.

**1318. தும்மச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்**
**எம்மை மறைத்திரோ என்று.**

அவளுடைய ஊடலுக்கு அஞ்சி நான் தும்மலை அடக்கிக் கொள்ள, அவள், உம்மை வேறு எவளோ ஒருத்தி நினைக்கிறாள் அது எனக்குத் தெரிந்து விடும் என்று தானே வந்த தும்மலை அடக்கினீர் என்று அழுதாள்.

### இன்னொருத்தியுடன்

''தொட்டால் சுருங்கி என்றொரு செடி இருக்கிறது. அதில் யாராவது ஒருவரோ இல்லாவிட்டால் ஒரு பொருளோ தொட்டால் தான் சுருங்கும். அதை விட மோசமானவளாக நீர் இருக்கிறீர். உம்மைத் தொடாமலே சிணுங்குகிறீர்''. என்று கஜேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போது வித்தியா சொன்னாள்; ''பெண்களின் மனம் மலரை விட மிருதுவானது அதில் கீறல் விழக்கூடாது. விழுந்தால் நினைவுகளாலேயே சுருங்கிவிடும்'' என்றாள் வித்தியா.

இரண்டு வாரகாலத்துக்குள்ளேயே நான் படும் பாடு இந்தப் பிறவி மட்டுமல்ல எடுக்கப் போகும் பிறவிகளுக்கெல்லாம் கூட வந்து என்னைக் கொல்லப் போகிறீர். எடுக்கப் போகும் பிறவிகள் எப்படியானதாக இருந்தாலும் பரவாயில்லை. இப்பிறவியில் என்னை மகிழ்வித்தால் போதும் என் உள்ளத்தைக் கவர்ந்தவள் எதைச் செய்தாலும் நான் பொறுத்துக் கொள்வேன்.'' என்றவாறு அவளது பின்னலைக் குலைத்துப் பின்னினான்.

அந்த இன்பம் நீடிக்க வேண்டும் என்பதை விரும்பிய வித்தியா தனது தலைமுடியை அவனிடமிருந்து பறித்துத் தனது தோளில் புரள விட்டாள். கஜேந்திரன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். கணங்கள் சில ஊர்ந்து சென்றன. வித்தியாவின் மனம் பரபரத்தது; ''அவன் சில சமயம் தனக்கு அருகில் வந்து தனது தலை முடியைத் தொட்டுப் பின்னாமல் விட்டால் என்ன செய்வது'' மனம் பரபரத்தது. அவசரப்பட்டு விட்டேனா?'' என எண்ணினாள்.

''உடம்பு முழுக்கக் கொழுப்பு; மூக்கு முட்டக் கோபம், நான் என்ன செய்யப் போகிறேனோ...?'' என்றவாறு வித்தியாவின் அருகில் நெருங்கி வந்து அவளது தலை முடியைப் பிடித்தான். வித்தியா விருப்பமில்லாதவள் போலத் தலையை ஆட்டினாள்; ''அன்பே உமது கருமையான தலை முடியைப் பின்னி அதில் ஒரு ரோஜாவை நாட்டி பூ பூக்கச் செய்ய வேண்டு மென்று விரும்புகிறேன். தயவு செய்து அனுமதி தாருங்கள்'' என்றான். வித்தியா அவனைப் பொய்க் கோபத்துடன் பார்த்தாள். வழமையாகச் சிவந்திருக்கும் முகம் அப்பொழுது மேலும் சிவந்து பொலிந்து விளங்கியது. கண்கள் படபடத்தன; ''இந்தக் கோலத்தில் நீர் அட்டகாசமாக இருக்கிறீர். நான் ஒரு புலவனாக இருந்தால் ஒரு கவிதை பாடியிருப்பேன். என்ன செய்வது நான் ஒரு மனிதன்'' என்று கூறி விட்டுச் சிரித்தான்.

''நக்கலா....?'' என்னைப் பார்த்தால் அசிங்கமாகவா தோன்றுகிறது'' சினத்தாள் வித்தியா.

''வித்தி, மகா கணபதி என் முன்னால் தோன்றி; ''உனக்கு வித்தியா வேண்டுமா? இல்லை இந்த உலகை உனக்குத் தரட்டுமா? என்று கேட்டால் நான் வித்தியா தான் எனக்கு வேண்டுமென்று சொல்வேன். அதே போல இயமதர்மராஜன் நேரில் வந்து வித்தியாவின் உயிரைக் கவர்ந்து செல்லப் போகிறேன். அதற்குப் பதிலாக உனது உயிரை தந்தால் அவளது உயிரை எடுக்க மாட்டேன் என்று கூறினால் உடனே எனது உயிரைக் கொடுத்து விடுவேன். அன்பே! நீ தான் எனது சொர்க்கம்; உயிர்; எனது மூச்சு''.

''என்னைச் சமாளிப்பதற்காக இப்படி எத்தனை நாட்கள் பிதற்றி இருப்பீர்கள் என்று எனக்குத் தான் தெரியும். என்னைச் சமாளிப்பது போலத்தான் இன்னொருத்தி ஊடினாலும் சமாளிப்பீர்கள். அன்பு செலுத்தி ஆட்கொண்டு ஏமாற்றுவதில் வல்லவரல்லவா நீங்கள்...'' முகத்தைக் கோணலாக்கி உதடுகளைக் குவித்துத் தலையை ஆட்டினாள் வித்தியா.

தலை முடியைப் பின்னிக் கொண்டிருந்தவன் அதை விட்டு விட்டு வித்தியாவை அணைத்தான். அவளது உதடுகள் துடித்தன; ''சொல்ல வேண்டியது ஏதாவது இன்னும் இருந்தால் உடனே சொல்லி விடும். சொல்லா விட்டால் சில நிமிடங்கள் உம்மால் சொல்ல முடியாது போய் விடும்... சொல்லும்''.

வித்தியா அவனைப் பார்த்தாள். அவனது கண்களில் கரைப் பகுதியில் இருந்து ஒரு செம்மை கருவிழியை நோக்கிப் பரவிக் கொண்டிருந்தது. சில நிமிடங்களின் பின் வித்தியா சொன்னாள்; ''நான் எதைச் சொன்னாலும் உங்களுக்கு கோபம் வராமல் மோகம் தான் வருகிறது. இது ஏனென்று எனக்குப் புரியவில்லை''.

**1319. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்**
**இந்நீரர் ஆகுதிர் என்று.**

அவளின் ஊடலைத் தணிக்க அவளை மகிழ்வித்தாலும்; அவள், ''இப்படித்தானே இன்னொருத்தி ஊட்டினாலும் மகிழ வைப்பீர்'' என்று சொல்லிச் சினம் கொள்வாள்.

**ஒப்புமை**

''நீர் எதைச் சொன்னாலும் எனக்குக் கோபம் வராமல் மோகம் வருவதற்குக் காரணம் நான் உம் மீது கொண்ட அளவற்ற காதல்தான் காதலைப் பற்றி என்னை விட உமக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் என்னைத் தீவிரமாக நேசித்தது நீர் தான். காதலிக்கும் போது நான் வரச் சற்றுத் தாமதமானாலும் நீர் ஏங்கித் தவித்து விடுவீர். என்மீது கொண்ட காதலால் நேரந்தவறி வந்த என்னைத் தண்டிப்பீர். ஓர் ஆணின் பலம், பலவீனம், குணம், கொள்கைகள், யாவும் ஒரு பெண்ணால் தான் நிர்ணயிக்கப்படுகிறது. அதனால் தான் உம்மோடு கோபிக்க என்னால் முடியவில்லை.''

‘‘பொய் சொல்லி என்னைச் சமாளிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்’’ என்று வித்தியா ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். கஜேந்திரனது பார்வை வித்தியாவின் சிவந்த நெற்றியில் படிந்து நின்றது. அழகான நெற்றியில் முடிகள் ஒழுங்கான ஒரு வடிவத்தில் இராது சற்றுக் கீழே இறங்கியும் ஏறியும் இருந்தது. அவளின் அழகை மேலும் மெருகூட்டியது. கட்டிலில் அடிக்கடி புரண்டதால் நெற்றியில் உள்ள வட்டவடிவமான குங்குமப் பொட்டின் கரைப்பகுதி சற்று அழுந்தியிருந்தது. அதனால் குங்குமம் பொட்டும் ஒழுங்கின்றி இருந்தது. ஒழுங்காக இருப்பதை விட அன்று அப்பொட்டு அழகாக இருப்பதைப் போன்ற தோர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. குங்குமம் பொட்டுக்குக் கீழே வைத்திருந்த கறுப்பு நிறத்திலான ஒட்டுப் பொட்டு சற்று இடப்பக்கமாகத் தள்ளப்பட்டிருந்தது. அழகான புருவங்கள்; நளினமான விழிகள்; அதைப் பாதுகாக்கும் மோகம் விளைவிக்கும் இமைகள். கஜேந்திரனது மனதை ஆனந்தக் களிப்புக்குள்ளாக்கின. அழகான சிவந்த மூக்கு, அதில் மின்னும் மூக்குத்தி. முன்பென்றால் மூக்குத்தி அணியும் பெண்களை கஜேந்திரனுக்குப் பிடிக்காது. அவன் முதன் முதலாக அவளைக் கண்ட போது அவள் மூக்குத்தி அணிந்திருக்கவில்லை. அந்த அழகை நினைத்துப் பார்த்தான். அழகிற்காக அவள் அன்று அணிந்திருந்த சிறிய மூக்குக் கண்ணாடியும், அளவாக உதடுகளுக்குப் பூசப்பட்ட செம்மையான பூச்சும் அவனை கிறங்கச் செய்தது. பல நாட்கள் காணாதிருந்தான். அன்று ஒரு நாள்க் கண்ட போது அவள் மூக்குத்தி அணிந்திருந்தாள். இதற்கு முன் காணாத ஒரு பேரழகு மூக்குத்தி அணிந்த பின்பு அவளில் குடியேறி இருப்பதைப் போலிருந்தது. அன்று அவள் மூக்குக் கண்ணாடி அணிந்திருக்கவில்லை. மூக்குத்தியுடன் மூக்குக் கண்ணாடியும் அணிந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தான். அவனது கற்பனைக்கு அவளது எழிலான முகம் வர மறுத்தது. நேரில் அக்கோலத்துடன் அவளைப் பார்த்து விட வேண்டு மென்ற ஆவல் அவனின் மனதில் துளிர்த்து அரித்துக் கொண்டிருந்தது. அதனால் பல நாட்கள் அவள் வரும் பாதையில் காத்திருந்தான். ஒரு நாள் அவனுக்கு அப்பேறு கிடைத்தது.

கருமையான நீல நிறச் சேலை அணிந்து, கையில் நீண்ட பிடியுடைய ஒரு கைப்பையைத் தாங்கிக் கொண்டு நீல நிறக் குடை பிடித்துக் கொண்டு வந்தாள். குடையின் நீல நிறம் சூரிய ஒளியில் அவளது முகமெங்கும் பரவியிருந்தது. இளஞ்சிவப்பு நிற உதட்டுச் சாயத்தின் மீது பட்ட நீல நிறம் அவனுக்குப் போதையை ஊட்டியது. அவளது முகத்தை அடிக்கடி பார்த்தான். அவள் அதை உணர்ந்து விலகி விலகிச் சென்றாள். மூக்குத்தியும் மூக்குக் கண்ணாடியும் மன்மத பானங்களாக மாறி அவனது இதயத்தைத் தட்டி மோக மூட்டின.

‘‘என்ன யோசிக்கிறீர்கள். உங்கள் யோசனையைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. யாரோ ஒருத்தியின் அழகை என்னுடன் ஒப்பு நோக்குவது போல உள்ளது. யாரை நினைத்துப் பார்க்கிறீர்கள்’’ என்று அவனது தோளைத் தனது கைகளால் பற்றி உலுப்பினாள்.

திடுக்கிட்டு விழிபிதுங்க வித்தியாவைப் பார்த்த கஜேந்திரன் சற்றுத் தடுமாறினான்; ‘‘நான் அருகில் இருக்கும் போது உங்களுக்கு அப்படி என்ன யோசனை இருக்கிறது? யாருடைய அழகோடு என்னுடைய அழகினை ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்கிறீர்கள்’’ என்று கோபமாகக் கேட்டாள். கஜேந்திரன் தடுமாறினான்.

**1320. நினைத்துஇருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்**
**யார்உள்ளி நோக்கினீர் என்று.**

அவளது அழகை அமைதியாக இருந்து ரசித்து மகிழ்ந்தாலும், நீர் யாருடைய அழகோடு எனது அழகை ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்கிறீர்’’ என்று கடுஞ் சினம் கொள்வாள்.

### மிகுதியான அன்புக்காக

‘‘வித்தி... வித்தி... இதென்ன இன்று என்றுமில்லாதவாறு வித்தியா சமாகப் பேசுகிறீர். நோயின் உபாதையால் புத்தி பேதலித்து விட்டது போலத் தெரிகிறது. எனது மார்பை யாரோ பெண்கள் கண்டு இரசிப்பதால் இனிமேல் மேற்சட்டை அணியாமல் வீட்டில் கூட இருக்க வேண்டாமென்கிறீர். நான் உமது ஊடலை நீக்கும் பொருட்டுத் தும்மினாலும் அதை வாழ்த்தாது யாரோ ஒருத்தி நினைப்பதால் தான் தும்மினீர்கள் என்று கூறுகிறீர். தும்மலை அடக்கினால் பெரும் இரகசியத்தை அடக்க நினைப்பதாக நினைக்கிறீர். இந்தப் பிறப்பில் நான் உம்மை விட்டுப் பிரிய மாட்டேன் என்று உம்மீது கொண்ட காதல் காரணமாக நான் சொன்னால் அதற்குப் புதுப்புது அர்த்தங்கள் கண்டு பிடிக்கிறீர். உம்மை நினைப்பதால் எனக்கு இனிமையாக உள்ள தென்றால் மறந்தமையால் தானே நினைக்கிறீர்கள். அப்போ என்னை அடிக்கடி மறந்து விடுகிறீர்கள் என்று குற்றம் சுமத்துகிறீர். சமாதானம் சொல்லப் போனால் உம்மோடு ஊடும் பெண்களுக்கும் இப்படித்தானே சமாதானம் சொல்வீர்கள் என்று சொல்கிறீர். உமது அழகைப் பார்த்து நான் இரசித்தால் எந்தப் பெண்ணோடு என்னை ஒப்புடுகிறீர்கள் என்று சொல்கிறீர். நான் எதைச் செய்ய... என்னத்தைச் சொல்ல உம்மைச் சமாளிப்பது பெரும்பாடு’’ அலுத்துக் கொண்டான் கஜேந்திரன்.

‘‘பெரிய படிப்பாளி சங்கஇலக்கிய அகத்திணைப் பாடலெல்லாவற்றையும் படித்து அணுஅணுவாகச் சுவைத்திருக்கிறேன். அப் பாடலில் இல்லாததை இப்போது யார் சொல்கிறார்கள். அவற்றைப் படித்து விட்டு சொல் அடுக்கை மாற்றி எழுதுகிறார்கள். என்றெல்லாம் கண்டு பிடித்த உங்களுக்கு சங்கத்தமிழ்ப் பாடல்களில் வரும் பெண்களின் மனநிலையைப் பற்றிப் புரிய வில்லையா..? படித்த கவிதைகளைத் திரும்பவும் ஒரு முறை எடுத்துப் படித்துப் பாருங்கள் புரியாவிட்டால் நான் பிறகு செய்யுளைப் படித்து விளக்கமாகக் கற்பிக்கிறேன்’’ சிரித்தாள் வித்தியா.

முன்பு இருந்த நிலை மாறி பூரண சந்திரனைப் போல பொலிவோடு பிரகாசித்த வித்தியாவின் முகத்தைத் தனது இரு கைகளிலும் ஏந்தினான் கஜேந்திரன். முகத்தில் பிரகாசித்த குளிர்மையான ஒளிக்கீற்றுக்கள் அவனது மனதில் உறக்கமுற்றிருந்த மெல்லுணர்வுகளின் அடித்தளத்தை ஊடுருவித் தாக்கின; ‘‘வித்தி’’ உதடுகள் மெல்ல விரிந்து கிசுகிசுப்பாக வார்த்தை ஒன்று பிரசவமானது.

‘‘உங்களைக் கோபிப்பேனா? இல்லைக் கடுஞ் சொற்கள் சொல்வேனா.. இல்லை உங்களைத் தவறாக நினைப்பேனா..? உங்களோடு ஊடல் கொள்வது எனக்குப் பேரின்பத்தைத் தருகிறது. நான் உங்கள் மீது கோபப்பட்டால் நீங்கள் துடிக்கும் துடிப்பை, படும் அவஸ்தையைக் காண எனக்கு இன்பமாக உள்ளது. ஊடலின் பின் நாம் மனமொத்துக் கூடியிருக்கும் போது பெறும் இன்பத்தை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை; காதலர்களுக்கு வார்த்தைகளுக்குப் பஞ்சமிராது என்று புலவர்களும் அறிஞர்களும் கூறியிருக்கிறார்கள். அதற்கு எதிர்மாறானவளாக நான் இருக்கிறேன். உங்களைக் கண்டால் வார்த்தைகள் மட்டுமல்ல என்சுய நினைவும் தவறிவிடுகிறது. அந்தளவில் பெருஞ்சக்தி பெற்ற மகான் நீங்கள்’’.

கஜேந்திரன் ஊடல் முடித்து மகிழ்வுடன் கூடியிருந்த வித்தியாவை அன்புடன் பார்த்தான். அவளது முகத்தில் அளவுக்கதிகமான மகிழ்வு குடி கொண்டிருந்தது; ‘‘வந்த நேரம் ‘‘காலையில் இருந்து ஆகாரமேதுமின்றி இருக்கிறீா ஏதாவது சாப்பிடும்’’ என்று சொல்கிறீர்களே தவிர ஏதாவது தந்தீர்களா? என்னை விடுங்கோ நான் அடுப்படிக்குள்ச் சென்று உங்களுக்கும் சேர்த்து உணவு கொண்டு வருகிறேன்’’ என்று எழுந்தாள். அவள் முன்னே செல்ல கஜேந்திரன் அவளின் பின்னால் சென்றான். அடுப்படியில் வேலை செய்து கொண்டிருந்த கண்மணி இருவரும் வருவதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘‘என்னம்மா வேண்டும்...? நீ அறைக்குப் போ. நான் கொண்டு வருகிறேன்’’ என்றாள். வித்தியா எதுவும் பேசாமல் நின்றாள்; ‘‘போய்ப்படம்மா அவருக்கும் சேர்த்துக் கொண்டு வருகிறேன்’’ என்றாள் கண்மணி.

மாடிப்படியில் ஏறும் போது சாட்டாகக் கால் தடுக்கினாள் வித்தியா. கஜேந்திரன் அவளை அணைத்து மெல்ல அழைத்துச் சென்றான்; ‘‘அவரிடம் தவறு இல்லாவிட்டாலும் அவரோடு ஊடினால் பேரின்பத்தை அடையலாம் என்று எண்ணிணாள் வித்தியா.

**1321. இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்**
**வல்லது அவர் அளிக்கு மாறு.**

அவரிடம் தவறு எதுவும் இல்லையானாலும் , அவரோடு ஊடுதல், அவர் என் மீது மிகுதியாக அன்பு கொள்வதற்காகவே ஆகும்.

### பெருமை பெறும்

நகுலன், கஜேந்திரனின் வீட்டுக்கு வந்தான். அப்பொழுது கஜேந்திரன் அங்கிருந்தான்; ‘‘எப்படி மாப்பிளை? எப்போது கொழும்பால் வந்தீர்’’ கஜேந்திரன் கேட்டான்.

‘‘ஏன் அர்ச்சகா சொல்லவில்லையா...? நேற்று அவளைச் சந்தித்து இன்று உங்களைப் பார்க்க வருவதாகச் சொன்னான். என் மீதுள்ள கோபத்தில் அப்பொழுதே அர்ச்சகா சொன்னவள் ‘‘நான் சொல்ல மாட்டன். நீங்கள் என்ன பெரிய பிரமுகரே அறிவித்து விட்டுப் போக’’ அதனால் அவள் கோபத்தினால் தான் சொல்கிறாள். பின் உனக்குச் சொல்வாளென நினைத்தேன்...’’ கவலைப்பட்டான் நகுலன்.

‘‘எடடே அதைவிடு பெண்களுக்குக் கொஞ்சம் பிடிவாதம் அதிகம். நீ யோசிக்காமல் கதைத்திருப்பாய். அவள் செயலில் காட்டியிருப்பாள். அவள் உன்மீது கொண்ட கோபம் நியாயமற்றது என்றாலும் நினைத்துப் பார்த்தால் பெருமையாகத் தான் இருக்கும்’’ என்றான் கஜேந்திரன்.

உனக்கு அனுபவம், திருமணமான பின்பு அவற்றையெல்லாம் செயல்கள் மூலம் உணர்ந்திருப்பாய். எனக்குத் திருமணம் முடியட்டன்'' என்றான் நகுலன்.

எனது காதலைப் போல உனக்கு பிரச்சினைகள் ஏதும் வரவில்லை. அர்ச்சகாவின் அப்பாவும் அம்மாவும் உன்னைப் பற்றி விசாரித்தவுடன் பெருமகிழ்வடைந்து உனது வீட்டுக்கு வந்து விட்டனர். நீ கொடுத்து வைத்தவன்'' என்றான் கஜேந்திரன்.

''காதலின் வலிமை எதிர்ப்பில் தான் தங்கியுள்ளது. பெற்றோரின் எதிர்ப்பு எரியும் நெருப்புக்குள் நெய் ஊற்றுவதைப் போன்றது. எதிர்ப்பான நெய் தான் காதலைப் பிரகாசிக்கச் செய்வது எதிர்பில்லாததால் எனது காதல் உப்பில்லாத உணவு போல இருக்கிறது. கண்மணி மாமி கொடுக்குக் கட்டிக் கொண்டு உனது காதலை எதிர்த்த போது வித்தியா பட்ட அவலத்தை நான் பார்த்தேன். அப்போது அவள் மனத்திடத்துடன் உன்னை நினைத்துத் தனக்கு வந்த துன்பங்களை யெல்லாம் சவாலாக ஏற்று வெற்றியடைந்ததை நினைக்க எனக்குப் புல்லரிக்கிறது'' என்றான் நகுலன்.

கஜேந்திரன் சிரித்தான் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையானவர்கள். ஒவ்வொருவரது காதலும் ஒவ்வொரு வகையானது ஒருவர் தான் செய்யும் செயல்களை விட மற்றயோர் செய்யும் செயல்களைத் தான் உயர்வாகக் கருதுகிறார்கள். முன்பு நீ அர்ச்சகாவை வேறு யாருக்காவது கட்டிக் கொடுத்து விடுவார்களோ என்று பயந்தாய் உனக்கு வந்த துன்பத்தில் ஒரு பகுதியைக் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியாதென்று வருத்தப்பட்டாய். இப்போது இப்படிச் சொல்கிறாய்'' என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது வித்தியா வந்தாள். நகுலன் அங்கிருப்பதைக் கண்டதும்; ''ஓ நகுலனா! இன்று நீங்கள் இங்கு வருவதாக அர்ச்சகா சொன்னவள். நான் அவருக்குச் சொல்ல மறந்து விட்டேன். எப்போது திருமணம்'' என்று கேட்டாள்.

''வாறமாதம் பதினைந்தாம் திகதி ஒரு நாள் இருக்கு. அதில் வைக்கலாமென அம்மா சொன்னா'' என்றான் நகுலன். அவனது முகம் பொங்கிப் பூரிப்படைவதைக் கஜேந்திரன் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான்.

''கதைத்துக் கொண்டிருங்கோ சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டு வருகிறேன்'' என்று கூறி விட்டுச் சென்றாள் வித்தியா.

''பார்த்தாயா.. நீ அர்ச்சகாவைப் பற்றித் தவறாக நினைத்து விட்டாய். ஊடலின் காரணமாகக் காதலிக்கு ஏற்படுகின்ற சிறிய கோபம் அவள் எம்மீது வைத்த அன்பு குறைந்திருப்பது போலத் தோன்றினாலும், உண்மையாகக் குறையாது. அது அதிகரிக்கும் என்று நீ கற்ற பாடல்களில் சொல்லப்பட்டதை மறந்து விட்டாயா?'' என்று கேட்டான் கஜேந்திரன்.

'' உண்மை தான் நேற்று நான் எவ்வளவோ முயன்றும் என்னுடன் கதைக்கவில்லை. அதனால் இரவு முழுவதும் நான் நித்திரை கொள்ளவில்லை'' என்று அவன் கூறிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகாவும் வித்தியாவும் அங்கு வந்தனர். நகுலன் நிமிர்ந்து அர்ச்சகாவைப் பார்த்தான். மரகதச் சிலை ஒன்று நடைபயில்வதைப் போல அர்ச்சகா புன்முறுவலுடன் மெல்ல அசைந்து வந்தாள். நகுலனின் மனதில் உள்ள அந்தச் சிறிய கோபம் அவளைக் கண்டதும் ஓடி மறைந்து விட்டது. முழுமையான புன்னகை முகத்தில் தவள; ''அர்ச்சகா'' என்றான். அர்ச்சகா முழுநிலவாகச் சிரித்தாள்.

**1322. ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்அளி**
**வாடினும் பாடு பெறும்.**

ஊடல் காரணமாக அவருக்கு என்மேல் உண்டாகும் சிறு கோபம் , காதலர் என் மீது செலுத்துகின்ற அன்பு குறைவடையக் காரணமாக இருந்தாலும், பின் அவரின் அன்பு அதிகரிக்கும்.

### நிலத்தோடு கலந்தநீர்

''இந்தா தேநீரைப் பிடி. நகுலனுக்குக் கொண்டு போய்க் கொடு'' என்று வித்தியா, அர்ச்சகா எதிர்பார்க்காத வேளையில் சொல்லி விட்டு தேநீர்க் கோப்பையை அவளது கையில் வைத்தாள். அதை எதிர்பாராத அர்ச்சகா சற்றுத் தடுமாறிப் போனாள். எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நகுலனை நோக்கிச் சென்றாள்.

''எனது வீட்டுக்கு வந்தவருக்கு நான் தான் சிற்றுண்டி கொடுத்து உபசரித்தல் வேண்டும். நேற்று அவர் இல்லாத நேரம் இங்கு வந்த அர்ச்சகா தான் நகுலனுடன் நடந்து கொண்ட முறை பிழையானது என்று சொல்லி வருத்தப்பட்டாள். அதனால் தான் அவளது ஊடலை நீக்குவதற்காக அவளிடம்

கொடுத்தேன். அதற்காக ஏதாவது குற்றங் குறைகள் இருந்தால் அதை மன்னிக்க வேண்டும்'' என்றாள் வித்தியா.

''இதில் என்ன குற்றம் இருக்கிறது. நேற்று அர்ச்சகா என்னுடன் கோபித்ததால் நான் நிம்மதியை இழந்திருந்தேன். எப்படியோ வெல்லாம் கதைத்தேன்; கெஞ்சினேன்; ஆனால் அவள் கதைக்கவில்லை. இப்பொழுது அர்ச்சகாவின் கோபம் நீங்கியதால் உங்களுக்குத் தான் நான் நன்றி சொல்ல வேண்டும்'' என்றான் நகுலன்.

கற்பதற்குரிய நூல்களை நாம் தேர்ந்தெடுத்துக் கற்றல் வேண்டும் நாம் கற்ற நூல்களில் அறிந்து கொண்டவற்றிற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும். என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீ தமிழை விசேட பாடமாகக் கற்ற பட்டதாரி. தமிழில் இல்லாத காதல் இரசம் வேறெந்த நூல்களிலும் இல்லை. அதைப்படித்த நீ அதன்படி நடந்து கொள்ளாமையால் தான் உனக்கு அளவுக்கதிகமான துன்பம் ஏற்பட்டு நிம்மதியை இழந்தாய்; உறக்கமில்லாது தவித்தாய். கற்றதை நினைத்துப் பார்த்திருந்தால் உனக்கு இந்த நிலை ஏற்பட்டிராது; ''நிலத்தோடு நீர் கலப்பதைப் போல, என்றும் பிரிக்க முடியாத காதலரிடம் ஊடுதல் கொள்வதை விட அதிக இன்பத்தை உண்டாக்கக் கூடியது தேவருலகிலும் இல்லை; ''என்று அகத்திணைச் செய்யுள் ஒன்று கூறுகிறது'' என்ற கஜேந்திரன்; ''வித்தி அந்தச் செய்யுளை எடுத்துக் கொடும்'' என்றான்.

''அன்பே! உம்மீது நான் வைத்த அன்பு எக்காலத்திலாவது குறைவடையுமா...? பழகப் பழக அதிகரித்துக் கொண்டல்லவா செல்கிறது. நான் என்ன சொன்னேன். திருமணமான பின்பு என்னை விட்டு விட்டு வெளியூருக்குச் சென்று விடாதீர்கள். என்னையும் கூட அழைத்ச் செல்லுங்கள் என்று தானே சொன்னேன். அதற்கு இவ்வளவு கோபப் படுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் நல்லவர். மிகவும் நல்லவர், ஆனால் முன்கோபம் தான் அதிகம். அதனால் எனது பிரிவை உணர்த்துவதற்காகத் தான் நான் நீங்கள் எவ்வளவோ முயற்சித்தும் கதைக்காமல் இருந்தேன். அதனால் தான் எனது பிரிவின் தாக்கம் உங்களுக்குப் புரிந்தது. அதனால் நான் வெற்றியும் பெற்று விட்டேன்'' என்று அர்ச்சகா நினைத்தாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''என்னடி சிரிக்கிறாய்?'' என்று கேட்டவாறு வித்தியா அர்ச்சகாவின் தோளில் கையை வைத்தாள். அர்ச்சகா திடுக்கிட்டுத் திரும்பினாள். அவளது கண்கள் மிரண்டன.

''தேநீரைக் கொடு, ஏன் வைத்துக் கொண்டு நிற்கிறாய்?'' என்று கேட்டாள் வித்தியா. நகுலன் நாற்காலியால் எழுந்து அர்ச்சகாவின் அருகே வந்து; ''மன்னித்துக் கொள்ளம்மா. நான் கொஞ்சம் முரடு தான். போகப் போகச் சரிவரும்'' என்று கூறி விட்டு அவளது கையோடு சேர்த்து தேநீர்க் கோப்பையைப் பிடித்தான் ஒரு கணம் சிலிர்த்துப் போனாள் அர்ச்சகா; ''தேவையில்லாமல் அவரது மனத்தை நோகப் பண்ணி விட்டேனோ..?'' என்று எண்ணினாள். அவளது கண்கள் மெல்லக் கலங்கின.

அதைக் கண்ட வித்தியா சொன்னாள்; ''அழுவதும் ஒப்பாரி வைப்பதும், சிணுங்குவதும் ஊடல் கொள்வதும் பிரிவதும், பின் சேர்வதும் காதலர்களுக்கு இன்பத்தைத் தான் தரும். நீ கொஞ்ச நேரம் அழு'' என்று சிரித்தாள்.

அர்ச்சகா சிரித்தாள், பூரணமான மகிழ்வு அச்சிரிப்பில் வெளிப்பட்டிருந்தது. அவளது கண்களில் தேங்கி நின்ற கண்ணீர் உடைப்பெடுத்துக் கன்னங்களால் வழிந்த போதும் அதை உணராது சிரித்துக் கொண்டிருந்தாள் அர்ச்சகா. நகுலன் பூரித்துப் போனான்.

**1323. புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந் தன்னார் அகத்து?.**

நிலத்தோடு நீர் கலப்பதைப் போல் என்றும் பிரிக்க முடியாத அன்பை என் மீது வைத்திருக்கும் எனது காதலருடன் ஊடுவதால் உண்டாகும் இன்பம் தேவருலகிலும் இருக்கிறதா..?

### உள்ளத்தை உடைக்கும் படை

''ஊடல் என்பது உவகையைத் தூண்டும் தூண்டி. வெவ்வேறு விதமான செயல்களால் உண்டாகும் ஊடலால் வெவ்வேறு விதமான இன்பத்துக்குள்ளாகும் காதலர்கள் ஊடலை ஆயுதமாகவும், படையாகவும் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். காதலருக்கு வரும் பெருந்துன்பங்கள் யாவும் அவர்கள் கூடும் போது தீர்ந்து விடுகின்றன. காதலன் செய்த செயலுக்காக வருந்தி ஊடல் உற்ற பெண் காதலனைக் காணாத போது அவனோடு கதைக்கக் கூடாது சிரிக்கக் கூடாது என்றெல்லாம் திட்டமிடும் திட்டம் அவனைக் கண்ட மாத்திரத்தில் அற்றுப் போய் பஞ்சில் பற்றிய தீயைப் போலக் காமம் மனதில் எழுந்து சுவாலித்துப் பெரு நெருப்பாகி விடுகிறது. பின் எப்படி ஊடலைத் தொடர

முடியும்'' என்று நினைத்தாள் அர்ச்சகா. அவனைக் கட்டித் தழுவித்தான் முதல் நாள் ஊடலுற்று அவனுக்குக் கொடுத்த துன்பங்களை யெல்லாம் மீளவும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவளது மனம் துடித்தது. எனினும் இன்னொருவரின் வீட்டில் அவர்களுக்கு முன்னால் எப்படி அப்படி நடந்து கொள்வதென்று அஞ்சினாள். எனினும் ஓர் அசட்டுத் துணிவு அவளது மனதில் முளை விட்டது; ''தற்செயலாக கஜேந்திரன் வெளியே சென்றால் அந்த ஓரிரு நிமிட இடைவெளியில் அவரைக் கட்டித் தழுவி தான் கொடுத்த துன்பத்தை மீளப் பெற்று அதிர்ச்சியான ஓர் இன்பத்தைக் கொடுக்க வேண்டும்'' என்று தீர்மானித்தாள்.

நகுலனின் மனம் ஆனந்தத்தால் பொங்கிப் பூரித்தது; ''இவ்வளவு காலமும் அர்ச்சகாவோடு பழகியும் அவளின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேனே. அவள் ஊடலுற்ற பின் சந்திக்கும் வேளைகளிலெல்லாம் முன்பு தந்திராத புதிய, புதுமையான இன்பத்தைத் தானே தந்து வந்துள்ளாள். அதைப் புரிந்து கொண்டிருந்தால் இரவு முழுவதும் வேதனைப் படாது இருந்திருக்கலாம். அவளைச் சந்திக்கும் போது நடந்தவை யாவற்றையும் மறந்து கலகலப்பாகச் சிரிப்பாள் என்பதை எனது முரட்டுமனம் உணர மறந்து விட்டது'' என்று கவலைப்பட்டான் நகுலன்.

''அர்ச்சகாவின் கண்கள் ஆயிரம் கதைகள் பேசின. உதடுகள் அதை விடநளினமாக அசையாது, பிரியாதிருந்து பல மொழிகள் கூறின. கன்னங்கள் சிவந்திருந்து அவளின் மனதுள் எழுந்துள்ள ஆசையைக் கூறின. மாலை நேரத்து பொழுதின் மயக்கமும், இனிய புல்லாங்குழலின் ஓசையும் மயக்கத்தைத் தருகின்ற தென்றல் காற்றின் சுகத்தையும் அர்ச்சகா அவனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தாள். பிரியாமல் மெல்ல நகைத்த அவளது உதடுகளின் தேவையை அவன் புரிந்து கொண்டான்; ''நான் கொஞ்சம் முரடென்று உமக்குத் தெரியும் தானே. அந்த முரட்டுத் தன்மை யாவும் உமது மௌனத்தில் கரைந்து விடும். ஆராய்ந்து பாராமல் நான் தான் உமக்குத் துன்பம் செய்து விட்டேன்'' என்றான் நகுலன்.

அர்ச்சகா பூரித்துப் போனாள். உடலுள் பல்வேறு விதமான உணர்வு ஊற்றுக்கள் சுரந்து கொண்டிருந்தன. வானில் பறப்பதைப் போன்ற பிரமை. இது வரையும் இரும்புக் கோட்டை போல இருந்த அவளது இதயம் மெல்ல மெல்ல வெடித்தது; ''காதலரைத் தழுவிக் கொண்டு விடாமல் இருப்பதற்குக் காரணமான ஊடலுள், என்னுடைய உள்ளத்தை உடைக்க வல்ல படை தோன்றுகிறது'' என்று நினைத்தாள்.

''நிலைமையைப் புரிந்து கொண்ட கஜேந்திரன்; ''நகுலா கீழே ஒரு முறை சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டு அவனது பதிலுக்காகக் காத்திராது மாடிப்படிகளால் இறங்கிக் கீழே சென்றான்.

அந்தச் சந்தர்பத்திற்காகக் காத்திருந்த அர்ச்சகா நகுலனின் அருகே சென்று அவனைக் கட்டித் தழுவினாள். நகுலன் அவளது முகத்தைத் தனது கைகளால் நிமித்தினான். அழகான அவளது கண்களுக்குள் நீர் சுரந்து நின்றது; ''என்னம்மா என்மீது கோபமா...?'' இனிமேல் நான் உம்மோடு முரண்பட்டு உமது மனதைப் புண்படுத்த மாட்டன். என்னை நம்பும்'' நகுலனின் விழிகள் நனைந்தன.

''ஐயையோ, நான் அதைப் பெரிதாக நினைத்திருந்தால் உங்களுடன் கதைத்திருப்பேனா...? ஊடல் என்பது உள்ளத்தை உடைக்கும் படை. அதனால் மகிழ்வு பெருகும்; இன்பம் அதிகரிக்கும்; பிணைப்பு இறுகும் ஊடலில்லாத காதல் இனிப்பில்லாத பாகாசத்தைப் போன்றது'' என்றாள் அர்ச்சகா. அவனது முகம் நாணிக் கோணிச் சிவந்து தனது தேவையை நகுலனுக்குச் சொல்லிக் கொண்டிருந்தது.

**1324. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்**
**உள்ளம் உடைக்கும் படை.**

காதலரைத் தழுவிக் கொண்டு விடாமல் இருப்பதற்குக் காரணமான ஊடலுள் எனது உள்ளத்தை உடைக்கும் படை உள்ளது.

## தழுவாத இன்பம்

நகுலனும் அர்ச்சகாவும் இருந்த அறையில் இருந்து எந்தவிதமான சத்தமும் வராததால் அவ் அறைக்குள் செல்வதற்கென வந்த கஜேந்திரன் தாமதித்து உள்ளே செல்லாது நின்றான். அழைத்து விட்டுச் செல்லலாமா'' என்று நினைத்து 'நகுலன்' என்று அழைப்பதற்காக வாயுன்னினான். இருந்த போதும் முதல் நாள் ஊடலின் போது அர்ச்சகா பட்ட துன்பத்தையும் அவள் அழுத அழுகையையும் நினைத்துப் பார்த்தான்; ''பெண்களுக்கு திடீர் திடீரென்று எப்படி அழவும் சிரிக்கவும் முடிகிறது'' என்று சற்று நேரம் சிந்தித்துப் பார்த்தான். முதல் நாள் அர்ச்சகா தமது வீட்டுக்கு வந்த காட்சி அவனது மனத்திரையில் விரிந்தது. அழுது கண்கள் சிவந்திருக்க முகம் வீங்கியிருந்தது.

“என்னடி சுகமில்லையா...?” வித்தியா பரபரப்புடன் கேட்க அர்ச்சகா விம்மி விம்மி அழுதாள்; “அவர் இப்படியான கொடியவர் என்று நான் நினைக்கவில்லை. கொழும்புக்குச் சென்றதால் பல நாட்கள் அவரைக் காணாமல் இருந்தேன். அதனால் நான் பட்ட துயரம் உனக்குத் தெரியும். அவரைக் கண்டதும்; “இனி மேலும் என்னால் உங்களைப் பிரிந்திருக்க முடியாது. இனிமேல் நீங்கள் எங்கு செல்வதாக இருந்தாலும் என்னையும் அழைத்துச் செல்லுங்கள்” என்று தான் கூறினேன். அதற்காக இவ்வளவு தண்டனையா....? எனக்கு வாழ்க்கையையே வெறுத்து விட்டது. உயிரை விட்டாலும் பரவாயில்லைப் போலத் தோன்றுகிறது. இனிமேல் நான் அவருடன் கதைக்க மாட்டன்; “என்றவள் இன்று நகுலனைக் கண்டதும் சொக்கித் தனது சுய நினைவை இழந்து விட்டாள். அப்படி நடந்து கொள்வதிலும் ஒரு இன்பம் இருக்கிறது” என்று நினைத்தான் கஜேந்திரன். அப்பொழுது அவனுக்குப் பழைய சம்பவ மொன்று நினைவுக்கு வந்தது.

அன்று ஆவணிசதுர்த்தி கண்மணி காலையிலேயே கோயிலுக்குச் சென்று விட்டாள். காலைப் பூசை, மதியப்பூசை இரண்டையும் பார்த்து விட்டுத்தான் அவள் வீட்டுக்கு வருவாள். அன்று விரதம் அனுட்டிக்கும் பெண்கள் எல்லோருமாகச் சேர்ந்து கோயில் மடத்தில் சமைத்துக் கோயிலுக்கு வருவோர்க்கெல்லாம் மதிய உணவு கொடுப்பதாகத் தீர்மானித்திருந்தனர். அதனால் கண்மணி மாலை ஆறுமணிக்குத் தான் வீட்டுக்கு வருவேன் என்று கூறியமையால் வித்தியா கஜேந்திரனைத் தனது வீட்டுக்குக் காலை ஒன்பது மணிக்கு வரும்படி சொல்லியிருந்தாள். அன்று பல்கலைக் கழகத்தில் விரிவுரைகள் ஏதும் இருக்காமையால் கஜேந்திரன் சம்மதித்து விட்டான். ஆனால் கணித பாட விரிவுரையாளர் அன்று காலையில் தனது வீட்டுக்குவருமாறு கூறியிருந்தார். அவன் அங்கு சென்றதும் அவனை அழைத்துக் கொண்டு பல்கலைக்கழகத்திற்குச் சென்று கணிதம் சம்பந்தமான சில நூல்களை நூலகத்திலிருந்து எடுத்து சில குறிப்புக்கள் எடுக்கும்படி கூறினார். குறிப்புகள் எடுத்து முடிய பகல் இரண்டு மணியாகி விட்டது.

அதன் பின் வித்தியாவின் வீட்டுக்குச் சென்றான் கஜேந்திரன். வித்தியா பத்திர காளிபோல் நின்றாள். தனது நிலையை அவன் எடுத்துக் கூறியும் அவள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை; “வித்தி அவர் எனது குரு, அவரை நான் தெய்வம் போல மதிக்கிறேன். அவரிடம் பொய் சொல்லி விட்டு வர எனது மனம் ஒப்புக் கொள்ளவில்லை. அத்துடன் அவர் முக்கியமான தொரு ஆய்வு செய்கிறார். அதனால் அவர் அடிக்கடி எனது உதவியை நாடுகிறார். அவருக்குதவுவது எனது கல்விக்கும், எதிர்காலத்திற்கும் மிகவும் நல்லது. அதனால் தான் நின்றேன்” என்றான் கஜேந்திரன்.

“உங்களை நாம் நம்பமாட்டன். ஆசிரியருக்கு உதவி செய்வதானால் நான் சமாதானமாகி விடுவேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்” வித்தியா பேசிக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் குறுக்கிட்டுச் சொன்னான்; “நம்புவதும் நம்பாமல் விடுவதும் உமது விருப்பம். எனது நிலையை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். என்று கூறி விட்டு நாற்காலியில் அமர்ந்தான். வித்தியா அவனுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் வாங்கவில்லை; “மேசையில் வையும்” என்றான். வித்தியா அவனைப் பார்த்தாள். அவன் மறுபக்கம் திரும்பினான். சில நிமிடங்கள் பேசாமல் அவனைப் பார்த்துக் கொண்டு நின்ற வித்தியா சொன்னாள்; “இன்று என்னுடன் பேசமாட்டீர்களோ”?

கஜேந்திரன் சிரித்தான். வித்தியா அவனின் அருகில் நெருங்கி வந்து நின்றாள். கஜேந்திரன் எதுவும் பேசாமல் மேசையில் இருந்த தேநீரை எடுத்துக் குடித்தான். வழமையாக அவன் தேநீர் குடிக்கு முன் அவளுக்குக் கொடுப்பான். அவனது செயல் வித்தியாவுக்குச் சற்றுக் கோபத்தை உண்டாக்கியது. எனினும் கஜேந்திரன் அதைக்கவனிக்காதவன் போலத் தேநீரைச் சுவைத்துக் குடித்துக் கொண்டிருந்தான். அவளின் முகம் மறுபட்டுக் கொண்டிருந்தது; “ஊடலுற்ற காதலியுடன் ஊடலை நீக்குவதற்காக அவளோடு பேசிச் சிரித்துச் சமாதானமாவது ஒரு வகை இன்பம். ஊடலுற்ற காதலியோடு சமாதானமாகாது அவளைத் தவிக்க விட்டு, அவளின் தோள்களைத் தழுவாமல் விடுவதிலும் ஒரு வகையான இன்பம் இருக்கிறது. இன்று இவளது தோளைத் தழுவக் கூடாது” என்று நினைத்தான் கஜேந்திரன்.

“வாசலில் என்ன செய்கிறீர்கள்” என்றவாறு அங்கே வந்தாள் வித்தியா. கஜேந்திரன் சற்றுத் தடுமாறிப் பழைய நினைவுகளில் இருந்து மீண்டாண்; “உள்ளே நகுலனும் அர்ச்சகாவும் உள்ளனர்” கதவைத் தட்டும் என்றான்.

**1325. தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்**
**அகறலின் ஆங்குஒன்று உடைத்து.**

தம் மீது தவறு இல்லாத போதும், ஊடலுக்காளாகித் தாம் விரும்பிய பெண்ணின் மென்மையான தோள்களைத் தழுவாமல் விலகி இருப்பதிலும் ஓர் இன்பம் உள்ளது.

## மிகுதியான இன்பம்

‘‘அர்ச்சகா’’ மெல்ல அழைத்தாள் வித்தியா. நகுலனின் இறுக்கமான அணைப்பிலிருந்து விடுபட்ட அர்ச்சகா அறையில் இருந்த நிலைக் கண்ணாடியைப் பார்த்தாள். அவளது தலை கலைந்திருந்தது. நகுலனுடன் முதல் நாள் ஊடல் கொண்டிருந்த போது; ‘‘நாளைக்கு அவர் வித்தியாவின் வீட்டுக்கு வருவதாகக் கூறியவர். அவரைப் பார்க்க நான் செல்லக் கூடாது. அவர் என்னுடன் கோபப்பட்டு ஏசிய வார்த்தைகளுக்காக அவர் வருந்த வேண்டும்’’ என்று நினைத்தாள். இரவு முழுவதும் நகுலன் ஏசிய வார்த்தைகள் அவளது காதில் ஒலித்து வேதனையைக் கொடுத்தன. அவனது கோபம் கொண்ட முகம் அவளது விழித்திரைக்குள் தோன்றியது. அதனால் அவள் இரவு முழுவதும் கோபத்துடன் இருந்தாள்; ‘‘முன்பு தான் காதலித்தேன் இப்பொழுது திருமணம் இருவீட்டாரின் சம்மதத்துடனும் முற்றாகித் திருமணத்திற்கான திகதியும் குறிக்கப்பட்டு விட்டது. அவர் என்னைத் தேவையென்று கருதினால் வீட்டுக்கு வரட்டும். அல்லது என்னை வந்து சந்திக்குமாறு தொலைபேசியில் கூறட்டும்’’ என்று திடமான முடிவெடுத்தாள். அந்த முடிவில் அவள் திருப்தியும் அடைந்து நடுச்சாமத்தில் கண்ணயர்ந்து விட்டாள். விடியற்காலையில் எழுந்த போது முதல் நாள் எடுத்த திட்டத்தை மறந்து குளித்து விட்டுத் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு நிலைக் கண்ணாடியின் முன் வந்து நின்று பார்த்தாள். அன்று மற்றய நாட்களை விட அவளது அழகு அதிகரித்திருப்பதைப் போல இருந்தது; ‘‘இன்று என்னை நகுலன் பார்த்தால் பிரமித்துப் போவார். இப்படி ஓர் அபூர்வ அழகு என்னுள் குடி கொண்டிருக்கா...?’’ என்ற நினைவு அவளை ஆச்சரியத்துக்குள்ளாக்கி அசத்தியது.

‘‘வித்தியாவின் வீட்டுக்கு வந்த போது முற்றத்தில் பூத்திருந்த ஒரு ரோஜாப் பூவைப் பறித்துத் தனது கூந்தலில் சூடிக் கொண்டாள். ‘‘அர்ச்சகா வித்தியா கூப்பிடுகிறாள்’’ என்று நகுலன் சொல்ல திடுக்கிட்டுக் கண்ணாடியைப் பார்த்தாள். அவளது தலை முடி கலைந்து நெற்றியில் படர்ந்திருந்தது. ரோஜாப்பூ நிலத்தில் கிடந்தது. தலை முடியைக் கையால் சீர் செய்து விட்டு ரோஜாப்பூவை எடுத்து தலையில் சூடிக் கொண்டு வெளியே வந்தாள் வாசலில் வித்தியாவும் கஜேந்திரனும் புன்சிரிப்புடன் நின்றனர்.

‘‘குழப்பி விட்டேனா...? உங்களை அறையில் விட்டு விட்டு இவர் வெளியே சென்ற விஷயம் எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் வராமல் விட்டிருப்பேன். என்றாலும் அவசரம் கூடாது’’ என்றவள் அவளை உற்றுப் பார்த்து விட்டுக் கேட்டாள்; ‘‘இன்று ஏன் நீ பொட்டு வைக்கவில்லை?’’.

அர்ச்சகா சற்றுத் தடுமாறினாள். காலையில் குளித்து விட்டு வந்து அழகான குத்து விளக்கு உருவமுள்ள பொட்டு வைத்திருந்தாள். நகுலன் அவளைக் காணும் போதெல்லாம் அவள் வைத்திருக்கும் பொட்டைப் பற்றித்தான் சொல்வான்; ‘‘அர்ச்சகா எமது கலைஞர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பெண்களுக்கு எப்படியெல்லாம் திட்ட மிட்டு ஆடைகளையும் அணிகலன்களையும் செய்கிறார்களோ தெரியவில்லை. பொன் அணிகளில் செய்யும் அலங்காரங்களும் பொட்டுக்களின் உருவ அமைப்பும் பெரும் பிரமாதம். இன்று நீர் வைத்திருக்கும் குத்து விளக்கின் அமைப்பை ஒத்த பொட்டு உம்மைக் கவர்ச்சியின் எல்லைக்கே கொண்டு சென்று விட்டது. இந்தப் பொட்டைப் பார்க்கப் பார்க்க எனது மனம் கிளர்ந்தெழுகிறது’’ என்றான். அதற்காக அவன் இன்று திட்டமிட்டுக் குத்து விளக்கு உருவ அமைப்பிலான ஒட்டுப் பொட்டை வைத்தாள். குத்து விளக்குப் பொட்டை அவள் அணிந்து செல்லும் போது ஊடல் வருவதில்லை.

உள்ளே கஜேந்திரனும் அர்ச்சகாவும் வித்தியாவும் வந்தனர். அர்ச்சகா நிமிர்ந்து நகுலனைப் பார்த்தாள். அவனது சட்டையில் குத்து விளக்குப் பொட்டு ஒட்டியிருந்தது. அதைப் பார்க்க அவளுக்கு வெட்கமாக இருந்தது. எனினும் என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறினாள்; மேலும் மேலும் மிகுதியாக உண்பதை விட, முதலில் உண்டது செரிப்பது இன்பமானது. அது போலக் காதலர் மேலும் மேலும் சேர்ந்து மகிழ்வதை விட, ஊடல் கொள்வது பெரும் இன்பத்தைத் தரும்’’ என்று நகுலன் சொன்ன வார்த்தைகள் அர்ச்சகாவின் மனதில் வலம் வந்தன; ‘‘எவ்வளவு உண்மை’’ என்று நினைத்தாள்.

‘‘எல்லோரும் நெற்றியில் தான் பொட்டு வைப்பார்கள். நகுலன் சட்டையில் வைத்திருக்கிறான்’’ என்று வித்தியா சொல்ல நாணத்தால் தலைகுனிந்தாள் அர்ச்சகா.

**1326. உணலினும் உண்டது அறல்இனிது; காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது.**

உண்பதை விட முன்பு உண்ட உணவு சமிபாடு அடைவது இன்பமானது. அது போலக் காமத்திலும் கூடுவதை விட ஊடுதல் இன்பமானது.

## தோற்றவரே வென்றவர்

“நேற்று அழுஅழு வென்று அழுதாய். இனிமேல் நகுலனைச் சந்திக்க மாட்டேன் என்று சத்தியம் செய்தாய். உயிரை விட்டாலும் விடுவேனே தவிர அவரைத் தழுவ மாட்டேன் என்று உறுதியாகக் கூறினாய். பொழுது விடிவதற்கு முன்பு எல்லாவற்றையும் மறந்து அவரின் சட்டையில் பொட்டு வைத்திருக்கிறாய். பத்து நிமிடங்களுக்கு முன்பு பறித்த ரோஜாப்பூ என்ன பாவம் செய்தது. வாடி வதங்கி உனது கூந்தலில் விம்மி விம்மி அழுகிறது'' சிரித்தாள் வித்தியா.

‘‘அர்ச்சகாவால் அவளை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அத்துடன் கஜேந்திரனும் அங்கு நிற்கிறான். வெட்கம் அவளது மனதை தின்ன நாணம் திரையிட்டது.

‘‘சரி சரி இதெல்லாம் இயற்கை தான். நான் செய்யாததொன்றையா நீ செய்து விட்டதாக நினைத்து வெட்கப்படுகிறாய். பெண்கள் தமது காதலரோடு ஊடல் கொள்ளும் போது எடுக்கும் முடிவுகளெல்லாம் உறுதியானவையல்ல. காதலனின் மேலுள்ள அதீத பற்றினால் அளவுக்கதிகமான தாக இருந்தாலும் காதலனைக் கண்டவுடன் அவை காற்றடைத்த பைகளைப் போல வெடித்துச் சிதறி விடும். வெக்கப்படாமல் இந்த தேநீரைக் குடி...'' என்றாள் வித்தியா.

‘‘எப்போதும் ஊடலில் தோற்றவர்கள் தான் வென்றவர்களாவார்கள். இது உலகத்தில் வேறெந்தப் போட்டிகளிலும் ஏற்படாத முடிவு. நேற்று நீ நகுலனுடன் ஊடல் கொண்டு சொன்னாய்..? இன்று அவரின் முன்னால் தோற்றுப் போனதால் வெற்றியடைந்துள்ளாய். இனி உன்னுடைய ஏவலைச் செய்ய நகுலன் காத்திருப்பார். இதற்காகத் தான் நான் அடிக்கடி அவருடன் ஊடல் கொள்வேன். தோற்பேன், அதனால் இன்பமும் வெற்றியும் என்னைத் தேடி வரும்'' என்றாள் வித்தியா.

அர்ச்சகா சிரித்தாள். பூரண நிலவு முறுவல் கொள்வதைப் போன்ற உணர்வு நகுலனின் மனதில் எழுந்தது. முதல் நாள் முழுவதும் பட்ட துன்பத்தின் சாயல் அணுவளவு கூட அவளின் மனதில் இருக்கவில்லை; ‘‘ஊடலில் தோற்றவரே வெற்றி பெற்றவர் ஆவர். அந்த உண்மையானது ஊடல் முடிந்து கூடி மகிழும் போது தான் வெளிப்படும்'' என்று நினைத்தாள்.

‘‘காதலில் பெண்கள் காரணமில்லாமல் காதலனோடு கோபம் கொள்வதும், பின் காரணமின்றிக் குழைவதும், வீராய்ப்புப் பேசுவதும் பின் பேசியதை மறந்து சரணாகதியாவதும் இயல்பான குணங்கள்'' எங்கோ வாசித்தது அர்ச்சகாவின் நினைவுக்கு வந்தது.

‘‘சரி...சரி.. இப்போது சந்தோசம் தானே... இல்லாவிட்டால் நாங்கள் இன்னும் கொஞ்ச நேரம் வெளியே செல்கிறோம். சட்டையில் வைத்த பொட்டை எடுத்து நெற்றியில் வையுங்கள்'' என்றாள் வித்தியா.

நகுலன் குனிந்து தான் அணிந்திருந்த சட்டையைப் பார்த்தான். இடப்பக்கத்தில் அர்ச்சகா அணிந்த பொட்டு ஒட்டப்பட்டிருந்தது. அதை மெல்ல எடுத்து அர்ச்சகாவின் கையில் கொடுத்தான்.

‘‘நாங்கள் கண்களை மூடுகிறோம் நீ அர்ச்சகாவின் நெற்றியில் பொட்டை வைத்து விடு'' என்ற கஜேந்திரன் வித்தியாவின் பக்கம் திரும்பி தான் கண்களை மூடிக் கொண்டு; ‘‘வித்தியா நீரும் கண்களை மூடும்'' என்றான்.

‘‘நீங்கள் கடைக்கண்ணால் பார்ப்பீர்கள். நானே வைக்கிறேன்'' என்றாள் அர்ச்சகா.

‘‘இதெல்லாம் பெரிய வேலை அளவெடுத்துச் சரியான இடத்தில் வைக்க என்னால் முடியாது'' என்றான் நகுலன்.

‘‘இதெல்லாம் பழகாமல் குடும்பம் நடத்த முடியாது. இவர் பழகி விட்டார். உள்ள வேலையோடு எனக்குப் பொட்டு வைக்கும் வேலையும் வந்து விட்டது.''என்றாள் வித்தியா.

‘‘சரியாக வைக்காவிட்டாலும் வித்தியாவுக்கு நான் தான் பொட்டு வைத்து விடல் வேண்டும். அதில் ஆத்ம திருப்தி இருக்காம். இந்த மாய வித்தைகள் எல்லாவற்றையும் இவர்கள் எங்கே கற்றார்களோ தெரியாது. கலாச்சாரம், பண்பாடு என்று சொல்லிக் கழுத்தை அறுக்கிறார்கள்'' என்றான் கஜேந்திரன்.

‘‘கதையில் தான் எல்லாம். ஆனால் எல்லாவற்றிற்கும் நல்ல விருப்பம். தினமும் குங்குமச் சிமிழை எடுத்து வைத்துக் கொண்டு நான் முகங்கழுவாவிட்டாலும் வேலைக்குச் செல்ல நேரமாகிறது'' என்று ஏசுவீர்கள். நேரமானால் போக வேண்டியது தானே'' என்றாள் வித்தியா.

“ஒப்புக்குக் கூட சொல்லக் கூடாது. அப்பனே மஹா கணபதியே” என்று பெரு மூச்சுவிட்டான் கஜேந்திரன்.

**1327. ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்**
**கூடலில் காணப்படும்.**

ஊடலிலே தோற்றவரே வெற்றி பெற்றவர் ஆவார்; அந்த உண்மையானது ஊடல் முடிந்து கூடி மகிழும் போது தெரிய வரும்.

## கூடும் இன்பம்

வளர்மதி மிகுந்த குதூகலத்துடன் வித்தியாவின் வீட்டுக்கு வந்தாள். அவளது கையில் பெரிய தொரு அன்பளிப்புப் பொதி இருந்தது. வழமையாக மாலை நான்குமணிக்கு வேலை முடிந்து வீட்டுக்கு வரும் கஜேந்திரன் அன்று மாலை ஐந்துமணியாகியும் வரவில்லை.

“கஜேந்திரன் செய்த உதவியை என்னால் மறக்க முடியாதடீ.. எப்படி அவருக்கு நன்றி சொல்வேன். நான் எடுக்கும் பிறவிகள் தோறும் நன்றி சொன்னாலும் போதாது. என்னைக் காதலிப்பதாகச் சொல்லி எனது நம்பிக்கையை வளர்த்த பின் அவர் ஒதுங்கி விட்டார். நான் அவரைத் தேடிச் செல்லும்போதெல்லாம் அவர் என்னை அவமதித்தார். அளவுக்கதிகமாக அவமதித்தார். அதனால் நான் உயிரை விட நினைத்தேன். எனது துன்பத்தை உணர்ந்த கஜேந்திரன் அவருடன் கதைத்துச் சம்மதம் பெற்று விட்டு, அவரது பெற்றோருடனும், எனது பெற்றோருடனும் கதைத்து எமது திருமணத்தை முற்றாக்கி விட்டார். இப்பொழுது அவர் வீட்டிற்கு வந்து செல்கிறார். இந்த உதவியைச் செய்த கஜேந்திரனுக்கு நான் என்ன செய்யலாம்...” வளர்மதியின் குரல் தளம்பியது.

“இதற்கெல்லாம் நன்றி சொல்லத் தேவையில்லை. அவர் காதலின் மீது நம்பிக்கை வைத்தவர். உலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் காதலே உயர்ந்தது என்று நினைப்பவர் அதனால் உண்மையான காதலர்களுக்குச் சோதனை வந்தால் அதைத் தீர்த்து வைப்பார்” என்றாள் வித்தியா.

“அந்தக் குணமும் துணிவும் இங்கு எத்தனை பேருக்கு இருக்கு. ஆதவன் சகோதரனுக்கேற்பட்ட துன்பம் தனக்கும் ஏற்பட்டு விடு மென்று பயந்து தான் விரும்பிய பெண்ணைக் கைவிட நினைக்கவில்லையா....?” என்றாள் வளர்மதி.

ஆதவன் உன்னைக் கைவிடமாட்டார். காதலரிடையே ஊடல் வருவது இயற்கை தானே. அப்படித்தான்..” வித்தியா கூறிக் கொண்டிருக்கும் போது வளர்மதி குறுக்கிட்டாள்; “ஊடல் இல்லை அவருக்குப் பயம் தனது சகோதரனின் காதலியின் தகப்பனைப் போல எனது அப்பாவும் இருந்தால் என்ன செய்வது. என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்றால் எனது பெற்றோர் தன்னைத் தாக்கி விடுவார்களே என்ற பயம்... அதை நீ ஊடல் என்கிறாய்” என்றாள் கோபமாக.

வித்தியா சிரித்தாள்; “ஊடலின் போதும் ஒரு வகையான இன்பம் மனதை ஆட்கொள்ளும். முன்பை விட இப்பொழுது உனக்குச் சந்தோசம் தானே. பழையதை மற” என்றாள்.

“நான் மறந்ததால் தான் அவருடன் சேர விரும்பினேன்” என்று வளர்மதி கூறிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகாவும் மாதுமையும் சுவர்ணாவும் வந்தனர். வளர்மதியைக் கண்ட சுவர்ணா சொன்னாள்; “புதுப் பொம்பிளையும் வந்திருக்கிறா. இவ்வளவு காலமும் ஒப்பாரி வைத்தா இனி என்ன கொண்டாட்டம் தான். ஆதவன் முன்பு போல இப்பவும் உன்னைக் கண்டதும் கோபிக்கிறாரா; எரிந்து விழுகிறாரா; கட்டி அணைக்கிறாரா..” சிரித்தாள். இவளுக்கு அவர் ஊடல் கொள்வது பிடிக்காதாம். எந்த நேரமும் நெற்றி வியர்க்கக் கூடியிருக்க வேண்டுமாம். அப்படிக் கூடியிருந்து அடையும் இன்பத்தை ஊடி இருந்து உணர்ந்து அனுபவிக்க முடியுமோ?” என்று கேட்கிறாள். அனுபவப்பட்ட எம்மால் கூடப் புரிந்து கொள்ள முடியாத பலவற்றை இவள் எப்படித் தெரிந்து கொண்டாள்.” என்று கேட்டாள் வித்தியா.

“பூனை எலிபிடிப்பதில் வல்லமை பெற்றது. அதே போல் பூனை மாதிரி இருப்பவர்களிடம் தான் விஷயமே இருக்கிறது. ஆதவன் பூனை மாதிரி இருந்து இவளுக்கு அறியாத பலவற்றை அறியச் செய்திருக்கிறார்” என்றாள் சுவர்ணா.

“போடீ” நாணிக் கோணினாள் வளர்மதி; “பெரிய பரிசுப் பொட்டலத்துடன் வந்திருக்கிறாய். நாங்களும் பல உதவிகள் செய்தனாங்கள் தானே எமக்கு இல்லையா...?” என்று சுவர்ணா கேட்க

மாதுமை சொன்னாள்; ''முதலில் கஜேந்திரனுக்கு பிறகு எங்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கச் சங்கிலி பரிசளிக்கப் போகிறாளாம்''.

''ஏன் பரிசளிக்க மாட்டாளே, ஐந்தாறு சகோதரர்கள் வெளிநாட்டிலை இருக்கினை'' என்றாள் வித்தியா. அப்பொழுது கஜேந்திரனின் மோட்டார் வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்டது. வித்தியா எழுந்து விரைவாக வாசலை நோக்கிச் சென்றாள்.

**1328. ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.**

நெற்றி வியர்க்கும் படியாகக் கூடியடையும் இன்பத்தை, ஊடி இருந்து உணர்ந்து என்னால் அனுபவிக்க முடியுமோ?.

## நீராட்டும் இரவு

மோட்டார் வண்டி புறப்பட்டுச் செல்லும் ஓசை கேட்டது. சிறிது நேரத்தில் வித்தியா தனியாக வந்தாள்; ''கஜேந்திரன் எங்கே?'' என்று ஆவலோடு கேட்டாள் அர்ச்சகா.

அவர் அவசரமாகத் தனது மேலாளரைச் சந்திக்க வேண்டும் என்று கூறி விட்டுச் செல்கிறார். நீ வந்திருப்பதைச் சொன்னேன்; ''சிறிது நேரம் குறை நினைக்காது இருக்கச் சொல்லும்'' என்றார்'' என்றாள் வித்தியா.

''வித்தியான்ரை, மாதுமையின்ரை, வளர்மதீன்ரை, என்ரை பிரச்சினையெல்லாம் தீர்ந்து விட்டது. உன்ரை பிரச்சினை என்ன மாதிரி யாரையாவது காதலிக்கிறாயா...? சொல்லு வீட்டை வந்து கதைக்கிறம் என்றாள் அர்ச்சகா. நான் காதலிப்பவரை வீட்டாருக்குத் தெரியும். அம்மாவுக்கு அவரின் மேல் உயிர். அப்பாவிற்கு அவரின் மேல் அன்பு அதிகம். விரைவில் திருமணம் நடைபெறவுள்ளது'' என்றாள் சுவர்ணா.

''அப்படியா...? மிகவும் நல்லது நான் கொழும்புக்குச் செல்வதற்கு முன் திருமணத்தைச் செய். நாலைந்து நாட்களுக்கு மூக்கு முட்டச் சாப்பிடலாம்'' என்றாள் மாதுமை.

''என்னுடைய திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் கழிந்த பின்பு தான் நாள்வை. இல்லா விட்டால் என்னால் வர முடியாது'' என்றாள் அர்ச்சகா.

''இரண்டு மாதமென்றால் நான் போயிடுவன். அவர் வந்து விடுவார். அதன் பின் நான் வர முடியாது'' என்றாள் மாதுமை.

''கலியாணத்தை நீ எப்பவேணுமானாலும் கட்டு. முதலில் ஆளைக் காட்டு. அவரைப் பார்த்து நாம் அளவெடுத்துப் புள்ளி போடவேண்டும். சாப்பாடு வேண்டுமானால் உங்களுக்கு நாலு நாட்களில்லை நாற்பது நாட்களுக்கு மூக்கு முட்ட நான் தருகிறேன்'' என்ற வித்தியா சில கணங்கள் கதைப்பதை விட்டு விட்டுச் சுற்றி வரப் பார்த்தாள். யாரும் எதுவும் பேசவில்லை.

அதனால் சொன்னாள்; ''இவளின்ரை கதையை நீங்களெல்லாரும் நம்புறியள். இவள் எல்லோரையும் பேய்க் காட்டுவாள்'' என்று சொல்ல சுவர்ணா குறுக்கிட்டுச் சொன்னாள்; ''உங்களுக்கு நான் எப்போதாவது பொய் கூறினனானா...? சொல்லுங்கள் பார்ப்போம். உங்களைச் சந்திக்கும் போது கூறியவை யெல்லாம் உண்மையான கதைகள் நீங்கள் நம்பாவிட்டால் நான் ஒன்றும் செய்ய முடியாது. எனது காதலர் உங்களது காதலரைப் போன்றவரல்லர். மிகவும் வித்தியாசமானவர். என் மீது அன்பை அளவுக்கதிகமாகச் சொரிபவர். அதனால் நான் அன்போடு பேசுவதை விட ஊடல் கொள்வதையே அதிகம் விரும்புவார். அவர் சொல்வார்; ''அன்பே! பூரணை நாளில் நிலா முற்றத்தில் கட்டிலில் நீர் என்னுடன் ஊடல் கொண்டு என்மீது அன்பு செலுத்தாது படுத்திருக்க, நான் உமக்கு மிக மிக அருகில் இருந்து நெருங்கி இருந்து உமது ஊடலைத் தீர்க்க வென்று பல கதைகள் கூற, நீர் அதைக் கேளாது புரண்டு புரண்டு படுக்க; நான் கெஞ்ச; நீர் மிஞ்ச; இரவு நீண்டு கொண்டே இருக்கும். அந்த இரவு விடியக் கூடாது''. என்பார். நீங்கள் ஊடலும் கூடலும் தான் இன்பம் என்பீர்கள். ஊடல் முடிந்து கூடினால் தான் இன்பம் என்பீர்கள். என்னவரோ ஊடல் நீடிக்க இரவு வளர வேண்டும் என்கிறார்'' என்று கூறி விட்டுக் கண் சிமிட்டினாள் சுவர்ணா.

''இவள் சொல்வதைக் கேட்க எனக்குத் தலையைச் சுற்றுகிறது. பாட்டி மாதிரி அனுபவங்களை இவளால் சும்மா சொல்ல முடியாது. இதில் ஏதோ ஒன்றிருக்கு. நான் கொழும்பில் உள்ளவள்.

எனக்குத் தெரியாது என்றால் ஊரில் உள்ள வித்தியாவுக்கும் தெரியாதா...?'' அலுத்துக் கொண்டாள் மாதுமை.

''முதல் முறையாக சுவர்ணா மீது சந்தேகப்பட்டாள் வித்தியா. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவள் கூறுவதை நினைத்துப் பார்த்தாள். அவற்றை நன்கு உணர்ந்து அனுபவித்தவர்களால் தான் சொல்ல முடியும்; ''கஜேந்திரனுடன் கூடியிருக்கும் போது அவர் கூறும் வார்த்தைகளை இவளும் கூறுவதால் அதை இவளது காதலன் தான் கூறுகிறானோ...? ஒரு நாள் அவள் நடுச்சாமம் வரை கஜேந்திரனோடு ஊடியிருந்தாள். அப்பொழுது அவன் சொன்னான்; ''அன்பே! விடிந்தாலும் உமது ஊடல் தீராது. நான் உமது ஊடலைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இந்த இரவு நீண்டு கொண்டே இருக்கட்டும்'' வித்தியா குழம்பினாள்.

''வித்தி என்னடி யோசிக்கிறாய்..? எனக்கு விசர் பிடிக்கப் போகுது'' என்றாள் அர்ச்சகா.

**1329. ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா.**

எனது காதலி இன்னும் இன்னும் ஊடுவாளாக; அவளின் ஊடலைத் தணிக்கும் பொருட்டு நான் இரந்து வேண்டுவதற்காக இவ் இராக்காலம் இன்னும் நீண்டு கொண்டே இருக்கட்டும்.

**இணைந்த இன்பங்கள்**

''உனக்கு முன் எனக்குப் பிடித்து விட்டது. நீ இரண்டொரு மாதங்களாகத் தான் சுவர்ணாவுடன் பழகுகிறாய். நான் அவளோடு ஒன்றாகப் படித்தனான். கிட்டத்தட்ட இருபது வருடங்களாக எனக்கு இவளைத் தெரியும். அப்படியிருந்தும் புரியாத புதிராகத் தான் இவள் இன்று வரை என்னுடன் பழகி வருகிறாள். பாடம் சம்பந்தமாக ஏதாவது ஒன்றைக் கேட்டாலும் மர்மக் கதை மாதிரித்தான் பீடிகையுடன் சொல்வாள். மைத்துனன் ஒருவர் இருக்கிறார். நல்ல அழகன். இருந்தாலும் பல வருடகாலமாக அவர்களுக்குள் பெரும் குடும்பத் தகராறு இருக்கிறது. அதனால் இரு குடும்பங்களும் பரம வைரிகளாகவே இருக்கின்றன. சுவர்ணாவின் தாயாரின் சகோதரனின் மகன் தான் அவன். ஆனால் சுவர்ணாவின் தாய் சகோதரனைக் கொலை செய்ய வேண்டுமென்று ஆவேசமாகக் கத்துவா. அந்தளவில் அவனோடு இவள் காதல் கொண்டிருக்க முடியாது. வேறு யாராவது ஒரு ஆணுடன் பழகியதையோ அல்லது ஓர் ஆடவனைப் பற்றியோ இவள் இதுவரை கதைத்ததில்லை. அப்படி இருக்க எப்படி காதலிப்பள்'' என்றாள் வித்தியா.

''எங்களால் இனியும் தாங்கிக் கொள்ள முடியாது. உண்மையைச் சொல்லு'' கெஞ்சினாள் அர்ச்சகா.

சில நிமிடங்கள் பேசாமல் இருந்த சுவர்ணா சொன்னாள்; ''காதலைப் பகிர்ந்து கொள்வதில் ஓர் அலாதியான இன்பம் இருக்கிறது. நான்'' நிறுத்தினாள் சுவர்ணா.

''சொல்லடி ...'' அவதிப்பட்டாள் வித்தியா.

மீண்டும் சில கணங்கள் பேசாமல் இருந்த சுவர்ணா சொன்னாள்; ''நண்பர்களுக்கிடையே ஒளிப்பு மறைப்பு இருக்கக் கூடாது. நான் எனது மைத்துனரை இரண்டு வருடங்களாக நேசிக்கிறேன். ஆனால் வீட்டார் சம்மதிக்க மாட்டார்கள் என்பதற்காக மிகவும் இரகசியமாகச் சந்தித்து வருகிறேன். அவர் என்னைப் பிரிந்து வாழ மாட்டார். நான் அவரைப் பிரிந்து வாழ மாட்டன். இருவரும் அடிக்கடி சந்திப்போம். அவரது நண்பர் ஒருவர் எமது குடும்ப நண்பர். அவரின் உதவியோடு நான் பல முறை அவரைச் சந்தித்துள்ளேன். அந்த வீட்டுக்கார மாமா அடிக்கடி இரவு வேலைக்குச் செல்வார். அவர் வேலைக்குச் சென்றால் நான் தான் மாமிக்குக் காவல். அதனால் அவர்களின் உதவியோடு நாம் சந்திப்போம்.'' என்றாள் சுவர்ணா.

''அது தானே பார்த்தேன். அனுபவம் தான் பேசியிருக்கிறது. தற்செயலாக உனது பெற்றோர் அறிந்து பிரச்சினைக்கு வந்தால்...'' என்று கேட்டாள் வித்தியா.

சிரித்தாள் சுவர்ணா; ''காதலர்களுக்கு எதிர்ப்பு பெரிய விடயமா என்ன? உனது காதலை உனது தாயார் எதிர்த்த போது என்ன செய்தாய்? தற்செயலாக அங்கஜனைக் கட்ட வேண்டிய நிலை வந்திருந்தால் என்ன செய்திருப்பாய்? கஜேந்திரனுடன் கூடச் சென்றிருப்பாய். கொஞ்ச நாட்களுக்கு அம்மா அழுவா. ஒரு வருடம் செல்லத் தாலாட்டுப் பாட வந்து விடுவா. இது தான் இயற்கை. எமது இரண்டு குடும்பங்களும் பகையை மறந்து ஒன்று சேர வேண்டும். இது தான் எம் இருவரினதும் இலட்சியம்'' உணர்ச்சி வசப்பட்டாள் சுவர்ணா.

''அப்ப இது இலட்சியக் காதல்'' என்றாள் அர்ச்சகா.

சிரித்தாள் சுவர்ணா; ‘‘கடந்த பதினைந்து தினங்களாக நான் அவரைச் சந்திக்கவில்லை. இன்று அடுத்த வீட்டு மாமாவுக்கு இரவு வேலை அவர் வருவார். கடைசியாக நாம் சந்தித்த போது நான் அவரோடு ஊடல் கொண்டேன். அவர் எமது காதல் விசயத்தை வீட்டாருக்குச் சொல்ல வேண்டாம் என்கிறார். நாம் எங்காவது சென்று வாழ்வோம் என்கிறார். ஆனால் எனக்கு அது பிடிக்கவில்லை. வீட்டாருக்குச் சொல்வோம். வீட்டாரின் விருப்பத்தைப் பொறுத்து முடிவு செய்வோம் என்றேன். அவர் அதற்குச் சம்மதிக்காததால் இருவருக்குமிடையில் ஒரு சிறு ஊடல் ஏற்பட்டது’’ நிறுத்தினாள் சுவர்ணா.

‘‘காமத்திற்கு இன்பம் தருவது ஊடுதலாகும். ஊடல் முடிந்த பின் கூடி இணைந்து மகிழ்ந்தால் அது ஊடலுக்கு இன்பமாகும். இன்று ஊடல் முடிந்து கூடி இன்பம் அனுபவிக்கப் போகிறாய்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘உன்னால் எப்படி இரண்டு வருடங்களாக எனக்கு மறைக்க முடிந்தது. உன்னை என்னால் சந்தேகிக்கக் கூட முடியவில்லை. கதைக்கும் கதைகளுக்குப் பாட்டியும் தாத்தாவும் காதலித்த கதை சொல்வாய். என்ன தான் இருந்தாலும் நீ உரிமையோடு சிறுவயதிலிருந்தே பழகிய எனக்குச் சொல்லியிருக்கலாம். மறைத்திட்டாய்... அதை நினைக்கக் கவலையாக இருக்கு’’ என்றாள் வித்தியா.

‘‘சரி விடு, பிழைதான். முன்னுக்கே சொல்லியிருக்கலாம் ஆனால் அவர் எனது சிநேகிதிகள் யாருக்கும் சொல்ல வேண்டாம் என்றார். இப்ப சொல்லி விட்டேன் தானே’’ என்றாள் சுவர்ணா.

‘‘எமது தோழிகள் யாபேரும் காதலித்து அதில் எமது காதலின் வெற்றியை ஒரு பெரு விழாவாகக் கொண்டாட வேண்டும். வெற்றி பெற்று விட்டோம். அதை நினைக்கப் பெருமையாக இருக்கு. நீ நேரத்துடன் போ அவரைச் சந்திப்பதற்குத் தயாராகு போ’’ என்றாள் வித்தியா. மாதுமையும் அர்ச்சகாவும் வளர்மதியும் சிரித்தனர். சுவர்ணா நாணத்துடன் தலை குனிந்தாள்.

**1330. ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்குஇன்பம்**
**கூடி முயங்கப் பெறின்.**

காமத்திற்கு இன்பத்தைத் தருவது ஊடுதல் ஆகும். ஊடல் முடிந்த பின்பு கூடித் தழுவி மகிழ்ந்தால் அது ஊடலுக்கு இன்பமாகும்.

***முற்றும்***



இந்து சமயத்தை வளம் படுத்தும் நூல்கள் பலவற்றை எல்லோரும் கற்றுப் பயன் பெற வேண்டு மென்ற உயரிய நோக்கில், எமது பேரன்பிற்குரிய கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் திருமிகு கே.வி.குணசேகரம் அவர்கள் எளிய முறையில் இலகு தமிழில் கதை வடிவில் பல நூல்களை எழுதி வருகிறார். இவரது ஆத்தி சூடிக் கதைகள் மலேசியாவில் நடைபெற்ற உலகச் சைவ மகாநாட்டில் வெளியிடப்பட்டன. சிறுகதை, நாவல், கவிதை, சிறுவர்நூல்கள், சமயக் கட்டுரைகள் போன்றவற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து வளரும் இவ்வாசிரியர் திருக்குறள் கதைகள் மூலம் ஈழத்தில் பெருமை பெற்று விளங்குகிறார். திருக்குறள் பாக்களின் கருத்துச் சிதையாமல் அற, நீதிக் கருத்துக்களைப் பாமரரும் படித்து இன்புறுமாறு கதை வடிவில் எழுதி வருவது பெருமைக்குரியது. 480 திருக்குறள் பாக்களுக்கான கதைகள் வெளி வந்து விட்டன.

நூலசிரியரின் இம் முயற்சியைப் பெரிதும் பாராட்டுவதுடன் இவர் மேன் மேலும் இத்தகைய பணிகளில் சிறந்து விளங்கத் திருவருள் துணை புரியும் என்று நம்புகிறேன்.

டாக்டர் மா. வேதநாதன், எம்.ஏ.பிஎச்.டி
தலைவர், புறநிலைப்படிப்புக்கள் பிரிவு,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
ஸ்ரீலங்கா.